


# ஆற்றங்கரையான்

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோயில் பற்றிய ஆய்வு

# ஆற்றங்கரையான்




நூல் ஆக்கம்

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

பேராசிரியர் அருணாசலம் சண்முகதாஸ்


2010

**தலைப்பு**
ஆற்றங்கரையான்
(தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோயில் பற்றிய ஆய்வு)

**ஆசிரியர்கள்**
கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
பேராசிரியர் அருணாசலம் சண்முகதாஸ்

**உரிமை**
பேராசிரியர் அ. சண்முகதாஸ்

**பதிப்பு**
புதுக்கிய பதிப்பு - 2010

**விலை**
600/-

**புதுக்கிய பதிப்புக்கு**
**அனுசரணை செய்து அச்சிட்டோர்**
கரிகணன் பிறிண்டேர்ஸ்,
இல.424, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
0094 212222717 / 2891

**Title**
**ĀṞṞAṄKARAIYĀN**
**(A Study about Celvaccanniti)**

**Authors**
Dr.Manonmani Sanmugadas
Prof. Dr. Arunasalam Sanmugadas


**Copy Right**
Prof.A.Sanmugadas

**Edition**
Revised Edition -2010

**Price**
600/-

**ISBN**
978-955-0442-00-3

**Sponsored & Printed by**
Harikanan Printers,
No.424, K.K.S. Road, Jaffna.
0094 212222717 / 2891



# காணிக்கை

செல்வச்சந்நிதி ஆலயத்தில்
அமைந்திருக்கும்
சந்நிதியான் ஆச்சிரமத்தின்
எல்லாப் பணிகளுக்கும்

# சமர்ப்பணம்

அன்னையின் அறிமுகம் தந்தை!
எந்தை எம் நெஞ்சில் பதிந்த உருவம்.
முந்தை நாம் செய்த தவப்பேறு!
எம்மக்கள் அழைப்பில் உணரும் அன்பு!
முருகன் அருள் கண்ட அன்பு மனம் அது.
அவர் வழி நடக்கும் எம் நினைவுப் பரிசு இது.
இறைவன் காலடியில் வைத்துள்ளோம்.
இதுவே எம்மால் தரமுடிந்தது.
அதுவே எமக்கு இன்று ஆறுதல் தருவது.

கரிகண்ணன் குடும்பத்தினர்

செல்வச்சந்நிதி கோயிலின் முன்னைநாட் பூசகர்
வணக்கத்துக்குரிய மா. க. ஆறுமுகசுவாமி ஐயர் வழங்கிய

# ஆசியுரை

வேலும் மயிலும் துணை

**சீரோங்கு செல்வச் சந்நிதி யாம் மாபதியின்**
**பேரோங்கு நற்புகழும் பீடும் விரித்துரைத்தார் - பாரோங்கு**
**சண்முகதாஸ் தம்பதிகள் தம்புலமைப் பேரருளால்**
**விண்ணவரும் மண்ணவரும் போற்ற**

பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களும் அவரது அருமைத் துணைவியார் மனோன்மணி சண்முகதாஸ் அவர்களும் தொண்டை மானாறு செல்வச் சந்நிதி முருகனை வழிபட்டு, அவர்மேலுள்ள பக்தி ஈடுபாட்டினாலே ஒரு நூல் எழுதி வெளியிடுவது எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.

தொண்டைமானாறு செல்வச் சந்நிதிமுருகன் அவர்களுக்குச் சகல செல்வங்களையும் இஷ்டசித்திகளையும் வாரி வழங்க வேண்டு மெனப் பிரார்த்திப்போம்.

சுபம்

**மாணிக்கர் கதிரிப்பிள்ளை**
**ஆறுமுகசுவாமி**

**செல்வச்சந்நிதி**
**தொண்டைமானாறு.**
**23-07-1989**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவரும்
பேராசிரியருமாகிய கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை அவர்கள்
வழங்கிய

# அணிந்துரை

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகவழிபாடு காலங் கடந்த தன்மையையுடையது. அம்முருக வழிபாட்டிலே மிகப்பழமை யான கூறுகள் சில காணப்படுகின்றன. அக்கோவிலிலே தனித்துவமான மரபுகள் சில காணப்படுகின்றன. இவற்றைக்கொண்டு நோக்கும்போது, அக்கோவில் அண்மைக்காலத்திலே தோன்றிய ஒன்று எனவும் கூறமுடியாது. நல்லூர்க் கந்தசுவாமிகோவில், மாவிட்டபுரம் கந்தசுவாமிகோவில் முதலிய யாழ்ப்பாண மாவட்டத்து ஏனைய பிரபல முருகவழிபாட்டுத் தலங்கள் தோன்றியமை பற்றி ஓரளவு தெளிவான வரலாற்றுக்குறிப்புக்கள் அல்லது ஐதீகங்கள் காணப்படுகின்றன. ஆற்றங்கரையான் எனப்படும் செல்வச் சந்நிதி முருகன் பற்றிய கர்ணபரம்பரைக் கதைகள் காலவரையறை ஆய்வுக்கு உதவக்கூடியன வாகத் தெரியவரவில்லை.

சங்ககாலத்திலிருந்து இன்றுவரை தொண்டைமான்கள் தமிழ்நாட்டிலே வாழ்ந்துவருகின்றபோதிலும், வல்லியாற்றைத் தொண்டைமானாறாக ஆழப்படுத்தி, உப்புவணிகத்தை விருத்தி செய்தவன் கருணாகரத்தொண்டைமானாவான் என்ற யாழ்ப்பாண வைபவமாலை கூற்றும் அதற்குக் குல சபாநாதன் தரும் விளக்கமும் ஏற்றுக்கொள்ளக் கூடியன. ஆனால், யாழ்ப்பாண வைபவமாலையிலே, செல்வச் சந்நிதி பற்றிய குறிப்பு எதுவும் இல்லை. பறங்கியர் செய்த அழிவு, ஒல்லாந்தர் செய்த அழிவு என்பனவும் கர்ணபரம்பரைக் கதைகளாக வந்து அண்மைக்காலத்திலேயே எழுத்துவடிவம் பெற்றுள்ளன. எம்முடைய மாணவர்களான பேராசிரியர் அருணாசலம் சண்முகதாசும் திருமதி மனோன்மணி சண்முகதாசும் கிடைக்கக்கூடிய சான்றுகளைத் தேடித் தொகுத்துத் தந்துள்ளனர்.

மிகப்பழைய தமிழ் இலக்கியங்களாகக் கொள்ளப்படும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்பனவற்றிலுள்ள முருக வழிபாடு பற்றிய குறிப்புக்களின் பின்னணியிலே செல்வச் சந்நிதி வழிபாட்டைவிளக்க, நூலாசிரியர்கள் முனைந்துள்ளனர். பொருத்த மான அந்த அணுகுமுறையைப் பயன்படுத்தி, மேலும் சில விடயங்களை

அறிந்துகொள்ள வாய்ப்புண்டு. திருமுருகாற்றுப்படை ஆறுபடை வீடுகளைப் பாடுகிறதென்று கொள்வது மரபு. முதல் மூன்று படைவீடுகளான பரங்குன்றம், சீரலைவாய், ஆவிநன்குடி என்பன மதுரைக்கு மேற்கிலுள்ள திருப்பரங்குன்றம் தென் கிழக்கிலுள்ள திருச்செந்தூர் வடக்கிலுள்ள பழனி எனச் சுலபமாக அடையாளங் காணப்பட்டுள்ளன. நான்காவது படைவீடான ஏரகம் சோழ மண்டலத்திலுள்ள சுவாமி மலையெனப்படும் திருவேரகமா அல்லது கருநாடகமாநிலத்திலே உடும்பிவட்டத்திலுள்ள ஏரகமா என்று கருத்து வேறுபாடு காணப்படுகின்றது. சோழ மண்டலத்துச் சுவாமி மலையையே திருவேரகமென்னும் படைவீடாக அருணகிரி நாதர் கொண்டுள்ளார். சுவாமிமலை செய்குன்றாகக் காணப்படுவதால் அதனை மலையாக ஏற்கச் சிலர் தயங்குகின்றனர். ஆறாவது படைவீடு பழமுதிர்சோலை மலை எனப்படுகின்றது. மதுரைக்கு அண்மையிலுள்ள அழகர்மலை, சோலைமலையெனவும்படுகிறது. அழகர்மலை திருமால் திருப்பதியாகக் கொண்டாடப்படுகின்றது. இடப்பெயர்களின் ஒற்றுமை யைக் கருத்திற்கொண்டு, அழகர்மலையே பழமுதிர்சோலை மலையாகக் கொள்ளப்படுகிறது. சோலைமலையிலே, இன்று முருகனுக்குச் சிறு கோவில் காணப்படுகிறது. முதல் நான்கு படை வீடுகளாக உள்ள கோவில்களோடு, இந்தக்கோவிலை ஒப்பிட முடியாது.

ஐந்தாவது படைவீடு குன்றகச்சிறுகுடி என்றும் குன்று தோறாடல் என்றும் இரண்டு வகையாகக் கூறப்படுகிறது. படைவீடு களாகக் குறிக்கப்படாத மலைக்கோவில்கள் யாவற்றையும் தொகுத்துக் குன்றுதோறாடல் என்று கூறப்பட்டுள்ளது என்பது ஒரு விளக்கம். எல்லாவற்றையும் தொகுத்து ஒரு வீடாகக் கூறினாரென்பது ஏற்கக்கூடிய தாக இல்லை. சிறுகுடி என்பது குறிஞ்சி நிலக் குடியிருப்பு. பல குன்றுகளிடையே அமைந்துள்ள ஒரு குடியிருப்பு இங்கே சுட்டப் படுகிறதாக வேண்டும். இந்தப்படைவீடு ஏழுமலைகளைக் கொண்ட வேங்கடம் அல்லது திருப்பதியாக இருக்க வேண்டுமென்ற கருத்து முன்வைக்கப்பட்டது. முருகனுடைய ஐந்தாவது, ஆறாவது படை வீடுகள் இடைக்காலத்திலே திருமால் திருப்பதிகளாக மாற்றப்பட்டு விட்டன என்று சிலர் கருதத் தொடங்கியதால், சைவ வைணவப்பகை ஏற்படக்கூடிய சூழ்நிலை தோன்றியது. சேயோன் வழிபாடு போல, மாயோன் வழிபாடும் தமிழகத்துப் பூர்வீக வழிபாட்டு வகைகளுள் ஒன்று என்பது இவ்விடத்தே நினைவு கூரப்பட வேண்டும்.

ஐந்தாவது படைவீடு கதிர்காமமாக இருக்க வேண்டும் என்ற கருத்து ஒரு நூற்றாண்டு காலம் பழமையுடையது. மேலைப் புலோலி

நா.கதிரைவேற்பிள்ளையவர்களே இக்கருத்தை முன்மொழிந்தவர் போலத் தோன்றுகிறது. சுப்பிரமணிய பராக்கிரமம் என்ற அவருடைய நூலிலே இந்தக் கருத்துக்காணப்படுகிறது அவர் தொகுத்ததும் பின்பு மதுரைத் தமிழ்ப் பேரகராதியென வெளிவந்ததுமான அகராதியிலே, இந்தக் கருத்து இடம்பெற்றுள்ளது. கதிர்காமம் என்ற தலப்பெயர் அருணகிரிநாதர் திருப்புகழிலேயே முதன்முதலில் இடம்பெறுகிறது. 'கதரகம' தலப்பெயரும் ஊர்ப்பெயரும் பாளி, சிங்கள மூலாதாரங் களிலே நீண்ட காலமாக இடம் பெற்றுவந்துள்ளன. கிராமம் என்ற சங்கத மொழிச்சொல் சிங்களத்திலே 'கம' எனவும் இலங்கைத் தமிழிலே 'காமம்' எனவும் திரிபுபட்டு வழங்குகின்றன. குன்றகச்சிறுகுடி என்பதிலுள்ள 'சிறுகுடி' என்பதே கதிர்கமம் என்னும் பெயரிலுள்ள 'காமம்' ஆக இருக்க வேண்டும். வேலைக்கையில் ஏந்திய வேலனுடைய வெறியாட்டு ஐந்தாவது படைவீட்டு வழிபாட்டிலே குறிப்பிடப்படுகிறது. ஈழத்துப் பூதந்தேவனாரும் குறுந்தொகை 360 ஆம் பாடலில் வேலனின் வெறியாட்டைப்பற்றிக் கூறியுள்ளார். நக்கீரர் கானவரே இத்தலத்திலே வழிபாடாற்றுவதாகக் கூறியுள்ளார். நச்சினார்க்கினியர் காணவர் என்பதற்குக் குறவர் என உரை கூறியுள்ளார். வேட்டையைத் தொழிலாகக் கொண்டுள்ளமையால், கானவர் வேடுவரெனவும்படுவர். கதிர்காமம் இன்றும் வேடுவர் பரம்பரையினரின் கட்டுப்பாட்டுக்குள் அமைந்திருக்கிறது. இப்பரம்பரையினர் இன்று சிங்கள பௌத்தராவர். கதிர்காமத்திலே மிகப்பழையகாலவழிபாட்டு முறைகளே பேணப் பட்டுவருகின்றன. பெரிய கட்டிடங்களோ, கோபுரமோ, விமானமோ ஏற்படுத்தப்படவில்லை. கதிர்காமக் கந்தன் தனிக்காட்டு மன்னனாகவே இருக்கத் திருவுள்ளம் பாலித்துள்ளது.

நக்கீரர் கதிர்காமம் என்ற பெயரை மனதிலே வைத்து காமம் என்ற சொல்லுக்கு வழக்கமான பொருள் தோன்றப் பாடினாரோ என்ற ஐயமும் எழுகிறது. கந்தபுராணக் கதையின்படி வெற்றி வீரனாகத் திரும்பிக்கொண்டிருந்த முருகன் திருப்பரங்குன்றத்திலே இந்திரன் மகளாகிய தேவயானையை வேத விதிப்படி மணந்து வள்ளிமலையிலே வேடுவர் மகளாகிய வள்ளியைக் களவு மணம் செய்கின்றான். கதிர்காமத் தெய்வம் வள்ளியைக் கதிர்காமத்திலே களவு மணம் செய்து அங்கேயே தங்கிவிட்டதாக வேடுவர்களும் சிங்களவர்களும் கர்ண பரம்பரையாகக் கூறிக்கொண்டு வருகிறார்கள். நக்கீரரின்படி, முருகன், சேவிக்கும் மகளிர் ஒரு புறமாக மெய்தொட்டுப்பயிலும் மகளிருடன் குன்றுகள் தோறும் குரவை ஆடிக்கொண்டிருக்கும் இடமே ஐந்தாவது படைவீடாகும்.

ஐந்தாவது படைவீடு கதிர்காமமே என்ற கருத்தைத் தென்னிந்தியத் தமிழறிஞர் ஏற்றுள்ளதாகத் தெரியவரவில்லை. தமிழ்ப் பண்பாடும், சைவப்பண்பாடும் இலங்கையிலே நீண்டகாலமாக நிலவியிருக்கக் கூடுமென்பதைத் தமிழ்நாட்டார் இன்னும் உடன் பட்டதாகத் தோன்றவில்லை. திருமூலர் திருமந்திரம் 2701ஆம் பாடலிலே, இலங்கையைச் சிவபூமியெனக் குறிப்பிட்டுள்ளார்.

மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை
கூருமிவ் வானின் இலங்கைக் குறியுறுஞ்
சாருந் திலைவனத் தன்மா மலயத்தூ
டேறுஞ் சுழுமுனை இவைசிவ பூமியே

தில்லைச் சிதம்பரத்துக்கும் பொதிகை மலைக்கும் இடைப்பட்ட பகுதி சிவபூமியென்னும் பெயருக்குச் சிறப்புரிமையுடையதென்றும் மேருமலைக்கும் இலங்கைக்கும் இடைப்பட்ட பகுதி சிவபூமியென்னும் பெயருக்குப் பொதுவுரிமையுடையதென்றும் கூறப்பட்டுள்ளது. திருமூலர் காலம் சோழப் பெரு மன்னர் காலத்துக்கு முந்தியதென்பதிலே கருத்துவேறுபாடில்லை. சோழப் பெருமன்னர் காலத்துக்கு முன்பு இலங்கையிலே சிவநெறி பரவலாகப்பேணப்பட்ட காலம் ஒன்றிருக்கு மானால் அது பௌத்த நெறி பரவுவதற்கு முற்பட்ட காலமாகவே இருக்க வேண்டும். கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலே இலங்கைக்குப் பௌத்தம் வந்தது. பௌத்தம் நாட்டு மக்களால் உடனே ஏற்கப் பட்டு விட்டதாக மகாவம்சம் கூறுகிறபோதிலும் இலங்கையிலுள்ள ஆதிப்பிராமிச் சாசனங்களை ஆராய்வோர், சமய மாற்றம் சிறிது சிறிதாகவே ஏற்பட்டிருக்க வேண்டுமென்று கொள்வர்.

சங்க காலத்துக்குச் சமகாலத்தனவென்று இலங்கையிலுள்ள ஆயிரத்து இருநூறுக்கு மேற்பட்ட பிராமிச் சாசனங்களைக் கூறலாம். அவையாவும் பௌத்த சமயம் தொடர்பானவை போலவே தோன்றுகின்றன எனினும் தொடக்க காலத்திலே, பௌத்தர்களுட் சிலர் தம்முன்னோர் வழங்கிய ஆட்சிபெயர்களையே (Personal Names) வழங்கினர். காலப்போக்கிலேயே, சைவசமயத் தொடர்பான பெயர்களை அவர்கள் முற்றாகக் கைவிட்டனர். இலங்கை ஆதிப்பிராமிச் சாசனங்களிலே, சிவா அல்லது சிவ(ன்) என்ற பெயர் ஆட்பெயராகப் பரவலாகக் காணப்படுகிறது. அனுராதபுரமாவட்டத்திலே பதினொரு சாசனங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலே ஒன்பது சாசனங்களிலும் இப்பெயர் காணப்படுகிறது. அம்பாந்தோட்டை மாவட்டத்திலே, ஒன்பது சாசனங்களும் கதிர்காமத்தைச் சூழவுள்ள

ஏறத்தாழ நூறு சதுர மைல் சுற்றளவுக்குள் காணப்படுதல் சிறப்பாகக் கவனிக்கத் தக்கது. இவ்வொன்பது சாசனங்களுள்ளும் ஏழு, சிதுல் பவுவ என்ற ஒரே இடத்திற் காணப்படுகின்றன. சிவானுபவம் பெற்றவர் என்று பொருள்படும் "சிவானுபூதிய" என்பது ஒருவருடைய பெயராகக் காணப்படுகிறது.

அனுராதபுரம் மாவட்டம் பரப்பளவிலே பெரிய மாவட்டம். சிங்கள இராசதானி அம்மாவிட்டத்திலேயே இருந்தது. அக்காலத்தில் அம்மாவட்டத்திலேயே,சனத்தொகை அதிகமாக இருந்திருக்கலாம். குருணாகல் மாவட்டத்திலே ஆறுசாசனங்களில் இப்பெயர் இடம் பெறுகிறது. அனுராதபுரம் மாவட்டத்தைப்போல குருணாகல் மாவட்டமும் பரப்பளவிலே பெரிய மாவட்டம். பிராமிச்சாசனங்கள் பெருந்தொகையானவை. இம்மாவட்டத்திலே காணப்படுவதால், விகிதாசாரப்படி பார்க்கும்போது, ஆறுசாசனங்களிலே 'சிவா' என்ற பெயர் காணப்படுவது வியப்பிற்குரியதல்ல. அம்பாறை மாவட்டம், பொலொன்னருவை மாவட்டம், கேகாலை மாவட்டம், மாத்தளை மாவட்டம் என்பனவற்றிலே, ஐவைந்து சாசனங்களிலே இப்பெயர் இடம்பெறுகிறது.

பாதுகாக்கப்பட்ட கானகப் பிரதேசமான 'யாழ'வும் குமுக்கன் ஆறும் கதிர்காமப் பிரதேசத்தை அம்பாறை மாவட்ட எல்லையிலிருந்து பிரிக்கின்றன. எல்லைப் பிரதேசத்தில் அம்பாறை மாவட்டத்துக்குள் அடங்கிய பம்பரகஸ்தலாவிவ என்னும் இடத்திலுள்ள சாசனத்திலும் சிவா என்ற பெயர் காணப்பட்டுள்ளது. சிவபிரானிலிருந்து தோன்றியவர் என்று பொருள்படும் சிவபூமி என்ற பெயர் மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக்கு அண்மையில் இராஜக்கல் என்னும் இடத்திலுள்ள சாசனத்திலே காணப்படுகிறது. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் என்னும் சிவன்கோவில் அப்பிரதேசத்திலேயே காணப்படுகிறது. பொலென் னருவை மாவட்டத்தின் எல்லைகளில் அம்பாறை மாவட்டம், அனுராதபுரம் மாவட்டம், மாத்தளை மாவட்டம் என்பன அமைய, மாத்தளை மாவட்டத்தின் எல்லைகளிலே அனுராதபுரம் மாவட்டம், குருணாகல் மாவட்டம் என்பனவும் காணப்படுகின்றன. குருனாகல் மாவட்டத்தின் தென்னெல்லையிலே கேகாலை மாவட்டம் அமைந் துள்ளது. இரண் சந்ததியினர் ஆட்பெயர்களிலே சிவா என்பது இடம் பெறுவது கேகாலை மாவட்டத்திலுள்ள யட்டகளேன விகாரை என்ற இடத்திலுள்ள சாசனத்திலே காணப்படு கிறது. அதே இடத்திலு ள்ள இன்னொரு சாசனம் சிவநகர் பற்றிக் கூறியுள்ளது.

சிவா என்ற பெயர் மொனராகலை மாவட்டத்தில் மூன்று இடங்களிலும் பதுளை மாவட்டம், இரத்தினபுரி மாவட்டம், புத்தளம் மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் இரண்டிரண்டு இடங்களிலும் காணப்படுகின்றது. கதிர்காமப்பிரதேசத்துக்கு வடஎல்லையில் அமைந்துள்ள மொனராகலைமாவட்டத்துக்கு மேற்குஎல்லையிலே இரத்தினபுரி மாவட்டம் அமைந்துள்ளது. பதுளை மாவட்டமும் மொனராகலை மாவட்டமும் இணைந்தே ஊவாமாகாணம் ஆகிறது. பதுளை மாவட்டத்திலே ஒரு சாசனம் சிவா என்பவரை அரசன் என்று குறிப்பிட்டுள்ளது. மூன்று சந்ததியினர் தொடர்ந்து சிவா என்பதைத் தம்முடைய பெயர்களிலே பேணிவந்துள்ள சிறப்பையும் பதுளை மாவட்டத்திலுள்ள சாசனம் ஒன்றே காட்டுகிறது. சிவபூதி என்ற பெயர் புத்தளம் மாவட்டத்திலே பிச்சான்டியாவா என்ற இடத்திலே இரண்டு சாசனங்களிலும் முல்லேகம என்ற இடத்திலே ஒரு சானத்திலும் காணப்படுகிறது. புத்தளம் மாவட்டத்திலேயே சிலாபம் முன்னேசுவரம் அமைந்துள்ளது.

வவுனியா மாவட்டத்திலும் கண்டி மாவட்டத்திலும் சிவா என்ற பெயர் ஒவ்வோரிடங்களிலே ஆதிப்பிராமிச் சாசனங்களிலே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பிராமிச்சாசனங்கள் கண்டுபிடிக்கப்படாத மாவட்டங்களிலே சிவா என்ற பெயர் இருக்கவில்லையென முடிவு கட்டி விடக்கூடாது. ஆனால், இலங்கையிலுள்ள பல்வேறு மாவட்டங்களிலே சிவா என்ற ஆட்பெயர் இவ்வளவு பரவலாகக் காணப்படுவதன் முக்கியத்துவத்தையும் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. ஒரு காலத்திலே இலங்கை சிவபூமியாக இருந்ததென்ற உணர்வினாலேயே, சைவசமயகுரவர்கள் இலங்கை தொடர்பான இதிகாச கதாபாத்திரங்கள் சிவனருள் பெற்றதாகப் பாடியிருக்க வேண்டும். இலங்கை வேந்தனான இராவணன் சிவனருள் பெற்றமையை அப்பரும் சம்பந்தரும் பாட இராவணன்தேவி மண்டோதரி சிவனருள் பெற்றமையை மணிவாசகர் பாடியுள்ளார். சிவவழிபாட்டோடு கதிர்காமப் பிரதேசம் நெருங்கிய தொடர்புடைய தாகப் பண்டைக்காலத்திலே விளங்கியமையாற் போலும், இடைக் காலத்திலே யாழ்ப்பாணத்திலே கதிரைமலையும் கதிரைமலைச் சிவன் கோவிலும் தோன்றுகின்றன.

சிவபூமியாக இருந்த இலங்கையிலே முருக வழிபாடு எந்த நிலையிலே இருந்ததென்பதை ஆராய்வதற்கும் கதிர்காமத்தையே மையமாகக் கொள்ளவேண்டியிருக்கிறது. முருகன் தொடர்பான

ஆட்பெயர்கள் எவ்வாறு இலங்கையிலே பரம்பியிருந்தன என்பதையும் ஆதிப்பிராமிச் சாசனங்களைக் கொண்டே ஆராயலாம். வடமொழி யிலே குமர என்று வழங்கப்படும் முருகன் பெயரை இலங்கை வேடர் வழங்கி வருகின்றனர். பிராமிச்சாசனங்களிலே குமர(ன்) என்ற பெயர் கதிர்காமத்திற்கு மிக அண்மையிலுள்ள அவகதியாவ என்ற இடத்தி லுள்ள சாசனத்திலே காணப்படுகிறது. கதிர்காமத்தைச் சூழவுள்ள பிரதேசத்திலிருந்து மேலும் இரண்டு சாசனங்களிலே குமர என்ற பெயர் காணப்படுகிறது. இரண்டு சந்நிதியினர் தொடர்ந்து குமர என்ற பெயரைத் தாங்கியிருந்தமையை இவற்றுள் ஒன்று சுட்டுகிறது. மொனராகலைமாவட்டத்திலே, மாணிக்ககங்கை ஊற்றெடுத்துவரும் பிரதேசத்திலே, இன்னொருசாசனம் குமர என்ற பெயரைக் குறுப்பிடு கிறது. பொலொன்னருவை மட்டக்களப்பு மாவட்ட எல்லையிலுள்ள லுணுவரணகல என்னும் இடத்திலே ஒரு சாசனம் இப்பெயரைத் தந்துள்ளது. அனுராதபுரம் மாவட்டத்திலே குட்டிக் குளம் என்ற இடத்திலும் அனுராதபுர நகருக்கு அண்மையிலுள்ள வெஸ்ஸகிரி என்ற இடத்தலும் ஒவ்வொரு சாசனத்திலே குமர என்ற பெயர்காணப் படுகிறது. பண்டைக்கால இலங்கையில் இராசரட்டையையும் உருகுனைரட்டையையும் தொடுத்து நின்ற இராசவீதி மூலமாக, கதிர்காமக்குமரன் அனுராதபுரநகரைச் சென்றடைந்திருக்கிறான் போலத் தோன்றுகிறது. அனுராதபுரத்திற் கண்டெடுக்கப்பட்டுள்ள மிகப்பழைய இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் மூன்றில் இரண்டு குமாரகணம் பற்றிக் குறிப்பிடுகின்றன. முருகன் கோவிலை நிர்வகித்து வரும் குழுவே குமாரகணம் எனப்பெயர்பெறும்.

புத்தளம் மாவட்டத்திலுள்ள மூன்று சாசனங்கள் முருகன் பெயரை ஆட்பெயராகக் கொண்டுள்ளன. குமர என்ற பெயர் பிச்சாண்டியாவ என்ற இடத்திலுள்ள சாசனத்திலே காணப்படுகிறது 'கூட' (Guda) என்ற பெயர் குகன் என்பதன் திரிபு என்று பேராசிரியர் பரண விதான குறிப்பிடுவர். இரண்டு சாசனங்களிலே இந்தப் பெயர் காணப்படுகிறது. திருச்சீர் அலைவாய் என்னும் திருச்செந்தூரின் செல்வாக்கு புத்தளம் மாவட்டத்திலே காணப்பட்டிருக்கலாம். கடல் திருச்செந்தூரையும் புத்தளத்தையும் இணைக்கிறது.

வவுனியா மாவட்டத்திலுள்ள இரண்டு சாசனங்களிலும் குருணாகல் மாவட்டத்திலுள்ள ஒரு சாசனத்திலும் விசாக(ன்) என்ற பெயர் இடம்பெறுகின்றது. வடமொழிக் கதைகளின்படி கார்த்தி கேயனுக்குச் சிறப்பான நட்சத்திரம் விசாகமாகும். அதனால், அவனுக்கு

விசாகன் என்றும் பெயருண்டு. சோழமண்டலத்திலுள்ள சுவாமி மலையென்னும் திருவேரகத்திலே முருகனுக்கு அந்தணர்களே சிறப்பாக வழிபாடாற்றியமை திருமுருகாற்றுப்படையிலும் கூறப்பட்டுள்ளது. பிராமணர் செல்வாக்காலே, விசாகன் என்ற பெயர் தோன்றி திருவேரகச் செல்வாக்காலே வட இலங்கைக்கு வந்ததாகலாம். வவுனியாப்பிராமிச் சாசனங்கள், விசாக என்று பெயர்தாங்கியவர்களைத் தமிழர் எனவுங் குறிப்பிட்டுள்ளன.

முருகவழிபாட்டுப் பூசாரியாக, வேலைக்கையிலேந்திய வேலன் என்னும் படிமத்தானை, நக்கீரர் ஐந்தாவதுபடை வீடு தொடர்பாகக் கூறியுள்ளார். மூன்று பிராமிச்சாசனங்களிலே, வேல(ன்) என்னும் பெயர் காணப்படுகிறது. அம்பாறை மாவட்டத்திலே இச்சாசனங்கள் காணப் படும் இடங்களுள் ஒன்று திருக்கோவிலுக்கு அண்மையில் உள்ளது.

இலங்கைப் பிராமிச் சாசனங்களிலே, ஒரு சொல், வேலு எனவும் வேள் எனவும் இரண்டுவிதமாக வாசிக்கப்பட்டுள்ளது. பரணவிதான, வேலு என வாசித்ததை, வேள் என நாம் வாசித்துள்ளோம். வேள் என்ற வடிவம் சங்கத் தமிழிலக்கியங்களிலே வேளிரைக்குறிக்க வழங்குகிறது. முருகக் கடவுளையும் மன்மதனையும் குறிக்கவும் வேள் என்பது வழங்கப்படுகிறது. வேலைத்தாங்கியவன் வேள் என்றும் பெயர்பெற்றிருக்கலாம் போலத்தோன்றுகிறது. இலங்கைப்பிராமிச் சாசனங்களிலே, இந்தச் சொல்லின் பரம்பல் எவ்வாறு காணப்படு கிறதென நோக்கவேண்டும். அம்பாந்தோட்டை மாவட்டத்திலே கதிர்காமத்தைச் சூழவுள்ள பிரதேசத்திலே இந்தச் சொல் மூன்று இடங்களிலே காணப்படுகிறது. அம்பாறை மாவட்டத்திலே இச்சொல் இரண்டிடங்களிலே வழங்கப்பட்டுள்ளது. இவற்றுள் ஓரிடம் தமிழர் செறிந்து வாழ்வதும் மயில்வாகனன் என்னும் இயற்பெயரையுடைய வரான சுவாமி விபுலானந்தர் பிறந்ததுமான காரைதீவுக்கு அண்மை யிலுள்ள முள்ளிக்கொளுது மலையிற் காணப்படும் சாசனமாகும். மற்ற இடம் பிரபல முருகன் தலமான உகந்த மலையிலிருந்து சிறிது தூரத்திலுள்ள மலையில் வெட்டப்பட்டுள்ள சாசனமாகும். குமர வழிபாடு பரவிச் சென்ற இராசவீதிக்கும் வேள் என்ற சொல்வழக்குப் பரம்பலுக்கும் தொடர்பு இருப்பதாகத் தோன்றுகிறது. மொனராகலை மாவட்டம், மாத்தளை மாவட்டம், பொலொன்னறுவை மாவட்டம், அனுராதபுரம் மாவட்டம் என்னும் மாவட்டங்களிலே இச்சொல் இடம்பெற்றுள்ளது. விசாகன் என்ற பெயர் காணப்படும் வவுனியா மாவட்டத்திலும் இரண்டு சாசனங்கள் வேள்பற்றிக் குறிப்பிடுகின்றன.

கேகாலை மாவட்டத்திலே இரண்டு சாசனங்களிலே வேள்காணப் படுகின்றமை மேற்கூறப்பட்ட விளக்கத்துக்கு விதிவிலக்காகக் காணப்படுகிறது.

கிழக்கு இலங்கைச் சைவக் கோவில்கள் பற்றி அண்மையில் இரண்டு நூல்கள் வெளிவந்துள்ளன. வி.சீ.கந்தையா, "மட்டக்களப்புச் சைவக் கோவில்கள்" (1983) பற்றியும் இ.வடிவேல், "திருகோணமலை மாவட்டத்திருத்தலங்கள்" (1982) பற்றியும் எழுதியுள்ளனர். மட்டக்களப்புச் சைவக்கோவில்கள் என்ற நூல் அம்பாறை மாவட்டம், மட்டக்களப்பு மாவட்டம் என இன்று வழங்கும் "மட்டக்களப்புத் தேசம்" முழுவதையும் உள்ளடக்குகிறது. மட்டக்களப்புத் தமிழகத்திலே கோவில் என்பது "தேசத்துக் கோவில்" என வழங்கும் திருக்கோவிலையே குறிக்கும். இலங்கை ஊர்ப்பெயர்களுள்ளே கோவில் என்பதைப் பின்னொட்டாகக் கொண்ட ஒரே ஊர்ப்பெயரும் திருக்கோவிலே. போர்த்துக்கேயர் காலத்திலோ இலங்கையிலே தரைமட்டமாக்கப் பட்ட இந்துக்கோவில்களிலே இதுவும் ஒன்று என்பது டிகுவெறோஸ் என்ற போர்த்துக்கேய அறிஞர் எழுதிய குறிப்புக்களிலிருந்து தெரிய வருகிறது. இந்தக் கோவிலிலே, வேலே முருகனைப் பிரதிநிதித்துவப் படுத்தியது. வேடர் வழிபட்டு வந்த கோவிலே பின்புதிருக்கோவிலாக மாறிய தென்பது கர்ணபரம்பரைச் செய்தி.

வேலுக்கு முக்கியத்துவம் வழங்கிய திருக்கோவில் ஒரு சித்திரவேலாயுத சுவாமி கோவிலாகும். மட்டக்களப்பிலே மிகவும் பிரசித்தமான சைவக் கோவில்கள் திருப்படைக் கோவில்களெனப் பெயர் பெற்றன. கொக்கட்டிச் சோலைத்தான்தோன்றீசுவரர் என்ற சிவன் கோவில் தவிர, ஏனைய திருப்படைக் கோவில்கள் யாவும் முருகன் கோவில்களாகக் காணப்படுகின்றன. திருக்கோவில் போலவே, பெரிய போரைதீவுச் சித்திர வேலாயுத சுவாமி கோவிலும் வேலுக்கு முக்கியத்துவம் வழங்கும் ஒரு திருப்படைக்கோவிலாகும். ஐரோப்பியர் காலத்துக்கு முன்பு, இன்று வெல்லாவெளியென மருவிவழங்கும் வேலாயுதர் வெளியே இந்த ஆலயம் அமைந்திருந்ததாகக் கூறப்படு கிறது.

தில்லை மண்டூர்க் கந்தசுவாமி கோவில் என்னும் திருப்படைக் கோவில் கதிர்காம வழிபாட்டோடு நெருங்கிய தொடர்புடையது. பூசனை வேளைகளிற் கூட, கதிர்காமத்திற்போல, மண்டூக்கோயில் மூலத்தானம் திறந்து காட்டப்பெறாது திரைச்சீலையால் மூடப்பெற்ற தாகவே இருக்கும். திருவிழா முதலான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சுவாமி மூடுவாகனங்களிலேயே கொண்டு செல்லப் பெறுகின்றார்.

கோவிலின் எதிரே கடல்போன்ற பெருநீர்ப்பரப்பினையுடைய மட்டக்களப்பு வாவியினைக் கொண்டதாய் வம்மி, ஆல், அரசு கோங்கு முதலான நிழல்மரம் நிறைந்த பெரிய திருவீதிகளையுடையதாய் இருக்கின்றது. தினமும் திருவிழாக்களிற், கதிர்காமத்திற்போலவே சுவாமி வள்ளியம்மன் கோவிலுக்குச் சென்று தங்கியிருந்து செல்லுதலும், இறுதியிலே தீர்த்தமாடி மீண்டுவரும்போது சுவாமி தமது கோயிலுட் செல்லாது வள்ளியம்மன் கோவிலுக்கே சென்று பூசனைசெய்யப்பெற்று அன்று மாலைவரை தங்கியிருத்தலும் வழக்கம். இக்கோவில் 'சின்னக் கதிர்காமம்' எனவும் வழங்கும். தீர்த்தம் நடந்த மூன்றாம் நாள் மதியம், கோவிலின் உள்வீதியில், சுவாமி கோவிலின் பின்புறமாக உள்ளகுமார தம்பிரான் கோவிலை அடுத்து, 'வேடர்பூசை' எனப்படும் விசேட பூசை ஒன்று நிகழும். வேடர் வழிபட்ட குமார தம்பிரான் கோவிலையடுத்தே மண்டூர்க் கந்தசுவாமி கோவில் தோன்றியிருக்க வேண்டும் என்று எண்ணக் கிடக்கிறது.

சித்தாண்டிக் கந்தசுவாமிகோவில், பழைய ஆவணங்களில்லாத, காலத்தாற் பிந்திய கோவிலாகக் காணப்படினும், ஒரு திருப்படைக் கோவிலாகக் கொள்ளப்படுகிறது. மூன்று நூற்றாண்டுகள் பழமையுடை யதாகக் கொள்ளப்படும் இக்கோவிலை ஆதியில் வேடரும் அதன் பின்னர் சித்தர் எனப்படும் ஆண்டியும் வழிபாடு செய்துவந்ததாகக் கர்ண பரம்பரை கூறுகிறது. சித்திரவேலாயுத சுவாமி கோவில் என்று பெயர் பெற்றிருந்த இக்கோவில் பின்பு கந்தசுவாமி கோவில் எனப்பெயர் மாற்றம் பெற்றது. கந்தசுவாமி கோவிலின் வெளிப்புறத்தே குமாரத்தன் கோவில் உண்டு. பெரிய கோவில் தீர்த்தத்தின்பின், குமாரத்தன் கோவிலிலே ஆறுநாட்களுக்குச் சடங்குநடைபெறும். தெய்வம் ஆடல் கட்டுச் சொல்லுதல் என்பன இங்கு உண்டு. அமுது இலையால் மூடியபடியே இங்கு தெய்வத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது. கதிர்காமக்கடவுள் கொடியேற்ற நாளிலே சித்தாண்டியிலிருந்து கதிர்காமத்துக்கும் தீர்த்தம் முடிந்த பின்பு கதிர்காமத்திலிருந்தும் வேல்வடிவிலே போவதாக ஐதீகம் உண்டு. குமாரத்தன் வழிபாடு, கதிர்காமவழிபாடு பரவி வந்தமையை உணர்த்துவதாகக் கொள்ள வேண்டும்.

மட்டக்களப்புத் தமிழகத்தின் தென்பகுதிக் காவல் தெய்வம்போல உகந்தைமலை முருகன் விளங்கிவருகிறான். இதனையும் திருப்படைக்கோவிலெனச் சிலர் கூறுவராயினும், இதன் பழையவரலாறு தெளிவாகவில்லை. அடர்ந்த காட்டு மத்தியிலே, கதிர்காமத்துக்குச் செல்லும் வழியிலே, இந்தக் கோவில் அமைந்துள்ளது. இங்குகோவில்

கட்டுமுன் மலையிலுள்ள நீர்ச்சுனைகளும், வடிவேல் குன்றமும் பக்தரைக் கவர்ந்தன என்பர். நீண்டகாலத்தின்பின்னரே, கோவில் என்ற பெயரால் ஓலைகளால் பந்தலிட்டு பன்னெடுங்காலமாகப் பிரார்த்தனை செய்துவந்தனர். சுமார்நூறு ஆண்டுகளுக்கு முன்பே, இங்கே கற்கோவில் கட்டப்பட்டது. முருகனை இக்கோயிலில் வேலாயுதமே பிரதிநிதித் துவப்படுத்துகிறது. வள்ளியம்மனுக்கு இங்கே தனிக்கோவில் உண்டு. தெய்வானையம்மன் இத்தலத்தில் இல்லை.

மட்டக்களப்பு மாவட்டமும் திருகோணமலைமாவட்டமும் சந்திக்கும் வெருகல் கங்கையின் எல்லையிலே வெருகல் சித்திர வேலாயுதர் கோவில் இருபகுதி மக்களையும் இணைக்கும் பாலம்போல விளங்குகிறது. கதிர்காமம் என்ற பெயரை நினைவூட்டும் கதிரவெளி மட்டக்களப்பு மாவட்டத்திலும் சித்திரவேலாயுதர் கோவில் திருகோணமலை மாவட்டத்திலும் அமைந்துள்ளன. வேடர்கள் ஆலமரப்பொந்தில் வைத்து வழிபட்டு வந்த வேலே கோவிலின் மூல மூர்த்தியென்பது செவிவழிச்செய்தி. கருவையில் வள்ளிதெய்வானை சமேதராக, வேலே இடம்பெறுகிறது. விசேடமாயமைக்கப்பட்ட கதிர்காமசுவாமி கோவில் இத்தலத்திலே உண்டு. கதிர்காமத்திலே பூசைகள் செய்யப்படுவதைப்போலவே, இங்கும் பூசை, திருவிழாக்கள் நடைபெற்றுவருகின்றன. கதிர்காமசுவாமிக்குப் பூசைமுடிந்த பின்னரே மூலஸ்தானம் தொடக்கம் ஏனைய மூர்த்திகளுக்குப் பூசைகள் நடைபெற்று வருகின்றன. இந்தக்கோவில் உபயகதிர்காமம் என்று கூறப்படுவதுண்டு. மண்டூரைப்போல, சின்னக்கதிர்காமம் எனவும் படும். கதிர்காமம் மாணிக்ககங்கைக் கரையில் அமைந்திருப்பதுபோல, இது வெருகல் கங்கைக்கரையில் அமைந்துள்ளமையால் இவ்விடங் களிலும் முருகன் 'ஆற்றங்கரையான்' ஆவான். தீராதநோய்க்கு மருந்தாக அமைந்த அருட்குமரனின் வெருகலம்பதிவாயிலை அடைந்தாலே பிணியாவும் நீங்கும் என்பர். பக்தர்களின் பிணிமட்டுமன்றி துன்பம் எத்தகையதாக இருப்பினும் அதுவும் கூட நீங்கும். இக்கோவில் வயல் வெளிகளுக்கு மத்தியில், மருது புளிமுதலான மரச்சோலையின் எழில்மிகு ஓரத்தில் இயைந்துவிளங்குகிறது. இதுவும் திருப்படைக் கோவில்களுள் ஒன்று.

மட்டக்களப்புப்பிரதேசத்தின் பிரபல முருகன் கோவில்கள் யாவும் கதிர்காம வழிபாட்டின் வடதிசைநோக்கிய பரம்பலே என்பது தெளிவாகத் தெரியவருகிறது. திருகோணமலை மாவட்டத்திலும் வடஇலங்கையிலும் தமிழ் நாட்டு முருக வழிபாட்டின் செல்வாக்கும் கலந்து காணப்படுகிறது. திருகோணமலை மாவட்டத்திலுள்ள

வில்லூன்றிக் கந்தசுவாமிகோவில் என்ற பிரபலமான முருகன் கோவிலில் உள்ள விக்கிரகங்கள் திருவேரகத்திலிருந்து வந்தனவாகக் கூறப்படு கின்றன. யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் சோழநாட்டு இளவரசியாலே தாபிக்கப்பட்டதாகக் கூறப்படுவதனால், அங்கேயும் திருவேரகத்தின் செல்வாக்கே காணப்படுவதாகக் கூறலாம். திருகோணமலை மாவட்டத் தம்பலகாமம் ஆதிகோணேசுவரர் கோவிலிலே, கதிர்காமசுவாமிக்குத் தனி ஆலயம் உண்டு.

திருகோணமலை மாவட்டத்தின் வடபகுதியிலே இன்றைய கும்புறுபிட்டிக்குப் பண்டைக்காலத்திலே குமரபுரம் என்ற பெயர் வழங்கியிருக்கிறது. அங்கே வேல் எழுந்தருளியிருந்த மலை வேலைப்பமலையெனப்படுகிறது. குமரபுரத்து முத்துக்குமரனுடைய தாமிரவிக்கிரகமொன்று கண்டெடுக்கப்பட்டு, அங்குள்ள கண்ணகி யம்மன் கோவிலில் வைக்கப்பட்டுள்ளது. கதிர்காமத்துக் 'குமார'ன் மண்டூரிலே குமாரம்பிரானாகி, சித்தாண்டியிலே குமாரத்தனாகி, கும்புறுபிட்டியிலே குமரனாகி, கிழக்குக்கரையிலே இன்னும் வடதிசை நோக்கிச் சென்று முல்லைத்தீவு மாவட்டத்திலே குமாரபுரத்தில் உறைந்திருக்கிறான்; அடுத்த தொண்டைமானாற்றங் கரைக்கு வந்துள்ளான்.

கதிர்காம வழிபாடு, உபயகதிர்காமமெனப்படும் வெருகல் சித்திரவேலாயுதசுவாமி கோவில்வரையிலே, மட்டக்களப்புப் பிரதேசத்திலே உயிர்த்துடிப்புடையதாக விளங்குகிறது. மட்டக்களப்பு முருக வழிபாடு செல்வச் சந்நிதி முருக வழிபாட்டின் சில முக்கிய கூறுகளை விளங்கிக்கொள்ள உதவும். கதிர்காம வழிபாட்டின் வட எல்லையாக ஒரு காலத்திலே குமரபுரமும் இன்னொரு காலத்திலே குமாரபுரமும் விளங்கியிருக்க வேண்டும். வடஎல்லை தொண்டை மானாற்றங் கரைக்குப் போக, குமரபுரமும் குமாரபுரமும் அழியத் தொடங்கியிருக்க வேண்டும். சந்நிதி என்பது கதிர்காமக் கடவுளின் சந்நிதி என்ற பொருளிலேயே வழங்கத் தொடங்கியிருக்க வேண்டும். இந்நூலின் ஆசிரியர்கள் நான்காவது அத்தியாயத்திலே, "கதிர்காமம் செல்லும் அன்பர் ஆற்றங்கரையானிடம் வந்து அவனுடன் இணைந்தே கதிர்காமம் சென்றனர். திரும்பி வரும்போது, அவ்வாறு சந்நிதியில் வந்து தங்கி இளைப்பாறியே தத்தம் ஊர்களுக்குச் சென்றனர்" என்று கூறுவது கவனிக்கத்தக்கது. யாழ்ப்பாணத்தவர்களும் ஒருகாலத்திலே தென்னிந்தி யர்களும் கதிர்காம யாத்திரையைத் தொடங்கும் இடமாகத் தொண்டை மானாற்றங்கரையைக் கொண்டிருந்திருக்க வேண்டும். தொண்டை

மானாற்றிலே உலாவிய சித்தர்களே சந்நிதியென்ற வடமொழிப் பெயரைத் தோற்றுவித்திருக்க வேண்டும்.

இந்தப் பின்னணியிலே பார்க்கும்போது, நல்லூர்க் கந்தசுவாமி கோவில் பற்றி ஆறுமுகநாவலர் கூறிய சில குறைகள் நினைவுக்கு வருகின்றன. போர்த்துக்கேயரால் அழிவெய்தமுன்பு அக்கோவில் எப்படி அமைந்திருந்ததென்பதை அறிய வழியில்லை. ஒல்லாந்தர் கால இறுதியிலே, கோவில் திரும்பவும் கட்டி எழுப்பப்பட்டபோது, கதிர்காம வழிபாட்டு முறையின் சில கூறுகள் தழுவிக் கொள்ளப் பட்டிருந்தன. குமாரதந்திரம் என்ற ஆகமத்துக்கு ஒவ்வாத அக்கூறுகள் நீக்கப்பட வேண்டுமென்று ஆறுமுகநாவலர் வாதிட்டார்.

நூலாசிரியர்கள் தொண்டைமானாற்று ஆற்றங்கரையான் பற்றிக் கள ஆய்வுமூலமாகவும் கட்டுரைகள் மலர்கள், இலக்கியங்கள் மூலமாகவும் பல்வேறு தகவல்களைத் தேடித்தந்துள்ளனர். இத் தகவல்களை அழியவிடாது பாதுகாக்கவேண்டும் என்பது அவர்களு டைய நோக்கம். அந்த நோக்கம் நிறைவேறுகிறது. இவ்வளவு பிரபலமாக இன்று விளங்கும் சந்நிதியானுக்கு இருபதாம் நூற்றாண்டுக்கு முந்திய நிச்சயமான எழுத்துச் சான்று எதுவும் இல்லாமலிருத்தல் வியப்பாக உள்ளது. செவிவழிச் செய்திகளும் ஐதீகங்களும் இன்றைய நடைமுறைக ளுமே மூலாதாரங்களாகின்றன. இவற்றைப் பண்பாட்டு மானுடவியல் முறையில் விளக்கிப் பண்பாட்டு வரலாற்றை உருவாக்க நூலாசிரியர்கள் முயன்றுள்ளனர்.

நூலாசிரியர்கள் விரும்பிய அளவுக்குத் தகவல்கள் கிடைக்க வில்லையென்பதை அவர்களே குறிப்பிட்டுள்ளார்கள். தகவல்களைத் தேடத் தொடங்கினாலே, தகவல்கள் எவ்வளவுக்கு உண்டு என்பது தெரியவரும். இலங்கைத் தமிழர் வரலாறு எத்தனையோ பக்கங்களிலிருந்து முயற்சி செய்வதாலேயே தெளிவுபெறக்கூடும்.

'ஆற்றங்கரையான்' என்ற நூல் ஆய்வாளர்களின் சிந்தனையைத் தூண்டவேண்டும். ஆய்வு முறைகளைக் கூர்மையாக்கி, இன்னும் அதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியுமாவெனவும் கிடைக்கின்ற தகவல்களைப் பயன்படுத்தி இன்னும் அதிக விளக்கங்களைப் பெற்றுக் கொள்ள முடியுமாவெனவும் ஆய்வாளர்கள் சிந்திக்க வேண்டும்.

**பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை**
தமிழ்த்துறைத் தலைவர்,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.
23-07-1989

# முகவுரை

கோயில்கள் தமிழர் வாழ்வுடன் நெருங்கிய தொடர்புடைய நிறுவனங்களாக அமைந்து வந்துள்ளன. சோழப் பெருமன்னர் காலத்துக் கோயில்கள் பற்றி வரலாற்றறிஞரான பேராசிரியர் நீலகண்டசாஸ்திரி பின்வருமாறு கூறுகின்றார்:

> "நில உரிமைக்காரனாகவும் முதலாளியாகவும், பொருட்களை நுகர்வோனாகவும், சேவைகளைப் பெறுவோனாகவும் விளங்கிய கோயில், வங்கியாகவும், பள்ளிக்கூடங்களாகவும், பொருட்காட்சிச் சாலைகளாகவும், வைத்திய சாலைகளாகவும், நாடக மன்றங்களாகவும் விளங்கியது; சுருங்கக் கூறினி, அக்காலத்து நாகரிக வாழ்க்கையிலும், கலைகளிலும் சிறந்தன வெல்லாம் தன்னையே சுற்றி இயங்கப்பெற்றது மட்டுமன்றி, அவற்றையெல்லாம் தர்ம உணர்விலிருந்து உதித்த மனிதாபி மானத்தால் செம்மைப்படுத்தியதில்; மத்தியகால இந்துக் கோயிலுக்கு நிகரான நிறுவனங்கள் உலக வரலாற்றி லேயே அருமையாகத்தான் உள்ளன எனலாம்."
>
> (Cholas, Vol. 2, pp. *504-505*. க. கைலாசபதி தன்னுடைய "பேரரசும் பெருந்தத்துவமும்" என்னுங் கட்டுரையில் இம்மேற்கோளைத் தமிழிலே தந்துள்ளார்.)

வரலாற்றுப் பேராசிரியருடைய இக்கூற்று மத்தியகால இந்துக் கோயில்களைப் பற்றிக் குறிப்பினும், அது தமிழர் பண்பாட்டு வரலாறுடன் அவர்தம் கோயில்களின் வரலாறும் பின்னிப் பிணைந்துள்ளமையையும் ஊகித்துணர வைக்கின்றது.

ஈழத்துத் தமிழருடைய கோயில்கள் பலவற்றுக்குச் சிறப்பான வரலாறுகள் உண்டு. அவற்றுட் சில தக்க வரலாற்றுச் சான்றுகளுடன் கூறத்தக்கன. சிலவற்றிற்குக் கர்ணபரம்பரைக் கதைகளே சான்று களாயுள்ளன. தொண்டைமானாறு செல்வச்சந்நிதிக் கோயில் இரண்டாவது வகையைச் சார்ந்தது. இந்நூல் அக்கோயிலின் வரலாற்றினை ஆராய்கின்றது. தக்க சான்றாதாரங்கள் இல்லாத

காரணத்தினால், கர்ணபரம்பரைக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு சில ஊகங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஈழத்தில் ஆகம நெறிக்குட்படாத வரலாற்றுப் புகழ்மிக்க கோயில்கள் சிலவேயுண்டு. அவற்றுள் தொண்டைமானாறு செல்வச்சந்நிதியும் ஒன்று. இதனால் அதனுடைய வரலாறு விரிவாக நோக்கப்பட வேண்டிய தேவையுமுண்டு. ஆற்றங்கரையான் என்னும் இந்நூல் அத்தேவையை ஓரளவாவது நிறைவு செய்யுமென எண்ணுகிறோம்.

இந்நூலை எழுதுவதற்கு முதன்முதல் ஆலோசனை வழங்கியவர் அமரர் பேராசிரியர் க. கைலாசபதி ஆவர். 1975ஆம் ஆண்டு 'செல்வச் சந்நிதி' பற்றி மனோன்மணி எழுதிய இசைச்சித்திரம் இலங்கை வானொலியிலே ஒலிபரப்பப்பட்டபொழுது, அதனைக் கேட்ட பேராசிரியர் "மனோன்மணி நீரே அக்கோயிலின் வரலாற்றை எழுதினால் என்ன"? கேட்டு கேட்டபோது "நான் அந்நூலை எழுதி முடிக்க நீங்களும் கோயிலுக்குள் வந்துவிடுவீர்கள்" என்று மனோன்மணி 'பகிடி' யாக மறுமொழி கூறியது எம் மனத்திலுள்ளது. அது வெறும் நகைச்சுவை உரையாடலாக முடியவில்லை. அன்று தொட்டே சந்நிதியானின் வரலாறு எழுதப்பட வேண்டும் என்ற எண்ணம் எம் மனத்திலே விதைக்கப்பட்டது. காலச் சூழ்நிலை பல்வேறு கோலங்களுக்குள்ளாகிறது. சந்நிதியானின் கோயிலும் அதற்கு விதிவிலக்காயில்லை. சில ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த நிகழ்வுகள் இக்கோயில் வரலாறு எழுதப்பட வேண்டுமென்ற எண்ணத்தைத் துரிதப்படுத்தின. இவ்வாண்டு அது கைகூடியுள்ளது.

இந்நூலை எழுத ஆரம்பித்தபோது, திரு.குல. சபாநாதன் (இந்நூலின் முதலிரண்டு இயல்களிலும் இவருடைய பெயர் குலசபாநாதன் எனத்தவறாக அமைந்துவிட்டது. தவறுக்கு வருந்துகிறோம்.) இக்கோயில் பற்றி எழுதிய குறிப்புக்களடங்கிய தொகுப்புக் கையெழுத்துப் பிரதிகளாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்திலே இருப்பது பற்றிய தகவலை அப்பொழுது நூலகத்திலே கடமையாற்றிய இப்பொழுது வீரகேசரிப் பத்திரிகையின் பிரதம ஆசிரியராகக் கடமையாற்றும் நண்பர் ஆ. சிவநேசச் செல்வன் தந்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேட்ட உதவி நூலகர் திருமதி விமலா பாலசுந்தரம் அவற்றைத் தந்த உதவினார். அவருக்கு எம்முடைய நன்றி.

கோயில் தொடர்பான களஆய்வுக்குத் திரு.சி. வன்னியகுலம், M.A. அவர்கள் உதவினார்கள். அவர் திரட்டித் தந்த பல தகவல்கள் இந் நூலாக்கத்துக்குப் பயன்பட்டன. அவருக்கு நாங்கள் கடமைப் பட்டுள்ளோம்.

செல்வச் சந்நிதியின் முன்னாட் பூசகர் மா.க. ஆறுமுகசுவாமி ஐயர் அவர்கள் இந்நூலுக்கு மனமுவந்து ஆசியுரை வழங்கியுள்ளார். இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ளார், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை. அவர், இந்நூல் அமைப்புக்கான ஏற்ற ஆலோசனைகளை வழங்கியது மட்டுமன்றி, கையெழுத்துப் பிரதியைப் படித்துச் சில குறைபாடு களையும் சுட்டிக் காட்டினார். அவற்றுட் சில நூல் முழுவதும் அச்சிடப்பட்ட பின்னரே குறிப்பிடப்பட்டமையால் ஏற்ற திருத்தங் களைச் செய்யமுடியாமற் போயிற்று. நூலுக்கு அணி செய்யும் வகையிலே ஆழமான ஆய்வுக் கருத்துக்களைச் சுட்டிக் காட்டி அணிந்துரையினை எழுதியுள்ளார். பயன்கருதா இவ்வுதவிகளை நல்கி ஊக்கமளித்துள்ள எமது மதிப்புக்குரிய ஆசானாகிய பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளைக்கு எமது 'உளங்கனிந்த நன்றிகளைக் கூறுகின்றோம். இந்நூலின் பல இடங்களிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பியின் கருத்துக்களைக் குறித்தும், அவற்றுட் சிலவற்றை விமரிசித்துமுள்ளோம். எனவே, இந்நூலைப் படித்து, இதிற் குறிப்பிட்டுள்ள கருத்துக்களைச் சீர்தூக்கிப் பார்த்து, குறைநிறைகளைச் சுட்டி, நூலை நிறைவு செய்யும் வகையிலே ஒரு நிறைவுரை எழுதித் தரும்படி அவரிடம் கேட்டோம்.

சந்நிதி முருகன்மேல் இவருடைய தந்தையார் பண்டிதர் மு. கார்த்திகேசு பல பிரபந்தங்கள் பாடியுள்ளமை இங்கு குறிப்பிடற்பாலது. பேராசிரியருக்கு சந்நிதி முருகனிலே மிகுந்த ஈடுபாடு உண்டு. அதனால் எமது வேண்டுகோளை ஏற்று நிறைவுரை வழங்கியுள்ளார். அவருக்கு எம் உளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

திருமணம் முடித்து ஐம்பதாவது ஆண்டிலே கால் வைக்கும் எம் அன்புக்கும் மதிப்புக்குமுரிய (மனோண்மணியின் பெற்றோர் களுமாகிய) திரு. கதிரவேலு முருகேசு திருமதி பாக்கியம் முருகேசு

தம்பதியினருக்கு இந்நூலினைப் பரிசாக அளிக்கத் தீர்மானித்தோம். திருமணம் எமது பண்பாட்டிலே குடும்பம், சமூகம் ஆகியன சிதைந்து போகாவண்ணம் பாதுகாக்கும் ஒரு புனித நிகழ்வாகவே கருதப்பட்டு வந்துள்ளது. அதனை மீண்டும் வலியுறுத்தும் வண்ணமே இச் சமர்ப்பணத்தைச் செய்யத் தீர்மானித்தோம்.

இந்நூலுக்கு அழகான அட்டைப்படம் வரைந்துதவிய தயா அவர்களுக்கும், இது தொடர்பாக உதவிகள் நல்கிய கவிஞர் கல்வயல் குமாரசாமிக்கும், அட்டையை அழகுற அச்சடித்துத் தந்த விஜயா பிரிண்டேர்ஸ்னருக்கும் நன்றி கூறுகின்றோம். இந்நூல் தொடர்பாகப் பல உதவிகளைச் சிரமம்பாராது இன்முகத்துடன் செய்த யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைச் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. எஸ். சிவலிங்கராசா M.A. அவர்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.

வராவொல்லை வெளியீடுகளை அச்சிட்டுவரும் ஆசீர்வாதம் அச்சகத்தினரே இந்நூலையும் அழகுற அச்சிட்டுள்ளனர். அவர்களுக்கும் எங்களுடைய நன்றி உரித்தாகுக. அச்சமைப்பு முகவர் திரு. றோக் யோசப், அச்சுக்கோப்பாளர்களான திரு. ஆ. கோவிந்தராசா, திரு. கு. தயாபரன் ஆகியோருக்குச் சிறப்பாக நன்றி கூறுகின்றோம்.

"ஒருமுகம்
குறவர் மடமகள் கொடிபோ னுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே"
(திருமுருகாற்றுப்படை : 100-102)

அத்திருமுகத்தினை நாம் இருவரும் வணங்கித் தமிழ்கூறும் நல்லுகத்தின் பார்வைக்கும் ஆய்வுக்கும் இச்சிறுநூலை வழங்குகின்றோம்.

நெல்லண்டை வீதி,
தும்பளை பருத்தித்துறை.
1989

அ. சண்முகதாஸ்
ச. மனோன்மணி

# முன்னுரை

'ஆற்றங்கரையான்' புதுக்கிய இரண்டாவது பதிப்பு வெளிவர முருகன் அருள் கைகூடியுள்ளது. முதலாவது பதிப்பு கோவிலின் வரலாற்றை எம்மால் முடிந்தவரை வரலாற்று ஆவணமாகவும் செய்தித் தொகுப்பாகவும் ஆக்கவேண்டும் என்ற இலக்கோடு வெளிக்கொணரப் பட்டது. இப்போது புதுக்கிய இரண்டாவது பதிப்பை வெளியிட திரு.சிவஞானசுந்தரம் ராஜ்குமார் (கரிகணன் பிறிண்டேர்ஸ், யாழ்ப்பாணம்) முன்வந்தமையும் முருகன் அருளே. அவருக்கு இப்பணியைச் செய்வதற்கு முருகன் அருளாலே உந்து சக்தியாக இருந்து செய்திகளையும் தகவல்களையும் மனமுவந்து வழங்கிய திரு. இரா. செல்வவடிவேல் அவர்கள் தமது பக்திக்கடனைச் செவ்வனே நிறைவேற்றியுள்ளார். தமிழ்ப்பணிக்காக ஜப்பானில் இருந்தபோது ஆற்றங்கரையான் நூலை எழுதுவதற்கு நேரமும் வாய்ப்பும் கிடைத்தன. அதனால் நூல் 1989 இல் வெளியிடப்பட்டது. உள்ளே கனன்ற உணர்வை எழுத்துருவில் பொறித்த பின்னர் ஒரு நிறைவு எற்பட்டது.

இப்போது மீண்டும் உள்ளத்திலே அலைமோதும் துன்பத்தை ஆற்ற, மீண்டும் முருகன் திருக்கோயிலின் தோற்றத்தைக் காலம் தந்த சுவடுகளைப் பதிவு செய்யும்போது ஒரு மனநிறைவு ஏற்படுகிறது. அதனால் இப்பதிப்பிலே 1990-2010 வரையான செய்திகளை ஆவணப்படுத்தும் முயற்சி நடைபெற்றுள்ளது. பழைய பதிப்பிலே செய்திகள் எழுத்துருவில் மட்டுமே இடம்பெற்றன. இப்பதிப்பிலே செய்திகளைப் படங்களாலும் விளக்கமுடிந்தமையும் முருகன் அருளே. அச்சகம் நடத்தும் அடியவனையே இப்பணிக்குப் பொறுப்பாக்கியுள் ளான். அவர் தனது தந்தையின் நினைவை எல்லோருடனும் பகிர்ந்து கொள்ள இந்நூலை வெளியிடுகிறார்.

முருகன் மலைத்தெய்வம் எனப்போற்றப்படுபவன். வடமராட்சியில் தொண்டைமான் ஆற்றங்கரையிலே வீற்றிருந்து அருள்புரிகிறான். காலமாற்றம் கவலைகளைத் தந்தாலும் இறைவழிபாடு எல்லாக் கவலைகளையும் நீக்கிவிடும். ஆற்றங்கரையான் அருட்தலம்

சிதைவுற்ற போது நாம் பட்ட துன்பம் எமது உள்ளத்தில் கொட்டிய உதிரம் எல்லாவற்றையும் பன்னிருகை வேலவன் துடைத்து விட்டான். மீண்டும் பொலிவுடனும் கண்டாமணியின் ஓசையுடனும் அவன் தொண்டைமான் ஆற்றங்கரையில் வீற்றிருக்கும் திருக்கோலமே இதற்குச் சான்று. புதுமைக் கவிஞன் பாரதியின் கவிதைவரியொன்றும் இதனை உறுதி செய்கிறது.

'பயனில்லாது உழைக்கச் சொன்னாள்
பக்தி செய்து எனைப் பிழைக்கச் சொன்னாள்."

பிறரது துன்பந்துடைக்கும் அன்புள்ளமும் தொண்டுள்ளமும் கொண்ட அடியார் கூட்டத்தால் ஆற்றங்கரை பொங்கி வழிகிறது. உயிரைக் காக்கப் புலம்பெயர்ந்து சென்ற முருகனடியவர் மீண்டும் வந்து ஆற்றங்கரையிலே கைகூப்பிக் கண்ணீர் சொரிந்து வழிபடும் காட்சி. "வேலை வணங்குவதே எமக்குவேலை" என்பதை நன்கு உணர்த்தி நிற்கிறது. பழைமையும் புதுமையும் சங்கமிக்கும் அற்புதமான ஆற்றங்கரையான் திருக்கோயில் வழிபாடு காணாமல் புகலிடங்களிலே அவன் நினைவோடு வழிபாட்டைத் தொடர்ந்த அடியாரின் வேண்டுதல் களை முருகன் நிறைவேற்றி விட்டான். மருந்து உண்டு பிணி தீர்த்துப் போகப் போக்குவரவைச் சீர்செய்து நினைத்தவுடன் ஆற்றங்கரை யானிடம் ஓடி வர அருள் செய்துள்ளான். கலியுகக் கந்தன் பெருமை இன்று உலகெங்குமே பரவியுள்ளது.

இந்நூல் வெளிவர உதவிய அனைவருக்கும் ஆற்றங்கரையான் இன்னருள் என்றென்றும் நின்று நிலைத்திருக்கும். அவன் திருத்தாள்களில் இந்நூலைப் பணிவாய்ப் படையல் செய்கிறோம்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**
**பேராசிரியர் அருணாசலம் சண்முகதாஸ்**

# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| | ஆசியுரை | iii |
| | அணிந்துரை | iv-xvi |
| | முகவுரை | xvii-xx |
| | முன்னுரை | xxi-xxii |
| 1. | ஆற்றங்கரையான் | 1-18 |
| 2. | சடங்கு முறையும் வழிபாட்டு நிலையும் | 19-34 |
| 3. | கர்ணபரம்பரைக் கதைகள்: காட்சிகள் | 35-54 |
| 4. | மடங்களும் மக்களும் | 55-64 |
| 5. | மலைத்தெய்வமாம் முருகன் வேல் | 65-74 |
| 6. | ஆற்றங்கரையானின் அன்புநிலை | 75-84 |
| 7. | செல்வச்சந்நிதியும் மக்கள் கலையும் | 85-100 |
| 8. | செல்வச்சந்நிதி : சமூக, பொருளாதார பண்பாட்டுப் பின்னணி | 101-112 |
| 9. | செல்வச்சந்நிதியில் ஒரு வாழ்வியல் பண்பாடு | 113-122 |
| 10. | புலம்பெயர் தமிழரின் பக்திநிலையும் பரவசமும். | 123-138 |
| 11. | பின்னிணைப்பு : சந்நிதி இலக்கியங்கள் | 139-230 |
| 12. | நிறைவுரை | 231-244 |

# 1

## ஆற்றங்கரையான்

"நாவலந் தண்பொழில் வடபொழில் ஆயிடைக்
குருகொடு பெயர்பெற்ற மால்வரை யுடைத்து
மலையாற்றுப் படுத்த மூவிரு கயந்தலை"

பரிபாடல் : 5

**சந்நிதிச் சூழல் வரலாறு:**

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வடமராட்சிப் பகுதியின் மேற்கெல்லையாக அமைந்துள்ளது; 'தொண்டைமானாறு' என்னும் அழகிய சின்னஞ்சிறு கிராமம். அங்கு அமைந்துள்ள சந்நிதி, அடியவர் தீராத நோய் தீர்க்கும் அருமருந்தான முருகன் அமர்ந்திருக்கும் இடம். அவன் திருவடி காணவேண்டி ஓடிவரும் அன்பர் கூட்டம். அதுவே சந்நிதியின் புகழ் எங்கும் பரவ வழி செய்தது. முருகன் கோலமின்றி, வேலின் கோலமே கண்டு பாடிப்பரவும் மக்கள் மனக்கவலையை மாற்றுகின்ற மாயம் யாரறிவார்? சந்நிதியானின் உறைவிடமோ உப்பாற்றங்கரை. வடமராட்சிப் பகுதியில் கடலோடு கலக்கும் ஆறு. மலையில்லாத மாயமான ஆறு. இன்றைய அறிவியலாளர் அதனைக் கடலேரியெனக் காண்பர். முருகன்மீது மாறாத அன்புகொண்டவர் ஆற்றங்கரையென்பர். அவர்வழிவந்த பலரும் அங்கு குடிகொண்டருளி யிருக்கும் முருகனை 'ஆற்றங்கரையான்' என்று அழைத்தனர். அந்த ஆற்றங்கரை வடமராட்சியிலே சிறப்பான இடமாகும். வடமராட்சி பற்றிய பின்வரும் குறிப்பு அதன் பரப்பளவை அறிய உதவுகிறது.

> "ஈழத்தின் வடபகுதியான யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடகிழக்குப் பகுதியாக வடமராட்சிப் பிரதேசம் அமைந்திருக்கின்றது. இப்பிரதேசம் வடமராட்சி தெற்கு, மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு, வடமராட்சி கிழக்கு, வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு என இரண்டு நிர்வாகப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நிலப்பரப்பளவிலும், சனத்தொகையிலும் குடாநாட்டின் முக்கிய பகுதிகளில் ஒன்றாக வடமராட்சிப் பகுதி அமைந்திருக்கிறது. பருத்தித்துறை, வல்வெட்டித்துறை போன்ற பிரசித்திபெற்ற

துறைமுகப் பட்டினங்களையும், கற்கோவளம், அம்பன், குடத்தனை, நாகர்கோவில் போன்ற தொன்மைவாய்ந்த கடல்சார் கிராமங் களையும், தும்பளை, புலோலி, அல்வாய், வதிரி, கரவெட்டி, கரணவாய், துன்னாலை, உடுப்பிட்டி, வல்வெட்டி தொண்டை மானாறு போன்ற பாரம்பரியப் பகுதிகளையும், நெல்லியடி போன்ற வளர்ந்துவரும் பட்டினங்களையும் கொண்ட தாக வடமராட்சிப் பிரதேசம் அமைந்திருக்கின்றது",[1]

புவியற் பரப்பளவிலே பல கிராமங்களைத் தன்னகத்தே கொண்ட வடமராட்சியின் வரலாறும் முக்கியமானது. யாழ்ப்பாணத்தைப் பறங்கியர் ஆட்சிசெய்த காலத்தில் நிர்வாகப் பிரிவுகளில் ஒன்றாக வடமராட்சி அமைந்திருந்தது. வடமராட்சியிலுள்ள 'தொண்டைமானாறு' சந்நிதி அமைந்த கிராமம். இக்கிராமம் வரலாற்றுப் புகழ்படைத்த கிராமமாகும்.

சி.குலசபாநாதனின் குறிப்புகளை (திரு.சி.குலசபாநாதன் சந்நிதி பற்றிப் பல குறிப்புக்களை எழுதி வைத்துள்ளார். இக்குறிப்புகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்திலே பேணப்பட்டுள்ளன) இங்கு தருவது பொருத்தமாகும்.

"வட இலங்கையில் வடமராட்சிப் பகுதியில் தொண்டைமானாறு என்னும் புராதன நகரம் உண்டு. கருணாகரத் தொண்டைமான் எனும் சிற்றரசனுடன் தொடர்புபூண்ட நகரம் இப்பெயரால் வழங்கப்பட்டு வருகின்றது. முதலாங் குலோத்துங்க சோழமன்னன் ஆட்சிக் காலத்தில் (கி.பி 1070 - 1120) இவனுக்கு அமைச்சனும் படைத் தலைவனுமாக விளங்கியவன் பல்லவர் குலத்தோன்றலும், வண்டையர் கோனும், தொண்டைமானுமாகிய கருணாகரன் என்பவன். இவனுடைய முழுப்பெயர் பல்லவராய திருவரங் கருணாகரத் தொண்டைமான் என்பது. குலோத்துங்க சோழன் கலிங்கப் போரில் வெற்றியீட்டியதை நினைவுறுத்தி நிற்பது சயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப் பரணி என்னும் நூலாகும். குலோத்துங்க சோழன் ஆட்சிக்குட்பட்ட சிற்றரசர்களில் ஒருவனாகக் காஞ்சியில் இருந்து ஆட்சி புரிந்தவன் கருணாகரத் தொண்டைமானின் தமையன் ஆவான். இவன் தொண்டைநாடு முழுவதையும் ஆட்சிபுரிய இவன் தம்பி கருணாகரன் வண்டை நகரின்கண் இருந்து தொண்டை நாட்டின் ஒரு பகுதியை ஆட்சி செய்தான்.

தொண்டை யர்க்கரசு முன்வ ருஞ்சுரவி

துங்க வெள்விடை யுயர்த்த கோன்

வண்டை யர்க்கரசு பல்ல வர்க்கரசு

மால்க ளிற்றின்மிசை கொள்ளவே.

(கலிங்கத்துப்பரணி: 364)

என இவன் கலிங்கத்துப் பரணியில் போற்றப்படுகிறான். இச்செய்யுளிலே வண்டையர்க்கரசு எனக் குறிப்பிடப்படுபவன் கருணாகரத் தொண்டைமானேயாவான். இவன் புராதன இராணுவப் படையினையும், கப்பற்படையினையும் தொண்டைமானாறு துறையையடுத்து நிறுவினான். பல்லவரைப் பற்றி அரியதோர் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதிய என் நண்பர் (Tamil Culture, Vol. IV - No. 3 July 1955) தொண்டைமானாறு சி.நாகலிங்கம் அவர்கள் பல்லவ சிலாசாசனங்களிற் காணப்படும் சொற்றொடர்களைத் துருவித் துருவி ஆராய்ந்து சில முடிவுகளைக் கூறியுள்ளார்.

(அ) விடேல் விடுகு கல், (ஆ) விடேல் விடுகு துளையிட்ட செம்பொன், (இ) 'விடேல் விடுகு என்னும் திருவானை நாடவி அபிஷேகம் செய்து' எனும் சொற்றொடர்களை ஆராய்ந்து 'விடுதுகல்' வல்வெட்டித்துறைப் பகுதியில் இன்றும் வழக்காற்றில் இருக்கும் உண்மையினை எடுத்துக் காட்டியுள்ளார்".

முதலியார் செ.இராசநாயகம் (1933) யாழ்ப்பாணச்சரித்திரம் என்னும் நூலிலே கருணாகரத் தொண்டைமான் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்.

'பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் குலோத்துங்க சோழன் தன் தளகர்த்தனாகிய கருணாகரத்தொண்டைமானை ஒரு படையுடன் இலங்கைக்கு அனுப்பினான். கருணாகரன் இலங்கைக்குப் படையெடுத்து வந்தபோது, யாழ்ப்பாணத்தில் கரணவாய், வெள்ளப்பரவை என்னுமிடங்களில் உப்பு அளவின்றி விளைந்து அழிந்துபோவதைக் கண்டு, அவ்வுப்பைச் சோள தேசத்திற்கு அனுப்புவதற்கு வேண்டிய பிரயத்தனங்கள் செய்தான். அவன் இணுவிலிலே மனைகோலியிருந்து உப்பேற்றும் மரக்கலங்கள் காற்றின் உக்கிரத்திற் சிக்கலாகாது ஒதுங்கி நிற்கும் துறையாகத் தொண்டைமானாற்றினையும் வெட்டுவித்து, இப்போது உரும்பிராய்க் குறிச்சியிலிருக்கும் கருணாகரப்பிள்ளையார் கோவிலையும் கட்டுவித்தான்"

மேற்காணும் குறிப்புகள் தொண்டைமானாறு கிராமத்தின் வரலாற்றை; வரலாற்றுப் புகழ்காண வைக்கின்றன புராதனப் பெருமைபெற்ற தொண்டைமானாறு கிராமம் ஆறுபாயும் வளநிலப் பிரதேசமாக இருந்ததை வரலாறு காட்டும் குறிப்புகள் உணர்த்துகின்றன. ஈழத்தின் வடபாகத்து வரலாறு விரைவாக எழுதப்பட வேண்டிய தொன்று. ஆங்காங்கே சிதறிக்கிடக்கம் வரலாற்றுக் குறிப்புகளையாவது காலக்கிரமப்படி தொகுத்து வரலாற்றாசிரியர்கள் வெளியிடுவது பயன் தருவது. அதன்மூலம் தொண்டைமானாறு கிராம வரலாறும் தெளிவாகும். கிராமங்களின் வரலாறும் எல்லோராலும் அறியப்பட வேண்டியது.

தொண்டைமானாறு கிராமத்திலே நகரின் தெற்குப் பக்கத்திலே தொண்டைமானாற்றங்கரையில் கழிமுகத்துக் கண்மையில் செல்வச் சந்நிதி முருகன் கோயில் அமைந்துள்ளது. இந்தக் கோவிலுக்குச் சின்னக் கதிர்காமம், செல்லக் கதிர்காமம், கல்லோடை என்றும் பெயர்கள் உள. கோயிலின் மேற்குத்திசையிலே தொண்டைமானாறு பாய்கிறது. மாரிவளமும் கடல்வளமும் நிறைந்த நீர்கொண்டு வாரியிறைத்துப் பாயும் ஆறு. கழியும் கடலுமாகத் தொண்டை மானாறும் உப்பாறும் விளங்குகின்றன. நீர்க்கரையமர்ந்து நெடுவினையகற்றும் வேலவன் கோயிற் சூழல் மனதை மயக்கும் அழகு கொண்டது. மாலைக் கதிரவனின் பொன்னிறக் கதிர்கள் கோயிலின் முன்னுள்ள மருதமரங் களிற் பச்சிலைகளைத் தழுவித் தொண்டை மானாற்றில் வந்து படியும். ஆற்று நீரும் பச்சைப் பொன்னிறம் பெற்றுப் பளபளத்து ஓடும். வடக்கே கடலோடு சங்கமிக்கப் போகையில் நீலப்பட்டாடையுடுத்துப் போகும். தெற்கே வயல் வெளியிடைப் பாய்கையில் வெண்பட்டாடையுடுத்து வளைந்து நெளிந்து செல்லும். ஆற்றின் கரையில் அடர்ந்த கரிய பனை மரங்களில் இனிய சலசலப்பு, நிலத்திலே கதிர் விரித்துப் பரவிக் கிடக்கும் நெற்கதிர்களின் சரசரப்பு, ஆற்றின் குறுக்கே செல்லும் பாதையில் செல்லும் மாட்டுச் சதங்கைகளின் இனிய நாதம். இவை மூன்றுங் கலந்து செவியில் இனிய சங்கீதமாகச் சேரும். இப்பொழுது இப்பாதையில் பல நவீன வாகனங்களும் செல்கின்றன. கோயிலின் சூழலின் இயற்கையழகு எல்லோரையும் ஈர்ப்பது. மருதமரக்காடும், பாக்கு நீரிணைக்கடலும், மருங்கே காணும் வயலும், இடையே கிழக்கே கிடக்கும் வல்லைவெளியும் திணையொழுக்கம் காட்டும். சூழ வாழும் மக்களின் வாழ்வுத்திறம் இயற்கையோடு இணைந்தது. இன்று இந்தக் காட்சியைக் காணமுடியாது. சந்நிதி என்ற சொல்லுக்குத் தமிழ்க்கலைக் களஞ்சியம் "அண்மைநிலை, தெய்வம் குரு பெரியோர் இவர்களில் திருமுன்பு, கோயில், சன்னிதானம்" என்ற பொருள்களைத் தந்துள்ளது.

சி.குலசபா நாதன் அருகு. அண்மை, திருமுன், மூலஸ்தானம், கோயில், ஆவேசிக்கை என்னும் பொருள்களைக் கூறியுள்ளார். இக்கோயிலின் பெயர்பற்றி கா.சிவத்தம்பி பின்வருமாறு எழுதியுள்ளார். "தமிழ்ச் சைவமரபில் பெரும்பாலும் கோயில்களின் பெயர்கள் இடத்தின் பெயரையும், தலமூர்த்தியின் பெயரையும் கொண்டிருக்கும். ஆனால், இங்கோ செல்வச் சந்நிதி என்று மாத்திரமே பெரிதும் வழங்கப்படுகிறது. "தொண்டைமானாற்றுச் செல்வச்சந்நிதி" என்னும் மரபும் இல்லை யென்றே கூறவேண்டும். அதுபோல "சந்நிதி முருகன்" என்றும் விதந்தோதப்படுவதில்லை. "சந்நிதியான்" என்றே குறிப்பிடப் படுவதுண்டு. "ஆற்றங்கரையான்" எனும் மரபுண்டு என்பதை இங்கே குறிப்பிடல் வேண்டும். ஊர்ப் பெயரையும், உறையும் தெய்வத்தின் பெயரையும் குறிப்பிடாத அளவுக்கு முக்கியம் பெற்றுள்ள 'சந்நிதி' என்ற இப்பெயரின் கருத்தை அறிவது அவசியம். 'சந்நிதி' என்னும் சமஸ்கிருதச் சொல், சம் + நி + தி என நிற்பது இதன் கருத்து.

1) அண்மையில் இருப்பது, அண்மைநிலை

2) முன் நிற்றல்

என்பனவாகும். காலக்கிரமத்தில் தெய்வம், குரு, பெரியோர் முன்னிற்பதை 'சந்நிதி' சந்நிதானம் என்பன குறித்தது. எனவே 'சந்நிதி' என்பது முருகன் முன்னிற்றலைக் குறிக்கின்றது. 'செல்வச் சந்நிதியில்' செல்வம் அடைமொழி முருகனையே செல்வமாக அவன் தருவன வற்றைச் செல்வமாகவும், அவனைச் செல்வத்தைப் பெறுவதற்கான வழியாகவும் கொள்ளும் அர்த்தங்களும், மனநிலைகளும் அதிலே தொனிக்கின்றன'. 'சந்நிதி' என்ற பெயர் காலத்தாற் பிற்பட்டதென்றே கொள்ள இடமுண்டு,.

'சந்நிதி' என்னும் சொல் மணிமேகலை (14, 29) உரையிலும் பிரயோக விவேகம்' உரையிலும் இடம் பெறுகின்றது. 'இறை வீற்றிருத்தல்', 'கோயிலின் முற்பகுதி' என்னும் பொருளிலே இச்சொல் விரிஞ்சிபுரம் கல்வெட்டிலே (No.65, South Indian Inscriptions, Vol.1 p.93) இடம்பெற்றுள்ளது. அக்கல்வெட்டுப் பகுதி பின்வருமாறு.

"ஒக்கநின்ற நாயனார் திருக்கோயிலை
சூழ்ந்த இடத்திலும் சன்நிதியிலும்
ஏறின பல குடிக்கும்...."

மேற்காட்டிய கல்வெட்டுப் பகுதியில் 'சன்நிதி' என்னுஞ் சொல் இடம்பெற்றுள்ளது. இச்சொல் 'சந்நிதி' 'சன்னிதி' 'சன்னதி' என்றெல்லாம் எழுதப்படும். மூலவிக்கிரகத்தைச் சுற்றுமதிலுக்கு வெளியேயிருந்து பார்ப்பதற்கு மதிலிலே அமைக்கப்பட்ட துவாரத்தை

'சந்நிதித் துவாரம்' என அழைத்தனர். கோயிலுக்கு முன்னாலே அமைக்கப்பட்ட வீதி 'சந்நிதி வீதி' எனப்பட்டது.

ஈழத்திலே ஆற்றருகே கோயில் கொண்டருளிய மூர்த்திகள் நான்கு: பாலாவிக் கரையிலே எழுந்தருளியுள்ள கௌரீஸ்வரி சமேத திருக்கேதீச்சர நாதர். மாணிக்க கங்கையின் அருகே கோயில் கொண்டருளியுள்ள கதிர்காமக் கந்தன், வெருகல் கங்கைக் கரையில் அமைந்துள்ள வெருகல் முருகன், தொண்டைமானாற்றங் கரையிலே விற்றிருக்கும் சந்நிதி முருகன். 'சந்நிதி' என்னுஞ் சொல் செல்வச் சந்நிதிக் கோயிலைக் குறிப்பதற்கு எப்பொழுது கையாளப்பட்டது? ஏன் கையாளப்பட்டது? என்ற வினாக்களுக்கு விளக்கம் கொடுப்பதற்குப் போதிய சான்றாதாரங்கள் இல்லை. கதிர்காமத்திலே கந்தன் சூக்கும வடிவாக நிற்கத் தொண்டமானாற்றுக் கரையிலே காட்சிக்குரியதாக வேல்வடிவிலே கந்தன் வீற்றிருந்த காரணத்தாலே 'இது நல்ல இருக்கை' என்ற அடிப்படையிலே 'சந்நிதி' என்ற சொல் இப்புனித இடத்தைக் குறிப்பதற்குப் பயன்பட்டிருக்கலாம். தமிழருடைய பண்பாட்டு வரலாற்றிலே முக்கிய இடம்பெறும் இக்கோயில் பற்றி 'இலங்கையில் தமிழ்ப் பண்பாடு' (Tamil Culture in Ceylon, 1960) என்னும் ஆங்கில நூலை எழுதிய M.D. இராகவன் என்பவர் எதுவும் குறிப்பிடாமை ஆச்சரியமாயுள்ளது. தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோயில் பற்றி "ஈழத்திற் சைவக்கிராமிய வழிபாடு" பற்றி எழுதிய த.சண்முகசுந்தரம் (1971) பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

> "செல்வச் சந்நிதியில் அந்தணர் அல்லாதோர் பூசை நடத்துகின்றனர். கதிர்காமம் உண்மையிலே காட்டில் உருவான பண்டைய முருகன் வழிபாட்டின் படிமுறை வளர்ச்சியேயெனலாம். வள்ளியைப் பற்றிச் செவிவழி வந்துள்ள கதிர்காமக் கதைகள் இக்கருத்தையே வலியுறுத்துகின்றன. இன்றும் வள்ளி வழங்கியதான தேனும், தினைமாவும் முருகனுக்குக் கதிர்காமத்தில் சிறப்பாகப் படையல் செய்யப்படுகின்றன. யாழ்ப்பாண வைபவமாலைப்படி கருணாகரத் தொண்டைமானால் சோழப்பேரரசு காலத்திலே தொண்டைமானாறு அமைக்கப்பட்டது. தொடக்கத்தில் கப்பல் ஏறுவோர் இறங்குவோர் வணங்கிய முருகனின் சிறு கோயிலே காலகதியில் பெருங்கோயிலாக மாறியது எனக் கொள்ளலாம். கப்பற் பிரயாணம் அச்சம் நிறைந்ததானபடியால் துறைமுகக் கடவுளர் வழிபாடு நடைபெற்றது".

வடமராட்சியைச் சேர்ந்த உடுப்பிட்டி சிவசம்புப் புலவரும் சந்நிதி பற்றிப் பாடியிருப்பார் என்று தேடியபொழுது பெருத்த

ஏமாற்றந்தான் கிடைத்தது. அச்சில் வந்த அவரது பிரபந்தமெதுவும் சந்நிதி முருகனைப்பாடவில்லை.

செல்வச் சந்நிதியின் முன்னாட் பூசகர் மாணிக்கர் கதிரிப்பிள்ளை ஆறுமுகசாமி அவர்களை நேரடியாகச் சந்நிதித்துச் சந்நிதி பற்றிய சில தகவல்களைக் கேட்டறிந்தோம். அவர் "செல்வச் சந்நிதி" அல்ல 'செல்வச் சந்நதி' ஆகத்தான் இக்கோயில் சிறப்புற்றிருக்க வேண்டுமெனக் கூறினார். நிதி என்ற சொல்லே செல்வத்தைக் குறிப்பதால், அதற்கு முன்னாலே 'செல்வ' என்ற அடை கொடுப்பது பொருத்தமற்றதாகும். எனவே 'சந்நதி'யாகவே இருந்திருக்கவேண்டும். வல்லியாறு கடலோடு கலக்குமிடத்திலே பண்டைக்காலத்தில் கப்பல்கள் வந்து தங்குவதற்கும், வணிகர்கள் தங்கிச் செல்வதற்கும் வசதியான துறை அமைந்திருக்கலாம். இதனால், வல்லியாறு சந்நதியாகவும், செல்வச் செழிப்பான வணிகர்கள் வந்து தங்கிப்போகும் இடமாயிருந்ததால், செல்வச் சந்நதியாகவும் பெயர் பெற்றிருக்கலாம். இங்கு கோயில் கொண்டருளிய முருகன் 'செல்வச் சந்நதியான்' ஆகியிருக்கவேண்டும். கருணாகரத் தொண்டைமான் வல்லியாற்றினை ஆழமாக்கியபின் அது தொண்டைமானாறு ஆகியது. இதன்பின்னர் இங்குள்ள கோயில் 'தொண்டைமானாற்றுச் செல்வச் சந்நதி" எனப் பெற்றிருக்கவேண்டும். முன்னுக்குத் தொண்டைமானாறு அடையாக வருவதால் 'நதி' காலகதியில் 'நிதி' யாக மாறியிருக்க வேண்டும். பூசகருடைய கருத்துக்கு இப்படித்தான் ஒரு விளக்கம் கொடுக்கலாம் போலுள்ளது.

கோயிலைச் சூழவுள்ள பகுதிகள் தொண்டைமானாறு கிராமம், இடைக்காடு, வல்வெட்டி என்ற பிரதேசங்களாகவுள்ளன. இவற்றுள் இடைக்காடு என்ற கிராமம் குறிப்பிடத்தக்கது. பரந்த வெளிப் பிரதேசத்தின் இடையே முன்னர் சிறு காடு ஒன்று இருந்திருக்கலாம். அதுவே இடைக்காடு என அழைக்கப்பட்டிருக்க வேண்டும். கோயிற் காணி 52 1/4 பரப்புக் கொண்ட பிரதேசமென அறியக் கிடைக்கின்றது. அதன் தோம்புப் பெயர் 'முதிரை நின்ற செம்பாடு' என்பதாகும். அதனால் கடற்கரையை அடுத்த காட்டு நிலமாகவே கோயிற்பிரதேசம் முன்னர் இருந்திருக்க வேண்டும். கோயிற் பிரதேசத்திலேயுள்ள மருத மரங்களும் இதற்குச் சான்று பகர்கின்றன. மருதமரம் வயல்சார்ந்த நீர் வளமிக்க பிரதேசத்து வளருகின்ற மரமாகும். இம்மரம் பற்றிய குறிப்புக்கள் சங்க இலக்கியங்களிலே பலவுண்டு.

"வயலுழை மருதின் வாங்குசினை" - புறம் : 52
"தேங்கொண் மருதின் பூஞ்சினை" - புறம் : 351

"திருமரு தோங்கிய விரிமலர்க்கா" - அகம் : 36

"மருத மரநிழ லொருதொடு வதியுங்" - அகம் : 37

"செம்மருதின் மடக்கண்ணமயில்" - பொருநர் : 189

"மருதின் தாழ்ச்சினை யுறங்கும் தண்டுறை" - அகம் : 286

"புனல் பொருத மருதோங்கு படப்பை" - அகம் : 376

"சேண் சினை இருள்புனை மருதின் இன்னிழல்" - நற்: 330

"மருதுயர்ந் தோங்கிய விரிபூம் பெருந்துறை" - ஐங் : 33

"கழனி மருதின் சென்னி" - ஐங் : 70

"செவ்வீ மருது" - குறு : 50

"பெருந்துறை மருது" - குறு : 258

மேற்காணும் குறிப்புக்கள் மருதமரம் நீர்வளம் நிறைந்த பிரதேசத்தில் செழித்து வளர்ந்திருக்கும் என்பதனையும், அம்மரத்தின் அடர்வு பற்றியும், பூக்களின் தண்மை பற்றியும் உணர்த்துகின்றன. வயற்பிரதேசத்துக்குரிய மரமாக மருதமரம் சங்க இலக்கியங்களிலே குறிப்பிடப்பட்டுள்ளது. தொண்டைமானாற்றுக் கிராமத்திலேயும் முன்பு மருத மரங்கள் செழித்து வளர்ந்திருந்திருக்க வேண்டும். பொருநராற்றுப்படையிலே வந்துள்ள "செம்மருதின் மடக்கண்ணமயில்" என்ற தொடர் மருத மரக்கிளையிலே வீற்றிருக்கும் மயில் பற்றிக் குறிப்பிடுகிறது. சந்நிதி கோவிலிலும் உள்ள மருத மரங்களிலே மயில்கள் நிறைய இருந்தன.

வயல் வளமும் கடல்வளமும் மலிந்த தொண்டைமானாற்றுக் கிராமம் வழிபாட்டிற்குரிய இடமாகவும் அமைந்தது. கோவிலின் மேற்குப்புறந்தேயுள்ள பூவரசமரமே தலவிருட்சமாகக் கொள்ளப்பட்டு வருகிறது. இப்பூவரசு; ஞானி ஒருவரின் சமாதியில் முளைத்தெழுந்ததாகவும் கூறப்படுகின்றது. இதனைக் கோயிலுக்கு அமைத்த சித்திரத்தேரிலும் சிற்பமாக்கினர். தலவிருட்சம் வரண்ட நிலத்திற்குரிய மரமாகவுள்ளது. இப்பூவரசு பற்றிச் சி.குலசபாநாதன் வருமாறு குறிப்பிடுகிறார்:

> "கோயிலின் உள்வீதியில் மேற்றிசையிற் பழைய பூவரச மரமொன்றைக் காணலாம். இது மிகவும் பழைய மரமென்பதற் கையமில்லை. இது ஒரு பெரிய தவசிரேட்டர் சமாதியான இடத்தின் மீது நிழல்தரும் மரமாகக் காட்சியளிக்கின்றது. சில சமயங்களில் இதன் இலைகள் யாவும் உதிர்ந்து மரமே பட்டுவிட்டதுபோல இருக்கும். ஆனால், எதிர்பாராத விதமாக அழகிய குடை விரித்திருப்பது போலச் சடைத்து வளர்ந்து பச்சிலைகளைத் தள்ளி சமாதிக்கு நிழல் தரும் விருட்சமாகக்

காட்சியளிக்கும். இஃது ஒரு அற்புதமான விருட்சம் என்று ஆனந்தாச்சிரமத்திலுள்ள ஸ்ரீ மயில்வாகனம் சுவாமியவர்கள் ஒருமுறை என்னிடம் கூறினார்கள்".

தலவிருட்சமாகப் பூவரச மரம் அமைந்ததற்கு முக்கிய காரணம் என்வென்பதை அறியமுடியவில்லை. கோவில் அமைப்பு ஏற்படுவதன் முன்னர் தவசிரேட்டர் ஒருவரின் சமாதியன்றி இரு சமாதிகள் இருந்ததாகவும் கருதப்படுகிறது. 1947ம் ஆண்டு இந்துசாதனம் பத்திரிகையில் சந்நிதியை வழிபடுகின்ற அன்பர் ஒருவர் எழுதியுள்ள இச்செய்தியைக் கூறுகிறது.

> "இலங்காதீவின் தென்பால் கதிர்காமக்ஷேத்திரம் விளங்குவதுபோல, வடபால் இச்செல்வச்சந்நிதி ஆலயம் விளங்குகின்றது. இவ்வால யத்தில் இரண்டு மகான்களின் சமாதியுண்டென்று ஆன்றோர் கூறுவர்",[3]

இதுபற்றி மேலும் தகவல்கள் அறியப்படவேண்டியுள்ளன. கோவிலின் அமைப்பு 1949ஆம் ஆண்டில் பின்வருமாறு இருந்தது.

> "இவ்வாலயம் மிகுதியும் சாதாரண கட்டத்தையுடையதாயிருக் கின்றது. கோபுரம் இல்லை. உயரமான மதில்களும் இல்லை. முருகப்பெருமானை வேலிலேயே பிரதிஷ்டை செய்திருக்கின் றார்கள். மூலஸ்தானத்தில் பிரதான வேலுடன் பக்தர்களால் காணிக்கையாகச் செலுத்தப்பட்ட பல வேல்களும் அமைக்கப் படிருக்கின்றன. இக்கோயிலின் சூழலில் யாத்திரிகள் வசதியாத் தங்கியிருக்கக் கூடியதான 18 மடங்கள் வரையில் உண்டு. ஒவ்வொன்றும் பலதுலாக்களைக் கொண்ட விசாலமான 16 கிணறுகள் வரையில் உண்டு. இவற்றுடன் யாத்திரிகள் உபயோகிக்கக்கூடியதான இரு குளங்களும், தீர்த்தக்குளமும், ஆறும் உண்டு. விழாக் காலங்களில் அயலிலுள்ள தோட்டக் கிணறுகளும் யாத்திரிகளால் உபயோகப் படுத்தப்படுகின்றன. எந்தச் சாதியாரும் தத்தமது நேர்த்திக் கடன் களைச் சிறப்பாகவும் சரிவரவும் செய்து முடிப்பதற்கேற்ற இருக்கை வசதிகளும் பிறவும் இக்கோயிலில் உண்டு,[4]

கோயிலின் சூழல் மிகப்பழைய காலத்தில் எப்படியிருந்தது என்பதற்குப் போதிய தகவல்கள் இல்லையென்றே கூறவேண்டும். கோயில் வரலாறு பற்றிய குலசபாநாதனின் குறிப்புக்கள் வருமாறு:

> "அநாதி மலமுத்தனாகிய முருகப்பெருமான் சந்நிதியில் எப்பொழுது கோயில் கொண்டெழுந்தருளினான் என்ற சரித்திர ஆராய்ச்சியில் சிற்றறிவும் சிறுதொழிலுமுடைய மக்கள் ஈடுபட்டு உண்மை காண்பதரிது. பண்டைக்காலத்தில்

ஈழநாட்டில் சைவசமயம் சிறப்புற்றோங்கிய பொழுது, செல்வச் சந்நிதி முருகன் கோயில் பல வீதிகளுடைய சிறந்த ஆலயமாக விளங்கிற்று. ஆனால் போர்த்துக் சீகரும் ஒல்லாந்தரும் (டச்சக்காரர்) இலங்கையில் ஆட்சிபுரிந்த காலத்தில் தத்தம் சமயக் கொள்கைகளைப் பரப்பியதுமன்றி சைவக் கோயில் களை இடித்துத் தகர்த்து அவை இருந்த இடமும் தெரியாமல் தரைமட்டமாக்கிவிடும் கைங்கரியத்திலும் ஈடுபட்டனர். கதிர் காமத்தை இடிக்கச் சென்று ஒல்லாந்தர் வழிதடுமாறி மயங்கிக் கடைசி யில் அதனையடைய முடியாது திரும்பி வந்து விட்டதாக ஒல்லாந்தரே எழுதிய சரித்திரத்திற் குறிப்பிட்டிருக் கின்றனர். அதுபோல சந்நிதியிலும் ஒரு திருவிளையாடல் நடைபெற்றது. சந்நிதி முருகன் கோவிலை இடிக்கச் சென்ற ஒல்லாந்தர் அதனை முற்றாக இடிக்கமுடி யாது திரும்பி விட்டனர். இந்த அற்புத வரலாற்றைத் தொண்டை மானாறு திரு.வி.செல்லையா அவர்கள் தாம் எழுதிய நூலிற் குறிப்பிட்டுள்ளார்.

அதனை முதற்கண் எடுத்துக் காட்டுவோம்.

முன் உலாந்தாக்காரர் இலங்கைத் தீவை அரசாட்சி செய்த காலத்தில் ஒல்லாந்த தேசத்திலே பிறவிக் குருடனாயிருந்த ஓர் உலாந்தாக்காரன் தான் இந்தச் செல்வச் சந்நிதி தலத்திற்கு வந்து சுவாமி தரிசனை செய்தால் தன் பிறவிக் குருடு நீங்குமென்று, இவ்விடமிருந்து சென்ற தன் தேசத்தவர்களால் அறிந்து தன் செனன தேசமாம் ஒல்லாந்த தேசத்திலிருந்து அங்கே புறப்பட, அதே சமயத்தில் சந்நிதியில் எழுந்தருளியிருக்கும் முருகன் தனக்குப் பூசை செய்யும் அச்சர்கருக்குத் தரிசனங்கொடுத்து, 'ஒல்லாந்த தேசத்திலிருந்து ஓர் பிறவிக் குருடன் இங்கே வந்து தரிசனை செய்து தன் பிறவிக் குருட்டை நீக்கவெண்ணி வருகிறான். அவனுக்கு கண் குருடு நீங்காதென்று நீ சொல்லுகிறது மன்றி, விபூதி, தீர்த்தம், சந்தனம் முதலியவைகளைக் கொடுத்துவிடு' என்று சொல்லியருளினார். அவ்வாறே ஒல்லாந்த பிறவிக்குருடன் செல்வச் சந்நிதியை யடைந்து பதினைந்திருபது நாட்கள் தங்கியும் அவன் கண் பார்வையடையவில்லை. ஆனால் கோயில் அச்சகரும் வெள்ளைக்காரனுக்குப் பயந்து முருகன் இட்ட கட்டளைப்படி செய்யாமல் மௌனமாயிருந்தார். உலாந்தாக்காரனோ தான் எண்ணிவந்த கருமம் நிறைவேறாததாலே கோபங்கொண்டு. 'இது ஒரு விசேடமான தலமல்ல. இங்குள்ளவர்கள் வயிறு

வளர்த்துச் சீவியம் செய்யும் நோக்கமாக இதனை ஆதரித்து வருகிறார்கள். ஆகையால் இதை இடித்தெறிந்து விட்டு துறைமுகமாக்குவோம் இதற்கு மேற்குப் புறத்தில் ஒரு வாய்க்காலும் சமுத்திரமுமிருக்கின்றது. துறைமுகத்திற்கு மிகவும் உகந்த இடம்" என்ற செய்தியைத் தனது சொந்தத் தேசத்த வருக்கு எழுத, அவர்களும் அதற்குடன்பட அவனும் அவ்வண்ணமே இடித்துப் பரவிவிட்டு தன்தேசம் போய் விட்டான்.

ஆனால், தொண்டைமானாறு சி.ஆ.வேதநாயகம்பிள்ளை இக்கோயிலைப் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். அதனையும் எடுத்துக்காட்டுவோம்.

இதன் உற்பத்திக்காலம் முதலியவற்றை நிச்சயப்படுத்திக் கூறத் தகுந்த சாதனங்கள் ஒன்றும் காணப்படவில்லை. ஆயினும் இதனைச் சூழ்ந்து வரிசையாய் உயர்ந்தோங்கி அதிசேய்மைக் கண் செல்வோரையும் தமது பசிய இலைக்கொம்பர்களாகிய சுரங்களைக்காட்டி அழைப்பன போன்று விளங்கும் ஆல், அரசு, வேம்பு, நாவல் ஆகிய பாரிய விருட்சங்களையும் ஆங்காங்கு பற்பல விடங்களில் அழிந்து தரைமட்டமாகக் காணப்படும் கட்டிடங்களையும் உற்றுநோக்குங்கால், பல நூற்றாண்டு களுக்கு முன்பு இவ்விலங்காதீபத்தில் தம் வலியை நாட்டி அரசு புரிந்த பறங்கிக்காரர் காலத்தில், தகர்க்கப்பட்டனவாகக் கருதப்படும் ஆலயங்களுள் இதுவும் ஒன்றாயிருத்தல் வேண்டுமென்பது நன்கு புலப்படுகின்றது. அக்காலத்தில் இதனைச் சூழ்ந்திருந்த இரு மதில்களையும், கட்டிடங்களையும் அழித்த அத்தீயோர் மறுமதிலுட் பிரவேசிக்க எத்தனித்தலும், சடுதியாய் அவர்களுக்குள் இருவர் மரணமடைய நேரிட்டத னால் உடனே அவ்விடத்தை விட்டுப் பிரிந்தார்கள் எனவும், அவர்களால் தாக்கப்படாது எஞ்சிய பாகமே தற்காலம் விளக்கும் கட்டிடம் எனவும், இதற்கு அண்மையனவாகிய கிராமங்களில் வசிக்கும் பெரியார்களுக்கு காலந்தோறும் இங்குவந்து தரிசனம் செய்து திரும்பும் இதரவூர்ப் பெரியார் களும் சொல்லுகின்ற கர்ணபரம்பரைச் சரித்திரமும் இருப்பதால் மேற்கூறிய பறங்கிக்காரர் காலத்திற்கு முன்பு இருந்ததென்பது ஒருவாறு விளக்குகின்றது. அன்றியும் இங்கு நிகழ்ந்தனவாகக் கூறப்படும் பேரதிசய சம்பவங்களைப் பற்றிய சரித்திரங்களும் அநேகமுண்டு.

ஒல்லாந்தர் ஆட்சிக்கால முடிவிற் சமய சுதந்திரம் சிறிதளவு கிடைத்ததும் செட்டிமார் என்னும் வகுப்பினர் அந்த இடத்திலேயே மறுபடியும் சிறுகோயில் அமைத்து வழிபட்டு வந்தனர். அவர்களும் பின்பு முறை தவறி நடந்து, பூசை செய்யுங் கிரமந்தவறித் தாங்கள் ஒருவருக்கொருவர் பிணக்குப்பட்டு பூசை செய்யாது கோவிலைப் பூட்டி வைத்ததன் நிமித்தம் இக்கோவிலின் கண் எழுந்தருளியிருக்கும் சிவசுப்பிர மணியக் கடவுளானவர் தன்னை இடைவிடாது மனத்தின் கண் விசுவாசித்த மருதர் கதிர்காமர் என்னும் ஓர் ஏழைக் குடியானவரிடம் நேர்முக தரிசனை கொடுத்து "அடே கதிர்காமா! நானிப்போ எத்தனை நாளாகப் பசி கிடக்கிறேன். என் பூசையைச் செய்" என்று கேட்டார். அவரோ சுவாமியைக் தெண்டனிட்டு "சுவாமி அடியேன் கிஞ்சித் தேனும் கல்வியறிவில்லாதவனாகையால் பூசைசெய்யும் முறைகள், மந்திரங்கள் தெரியாது, என்னை மன்னித்துவிட வேண்டும்" என்று வெகுவாய்த் தெண்டித்து மன்றாடிக் கேட்டும், "நீ வாய் கட்டிப் பூசை செய்யலாம்' என்று சொல்லியருளினார். பின்னும் அவர் மறுத்தனால், சுவாமியாரவருக்கு சோதனை கொடுக்க எண்ணிப் பற்பல இடைஞ்சல் களையும் கொடுத்தார். இப்படியாயிந்தச் சோதனைக்குட்பட்ட காலத்திலவர் தன் கையாற் சோறள்ளித்தன்னும் தின்கின்ற நேரத்தில் கையிலள்ளி யவுடன் அவிள் முழுவதும் புழுக்களாகச் செய்தும் அவர் இனங்காணாதவரானார். ஈற்றில் "கதிர்காமத்திற்கு வா" வென்று கேட்க அவர். "அடியேனப்படி வர ஏலாது' என்று மறுக்க சுவாமியாரவரைப் பார்த்து ' நீ கண்ணை மூடி விழி" என்று சொல்ல அவரப்படியே செய்து விழிக்க, தான் கதிர்காமத்திலிருப்பதையறிந்து நின்றார்.

அந்தக் கதிர்காம சந்நிதானத்தில் ஒரு சந்நாசியார் அந்த மூலஸ்தானம் எப்போ திறபடும் என்று தவஞ் செய்து கொண்டிருந்தார். அவர் தவம் அப்படியிருக்க சுவாமியார் கற்பகனாரை நோக்கி, மருதர் கதர்காமரைக் காட்டி "இவரிங்கே வந்து போகும் மூன்றாம் முறையில் ஓர் வேல் கொடுத்துவிடு" என்று கட்டளையிட்டார். கற்பகனாரவரு டைய மூன்றாம் முறையிலவரிடம் திறப்பைக் கொடுத்து "நீர் கதவைத் திறந்து இங்கே மூன்று கூடாரங்களிலே முறையே தங்கம், வெள்ளி, செம்புகளாற் செய்யப்பட்ட வேல் இருக்கின்றன. இவைகளிலெதையாவது எடு" என்று

சொல்லவே அவர் மூலஸ்தானத்துட் புகுந்து ஒரு வெள்ளி வேலெடுத்துக் கொண்டு வந்தார். இந்த மூன்று முறையும் வந்த அந்தப் பெரியவர்தானிவரென்று அறிந்த சந்நாயாசியார் அந்த மருதர் கதிர்காமருடைய இரு பாதங்களிலும் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்துச் சொன்னதாவது: 'அடியேன் இந்தக் கதிர்காம மூலஸ்தானம் எப்போ காண்பேனென்று தவஞ் செய்து கொண்டிருந்து கதவு திறபடவில்லை. மூலஸ் தானத்தைக் காணவுமில்லை. இப்போ இவர் மூலஸ்தானத் திற்குப் போய் வந்தபடியால் இவரே மூலஸ்தானமென்று எண்ணி நமஸ்கரிக்கிறேன்' என்றார். இந்த நம்பிக்கைதானிங்கே தற்காலம் பூசையான பின் அர்ச்சகர்கள் விபூதி கொடுக்கும் போது மற்றையவர்கள் அர்ச்சகரைச் சாஷ்டாங்கமாகக் கும்பிடும் வழக்க மென்றறியவும்.

அர்ச்சகர் கதிர்காமத்தில் கிடைத்த வேலைக்கொண்டிங்கே வர, முன்னே தானே தம்முள்ளே பிணக்கப்பட்டுக் கொண்டிருந்த செட்டி மார்கள் தாங்களிங்கேயந்த வேலை வைத்துப் பூசை செய்ய விடமாட்டோம் என்று மறுக்க; சுவாமியார் அர்ச்சகரை நோக்கி "நீயிந்த அன்னதான மடத்திலே வைத்துப் பூசை செய்யலாம். இவர்களிந்த இடம் விட்டு இரண்டு வருடத்திலழிந்து போவதுமல்லாமல் ஆறுமாதத்திற்குட் பூசையுமில்லாமல் கோயிற்கதவு பூட்டப்படும். இங்கேயுள்ள பூசைகளெல்லாம் உனக்குத்தான் வரும்" என்று சொல்லியரு ளினார். அர்ச்சகரும் இவ்வுத்தரவுப்படியே அன்னதான மடத்திலந்த வேலை வைத்து வாய்கட்டிப் பூசைகளைக் கிரமமாய்ச் செய்துவரும் காலத்தில் செட்டிகள் கதவையும் பூட்டிக்கொண்டு வெளிப்பட்டுவிட்டார்கள். அந்தநாட் துவக்கமிரண்டு வருட எல்லைக்கு ஒரு சொத்திச் செட்டியைத் தவிர ஏனைய செட்டிமார்கள் யாவருமழிந்து போயினர். அழியாது விடப்பட்ட சொத்திச் செட்டியார் அக்கோவிலின் சாமான்களை சங்கு, சேமக்கலம், மேளவாத்தியங்களுடன் கோயில் வாசலுக்குக் கொண்டு வந்து அர்ச்சகராம் மருதர் கதிர்காமரையழைத்துத் திறப்பையும் சாமான்களையும் ஏற்றுக்கொள்ளும்படியவரிடம் கொடுத்தனர். அவர் திறப்பை வாங்கித் திறந்து பூசைகளைக் கிரமந்தவறாமற் செய்துவருங் காலத்திற் சுவாமியார் அர்ச்சகரை நோக்கி "நீ திருவிழா நடத்திவருங் காலத்தில் சனங்கள் ஏராளமாய் நிற்கிற நேரத்தில் அந்தச் சனக்கூட்டத்தில் யாரோ ஒருவர் மிக உன்னதமாயோங்கி

நின்று தலைகளை நுள்ளி நுள்ளிக் கொண்டு நிற்கிறதாகத் தோற்றப்படவே, அர்ச்சகர் கண்டு பயந்து "சுவாமி! கிஞ்சித்தேனும் கல்வி மந்திரந்தெரியாத முழுமூடனா மென்னையொரு தலைவனாயிதை நடத்தச் சொன்னால் நானென்ன செய்வேன்? குருக்கள், பிராமணர் மூலமாய் இதை நடப்பிக்க உத்தரவு தரவேணும்" என்று அதிக மன்றாட்டத் துடன் கேட்டனர். சுவாமியார் "அர்ச்சகரே! தலைகளை நுள்ளிப்போடுகிறவரை நான் கட்டிக்கொள்ளுவேன். நீ திருவிழாவை நடத்து. பத்தாம் பதினைந்தாம் திருவிழாக்களில் நானே ஆளோடாளாக உலாவிப் பார்த்துக் கொள்ளுகிறேன். மற்றும்படிக்கு நீ சரிக்கட்டிக் கொள்ளலாம்" என்று சொன்னதோடு "நிவேதனப் பொருள் என்ன வந்தாலும் சுவாமிக்கென்றுவை. நாலாகப் பிரித்து மூன்று பங்கையும வித்துக் குவித்துப் போட்டுக் கதவைத் திறந்து கற்பூரத்தைக் கொழுத்திவிடு. அதுவே எனக்குச் சந்தோஷம். கொண்டு வந்தவனுக்கும் சந்தோஷம். அவனுக்கு மாத்திரமன்றி நீயும் கொண்டுபோய்ச் சாப்பிடு. வந்தவர்களுக்குங் கொடு. வாயைக் கட்டிப் பூசை செய்" என்று கூறி நடப்பித்தனர்.

"சில வருடங்களுக்கு முன்னர் சந்நிதி முருகனை அடியேன் வழிபடச் சென்றபோது இந்த முருக பக்தரையும் கண்டு அளவளாவி அவரிடமிருந்தே அவர் எழுதிய நூலின் பிரதி ஒன்றினையும் பெற்றுக் கொள்ளும் பாக்கியம் கிடைத்தது" என்று மேலும் குலசபாநாதன் குறிப்பிட்டுள்ளார். சந்நிதி கோவிலின் பூசை வரலாற்றைக் கூறுகின்ற இக்குறிப்புக்கள் கோவிலின் தனித்துவத்தை உணரவும் உதவுகின்றன. ஆகம முறைப்படியான வழிபாட்டு நடைமுறைகள் அங்கு நடைபெற்றி ருந்ததையும் மறைமுகமாக இக்குறிப்புகள் காட்டுகின்றன. செட்டிமார் பரிபாலனத்தில் கோயில் இருந்தபோது ஆகம வழிபாட்டு முறையே இருந்தது என்று கூறவதற்குச் சரியான சான்றுகளில்லாவிட்டாலும், அப்போது "வாய்கட்டிப் பூசை" செய்யும் முறை இருக்கவில்லையென்று அறியமுடிகிறது. சோழராட்சிப்போது சந்நிதிகோவில் கட்டப்பட்டி ருந்தால் ஆகமவழிபாட்டு முறைகளே அப்போதிருந்திருக்க வேண்டும். பின்னர் பறங்கியர் கோயிலை இடித்தழித்ததற்கும் அதுவே முக்கிய காரணமாயிருந்திருக்க வேண்டும். பின்வரும் குறிப்பு குலசபாநாதனின் ஏனைய குறிப்புக்களிலிருந்து சற்று வேறுபட்டுள்ளது.

"இங்கு ஆதியில் இருந்த கோயில் கந்தபுராணக் கதையுடன் தொடர்புற்ற ஒன்று என்றும், அதனைப் பறங்கியர் அழித்தனரென்றும் இதன் வரலாறு கூறுகின்றது. மீண்டும்

அமைத்த கோவிலை இருசாரார் ஆதரித்து வந்தனரெனினும் அவர்களுக்குள் பிணக்கு உண்டான பொழுது கோவிலைப் பூசை செய்யாமற் பூட்டிவைத்தனர். இச்செயலை முருகன் பொறுக்கவில்லை.

அவ்வூரில் முருகனை என்றும் வழிபடுகின்ற பக்தர் ஒருவர் இருந்தார். அவருடைய பெயர் 'மருதர் கதிர்காமர்' என்பது அவர் தம் வழக்கம் போல ஒரு நாள் தொண்டைமானாற்றில் வலைவீசி மீன் பிடித்துக் கொண்டிருக்கும் பொழுது ஆடு மேய்த்துக் கொண்டு நின்ற சிறுவன் ஒருவன் அவரைக் கரைக்கு வருமாறு அழைத்தான். அவர் அதனைச் சிறுவனின் விளையாட்டு என்று நினைத்து கரைக்கு வரவில்லை எனினும் சிறுவன் மீண்டும் மீண்டும் அழைத்ததினால் அவர்கரைக்கு வந்தார். அப்பொழுது அச்சிறுவன் "நீர் இனி இந்தவேலையைச் செய்யவேண்டாம். உமக்குத் தேவையானவற்றை நான் தருவேன்; உமது துன்பம் எல்லாம் நீங்கும். நீர் அறுபத்தைந்து ஆலம் இலைகளில் உணவு படைத்து வழிபடவேண்டும்" என்று கூறினான்.

இதனைக் கேட்டு அதிசயமடைந்த கதிர்காமர் "நீர் யார்?" என்று சிறுவனைக் கேட்டார். அப்பொழுது அச்சிறுவன் தானே முருகன் என்று அவருக்கு உணர்த்தினான். அவர் தமக்குப் பூசைமுறைகள், மந்திரங்கள் தெரியாது என்று கூறிய பொழுது அவரைக் கதிர்காமத்துக்கு அழைத்துச் சென்று அங்கு நடைபெறும் பூசை முறையைக் காட்டினான். அத்துடன் அவர் வைத்துப் பூசை செய்வதற்கு வேல் ஒன்றையும் கொடுத்தான். இவ்வாறு கதிர்காமத்துப் பூசை முறைகளைப் பார்த்துக் கதிர்காமர் மாமிச உணவைக் கைவிட்டு சைவ ஆசாரங்களை மேற்கொண்டு சிறுவன் கூறியவாறு அறுபத்தைந்து ஆலம் இலைகளில் உணவுபடைத்து வாய் கட்டிப் பூசை செய்து வந்தார்"[8]

குலசபாநாதனின் குறிப்பிலே குடியானவன் என்றே மருதர்கதிர்காமர் குறிப்பிடப்பட்டுள்ளார். ஆனால், மேற்காட்டிய குறிப்பிலோ மருதர் கதிர்காமர் மீன் பிடிக்கும் தொழிலைச் செய்வரென்று குறிப்பிடப் பட்டுள்ளது. இந்த வேறுபாடு கவனத்திற்குரியது. எனெனில், சந்நிதி கோவிலிலே வாய்கட்டிப் பூசை செய்பவர் கரையார் என்பதால் அக்கோவில் யாழ்ப்பாணத்துச் சமூகநிலையிலே சற்றுத் தாழ்வு நிலை யிலே வைத்தும் எண்ணப்பட்டது. சந்நிதியின் வழிபடுவோர் சமூக

நிலையிற் சற்றுத் தாழ்ந்தவர் என்ற எண்ணம் நிலவியது. மந்திர வழிபாடே மேலான வழிபாடு எனப் பலர் கருதி, சந்நிதி வழிபாட்டு முறைகளைக் கேலி செய்தனர். சந்நிதிகோயில் குறிப்பாக ஆகமவழி பாட்டாளர்களால் வணங்கப்படாத தலமாகவே இருந்தது. தற்போது சந்நிதியிலும் ஆகமவழிபாட்டு நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

சந்நிதியின் சூழலிற் குறிப்பிடவேண்டிய இன்னொரு முக்கிய அம்சம் வள்ளிக்கொடியாகும். யாழ்ப்பாணத்திலுள்ள ஏனைய முருகன் கோயில்களிலே வள்ளிக்கொடி வரலாற்றிலோ வழிபாட்டு முறைமை களிலோ இடம்பெறவில்லை. சந்நிதியில் வள்ளிக்கொடி தானாகவே முளைத்து உற்சவ காலத்தை உணர்த்துகின்றது. பரிபாடலில் வள்ளிக் கொடிபற்றிய குறிப்புக் காணப்படுகிறது.

"நறையி னறும்புகை நனியமர்ந் தோயே
அறுமுகத் தாறிரு தோளால் வென்றி
நறுமலர் வள்ளிப்பூ நயந்தோயே"

பரிபாடல் : 14

இங்கு முருகன் மணந்த வள்ளியைக் குறிப்பினும், வள்ளிக்கொடி முருக வழிபாட்டோடு தொடர்புபட்டுள்ளது. மருதநிலத்துக் கொடி யான வள்ளி, சந்நிதியில் முளைப்பது மருதமும் நெய்தலும் மயங்கு மிடத்துச் சந்நிதி கோவில் அமைந்திருப்பதை உணர்த்துகின்றது. மருதச்சோலை நடுவே ஆற்றங்கரையான் அமர்ந்திருக்கிறான். அவனை வந்து வழிபடும் அன்பர் வழிபாட்டு முறைகளையும் அடுத்து நோக்கு வோம்.

செல்வச்சந்நிதிக்கும் கதிர்காமத்துக்கமுள்ள தொடர்பினைப் பல கர்ணபரம்பரைக் கதைகள் நன்கு காட்டுகின்றன. (பார்க்கவும்: இயல் 3, 9). கதிர்காமம் ஈழத்திலே தொன்மையான வரலாறு கொண்ட கோயில் என்பதற்கு மகாவம்சம் சான்று காட்டுகின்றது. புத்தசமயம் இலங்கையிலே பரவுவதற்கு முன்னரே கதிர்காமம் புகழ்பெற்றதாயிருந் துள்ளது. சங்கமித்தை வெள்ளரசுக் கிளையுடன் இலங்கைக்கு வந்த வரலாற்றைக் கூறும் மகாவம்சம் அவ்வெள்ளரசுக் கிளையை நாட்டுவது தொடர்பாக அனுராதபுரத்திலே நடைபெற்ற விழாவுக்குக் கதிர்காமச் சத்திரியர்களும் போயிருந்தனர் எனக் கூறும் பழைய பிராமிச்சாசன சான்றாதாரங்களைக் கொண்டு நோக்குமிடத்து சங்ககாலத்திலேயே கதிர்காமத்தில் பாண்டியருடைய செல்வாக்கு இருந்திருக்கவேண்டு மென ஆ.வேலுப்பிள்ளை (1980 : 224-25) அபிப்பிராயப்படுகிறார். அவர் மேலும் கூறுவதாவது:

"பிராமிச் சாசனம் துட்டகைமுனு காலத்துக்கு முன்பு கதிர்காமத்திலி ருந்து பத்துச் சகோதரர் கூட்டாட்சி செய்ததை எடுத்துக் கூறுகின்றது. சகோதரர் பலர் கூடியாளும் முறை பாண்டிய அரசகுலத்தின் சிறப்பியல்பாக நீண்டகாலம் இருந்து வந்தது. அநுராதபுரத்தி லிருந்து தப்பியோடி வந்த அரசகுமாரனொருவனை ஜாவாவுடனான வணிகத்துக்குப் பொறுப்பாகக் கதிர்காமத்துச் சிற்றரசர் நியமித்தன ரென்று பேராசிரியர் பரணவிதான கூறியுள்ளார். சங்ககாலத் தமிழ் நாட்டிலே பிறநாட்டு வணிகம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்திருந் தமையை இங்கு நோக்கும்போது, இந்துசமுத்திரத் தினூடாக அக்காலத்து நடந்த வணிகத்திற் பங்குபற்றுவதற் காகப் பாண்டியர் தென்கீழ் இலங்கையிலே முகாமிட்டுக் கதிர்காமக் கோவிலையும் தாபித்தனரோ என்று எண்ணத் தோன்றுகிறது"

இக்கருத்தினை மேலும் வலுவடையச் செய்யக் கதிர்காமச் சிற்றரசர்களைக் குறிப்பிடும் பிராமிச் சாசனங்களிலே மீன் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளதை அவர் எடுத்துக் காட்டுகின்றார். கதிர்காமக் கோயில் தொன்மை வாய்ந்ததுபோல, தொண்டைமானாறு செல்வச் சந்நிதியும் ஒரு தொன்மை வாய்ந்த தலமாக இருந்திருக்கக் கூடும் என வேலுப்பிள்ளை (1980 : 229) அபிப்பிராயப்படுகிறார். அவர் :

"தொண்டைமானாறு செல்வச் சந்நிதியில் நடக்கும் வழி பாட்டுக்கும், கதிர்காமத்தில் நடக்கும் வழிபாட்டுக்கும் நெருங்கிய ஒற்றுமையுண்டு. திருமுருகாற்றுப் படையிலே முருகனுக்கு வெவ் வேறிடங்களிலே வேதாகம முறைப்படி நடந்த வழிபாடுகளும், பழைய திராவிட முறையிலமைந்த வழிபாடுகளும் கூறப்படுகின்றன. ஈழநாட்டு முருகன் கோவில்களிலே கதிர்காமத்திலும், செல்வச் சந்நிதியிலும் வேதாகம முறையிலான வழிபாடு இல்லை. இரண்டிடங்களிலும் முருகனுடைய விக்கிரகம் வழிபடப்படுவதில்லை; பூசை செய்பவர்கள் பிராமணரல்லாதார்; பூசையில் மந்திரங்கள் இடம் பெறுவதில்லை. இவற்றை நோக்கும்போது, கதிர்காமத்தைப்போலச் செல்வச் சந்நிதியும் மிகுந்த தொன்மையுடையதாக இருக்கக்கூடும்".

என்று கூறுகின்றார். மேற்காட்டிய வரலாற்றுப் பின்னணியிலே, கதிர்காமம் தொடர்பாக வேலுப்பிள்ளை அவர்கள் கொண்ட ஊகத்தினைப்போல, செல்வச்சந்நிதி தொடர்பாக நாமும் ஓர் ஊகத் தினைக் கொள்ளலாம்போலுள்ளது. அதாவது, இந்து சமுத்திரத்தினூ டாக நடைபெற்ற வணிகத்திலே பங்குபற்றிய பாண்டியர் தென்கீழ்

இலங்கையிலே முகாமிட்டதுபோல, வடக்கிலே வல்லியாறு கடலோடு கலக்குமிடத்திலே முகாமிட்டிருக்கவுங் கூடும். வல்லியாறு கருணாகரத் தொண்டைமானாலே ஆழமாக்கப்பட்டபின், தொண்டைமானாறு எனப் பெயர் பெற்றது. வல்லியாறு கடலோடு கலக்குமிடத்து முகாமிட்டுப் பாண்டியர் செல்வச்சந்நிதி ஆலயத்தைத் தாபித்திருக்கவுங் கூடும்.

**அடிக்குறிப்புகள்**

1. எஸ். சிவலிங்கராசா, வடமராட்சியின் கல்விப் பாரம்பரியமும் இலக்கிய வளமும், வடமராட்சிக் கல்வி வட்டம், 1984.
2. கா.சிவத்தம்பி, சித்திரப் பெருந்தேர் வெள்ளோட்டச் சிறப்பு மலர்; 1984.
3. ஆலயத்தில் வழிபடுவோன், இந்துசாதனம் KK 13.6.1947
4. க.ஆறுமுகம், தினகரன், 3-6-1949
5. சைவநெறி, 10ஆம் வகுப்பு, பக்கம் 28.

# 2

## சடங்குமுறையும் வழிபாட்டு நிலையும்

சந்நிதி கோயிலின் வரலாற்றை எழுத வேண்டியதன் அவசியத்திற்கு அடிப்படைக்காரணமே அதன் சடங்கு முறையும் வழிபாட்டு நிலையுமாகும். யாழ்ப்பாணத்திலே வேறெந்தக் கோவில்களிலும் காணப்படாத சடங்குமுறை சந்நிதியில் மட்டுமே உண்டென்று கருதப்பட்டு வருகின்றது. சடங்கு என்ற சொல்லாட்சி பண்டைத்தமிழ் இலக்கியங்களிலே பயன்படுத்தப்படவில்லை. இது பிற்காலத்திலே பயன்படுத்தப்பட்ட ஒரு சொல்லாகும். சடங்கு பற்றிய பின்வரும் விளக்கம் கவனத்திற்குரியது.

> "சடங்குகளே விழாக்களுக்கு அடிப்படை. சடங்குகளின் ஒன்றிணைக்கப்பட்ட கூட்டுத்தொகுதியினை விழா எனக் கூறலாம். சடங்கு என்பது வாழ்வியல் நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டது. விழாக்கள் சமுதாயம் மற்றும் சமயம் சார்ந்த மந்திரங்களோடும் இயற்கையிறந்த மீவியல் பாற்றல்களோடும் தொடர்புடையனவாகக் காட்சி தருகின்றன. விழாக்கள் மகிழ்ச்சியினை அடிப்படையாகக் கொண்டு சமுதாயம் தழுவியதாக அமையும். ஆனால், சடங்குகள் செயல்முறையினை அடிப்படையாகக் கொண்ட இறுக்கமான விதிகளை உள்ளடக்கியதாகவே காட்சி தருகின்றன. சடங்குகள் மரபு வழிபட்ட செயல்முறைகளை அடிப்படையாகக் கொண்டு அமையக் காண்கிறோம்.
>
> செயல்முறை நிலையிலே சடங்குகள் முக்கியத்துவம் பெறுகின்றன. பழந்தமிழர், சடங்கினையே விழா என்ற சொல்லால் சுட்டியிருக்கலாம். எனெனில், வெறியாட்டி னையும் அவர்கள் விழா என்றே சுட்டியுள்ளனர்",[1]

மூவிரு கயந்தலை முந்நான்கு முழவுத்தோள்
ஞாயிற்றேர் நிறத்தகை நளினத்துப் பிறவியை
காஅய் கடவுள் சேஎய் செவ்வேள்
சால்வ தலைவனெனப் பேஎ விழவினுள்
வேல னேத்தும் வெறியு முளவே                    பரிபாடல் : 5

என்னும் பரிபாடலடிகள் இதற்குச் சான்று பகர்கின்றன.

ஈழத்திலே மட்டக்களப்பில் "சடங்கு" என்ற சொல் கோயிலோடு பெரிதும் தொடர்புள்ளது. இங்கு அதன் விளக்கத்தினை இணைப்பது நன்றாகும்.

> "மட்டக்களப்புப் பகுதியிலே அம்மன் கோவில்களில் நடக்கும் பூசனையினைச் சடங்கு என்று கூறுதல் வழக்கம். அதனால் கண்ணகி விழாவும் மட்டக்களப்புத் தமிழில் 'கண்ணகையம்மன் சடங்கு' என்றே அழைக்கப்பெறும். சடங்கு என்ற சொல்லுக்கு மற்றைய இடங்களிற் போலத் திருமணம் என்ற கருத்தன்றி மேலேகண்ட பொருளொன்றே பெருவழக்கமாக இங்குள்ளது"[2]

கோயிற் பூசனைச் செயல் முறைகள் சடங்கு என்ற நிலையிலே சந்நிதி கோவிலிற் சிறப்புப் பெறுவன. வாய்கட்டிப் பூசை செய்தல், அடப்பம் கட்டுதல், கர்ப்பூர தீபம் ஆகியன பூசனைச் செயல் முறைகளில் முக்கியம் பெற்று விளங்குகின்றன. மந்திரமறியாமையால் வாயைக் கட்டிச் சடங்கு முறைகளைச் செய்கின்றனர். கதிர்காமத்தில் கொடியேற்ற நாளில் முருகனைச் சந்நிதியிலிருந்து அனுப்பிவைக்கும் நடைமுறையுண்டு. தேங்காய்கள் உடைத்து அலங்காரங்களுடன் முருகனை வழியனுப்புவர். இதற்காகக் கோவிலின் முன்னுள்ள பசறி மரத்தைச் சுற்றிமுன் தெருவில் சுமார் நூற்றியைம்பது யார் தூரம் வரையில் எல்லோரும் சென்று வழியனுப்பி வருவர்.

கதிர்காமம் செல்ல வேண்டும் என்று நேர்த்தி வைத்துச் செல்பவர்கள் ஆற்றங்கரையானிடம் வந்து அரிசி, தேங்காய் முதலியன கொண்ட ஒரு பொதியைப் பிள்ளையார் வாசலிற் கட்டிவைத்து அவனருள் பெற்றுச் செல்வதே நடைமுறையாகும். இதை 'அடப்பம் கட்டுதல்' என்று குறிப்பிடுவர். சடங்கு என்பது வாழ்வியல் நிகழ்ச்சியோடு தொடர்புடையதென்பதை இந்த நடைமுறை பெரிதும் விளக்கி நிற்கின்றதெனலாம்.

முருகன் மலைத்தெய்வமாகவே பெரிதும் கருதப்படுகிறான். சிறப்பாகப் பழைய இலக்கியங்களிலே மலைமீதுறையும் வேலனாகவே எண்ணப்பட்டுள்ளான். திருமுருகாற்றுப்படையிலும் பரிபாடலிலும் மலையமர் செவ்வேளுக்கான சடங்குகள் வர்ணிக்கப்படுகின்றன. அவற்றை இங்கே குறிப்பிடுவதால் சந்நிதிச் சடங்குகளின் பழைமை யையும் உணர்ந்துகொள்ளலாம்.

"சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்
பெருந்தண் கண்வீர நறுந்தண் மாலை
துணையற அறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பின் நன்னகர் வாழ்த்தி
நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழிசை அருவியொடு இன்னியங் கறங்க
உருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகியம் நிறுத்து முரணினர் உட்க
முருகாற்றுப் படுத்த உருகெழு வியன்நகர்
ஆடுகளம் சிலம்பப் பாடிப் பலவுடன்
கோடுவாய் வைத்துக் கொடுமணி இயக்கி
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபட"

திருமுருகாற்றுப்படை : 235-48

(இ-ள்) சிறிய பசுமஞ்சளோடே நறிய சந்தனம் முதலியவற்றைத் தெளித்துப் பெரிய குளிர்ந்த செவ்வலரி மாலையையும், ஏனைய நறிய குளிர்ந்த மாலைகளையும் இணைஒக்க அறுத்து அசையும்படி தொங்கவிட்டு, செறிந்த மலைப்பக்கத்திலுள்ள நல்ல ஊர்களைப் பசியும், பிணியும், பகையும் நீங்கி குக என வாழ்த்தி, நறிய மணப்புகை கொடுத்து, அந்நிலத்துக்குரிய குறிஞ்சிப் பண்ணைப் பாடுவர். முழங்குகின்ற ஓசையையுடைய அருவியோடே இனிய இசைக்கருவிகளும் முழங்கிநிற்ப, சிவந்த நிறத்தினையுடைய பல பூக்களையும் தூவி, அச்சம் உண்டாகும்படி குருதி அளைந்த சிவந்த தினையினையும் பரப்பி, முருகப்பெருமான் உவக்கும் இசைக்கருவிகளை முழங்கப் பண்ணி, இறைவன் இலன் என்பார் அஞ்சும்படியாக அம்முருகப் பெருமான் வரும்படி வழிப்படுத்தின அச்சம் பெருந்தின அகற்சியையுடைய நகரிலே வெறியாட்டயர்ந்த களம் ஆரவாரிக்கும்படி ஊது கொம்புகள் பலவற்றையும் சேர

ஊதி மணியை ஒலித்து முருகப்பெருமானுடைய யானையை வாழ்த்தி குறை வேண்டினார் தாம் வேண்டியவற்றைப் பெற்றாற்போன்று நின்று மக்கள் வழிபாடு செய்வர்.

இங்கு முருகன் சடங்கு முறையும் வழிபாட்டு முறையும் விளக்கப்பட்டுள்ளன. முருகுவயப்பட்டு நிற்றலும், அவ்வாறு முருகுவயப்பட்டோர் ஆடலும் தன்மையும் கூறப்பட்டுள்ளன. பரிபாடலிற் குன்றத்துறையும் குமரனை வழிபட்ட முறைமை கூறப்பட்டுள்ளது.

"வளிபொரு சேட்சிமை வரையகத்தால்
தளிபெருகுந் தண்சினைய
பொழில்கொளக் குறையாமலரக்
குளிர்பொய்கை யளறு நிறைய
மருதநளி மணன் ஞெமர்ந்த
நனிமலர்ப் பெருவழிச்
சீறடியவர் சாறுகொள வெழுந்து
வேறுபடு சாந்தமும் வீறுபடு புகையும்
ஆறுசெல் வழியின் அவியா விளக்கமும்
நாறுகமழ் வீயும் கூறுமிசை முழவமும்
மணியுங் கயிறு மயிலுங் குடாரியும்
பிணிமுகமுளப்பப் பிறவு மேந்தி
அருவரைச் சேராத் தொடுநர்
கனவிற் றொட்டது கையிழை யாகாது
நனவிற் சேஎப்பநின் னளிபுனல் வையை
வருபுனல் அணிகென வரங்கொள்வோரும்
செய்பொருள் வாய்க்கெனச் செவிசார்த்துவோரும்
ஐயமரடுகென வருச்சிப்போரும்
பாடுவார் பாணிச்சீரு மாடுவா ரரங்கத்தாளமும்
மஞ்சாடு மலை முழக்கும்"

பரிபாடல்: 8

(இ-ள்) காற்றால் மோதப்படும் உயரிய சிகரங்களுடைய மலையிலே பெய்த மழைநீர் பெருகுதலாலே தழைத்த கிளைகளுடைய பூம்பொழில்கள் நிறைய மலர்ந்த மலர்களைக் கொண்டு நிற்க, குளிர்ந்த குளங்கள் நீராலே நிறைந்த மருத நிலத்தினூடே செறிந்த மணல் பரந்த மிக்க மலரினையுடைய திருப்பரங்குன்றத்திற்கும் மதுரைக்கும் இடையே யுள்ள பெரிய

வழியிலே சிறந்த இறையன்புடையோர், அந்தக் குன்றத் திலே உறையும் முருகவேளுக்கு விழாச் செய்வதற்கு, நிறத்தினாலும் மணத்தினாலும் ஒன்றற்கொன்று மாறுபடுகின்ற பல்வேறு சாந்தங் களும் பெருமையுடைய புகைப் பொருள்களும், இயங்குகின்ற காற்றாலே அவியாத விளக்கிற்கு வேண்டு வனவும், மணம் கமழுகின்ற மலர்களும், இசையை எடுத்துக் காட்டும் முழவும், மணியும், கயிறும், மயிலும், கோடரியும், பிணிமுகம் என்னும் யானை ஊர்தியும் இன்னோரன்ன முருகவேளுக்கு உகந்த பிறபொருள்களையும் ஏந்திக் கொண்டு அரிய திருப்பரங்குன்றத்தினைச் சேர்ந்து முருகப் பெருமானது திருவடிகளை வணங்குகின்றவர்களாகிய பெண்கள், கனவின் கண் யாம் எம் காதலரைக் கை தொட்டது பொய்யாகாமல் நனவின் கண் எய்தும்படி நினக்குரிய செறிந்த நீரையுடைய வையையாறு புது நீரை அணிவதாக என்று வரம் வேண்டு வோரும், எம் வயிறு கருப்பம் எய்துக, எய்தின் இன்னின்ன பொருளை நினக்குத் தருவோம் எனக் கடன் நேர்பருவம், எங்கணவர் சென்றுள்ள வினைக் கண் செய்தற்குரிய பொருள் நிரம்ப வாய்ப்பதாக என்று முருகப்பெரு மானின் திருச் செவியின் கட்சேரக் கூறி வழிபடுவோரும், போர் மேற் சென்றுள்ள எம் தலைவர் அப்போரின்கண் பகைவரைக் கொன்று வாகை சூடுக என்று வேண்டி அருச்சனை செய்வோரும், முருகப் பெருமானை வாழ்த்திப் பாடுபவருடை யவும், பாடுவார் பாட்டிற் கிடும் பாணியாகிய தாளத்தினு டையவும், கூத்தாட்டரங்கத்தின்கண் ஆடுவாருடைய தாளத்தினுடைய ஒலியும் முகில்தவழும் மலையின் கண் எழும் எதிரொலியும் (ஆகிய ஆரவாரம்)

இங்கே முருகனை வழிபடுகின்ற முறையுடன், வழிபடுவோர் மன நோக்கங்களும் கூறப்பட்டுள்ளன. வழிபாட்டிற்கு வேண்டிய பொருட்களும் எவையென விளக்கப்பட்டுள்ளன. திருப்பரங் குன்றத்திலே எழுந்தருளியிருக்கும் முருகன் வேண்டுவார் குறைநீக்கும் வேலவன். அவன் வீற்றிருக்கும் மலைக்குச்சென்று மக்கள் வழிபாடு செய்கின்றனர். மேற்காட்டிய பரிபாடலடிகள் சடங்கிற்கும் வழி பாட்டிற்குமுள்ள தொடர்பை நன்கறிய உதவுகின்றன. முருகன் சடங் கோடு தொடர்புபட்ட பொருட்களே வழிபாட்டுக்கு வேண்டிய பொருட்களுமாகும். சந்தனமும், பூவும், புகையும் முருகனுக்கு நிவேதிக்கப்படுகின்றன. அத்துடன் பாட்டும் கூத்தும் கூட நிவேதிக்கப் படுகின்றன. இன்றும் அன்பர்கள் செலுத்தும் நேர்த்திக்கடன் பற்றிய

விபரமும் இப்பாடலிற் கூறப்பட்டுள்ளது. முருக வணக்கம் தமிழ் மக்களிடையே தொன்மையான வழிபாட்டு முறையாகவுள்ளது. சங்கப் பாடல்களிலே பலகுறிப்புகள் உள. மலைத்தெய்வமான முருகனுக்கு தேனும், தினையும் விசேட நிவேதனப் பொருட்களாகக் கருதப்பட்டன. சங்ககாலத்தில் தினையரிசியே பயன்படுத்தப்பட்டது. மலையில் விளையும் பயிரான தினையை மலைத்தெய்வமாம் முருகனுக்குப் படையல் செய்தனர். இந்த வழிபாட்டு முறையே காலங்காலமாகப் பேணப்பட்டு இன்றும் நடைமுறையாகவுள்ளது.

சந்நிதி முருகன் கோவிலிலும் இந்த வழிபாட்டு முறை உண்டு. "மாவிளக்குப் போடுதல்" என்னும் நடைமுறை சிறப்பானதாயுள்ளது. தினைமாவிலே தேனைக் கலந்து பிசைந்து களியாக்கிப் பின்னர் அதிலே சிறுசிறு சுட்டி விளக்குகளையும், பெரிய பரந்த தாம்பாளம் போன்ற அமைப்பான விளக்குகளையும் செய்வர். சிறிய விளக்குகளிலே ஒற்றைத்திரியும், பெரிய விளக்கிலே பன்னிரண்டு திரிகளும் இட்டு நெய்யை ஊற்றி எரிப்பர். அந்த விளக்குகளுக்குச் சிவந்த குங்குமத்திலே பொட்டிடுவர். வெண்மலர்களையும், நெற்பொரியினையும் மேலே தூவிவிடுவர். திரிகள் எரிந்து முடிந்ததும் அல்விளக்குகளைப் பிரசாதமாகக் கருதி எல்லோரும் பகிர்ந்துண்பர். திரிகளுக்குப் பதிலாகக் கர்ப்பூரத்தை வைத்து எரிப்பதும் உண்டு. மாவிளக்கினருகிலே இரு இளநீர்களும், கொத்தி வைக்கப்படும். கொத்திய இளநீரின் மேலும் கர்ப்பூரம் எரிப்பதும் உண்டு. பன்னிரு திரிவைத்து எரிக்கும் மாவிளக்கும் அதன் எழிலும் பார்ப்போரைப் பரவசப்படுத்தும். அந்தக் காட்சி முருகனே பன்னிரு கைகளையும் நீட்டி வருவதுபோலத் தெரியும். விளக்கிலே வைத்த சிவப்புக் குங்குமம், சிதறிய மலர், நெற்பொரி என்பன தெய்வீக அழகையூட்டும். அநேகமாகப் பொழுது கருகும் வேளையிலேயே மாவிளக்கிடுவர். சந்நிதியிற் கந்தசட்டி விரதப்போது மாவிளக்கிடுதல் சிறப்பாக நடைபெறும். முருகன் வள்ளியிடம் தேனும் தினைமாவும் பெற்று உண்டதாக முருகன் வரலாறு கூறுகிறது. அந்த வரலாறு வழிபாட்டு நடைமுறையிலும் இன்றும் பேணப்பட்டு வருகிறது.

சந்நிதியின் சடங்கு முறையில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய அம்சம் ஒன்றுண்டு. அதுவே ஆலம் இலையில் அன்னம் படைக்கும் வழக்கம். அறுபத்தைந்து ஆலம் இலைகளில் அமுது படைக்கும் வழக்கம் சந்நிதியில் மட்டுமேயுண்டு. இந்தப் படையற்சோறு 'மருந்து' என்றும் அழைக்கப்படும். பூசை முடிய வழங்கப்படும் தீர்த்தம், திருநீறு, மருந்து என்ற மூவகைக் கொடைகளில்

படையற்சோறு சிறப்பானது. இது தீராத நோய் தீர்க்கும் அருமருந்தாகக் கருதப்படுகிறது. கருவுற விரும்பும் மகளிருக்கும், கருவுற்ற மகளிருக்கும் இதனை வாங்கிவந்து கொடுத்தால் நலமடைவர் என்று நம்பப்பட்டு வருகிறது. இத்தகைய தொரு வழக்கம் பரிபாடலிலும் கூறப்பட்டுள்ளது.

"நினயானைச் சென்னிநிறங்குங் குமத்தாற்
புனையாப்பூ நீரூட்டிப் புனைகவரி சார்த்தாப்
பொற்பவழப் பூங்காம்பிற் பொற்குடையேற்றி
மலிவுடை யுள்ளத்தான் வந்துசெய் வேள்வியுள்
பன் மண மன்னும் பின்னிருங் கூந்தலர்
கன்னிமை கனிந்த காலத் தார்நின்
கொடியேற்று வாரணங் கொள் கவளமிச்சில்
மறுவற்ற மைந்தர்தோள் எய்தார் மணந்தார்
முறுவற் றலையளி எய்தார் நின் குன்றம்"

பரிபாடல் : 19

(இ-ள்) முருகவேளே! நின்னுடைய திருப்பரங்குன்றத்தை அடைந்து நினது கோழிச் சேவல் எழுதப்பட்ட கொடியை ஏற்றுவதற்குரிய நினது யானையினது மத்தகத்தின் நிறத்தினைக் குங்குமத்தாலே கோலஞ் செய்து, மலரொடு நீரையும் இனிதாக ஊட்டி, செவியிலே ஒப்பனை செய்வதற்குரிய கவரியைச் சார்த்தி, பொலிவுடைய பவழத்தாலாகிய காம்பினையுடைய பொன்துகில் போர்த்த குடையினை அவ்வியானை மேலே ஏற்றி அதனோடு அன்பர்கள் உவகைமிக்க நெஞ்சத்தோடே நின்திருக்கோயிலை வலம் வந்து நினக்குச் செய்யும் பூசையின் கண் அந்த யானைக்கிடும் கவளத்தில் அது உண்டெஞ்சிய மிச்சிலைச் சிறப்புடையதாகக் கருதி மகளிர் உண்பர். அங்ஙனம் அவர்கள் அதனை உண்ணாவிடில் பல்வேறு நறுமணங்களும் நிலைபெற்ற பின்னலையுடைய கரிய கூந்தலையுடைய மடந்தை மகளிர் தம்மை மணந்துகொண்ட காதலருடைய அன்பைப் பெறமாட்டார்கள். மணமாகாத கன்னி, முதிர்ந்த பருவத்தினையுடைய மகளிர் குறைவு அற்று நிரம்பிய நல்லிலக் கணமமைந்த காதலரைப் பெறுவாரல்லர். உண்டமகளிர் அந்நலங்களைப் பெறுதல் ஒருதலை.

மேற்காட்டிய செய்யுளடிகளிலே முருகனது கோவில் யானை உண்ட மிச்சில் சிறப்புப் பெற்றுள்ளதைக் காணலாம். ஆனால், சந்நிதியிலே படைத்த சோறே சிறப்புப் பெறுகிறது. இன்னும் அது தீராத நோய்களையும் தீர்க்க வல்லது. அந்தப் படையற்சோற்றை ஒருவரும் சோறு என்று அழைப்பதில்லை. 'மருந்து' என்றே குறிப்பிடுவர்.

இங்கே கா.சிவத்தம்பியின் கருத்து ஒன்றைப் பற்றிச் சற்றுச் சிந்திப்பது பொருத்தமாகும்.

> "அடுத்து சந்நிதியைத் தமது உயர்வழிபாட்டுத் தலமாக (முறைப் பாட்டுத் தலமாக, துயர்களை தலமாகக்) கொண்டு கும்பிடுபவர்களின் அடிப்படை மனநிலையும் சமூக உளவியலும் நின்று ஆராயப்படல் வேண்டும். அதாவது சந்நிதியில் பெறப்படும் மத அநுபவம் (Religious Experience) யாது அது மற்றைய வழிபாட்டிடங்களிற் காணப்படுவ திலிருந்து எவ்வகையில் வேறுபடுகின்றது என்பன போன்ற வற்றை ஆழமாக ஆராயவேண்டும். அப்பொழுதுதான் சந்நிதியின் முக்கியத் துவம் புலனாகும். சந்நிதியிற் பெறப்படும் 'மத அநுபவம்' சமூக நிலை யுடன் எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளது என்பது தெளிவாக்கப் படவேண்டும். சமூக உருவாக்கத்தை அறிய முனையும்பொழுது அச்சமூகத்தின் மத அநுபவம் பற்றிய ஆய்வும் முக்கியமாகின்றமை தெரிந்ததே" ,

சந்நிதியின் சடங்கு முறைகளும் வழிபாட்டு முறைகளும் பழந்தமிழர்களின் வழிபாட்டு நடைமுறைகளாகவே இருக்கின்றன. இக்கோயிலிற் பெறப்படும் 'மத அநுபவம்' என்ற நிலை, காலங் காலமாகச் சந்நிதியில் அன்பர்கள் சென்று வழிபட்ட நிலையை அளவு கோல் கொண்டு மதிப்பிடக் கூடிய ஒரு நிலையாகக் கருத வைக்கின்றது. அன்பர்களின் அநுபவம் அளவிட வேண்டியதொன்றல்ல; அது அவரவர் முருகனை உணர்ந்துகொண்ட அநுபவநிலை. அது ஒருவர் இன்னொரு வருக்குக்கூறி விளங்கப்படுத்தக்கூடிய அநுபவ நிலையுமன்று. அன்பு நிலை அனுபவத்திற்குட்பட்ட ஆழ்வார்களும், நாயன்மார்களும் கூடப் பூரணமாகத் தமது அனுபவ நிலையைக் கூற முடியாதவர்களாயி ருந்தனர். பிறமதத்தில் நம்பிக்கை கொண்டு முருகன் வழிபாட்டை உதறிச் செல்கிறவர்கள் சிலவேளை மதிப்பிட்டுச் சொல்ல எத்தனிக்க லாம். எனினும், அதுவும் கஷ்டமே. அல்லது மதங்களிலே நம்பிக்கையற் றவர் மத அநுபவம் என்ற நிலையைக் காணமுற்படும்போது அதை மதிப்பிடவும் முயலக்கூடும். அன்பு நிலையை, பூரணமான அடைக்கல நிலையைத்தான் சந்நிதியில் காலம் காலமாகப் பெருகிவரும் அன்பர் களிலே காணலாம். கோயில் விபூதியும் தீர்த்தமும், மருந்தும் அதைப் பூரணமாக நம்புவார்க்கே குணத்தையும் கொடுக்கும். இது வெறும் சாம்பல்; இது வெறும் தண்ணீர்; இது வெறும் சோறு என்று நம்புவார்க்கு அவை அப்படித்தான் தோன்றும். வேலில் முருகனைக் காண்பர் பலர். வேலைப் படைக்கலத்துள் ஒன்றாகக் காண்பர் சிலர். இவ்வாறு இருநிலைப்பட்டவர் இருப்பதால்தான் வேண்டாத ஆய்வுநிலைகளும்

விருத்தியடைந்துள்ளன. சடங்கு என்பது மரபுவழிப்பட்ட செயல் முறைகள். அவை மனிதனின் நம்பிக்கையையும், கூட்டுணர்வையும் வளர்க்கும் கருவிகள். அந்தக் கருவிகள் பொது இடத்திலே தொழிற்படுதே கோயில் என்ற அமைப்பு. அது தனியார் சொத்தாக அன்றி அன்பு நிலையால் பிணிப்புண்டு பொதுச் சொத்தாகச் சமூகத்திலே அமைந்துள்ளது.

சந்நிதியின் அறுபத்தைந்து ஆலம் இலைகளிலே சோறு படைக்கின்ற சடங்கு முறையும் பழைமையான சடங்கு முறை ஒன்றுடன் தொடர்புடையதாகவுள்ளது. சங்க இலக்கியங்களில் ஒன்றான பெரும்பாணாற்றுப்படையிலே,

"தெய்வ மடையில் தேக்கிலைக்குவைஇ"

என ஒரடி வருகின்றது. தெய்வங்களுக்குப் பலியிடுவதுபோலத் தேக்கிலையிலே உணவைக் குவித்துவைத்து உண்ணும்படி விருந் தோம்பும் பண்பைப் பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது. பிற்காலங் களிலே வாழையிலையிலே மடையிடும் வழக்கம் ஏற்பட்டுள்ளது. சாதாரண மனிதர்கள் தேக்கிலையிலே உண்ணும் வழக்கம் முன்னர் இல்லைப்போலும். இந்நடைமுறையே சந்நிதியில் ஆலம் இலையில் அமுதுபடைக்கும் நடைமுறையாகி இன்றுவரையும் நிலைபெற்றள்ளது. இருக்கும் உணவைப் பலருக்கும் பகிர்ந்து கொடுக்கும் அன்னதானத்தின் அடிப்படையாகவும் இது அமையும்.

சந்நிதியின் ஏனைய வழிபாட்டு நிலைகளிற் காவடி, கரகம் எடுத்தல், குழந்தைகளை விற்று வாங்கல், மொட்டையடித்தல், பாற்செம்பு, கர்ப்பூரச்சட்டி எடுத்தல், அங்கப்பிரதட்சணை, அடியழிப்பு, காதுகுத்தல், சோறுதீற்றுதல், பால்பருக்கல் என்பன குறிப்பிடத்தக்கவை. ஆவணிப் பூர்வபட்சத்தில் இங்கு விசேட திருவிழா பதினைந்து நாட்களுக்கு நடைபெறும். இன்னும் கந்தசஷ்டி, திருக்கார்த்திகை, தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்தரம், சித்திரை வருடப்பிறப்புத் தினங்களிலும் விசேடமான திருவிழா நடைபெறும். ஆடி மாதத்தில் முருகன் கதிர்காமத்திற்குப் புறப்படுவதையும், திரும்பிவருவதையும் பாவனைசெய்து நடைபெறும் விழாக்களும், முருகன் வள்ளி திருமணத்தைப் பாவனைசெய்து நடைபெறும் விழாவும் மிகவும் அலங்காரமான திருவிழாக்களாகும்.

தேர்த்திருவிழா அன்று காலை விசேட பூசைகள் நடைபெற்ற பின் பல்வேறு நறுமண மலர்களினால் அலங்கரிக்கப்பட்ட கந்தன்

உள்வீதி வலம்வந்து வள்ளி அம்மனோடு வீற்றிருந்து தீபாராதனைகள் முடியத் தேரில் அமர்ந்து ஊர்வலம் வரும் காட்சி உள்ளத்தைப் பெரிதும் கவரும். தேர் இருப்பிடம் விட்டுப் புறப்படும்போது அரோகரா! முருகா! கதிர்வேலா! ஆற்றங்கரையானே! என்ற குரல்கள் வானைப் பிளக்கும். கூடிநிற்போர் மெய்சிலிர்க்கும்; கண்களில் நீர் கலங்கும். தேருக்குப்பின்னால் அங்கப்பிரதிஷ்டை செய்யும் ஆண்கள் கூட்டமும், அடியழிக்கும் பெண்கள் குழுவும், கர்ப்பூரச்சட்டி தலையில் தாங்கும் பெண்களும், முருகன் புகழ்பாடும் அன்பர் கூட்டமும், தம்மை மறந்த நிலையில் கரங்குவித்துத் தொடரும் காட்சியை எழுத்திலடக்க வொண்ணாது. மருதமரங்களிடையே கதிரவனின் கிரணங்களும் வந்து இக்காட்சியைப் பருகும். தேரில் வீதி வரும் வேலனுக்குப் பலநிறப் பட்டாடை அணிவிப்பர். தேர் இருப்பிடம் சேரும்வரை சனசமுத்திரம் கட்டிலடங்காது எங்கும் தலைகளே தோன்றும்.

சந்நிதிகோவிலுக்குப் புதியதேரொன்று, சித்திரப்பெருந்தேராக அமைக்கப்பட்டது. அதன் வெள்ளோட்டம் 1984ஆம் ஆண்டு நடைபெற்றது. வெள்ளோட்டச் சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப் பட்டது. அந்தத் தேர் வரலாற்று நிகழ்விலே முக்கிய இடத்தைப் பெற்றுவிட்டது. அத்தேர் எரிக்கப்பட்ட நிகழ்வு முருகனது அன்பர்கள் நெஞ்சத்திலே ஓர் ஆழமான வடுவாகிவிட்டது.

இந்தச் சித்திரத்தேரை நிர்மாணித்த பின்னர் இராஜகோபுரம் அமைப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்ட தாக அறியமுடிகின்றது. ஆயினும், முருகன் தன்னை "எப்பக்கத்திலா யினும் அடைத்துவைத்தல்கூடாது, எங்கிருந்து பார்த்தாலும் நான் நன்கு தெரிதல் வேண்டும்" எனக் கட்டளையிட்டதன் பேரிலேயே அந்த முயற்சி கைவிடப்பட்டதாகவும் அறியமுடிகிறது. புதிய சித்திரத்தேர் 1981ஆம் ஆண்டு 15ஆம் திகதியிலே ஆரம்பிக்கப்பட்டு 1984ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 6ஆம் திகதியன்று வெள்ளோட்டமும் நடைபெற்றது. ஏறக்குறைய 3 ஆண்டுகளாகப் பணிசெய்து அழகாக உருவாக்கப்பட்ட தேர் அது. ஈனச் செயலாலே அது எரிக்கப்பட்டதை நாம் என்றும் மறக்கமுடியாது.

செல்வச்சந்நிதி கோயிலின் ஆரம்பத் தேர்த்திருவிழா 1925ஆம் ஆண்டு வல்வை ஞானமூர்த்தி சண்முகம்பிள்ளையவர்கள் கட்டுத் தேரொன்றை அமைத்துக் கொடுத்ததுடன் ஆரம்பமாயுள்ளது. பின்னர் வல்வை திருமதி சின்னத்தங்கம் இன்னொரு தேரை உருவாக்கிக் கொடுத்துள்ளார். புதிய சித்திரத்தேர் 25 இலட்ச ரூபா செலவில் அமைக்

கப்பட்டது. இது இலங்கையிலுள்ள தேர்களில் மிகவும் பெரியது. ஏறக்குறைய எழுபது தொன் பாரமுடையது. தேரோடும் பாதை 1000 அடி நீளமும் 40 அடி அகலமும் கொண்டது. தேரின் அமைப்பைப் பற்றி பிரதமஸ்தபதி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> "முப்பத்தேழு மாதங்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டு (1984-09-06) இன்று வெள்ளோட்ட விழா நடைபெறுகின்றது. இந்தச் சித்திரப் பெருந்தேர் திராவிட சிற்ப சாஸ்திர நுட்பங்களைத் தன்னகத்தே கொண்டு ஒரு நுண்கலைக் களஞ்சியமாகத் திகழ்கிறது. சிற்ப சாஸ்திர விதிகளின்படி பார்விதானம், உபபீடம், அதிஷ்டானம், பேரூர்மட்டம், நாடகாசனம், தேவாசனம், சிம்மாசனம் என்பவை அமைந்துள்ளன. இவை களின் பார் விதானம் ஏழு பார்களையும் ஆறு விலகு பார்களையும் கொண்டது. வலது புறமும் இடது புறமும் பூதப்பார்களுண்டு. பூதப்பார் இலுப்பை மரத்தாலும் மற்றவை முதிரை மரத்தாலும் உருவாக்கப்பட்டுள்ளன. அடுத்து, தேரின் வர்க்கங்களில் பார்வதானம், குமுத அடுக்கு, பத்மஅடுக்கு, கஜபந்தி, மகர அடுக்கு, பத்ம அடுக்குக் கண்டம், சித்துள் மட்டம், வேதியல் அடுக்கு, கபோத அடுக்கு இத்துடன் உபபீடம் முடிகின்றது. அடுத்து அதிஷ்டானத்தில் புதவடை விருத்த குமுதம், ஜெகதி ஆகிய அடுக்குகள் வருகின்றன. இத்துடன் பேரூர் மட்டம் முடிகிறது. பேரூர் மட்டத்தை யடுத்து படலை அடுக்கு, ரிஷிப கண்டவர்க்கம், மகர குமுதம், கண்டம், வேதியல் அடுக்கு, கபோத அடுக்கு ஆகியன வருகின்றன. இத்துடன் நாடகாசன மட்டம் முடிவடை கின்றது. தேவாசன மட்டத்தில் புதவடை அடுக்கு, ஜெகதி அடுக்கு, கண்ட வேதியல் அடுக்கு, கபோத அடுக்கு ஆகியவையும் சிம்மாசன மண்டபத்திற் புதவடை, ஜெகதி கண்டம், வேதியல் கபோதிக அடுக்குகள் வருகின்றன.

**தேரில் அமைக்கப்பட்டுள்ள சிற்பங்கள்:**

**பார்மட்டம்:** பக்க வசத்தில் இரண்டு பூதங்கள்; முன்வசத்தில் இரண்டு சங்கப் பூதம்; விநாயகர், சிவபெருமான், முருகன், பார்வதி, சண்டேஸ்வரர் ஆகிய விக்கிரகங்களும் 4 பூதத்தலை களும் உண்டு.

**கஜபந்தியில்:** 44 யானைகள் 32 மயில்கள் வருகின்றன. சிந்துரு மட்டத்தில் (உபபீடம்), முற்பக்கத்தில் வலமிருந்து இடமாக நாகதம்பிரான், பூதம், சங்கநிதி, வள்ளியம்மன், ஆறுமுகம், ஆலய மூலஸ்தான வேல், விநாயகர், பத்மநிதி, பூதம், அடுத்து 9

சிற்பங்களில் ஆலயவரலாறு, விஷ்ணு பாமா, ருக்குமணியுடன், முருகன் வள்ளி தெய்வானையுடன், பிரணவத்தினுள் சிவன் பார்வதி, பிரம்மா, பூதம், வைரவர், பூதம், முனிவர், வைரவர் ஆலயம், பூதம், கறுப்பர், பூதம், அகோரவீரபத்திரர், சரவணப் பொய்கையில் அம்பாள், துர்க்கை, ஐயனார், பூதம், சின்னக் கறுப்பர், பூதம், காமாட்சியம்மாள் ஆகிய விக்கிரகங்களும் 44 குதிரைகளும் வருகின்றன.

**பேரூர் மட்டத்தில்** அழகான மகரத்தலைகள் கொண்ட 32 நெட்டாங்குகளுள்ளன. முற்புறத்தில் வலமிருந்து இடமாக ரிஷபவாகடர், சிங்கார வேலவன், ஆலய மூலஸ்தானம், ஆறுமுகன், விநாயகர், கீதோபதேசம், இராவணன் ஆகியனவும், இதையடுத்து ஆலயத்தின் புராணகால வரலாறு 7 சிற்பங்களி லும், இதனைத் தொடர்ந்து ஆலயத்தின் தற்போதைய தோற்றம், பூக்காரர்கள், பூமாலைதொடுத்தல், மாவிட்டபுரம் சந்தசாமி ஆலயம், நல்லூர் முருகன் ஆலயம், கதிர்காமம், பேராதனைக் குறிஞ்சிக்குமரன் ஆலயத் தோற்றங்களும், இதையடுத்து கந்தபுராணம் 17 சிற்பங்களிற் காட்டப் பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து தட்சணாமூர்த்தி, வீரபத்திரர் தட்சன் யாகத்தை அழித்தல், தட்சணாமூர்த்தி, திரிசிரபுர அழிவு ஆகிய சிற்பங்கள் வருகின்றன.

**நாடகாசனத்தில்** 80 சிம்மங்களுடன் 80 சிற்பங்களும் அமைக்கப்பட் டுள்ளன. வீணைவாசிக்கும் தட்சணாமூர்த்தி, கல்யாணசுந்தரர், குஞ்சிதபாத நடராஜர், முருகன், முருகன் குதிரை வாகனத்தில் எழுந்தருளல் (10ஆம் திருவிழா), வீரட்டானேஸ்வரர், விஸ்வேஸ்வரர், முனிவருக்குபதேசம், சிவன் பிட்டுக்கு மண் சுமந்தமை, சிவன் பிரம்படிபட்டமை, நடராஜர் மாணிக்கவாசகருக்குக் காட்சியளித்தல், சம்பந்தருக் குப் பார்வதி பாலூட்டல், சம்பந்தருக்குத் தகப்பனார் அடித்தல், சுந்தரர் திருமணக் கோலம், நாவுக்கரசரைக் கல்லிலே கட்டிக் கடலில் விட்டமை, ஔவையாருக்கு முருகன் சுட்டபழம் போடுதல், ஔவையாருக்கு விநாயகர் முத்தியளித்தல், விநாயகரும் முருகனும் மாம்பழப்போட்டி, விநாயகர் கஜமகாசுர யுத்தம், கஜமகாசுர சங்காரம், விநாயகர் அருளல், காவேரி உற்பத்தி, பார்வதி கங்கையிற் சிவபூசை செய்தல், அர்த்தநாரீஸ்வரம், திருப்பனந்தாள் லிங்கம் வளைந்தமை, குங்கிலியக்கலயநாயனார் கழுத்தில் கத்தியைக்கட்டி லிங்

கத்தை இழுத்தமை, பட்டினத்தார், கண்ணப்பநாயனார், கழுகு மலை, விஷ்ணு, வேணுகோபாலன், கஜயேந்திர மோட்சம், கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்தல், சிகண்டி முனிவரும் கந்தருவரும், திருக்கோணேஸ்வர ஆலயம், கருடாழ் வார், மச்சாவதாரம், கூர்மாவதாரம், வராக அவதாரம், நரசிம்ம அவதாரம், வாமன அவதாரம், பரசுராம அவதாரம், இராம அவதாரம், பலராம அவதாரம், கண்ண அவதாரம், கல்கி அவதாரம், ஆஞ்சநேயர், புதிய தேருக்கான வடம் கடலில் வருவதை வள்ளத்தில் சென்றோர் காணுதல், வடத்தைக் கொண்டுவந்து தேர்க்கொட்டகையிற் சபையினரிடம் ஒப் படைத்தல், மோகினி அவதாரமும் பத்மாசுர சங்காரமும், ஐயனார் உற்பத்தி, மன்மதன் மலர்ப்பாணம் தொடுத்தல், அம்சநாரி, நவநாரி, சிருங்காரலீலைகள், திருவானைக்காவில் யானை சிவலிங்கப் பூசை செய்தல், வைரவர் பிரம்மாவின் சிரசைக்கிள்ளியது.

**சிம்மாசனத்தில்** ஏகபாத மூர்த்திகள், பிச்சாண்டார், தேவர்களும் அசுரர்களும் பாற்கடல் கடைந்தமை, லிங்கோற்பவர், தத்தாத்திரேயர், மார்க்கண்டேயர், சண்டேஸ்வரர் சிவபூசைக்கு வைத்திருந்த பாலைத் தகப்பனார் தட்டிவிடல், சண்டேஸ்வரர் தகப்பனார் காலை வெட்டியமை, சிவராத்திரி மகிமை, மான் வயிற்றில் வள்ளி பிறந்தமை, காமதேனுவும் கற்பக விருட்சமும், திருவிழா நாட்களில் கேடகத்தில் முருகன் உலாவரல், மாதவி நடனம், கண்ணகி வழக்குரைத்தல், வருடாந்த ஆனிப்பொங்கல், தீர்த்த உற்சவம், பழைய தேரும் ஆலயமும், கிராமத்திலுள்ள பிள்ளையார் கோவில் ஆகிய சிற்பங்களும் 44 சிம்மங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

**தேவாசனத்தில்** 28 தேவர்களும் 8 திக்குபாலகர்களும் சிற்பங்களில் அமைந்துள்ளன.

**சிம்மாசனத்தில்** தனலட்சுமி, தான்யலட்சுமி, சந்தானலட்சுமி, மாகாலட்சுமி இவர்களின் சிற்பங்களும், எட்டுச் சிம்மங்களும் உள்ளன.

**உபபீடத்தில்** 12 குச்ச விக்கிரகங்கள் மிகவும் சிறப்பாக அமைந் துள்ளன. இவை தன்னிகரில்லா வகையிற் சிறப்பாகச்

செதுக்கப்பட்டுள்ளன. பத்மாசுரவர்த்தனி, வீரபத்திரர், நாரதர், தும்புருவர், குறவன், குறத்தி, வீணை மீட்கும் பெண்கள், கறுப்பர்கள், தேரின் முற்பகுதியில் இரண்டு பிரமாண்டமான குதிரைகள் 8 கைகளுடனும் 4 தலைகளுடனும் பிரம்மா செலுத்துகின்ற அமைப்பு மிகவும் ஆச்சரியப்படத்தக்கதாகும். தேரின்மேல் விதானப்பகுதி நிரந்தரமாக இழைக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் அமைய வேண்டிய 36 கந்தருவங்களும், 48 பூதங்களும், 16 நேர்விக்கிரகங்களும் பின்னர் அமைக்கப்படவுள்ளன. ஐநூறுக்கு மேற்பட்ட பித்தளைக் குமிழிகள், 1008 மணிகள் வெள்ளிப் பூக்கள் ஆகியன தேரின் சிறப்பை மேலும் உயர்த்துகின்றன"[4].

அவரது குறிப்புக்கள் சந்நிதித் தேரைப்பற்றிய விரிவான செய்திகளைத் தருகின்றன. தேரின் அமைப்புப்பற்றி ஆய்வு செய்வோருக்குப் பெரிதும் உதவும் செய்திகளாகும். தேர்த்திருவிழா போன்ற திருவிழா ஜப்பான் நாட்டிலும் நடைபெறுகிறது. அங்குள்ள பேராசிரியர்கள் சிலர் தேர்த்திருவிழா பற்றிய ஒப்பீட்டையும் செய்து வருகின்றனர். எனினும் எமது நாட்டிலுள்ள சித்திரத் தேரமைப்பு அங்கில்லை. அவை கட்டுத்தேர்தகளாகவும், கடதாசி அலங்காரம் கொண்டனவாகவும் அமைந்துள்ளன. இந்த ஒப்பீட்டாய்வில் எமது நாட்டவரும் ஈடுபடின் பல உண்மைகள் தெளிவுபெறும்.

சந்நிதி உற்சவக் கடைசி நாளன்று தீர்த்தோற்சவம் நடைபெறும். தெப்போலைகளால் அலங்கரிக்கப்பட்ட தண்டிகையில் முருகன் எழுந்தருளித் தீர்த்தக் குளத்திலே தீர்த்தமாடுவார். அன்பர்களும் தமது தீராத பாபவினை தீரவேண்டி முருகன் ஆடிய தீர்த்தத்தில் தாமும் ஆடி அவனை வழிபட்டு நிற்பர். தீர்த்தக்குளத்தின் பெயர் "மாணிக்க கங்கை" என்றே வழங்கப்படுகிறது. அன்று பெருந்தொகையான காவடி, பாற்செம்பு, கரகம் எடுத்து ஆனந்தக்கூத்தாடுவர். சந்தனக்காவடி, சர்ப்பக்காவடி, பாற்காவடி, தூக்குக்காவடி, துலாக்காவடி, செடிற் காவடி, முட்காவடி, வேற்காவடி, தீர்த்தக்காவடி, பழக்காவடி எனப் பல்வேறு காவடிகள் எடுத்து வருவர். காவடி எடுத்து வருபவர் முருகு நிலைபெற்றிடத் துள்ளி ஆடும் லயம் பார்ப்போரைப் பரவசத்தி லாழ்த்தும்.

உற்சவகாலத்தில் நாள்தோறும் முருகன் வீதிவலம் வந்தபின் சிறுபெண் குழந்தைகள் பன்னிருவர் சிறுதட்டில் விளக்கேற்றி முருகனுக்கு ஆரத்தி எடுப்பர். இவ்வழக்கம் தொன்றுதொட்டு நடைபெறுகிறது. இங்கே சதுர்க்கச்சேரி இடம்பெறுவதில்லை.

கதாகாலக்ஷேபங்கள், பாட்டுக்கச்சேரிகள், பஜனைகள் நடைபெறுவது வழக்கம்.

உற்சவகாலத்திலே இங்கே கொடித்தம்பம் நாட்டப்படுவதில்லை. இது சந்நிதியின் தனிச்சிறப்புகளில் ஒன்றாகும். முறைப்படி மந்திரபூசை செய்யும் கோவில்களிலேதான் கொடித்தம்பம் நாட்டப்படும். சந்நிதியிலே கொடியேற்றத் தினங்களில் கொடித்தம்பம் இருக்கவேண்டிய இடத்தில் 'வள்ளிக்கொடி' ஒன்று முளைக்கும். கொடியேற்றத்திற்கு முன்னர் கடலிலே (கழுத்தளவு நீரில் இறங்கி) தீர்த்தமெடுத்துவந்து அந்த நீரையே எண்ணெய்யாகக்கொண்டு கொடியேற்றம் முடியும்வரை விளக்கேற்றும் வழக்கம் முன்னர் இருந்ததாகக் கூறப்படுகின்றது. இப்பொழுது கொடியேற்றத்துக்கு முன்னர் கடலிலே தீர்த்தமெடுத்து வரும் வழக்கம் உண்டு.

உற்சவ காலத்தைவிடக் கந்தசட்டி விரதகாலமே கோயிலின் மிக விசேட தினங்கள் கொண்டதாகக் கருதப்படுகிறது. என்றுமில்லாத அமைதியும், புனிதமும் சந்நிதியில் அப்போது குடிகொண்டிருக்கும். சந்தசட்டி முடிவு நாளின் இறுதி நிகழ்வான சூரன் போர் நிகழ்ச்சி பெரிதும் குறிப்பிடத்தக்கது. ஏனைய கோயிற் சூரன் போர் போலல்லாமல் சந்நிதிச் சூரன்போர் பார்ப்போரை வியப்பூட்டும் தன்மையில் நடத்தப்படும். முருகன் அமைதியாகப் பின்னேவர சூரன் ஆங்காரத்தோடு முன்னும் பின்னும் ஓடி ஒளித்து முருகனைச் சுற்றிச்சுற்றி வந்து போர்புரிவது கண்கொள்ளாத காட்சியாகும். சூரன் ஆட்டுவதற்கென்று பயிற்றப்பட்டவர்களாலேயே இந்நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. சூரன் போரின்போது சந்நிதிக்குவரும் அன்பர்கள் சிலர் கோயிலிலேயே தங்கள் விரதத்தை முடித்துக் கொள்ளுவர். சூரன் போர் முடிந்ததும் நீராடி, முருகனை வணங்கிவிட்டு பயற்றம் உருண்டைகளை உண்பர். இளநீரைப் பருகுவர். மறுநாட்காலை பாரணம் பண்ணச் சோறு உண்பர். சடங்கு நிலையிலே சந்நிதி முருகனே கதிர்காமத்தில் திருவிழா நடைபெறும் பொழுது எழுந்தருளுகிறார் எனப்பாவனை செய்து பூசகரும் அன்பர்களும் சிறிது தூரம் சென்று வழியனுப்பி வருவர். பின்னர் கதிர்காமத்தில் எழுந்தருளிய முருகன் தீர்த்தம் முடிய சந்நிதிக்கு மீண்டும் எழுந்தருளிவிட்டதாகப் பாவனை செய்யும் சடங்கிலும் அவருடைய களைப்பு நீங்கப் பயற்றம் உருண்டையும் இளநீரும் படையல் செய்து வழிபடுவர். இது சந்நிதிக்கேயுரிய சிறப்பான வழிபாட்டு முறையாகவும் உள்ளது.

பூசைக் காலங்களிலே சந்நிதியில் பறைமேளம் கொட்டப்படும். அந்த ஒலியைக் கேட்டுப் பல அன்பர் ஆடுவதுண்டு. அவர்கள் வாய்

முருகா! முருகா! என்று அழைக்க, கண்களில் நீர் ஆறாகப் பெருக, கைகளைத் தலைமேல் குவித்து நின்று கும்பிடு கோலத்திலேயே ஆடுவர். பூசை முடிய பூசகர் வந்து விபூதியை அவர்கள் தலையிலே போட்டு வாயிலும் போடும்வரை அவர்கள் ஆட்டம் நிற்பதில்லை. வேலோடு ஒன்றிய மனத்தராகி அவர் மெய்மறந்து ஆடும் காட்சி வேறு கோயில் களிலே காணமுடியாதது. ஆண் பெண் என்ற பாகுபாடற்று முருகன் அன்பர்கள் என்ற நிலையிலே ஒன்றுபட்ட அவர்களிடையே ஏற்றத்தாழ்வும் கிடையாது. தீராத நோய்வாய்ப்பட்டோரும், மன அமைதியை இழந்தவரும் சந்நிதி பூசையிலே கலந்து அன்பு நிலையால் அனைத்தையும் மறந்துவிடுவர். முருகனின் மருந்துண்டு யாவும் குணமாக வீடு திரும்புவர். இந்த அநுபவம் எழுத்திலே அடக்கமுடியாதது. சொற்களால் விளக்க முடியாதது. தாமே அநுபவித்து அறியவேண்டியது என்பதில் ஐயமில்லை.

**அடிக்குறிப்புகள்**


1. க.காந்தி - **தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்**, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1980.
2. வீ.சி.கந்தையா - **மட்டக்களப்புத் தமிழகம்**, ஈழகேசரிப் பொன்னையா வெளியீட்டு மன்றம், 1964.
3. கா.சிவத்தம்பி - **சித்திரப்பெருந்தேர் வெள்ளோட்ட சிறப்பு மலர்.**
4. சோம.லெட்சுமண ஸ்தபதி - **சித்திரப் பெருந்தேர் வெள்ளோட்ட சிறப்பு மலர்.**

# 3

## கர்ணபரம்பரைக் கதைகள்: காட்சிகள்

சந்நிதி கோயிலின் வரலாற்றைப் பார்க்கும்போது அதுபற்றிய கர்ணபரம்பரைக் கதைகளையும் மனங்கொள்ள வேண்டும். கர்ணபரம்பரைக் கதைகள் என்பது காலங்காலமாகச் செவிவழியாகக் கேட்டுவந்த கதைகள்; மக்களிடையே நிலைத்துவிட்ட கதைகள். அவற்றை யார் யாருக்குச் சொன்னார் என்ற விபரம் அறியமுடியாது. எப்போது அக்கதைகள் குறிப்பிட்ட இடத்திற்கு வந்தன என்றும் கூறமுடியாது. அவற்றின் உண்மைத்தன்மை பற்றி ஆராய முற்படுவதும் வீணானதே. கற்பனைக் கதைகளாகவோ அன்றேல் உண்மைச் சம்பவங்களாகவோ அவை இருக்கக்கூடும். குறிப்பாகக் கோயில் சம்பந்தமான கர்ணபரம்பரைக் கதைகள் புராணக்கதைகளோடு தொடர்புபட்ட கதைகளாகவே காணப்படுகின்றன. தென்னகத்தை விட யாழ்ப்பாணம் கந்தபுராணத்தின் தாக்கத்தை அதிகமாகப் பெற்றுள்ளது. முருக வழிபாடு பழைய நிலையிலேயே இருந்த காலத்தில் தொடர்ந்து புராணச் செல்வாக்கினாலும், ஆகம வழிபாட்டு முறைகளாலும், தமிழர் வழிபாட்டு நடைமுறைகள் சற்று மாற்றமுற்றன. வாழ்க்கை நிலைமாற்றங்களும் வழிபாட்டு முறைகளை மாற்றக் காரணமாயின. இந்த மாற்றம் சிறப்பாகக் கோவில்களிலே கூர்மையானதாகவே அமைந்தது. ஆரம்ப காலத்திலே மரநிழலிலோ, நீர்க்கரையிலோ, மலைமுகட்டிலோ நடைபெற்ற தெய்வச்சடங்குகள், கோயிற் கட்டட அமைப்பு முறை வளர மாற்றம் பெற்றன. ஆகம வழிபாட்டு நடைமுறைகள் சேர்ந்தன. அவ்வாறு அவை சேரும்போது புராணக்கதைகளையும் உடன்கொண்டு இணைந்தன. சங்க இலக்கியங்களிலேயே சடங்கு முறையையும் ஆகம வழிபாட்டு முறையையும் அவை இணைந்த நிலையையும் காண முடிகின்றது. முருகவழிபாடு பற்றிச் சிறப்பாகத் திருமுருகாற்றுப்படையும்,

பரிபாடலும் பல தகவல்களைத் தருகின்றன. முருகவழிபாடு வள்ளியோடு மட்டும் நடைபெற்ற காலமும் உண்டு. பின்னர் தேவசேனையும் இணைந்த வழிபாடும் நடைபெற்றது.

சந்நிதியின் கோயில் தோற்றப் பழைமையைக் கணிக்க வென்றே கர்ணபரம்பரைக் கதைகளும் உள்ளன. கோவிலைப்பற்றிய சாசனங்களோ, கல்வெட்டுகளோ இல்லாத விடத்துக் கோவிலின் ஆரம்பகாலத்தைக் கணிப்பதும் கடினமாகும். யாழ்ப்பாணத்தின் வரலாறே இன்னமும் சீரான முறையில் எழுதப்படாததால் முழுமையாக அறியப்படாத வரலாறாகவுள்ளது. காலத்துக்குக் காலம் ஏற்பட்ட பிறநாட்டுப் படையெடுப்புகளும், அவற்றினால் ஏற்படுத்தப்பட்ட அழிவுகளும் இதற்குக் காரணமாகும். இதனால் திட்டமான முறையினால், வரலாற்றை எழுதவும் முடியாது. இந்த நிலையில் கர்ணபரம்பரைக் கதைகளை எந்த அளவுக்கு வரலாற்று ஆதாரங்களாகக் கொள்ளலாமென்பது பற்றி நாம்சிந்திக்க வேண்டும். மக்கள் தலைமுறை தலைமுறையாகக் கேட்டுவந்த கதைகள் என்ற நிலையில் மட்டுமே அவற்றைச் சான்றாகக் கொள்வது நன்று. சந்திதிகோயில் பற்றிய கர்ணபரம்பரைக் கதைகளிலே முன்னர் கூறியுள்ள மருதர் கதிர்காமர் கதை சற்றுவேறுபட்டது. அது புராணத் தொடர்பு அற்றது. முருகன் மீது கொண்ட அன்பு நிலையை மட்டுமே ஆதாரமாகக் கொண்டது. பின்வரும் கதை புராணத்தொடர்புடையது. கோயிற்பூசகரே இதை எழுதியுள்ளார்.

**புத்திர சக்தி மூர்த்தம்**

**தேவலோகத்தில் வியாழபகவான் கந்தருவனொருவனுக்கு உபதேசஞ் செய்யுங்கால் அவன் அதைப் பேணி நடக்காத காரணத்தால் அவர் அவனுக்கு நீ போய் பூமியிலே பிறக்கக் கடவாய் என்று சாபம் கொடுத்தார். அதன் காரணமாக கதிர்காமக் காட்டிலே ஓர் யானையாகப் பிறந்தார். இவ் வியானைக்கு யானைத்தீ என்னும் நோய் பீடித்ததால் செடி கொடிகளையுண்டு பசிதீராது வருந்தும் நாளில், அகத்தியரிடம் வந்து இசை நுணுக்கங்களையறிந்த சிகண்டி முனிவர் கதிர்காம முருகனைத் தரிசிக்கும் பொருட்டு கதிர்காமக் காட்டுக்கு வந்தபோது மதம்கொண்ட இவ்வியானை மரங்களை முறித்துக் கொண்டு தாக்க வந்தது. சிகண்டி முனிவர் சிவனை வணங்கி**

முன்னொருகால் துரும்பினால் முப்புரங்களையும் எரித்தது உண்மையென்றால் இவ் வெற்றிலை எம்மைக் கொல்லவரும் யானையை அழித்து விடட்டும் என்று வெற்றிலையொன்றை மந்திரம் ஓதி யானையை நோக்கி எறிந்தார். யானை மறைந்தது. யானைக்குள்ளிருந்து மனித உருவம் தோன்றி முனிவரை வணங்கியது.

யானையிலிருந்து தோன்றிய மனிதன் வியாழபகவானிடம் தான் பெற்ற சாபத்தையும் இப்போது சாப விமோசனம் பெற்றதையும் கூறினான். கதிர்காம மாணிக்க கங்கையில் நீராடி முருகனைத் தரிசித்தனர். சிகண்டி முனிவர் கைலாசம் போய்ச் சேர்ந்தார். ஐராவசு தனக்கு முத்தி தருமாறு முருகனை வேண்டினான். அதற்கு முருகன் இந்துவாரியின் தென்பகுதியில் ஒரு நதி உண்டு. அங்கு வீரவாகுதேவர் என்னைக் குறித்துப் பூஜை செய்த இடமுண்டு. அங்கு தவமிருந்து முக்தியடையவாய் எனக் கூறினார். முருகப் பெருமானின் கட்டளைப்படி ஐராவசு இலங்கையின் வடபகுதியில் இந்து சமுத்திரத்தின் தெற்குப் பகுதியிலுள்ள வல்லியாற்றின் (தற்போது தொண்டைமானாறு) கரையில் மரநிழலில் தவமிருந்து முத்தியடைந்தான். ஐராவசு தவஞ் செய்து அடங்கிய இடமே தற்போது நாகதம்பிரானுக்கு அருகிலுள்ள பூவரசு நிலையமாகும்.

பூசகர் செவிவழி கேட்ட கதை சந்நிதிக்கு ஒரு புராணத் தொடர்பை ஏற்படுத்துகின்றது. வீரவாகுதேவர் பூசை செய்ததாகக் கூறப்படும் பூவரசு மரமே இப்போது சந்நிதியின் தலவிருட்சமாகவுள்ளது என்னும் நம்பிக்கை சந்நிதி முருகனை வழிபடுவோரிடம் இருந்து வந்துள்ளது. பூவரச மரத்தின் இலையின் அமைப்பும் வெற்றிலையின் அமைப்பை ஒத்தது. கர்ண பரம்பரைக் கதை தலவிருட்ச நிலையால் இன்னமும் பேணப்பட்டு வருகிறது.

கோயிலின் நந்திக்குப் பின்னால் உள்ள திண்ணைகள் இரண்டும் முருகனும் கதிர்காமரும் அமர்ந்து கதைத்த திண்ணைகளாகக் கருதப்படுகின்றன. செல்வச் சந்நிதியைச் 'சின்னக் கதிர்காமம்' என்று அழைக்கும் வழக்கம் உண்டு. அவ்வாறு அழைக்கப்படுவதற்கு மேற்காட்டிய கர்ண பரம்பரைக் கதையே காரணமாக இருக்கலாம். கந்த

புராணத்திலே முருகப்பெருமான் எமகூடம் அமைத்த இடமே கதிர்காமத்தலம் என்று கருதப்படுகிறது. எமகூடம் போகும் வழியில் இங்கு தங்கியதாகவும், தங்கியிருக்கும் பொழுது வீரவாகு தேவரால் முருகன் பூசிக்கப்பட்டு அருள்பெற்ற இடம் சந்நிதி என்றும் கூறுவர். இந்த நிகழ்ச்சி சித்திரத்தேரில் சிற்பமாக வடிக்கப்பட்டது. கோயில் பற்றிய கர்ண பரம்பரைக் கதைகளுக்குச் சிற்பவடிவிலும் உருக்கொடுத்து அவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

கதிர்காமத்துக் கொடியேற்ற நாளில் சந்நிதிமுருகன் கதிர்காமம் செல்வதாகவும், பின்னர் கதிர்காமத்துத் தீர்த்தத் திருவிழா அன்று சந்நிதிதிரும்பி வருவதாகவும் சடங்குகள் செய்யப்படுகின்றன. ஒருநாளிரவு சுவாமி பூசாரியார் கதிர்காமரை நித்திரையினின்றும் எழுப்பி "அப்பா, நான் பாதயாத்திரையாக வந்தமையால் பசிதாகம் அதிகரித்துள்ளது. ஏதும் உண்பதற்கு கொடு" என்று கேட்டாராம். கதிர்காமர் "இவ்வேளை நான் தங்களுக்கு அமுது படைக்க எங்கு போவேன்" என்று மனம் நொந்தார். முருகன் "உன்னிடமிருக்கும் சிறிதளவான பயற்றைத்துவைத்து இளநீரும்தா" என்று கேட்டுவாங்கி திருவமுது செய்தார். இன்றும் அவ்விதம் பயற்றம் உருண்டையும் இளநீரும் கதிர்காமத்திலிருந்து திரும்பிவருகின்ற பூசைக்குப்படையல் செய்து வருவது நடைமுறையாயுள்ளது. யாழ்ப்பாணத்திலே ஏனைய விரதங்களை அனுட்டிக்கின்ற காலத்திலும் உபவாசநாளை முடிக்கப் பயற்றந் துவையல் உருண்டையும் இளநீரும் உண்பதே வழக்கமாக உள்ளது.

இன்னும், முருகன் குறிப்பிட்ட பதின்நான்கு நாட்கள் அன்பர்களுள் ஒரன்பராய்க் கோயிலில் இருப்பார் என்று முருகனடியார்கள் நம்பி வருகின்றனர். இப் பதின்நான்கு நாட்களில் யாராவது தகாத செயல்கள் செய்யின் அடுத்த வருடம் அத்தினத்திற்கு முன்னர் தண்டிக்கப்படுவாரென்பது மக்களிடையே பொதுவான நம்பிக்கை யாயுள்ளது. அப்பதின்நான்கு நாட்களும் வருமாறு: கொடியேற்ற நாள், கொடியேறிப் பதினோராம் நாள் தொடக்கம் பூக்காரர் திருவிழா வரும் வரையும் உள்ளநாட்கள், அபிடேகதினம், கந்தசட்டி, சூரன்போர்நாள், சித்திரை வருடப்பிறப்பு, தைப்பூசம், கதிர்காமம் வழியனுப்பும்நாள், திரும்பும் நாள், வைகாசி விசாகம் என்பனவாகும்.

முருகனின் திருவருட்காட்சிகளை அன்பர் ஸ்ரீ தரன் வெள்ளோட்டச் சிறப்பு மலரிலே விரிவாக எழுதியுள்ளார். நீண்டதாக அமைந்தபோதும், இந்நூலைப் படிப்பவர்கள் அறிந்து கொள்வதற்காக அதனை அப்படியே தருகிறோம்.

"வயிற்றில் சூலைநோய் கொண்ட ஒரு அடியவர் ஒவ்வொருநாளும் கோவில் வாசலில் இரவிற் படுத்து வந்தாரென்றும், ஓரிரவு சுவாமியார் என்னுடைய வழியில் ஏன் கிடக்கின்றாய் என்று கேட்டு ஏறி மிதித்ததாகவும், மிதித்தவுடனே பல தடவை மலவிமோசனம் ஆகிப் பூரண சுகமடைந்த தாகவும் கூறப்படுகிறது. கோவில் வீதியில் இருந்த நல்லதொரு நாய்க்குட்டியினை ஓர் அன்பர் தனது வீட்டிற்குத் தூக்கிச் சென்றுவிட்டார். முருகன் அவருக்கு கனவிலே தோன்றி "எனது நாய்க்குட்டியைக் கொண்டுவந்து தாரும்" என்று கேட்டாராம். உடனே அவ்வன்பர் மறுநாள் நாய்க்குட்டியுடன் அதற்கு உணவு போடுமாறு அரிசியும் கொண்டுவந்து கொடுத்துச் சென்றார் என்றும், கண் தெரியாத அன்பர் ஒருவர் முருகனைத் தஞ்சம் என அடைந்து வீதி மண்ணெடுத்துப் பூசிவரக் கண் பார்வை பெற்றாரென்றும் "விசர்ப்பார்வதி" என்னும் ஒரு கிழவி இத்தலத்திலே இருந்ததை நான் சிறுவனாக இருந்தபோது நன்கறிவேன். அன்னதானம் கொடுக்கவந்த அடியார் ஒருவர் அவ்வம்மையாருக்கு அடித்து விட்டார். அன்று இரவு முருகப்பெருமான் அவ்வடியாரின் கனவிலே தோன்றி "எனக்கு நீ அடித்தது மிகவும் வலிக்கின்றது" என்று சொல்ல அவ்வடியார் மறுதினம் இவ்வாலயத்திற்கு வந்து விசர்ப்பார்வதியைக் கூட்டிச்சென்று ஒரு சேலையும் கொடுத்து அன்னதானமும் கொடுத்து, மரியாதை செய்து சென்றார் என்றும், இன்னும் இது போன்ற பலதிருவிளையாடல்களை எனது பேற்றோரும், ஊர்ப்பெரியாரும் சொல்லக் கேட்டுள் ளேன். வடக்கு வெளிவீதியில் இருந்து இப்போது மூடப்பட்டுள்ள கிணறு முருகன் மலேயாவில் இருந்த எனது தந்தையாருக்குக் கனவில் தோன்றிப் பணித்ததின் பயனாகத் தோண்டப்பட்டதாம். இதனுடைய துலாக்கம்பியைச் சுன்னாகத்திலிருந்து எனது பேரனார் கொண்டுவரும்பொழுது முருகன் தோன்றி வழிகாட்டியதாகவும் எனது தந்தையார் கூறுவார். முருகனுடைய திருவிளையாடல்களுக்குத்தான் ஓர் எல்லை உண்டோ."

"இவ்வாறு கூறப்பட்டு வந்த முருகனின் அற்புதத் திருவிளை யாடல்களை எனது அறியாமையினால் இவை வெறும் புனை கதைகள் என்று எண்ணியிருந்தேன். ஆனால், பின்னாற் கூறப்படும் நிகழ்ச்சிகள் யாவும் முருகனின் திருவிளையாட்டாக நேரிற் கேட்டும், அநுபவித்தமையுமாகும். நான் அரச சேவையில் இருந்தபோது ஒரு நாள் கனவில் "கோவில் கதவு திறந்திருக்கிறது. திறந்த அந்த இடைவேளியில் ஒருவர் நின்று என்னைக் கையசைத்துக் கூப்பிட்டு கோவிலின் உள்ளே விட்டு மூடிவிடுகிறார். நான் அங்கிருந்து வேலவனைக் கைகூப்பிக் கும்பிடுகிறேன்." இப்படிக் கனவில் கண்டேன். இதனுடைய விளக்கம் அப்போது எனக்குத் தெரியவில்லை. அரச சேவையை விட்ட பின்பு வெளிநாடு போகலாம் என்று பாஸ்போட் முதலியவற்றை எடுத்து ஆயத்தம் செய்தேன். அப்பொழுது முருகனின் தேர்த்திருப்பணிச் சபையில் ஒரு நிர்வாக சபைத் தொண்டனாக எனது சம்மதங் கேளாமலேயே நியமித்து விட்டார்கள் தேர்த்திருப்பணிச் சபையினர். இதன் பின்புதான் கனவின் விளக்கமும் எனக்குப் புலனாயிற்று. தேர்த்திருப்பணிச் சபையில் தொண்டன் ஆகிய பின், பின்வரும் முருகனின் திருவிளையாடல்களை அவனின் பக்தர்கள் அநுபவ வாயிலாகக் கூறக்கேட்டுள்ளேன்"

"கரவெட்டி தெடுத்தனையைச் சேர்ந்த முருகன் அடியார் ஒருவரின் (பெயர் குறிப்பிட விரும்பவில்லை) மகள் விவாகமாகிச் சிறிது காலத்தில் கடுமையான நோய்கண்டு பல இடங்களிலும் வைத்தியம் செய்தும் குணம் காணவில்லை. படுத்த படுக்கையாகிவிட்டார். நோய் கடுமை பண்ணவே இணுவில் வைத்தியசாலையில் கொண்டுபோய் வைத்திருந்தார். அங்கேயும் நாட்கள் கழிந்தனவேயல்லாமல் நோய் குறைந்த பாடில்லை. நோய் சற்றேனும் குறைவுபடா மையைக் கண்ட அவ்வன்பர் மிகவும் மனம் நொந்து இனி எந்த ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லலாம் என்று யோசித்த வண்ணம் படுத்திருக்கும்போது ஆற்றங்கரையான் கனவில் தோன்றி "நீ என்னை மறந்துவிட்டாய். எனக்கு எலுமிச்சம்பழம் வைத்து அருச்சனை செய்" என்று கூறி மறைந்தார். மறுநாட்காலை வெள்ளிக்கிழமையானதால் அவ்வன்பர் அதிகாலையில்

நடக்கும் பூசைக்கு வந்து அருச்சனை சாமான் வாங்கும் கடையில் நல்ல பெரிய அழகான எலுமிச்சம்பழம் இருக்கக் கண்டு அதையும் வாங்கி அருச்சனை செய்வித்து நேரே இணுவில் வைத்தியசாலையில் இருக்கும் தன் மகளைப் பார்க்கச் சென்றார். படுத்த படுக்கையாக இருந்த அவரின் மகள் இங்கு அருச்சனை நடைபெற்ற வேளையில் நல்ல சுகம் பெற்று எழுந்து உரையாடிக் கொண்டிருந்தார். அருச்சனைப் பிரசாதத்துடன் (திருநீறு, சந்தனம், புஷ்பம்) சென்ற அன்பருக்கு இதைக் கண்டவுடன் பேரானந்தமாக இருந்தது. அத்துடன் வேல்முருகன் தனது கனவிலும் தோன்றி "உனக்குப் பூரண சுகம் கிடைக்கும், உன் வீட்டுக்குப் போகலாம்" என்று சொல்லிய கனவையும் மகள் சொல்லக்கேட்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார். இவ்வடியார் அன்று தொடக்கம் இன்றுவரை அதிகாலையில் நடைபெறும் முதற்பூசையைக் காணத் தவறுவதில்லை. என்னே முருகனின் திருவருள்".

"எமது ஊரைச் சேர்ந்தவரும் எனது உறவினருமாகிய திரு. செ. நாகலிங்கம் என்பவர் தமது இளம் வயதில் அடப்பம் கட்டிக் கதிர்காமம் போகவென்று புறப்பட்டுக் கல்லோடைக் கந்தனிடம்போய் வடக்கு வீதியில் இருந்து சமீபத்தில் மூடப்பட்ட கிணற்றுக்கு கைகால் கழுவச் செல்கையில் சுமார் பன்னிரண்டு வயது மதிக்கத்தக்க ஒரு பையன் கிணற்றில் தண்ணீர் அள்ளிக் கழுவிக் கொண்டிருப்பதைக் கண்டார். இவரும் கிணற்றடிக்குச் சென்று தண்ணீர் அள்ளுவதற்குத் துலாக் கம்பியைப் பிடிக்கும்பொழுது அது ஒரு ஆண்பிள்ளை யல்லாது பெண்பிள்ளையாக இருக்கக்கண்டார். உடனே அவர் சிறுமியைப் பார்த்து 'எட நான் பொடியன் என்று நினைத்தேன். நீ பெட்டையாக இருக்கிறாய்' என்று சொல்ல அப்பெண் துலாவை விட்டுவிட்டுச் சிறிது ஓட்டமாக ஓடி வள்ளியம் மனுக்கும் சுவாமி கோவிலுக்குமிடையிற் சென்று மறைந்து விட்டதைக் கண்டு ஆச்சரியப்பட்டார். பின் கதிர்காமம் சென்று நேர்த்திக் கடன்களெல்லாவற்றையும் முடித்துக்கொண்டு இறுதியாகக் கோயிலுக்குட் சென்று பயணஞ் சொல்லிக் கும்பிடும்போது கதிர்காம ஆலயத்திரையில் ஆயிரங்கோடி சூரியப் பிரகாசமுள்ள ஒளியைக் கண்டு பரவசமுற்றுத்

திருவருளை நினைந்து ஊருக்குத் திரும்பி வந்துள்ளார். முருகப் பெருமானின் திருவிளையாடல்களுக்கும் அருட் காட்சிகளுக் கும் ஒரு வரம்புண்டோ."

"ஆற்றங்கரையான் தனக்கு வேண்டியவற்றைத் தனது அன்பர்களிடம் கனவில் தோன்றிக் கேட்டுப் பெறும் வழக்கமும் இருந்துள்ளது. இப்பொழுது பெரிய மணி இருக்கும் இடத்தில் சிறிய மணி இருந்தது. அதை நாவல் மரத்தடியில் கட்டடம் அமைத்து அங்கு வைத்துவிட்டு பெரிய மணிக்கோபுரத்தைக் கட்டி முடித்தார்கள். பெரிய மணிக் கோபுர வேலை முடிந்ததும் சிறிய மணியைக் கவனிக்காமல் எல்லோருடைய கவனமும் பெரிய மணியிலேயே இருந்தது. அதனால் சிறிய மணியின் கயிறு அறுந்து அந்த மணி சில நாட்களாக அடிக்கப்படாது இருந்தது. முருகன் தனது பக்தன் ஒருவரின் கனவிலே தோன்றி கயிறு கொண்டுவந்து போடச் செய்தருளினார். தேர்த் திருப்பணிச் சபையிலுள்ள சில தொண்டர்கள் அயராது உழைத்து இரவு பகலாக வேலைக்குப் பொருத்தமான மரங்கள் தேடித்திரிந்த நாட்களில் ஒருநாள் அம்பனையில் அலுமினியத் தொழிற்சாலை வைத்திருக்கும் சண்முகலிங்கம் அவர்களின் கனவிலே தோன்றிப் பெரிய இலுப்பை விதைகளைக் காட்டி மறைந்தருளினார். அடுத்தநாள் வெள்ளிக்கிழமை காலை குறித்த சண்முகலிங்கம் அவர்கள் கோயிலுக்கு வந்து தரிசித்தபின் கோயிற் பூசகர் பாலேந்திராஐயர் முன்னிலையில் அவரை ஒரு இலுப்பை மரம் அன்பளிப்புச் செய்யும்படி கோரினேன். அவரும் முருகன் தனது கனவில் தோன்றித் தேர்த்திருப்பணிக்கு ஒரு இலுப்பைமரம் உதவும்படி முருகனால் கேட்கப்பட்டுள்ளேன் என்று கூறிப் பெரிய இலுப்பைமரம் ஒன்றைப் பெறுவதற்குப் பேருதவி புரிந்துள்ளார். அடியேனும் இரண்டொரு பூசகர்களும் இன்பருட்டிக் கிராமத்திற்குத் தேர்த்திருப்பணிக்காக நிதிசேர்க்கச் சென்றிருந்தோம். அப்பொழுது குருசாமி என்போரின் மனைவியார் தேர்த்திருப் பணிக்கு நிதி போதாதென்றும், அதற்கு உதவிபுரிய வேண்டும் என்றும் கனவில் முருகனால் கேட்கப்பட்டதாகக் கூறி, நிதியுதவி செய்தார். எம் பெருமான் தனது அன்பர்களிடம் புரியும் திருவிளையாடல்களுக்கு ஒரு எல்லையுண்டோ?"

"இது மட்டுமல்லாது கேட்டும் கொடாதவர்களிடத்துத் தட்டிப்பறிக்கும் நிகழ்ச்சிகளும் நடந்துள்ளன. 1982ஆம் ஆண்டு நடைபெற்ற பெருந்திருவிழா ஆறாம் நாள், துன்னாலை தெற்கைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரி என்னும் அன்பர் தனது பணப்பையைக் கோவில் உள்வீதியில் தொலைத்துவிட்டார். அதை ஓர் அடியார் எடுத்துத் தேர்த்திருப்பணிக் காரியாலத்தில் ஒப்படைத்தார். இது ஒலிபெருக்கிமூலம் அறிவிக்கப்பட்டது. சிறிது நேரத்தில் அப்பெண்ணடியார் வந்து கூறியதாவது, சென்ற மாசிமாதம் சிவராத்திரியன்று எங்கள் வீட்டில் ஒருவருக்கு உரு வந்து முருகன் தேருக்கு 100 ரூபா கொண்டுபோய்க் கொடுக்கும்படி சொன்னார். இதை நான் அவ்வளவு சிரத்தை எடுக்கவில்லை. இன்று கோவிலுக்கு வரும்போது முன் உருவந்தவர் சொன்னது ஞாபகத்தில் வர நூறு ரூபாய்ப்பணத்தை அரைமனதுடன் எடுத்துக்கொண்டு வந்து கொடுக்கட்டுமா விடட்டுமா என்று யோசித்துக் கடைசியில் அதைக் கொடுக்காமல் விடுவோம் என்று தீர்மானித்துவைத்திருந்தேன். சிறிது நேரத்தில் எப்படியோ பணப்பை தவறிவிட்டது. ஆனால், அது சேரவேண்டிய திருப்பணிச் சபையிடமே சேர்ந்து விட்டது என்று கூறி அப்பணத்தைத் திருப்பணிச் சபையிடமே சேர்த்துவிட்டு முருகனின் பெருமையை அறியாது தனது சிற்றிறிவினால் விட்ட தவறுக்காக மனம்வருந்தி, முருகனை வழிபட்டு அவனின் விளையாட்டை எண்ணியபடியே சென்றார். இந்த நிகழ்ச்சியை அருட்கவி திரு. சீ. விநாசித் தம்பியவர்கள் இங்கு செய்தருளிய தமது சொற்பொழிவில் விரிவாகக் கூறியருளினார். இதை அன்று பிரசங்கத்திற்குச் சமுகங்கொடுத்த அடியார்கள் நன்கு அறிவார்கள்."

"அடியேனுடைய பெறாமகன் ரவிநாதன் என்பவர் இப்பொழுது கப்பலில் வேலைசெய்பவர். முருகனுடைய சித்திரப் பெருந்தேருக்கு ஒரு மாதச் சம்பளத்தை அன்பளிப்புச் செய்ய வேண்டுமென்று நினைத்திருந்தார். ஆனால் அப்போது இரண்டாயிரம் ரூபாமட்டுமே செலுத்தியிருந்தார். கப்பலில் இருந்து திரும்பி வீட்டுக்கு வந்ததும் மீதியைக் கொடுக்கலாம் என்று எண்ணியிருந்தார். ஆனால் கப்பலில் இருந்து வீட்டுக்கு வந்தபின் திருப்பணிக்குக் கொடுக்கவேண்டிய மீதிப்பணத்தைக் கொடாது எனது தம்பியாருடன் கூட்டாகச் சேர்ந்து தனது

பணம் ரூ 12000/- போட்டு ரூபா 22000/- க்கு ஒரு மோட்டோர் சைக்கிள் வாங்கி முதன்முதல் சந்நிதியான் ஆலயத்திற்குக் கொண்டுவந்தார். மோட்டார் சாவியைப் பூசையில் வைப்பித்து ஐயரிடம் விபூதி, சந்தனம், புஷ்பம் என்பவற்றையும் சாவியையும் வாங்கிக்கொண்டு சைக்கிள் நின்ற இடத்திற் போய்ச் சாவியைப் பார்த்தபோது சாவியைக்காணவில்லை. சாவி தொலைந்துவிட்டதைப் பலமுறை ஒலிபெருக்கியிற் சொல்லியும் ஒரு பயனுமில்லாது போயிற்று. அன்று மாலை கோயில் ஐயர் யாரோ ஒருவர் அச்சாவியைக் கண்டெடுத்துக் கொண்டுவந்து கொடுத்ததாகக் கூறிக் கொடுத்தார். சாவி தொலைந்தது மனதை உறுத்தியமையால் முருகனுக்கு வாக்களித்தபடி சித்திரத் தேருக்குப் பணம் கொடாமல் இவர் மோட்டார் சைக்கிள் ஓடித்திரிவதா என்று கோபித்துக் கொண்டார் என்று எண்ணி உடனே மோட்டார் சைக்கிளை விற்றுத் தேர்த்திப்பணிக்குக் கொடுத்துவிட்டார். வேண்டுவார் வேண்டுவன வாரி வழங்கும் வள்ளல் தனக்கு வரவேண்டிய தைத் தட்டிப்பறிக்கும் திருவிளையாடல்கள்; இங்கு கூறப்பட்ட மகேஸ்வரி, ரவி என்பவர்களின் நேரனுபவங் களிலிருந்து தெளிவாகின்றதல்லவா?"

"வேண்டுவார் வினைதீர்க்கும் வேலவன் தமது அடியார்களுக்கு வரும் துயரை வேறு அன்பர்களிடம் சொல்லித் துயர்களைந்த நிகழ்ச்சிகள் பலவுண்டு. செல்வச் சந்நிதியான் ஆலயத்தில் இரண்டு கண்களும் ஒளி இழந்தவரும், கற்பூரம் விற்றுச் சீவனம் செய்பவருமான கந்தசாமி என்னும் அன்பரை எல்லோரும் அறிவர். காலஞ்சென்ற என். எம். பெரேரா என்பவர் நிதி மந்திரியாக இருந்த காலத்தில் ஐம்பது, நூறு ரூபா நோட்டுக்கள் செல்லாதாக்கப்பட்டன. அப்போது ஏழைகளுக்கு வழங்கப் பட்ட பிச்சைச் சம்பள அட்டையில் ரூபா 1000/- மாற்றியவர் களுக்கு அச் சம்பளத்தை நிறுத்துமாறு ஆணை பிறப்பிக்கப் பட்டது. இதிற் கந்தசாமியும் பாதிக்கப்பட்டார். கவலை மேம்பட முருகனை நினைத்து அவனையே தஞ்சம் என மனம் உருகி வழிபட்டார். எழைபங்காளன் அடியவர்க் கடியான் தமது அடியவன் துயருற விடுவாரா? பருத்தித்துறைப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு.க.துரைரத்தினம் அவர்கள் அதிகாலை 5.40 மணியளவில் ஒரு கனவு கண்டார். ஒரு மரம்

அதனடியில் ஒரு விளக்கு அதற்கு அண்மையில் ஒரு சிறுவனும், அவனது பக்கம் ஒரு பெண்ணும் கவலை தோய்ந்த முகங்களுடன் இருக்கின்றனர். திரு.துரைரத்தினம் அவர்கள், அவ்விருவர் மீதும் பரிதாபப்படுகின்றார். அப்பொழுது "தொடர்ந்தும் ஏழைகளுக்குச் சேவி" என்று ஒரு குரல் கேட்கின்றது. விடிந்ததும் கந்தசாமியும் அவரது தாயாரும் திரு.துரைரத்தினம் அவர்களிடம் சென்றார்கள். திரு.துரைரத் தினம் தான் கண்ட கனவை அவர்களிடம் கூறித் தன்னாலி யன்றவரை உதவி செய்வதாக ஆறுதல் கூறி, அவர்களை அனுப்பிவிட்டார்கள். அவர்கள் இதுவும் முருகன் திருவிளையாடல் என்று உளம் பூரித்துச் சென்றனர். திரு. துரைரத்தினம் அவர்கள் கொழும்புக்குச் சென்றபோது முதல் காரியமாக நிதிமந்திரி அவர்களைக் கண்டு அவருக்கு வேண்டிய விளக்கம் கொடுத்து மீண்டும் உதவிப்பணத்தைப் பெற்றுக் கொடுத்தார். அவனே தஞ்சம் என்று அடைபவர்களை என்றும் முருகன் கைவிடமாட்டான் என்பது இதிலிருந்து தெரிகிற தல்லவா?"

"வற்றாத ஆறாய் வருவோர்க்கெல்லாம் வாரிவழங்கும் வள்ளல் கனவில் மட்டுந்தானா வந்து உதவுவார்? இல்லை; நேரிலும் வந்து தமது அன்பர்களுக்கு உதவுவான் என்பதைக் கீழ்வரும் திருவிளையாடல் அறியத்தருகின்றது. "தற்போது நைஜீரியா வில் பொலிரெக்னிக் கல்லூரி அதிபராக இருக்கும் இவ்வூரைச் சேர்ந்த பொறியியலாளர் ஞானேஸ்வரன் என்பவர் தமது சிறுவயதில் முருகனுக்கு பூ எடுக்கும் தொண்டனாகச் சேவை செய்து வந்தார். அவர் கூறக்கேட்டது. பூ எடுப்பவர்கள் பகலிலும் சரி இரவிலும் சரி; திருவிழா முடிந்த பின்தான் உணவு உண்பது வழக்கம். ஒரு முறை திருவிழாக்காலம். ஓர் உற்சவம் முடிய இரவு ஒரு மணிக்கு மேலாகிவிட்டது. சிறு பையனல்லவா. பழைய தேர்முட்டிப் படியில் கதவைச் சாத்திவிட்டு நித்திரையாகிவிட்டான். திருவிழா நடந்ததோ, சுற்றி வரும்பொழுது எச்சரிக்கை பாடியதோ இவருக்குத் தெரியாது. திருவிழா முடிந்ததும் பூ எடுக்கும் பழைய தொண்டன் சிவசாமி அவர்கள், சிலநேரங்களில், சாதங்கறி குழைத்துக் கொடுப்பது வழக்கம். ஆழ்ந்தநித்திரையிலிருந்த ஞானேஸ்வரனை "எழுந்து சாப்பாட்டுக்கு வா" என்று

சொல்லிச் சிவசாமியை அழைத்துச் சென்றார். இவர் நித்திரைத் தூக்கத்தில் கண்ணைக் கசச்சிக்கொண்டுபோய்ப் பார்க்க சாப்பாடு கொடுக்கும் இடத்தில் தொண்டன் சிவசாமி பூக்காரத் தொண்டர்களுக்காகச் சாப்பாடு கொடுத்துக்கொண்டு நின்றார். அப்போது நான் அவரை நோக்கி "என்னை நித்திரையி லெழுப் பிக் கூட்டிவந்தது நீங்கள்தானே? அதற்கிடையில் எப்படி இங்குவந்து சாப்பாடு கொடுக்கிறீர்கள்" என்று கேட்க அவர் திகைத்து "நான் உன்னை வ:ந்து எழுப்பவில்லையே" என்று கூறி ஆச்சரியத்துடன் என்னைப் பார்த்தார். அப்பொழுதுதான் இது முருகனின் திருவிளையாடல் என்று நினைந்து மனம் உருகினேன். சிறு பையன் பசி பொறுக்கமாட்டான் என்று எவ்வளவு அக்கறையோடு நித்திரையிலிருந்து எழுப்பிச் சாப்பாடு கொடுத்துள்ளார். அப்படியே அவர் அக்கறை காட்டிய திருவருளினால்போலும் ஞானேஸ்வரன் இன்று உயர்நிலையில் சிறந்து விளங்குகின்றார். அவன் அருளே அருள்."

"முருகனுக்குச் சில பக்தர்கள் ஆண்டுத் திருவிழாக்கள் தொடங்குவதற்கு எட்டு நாட்களுக்கு முன் வீடுகளைச் சுத்தம் செய்து கழுவி; மாமிச உணவுகளை ஒழித்து விரதமிருந்து; பெருமானுக்கு ஆண்கள் பூ எடுப்பதும், பெண் பிள்ளைகள் தீபம் எடுப்பதும் தெய்வத்தொண்டாக நிகழ்ந்து வருகின்றது. பூ எடுக்கும் தொண்டர்களைப் 'பூ எடுப்பவர்' என்று அழைப்பது வழக்கம். இத்தொண்டர்களுடன் முருகன் விளையாடுவதும், அவர்களுக்கு ஏற்படும் குறைகளைத் தீர்ப்பதும், அவர்கள் பிழையான வழியில் செல்லுங்கால் அவர்களை நேர்வழியில் திருந்தி நடக்கச் செய்வதும் இங்கு நடைபெறும் சாதாரண நிகழ்ச்சிகளாகும். எனது சிற்றப்பா மலேசியாவில் தொழில் பார்ப்பவர். "நீ திருவிழாவுக்கு வா" என்று முருகன் அழைக்க; சித்திரத் தேரில் வேலவனைக் காணவேண்டும் என்ற ஆவலால் இவ்விடம் வந்திருக்கின்றார். அவர் சொல்லக் கேட்டது: **1922**ஆம் ஆண்டு நான் பூ எடுக்கும் தொண்டனாக இருந்த தேன். அப்பொழுது பூ எடுப்பவர்கள் சாப்பிடுவதற்கு வாழையிலை, வாழைமடல் இல்லாது போய்விட்டது. இதை அறிந்த வேலவன் நீர்வேலியில் உள்ள வாழைத் தோட்டம் வைத்திருக்கும் ஓர் அன்பரிடம் சென்று தெரிவித்தார்.

அவ்வன்பரும் உடனே ஒரு வண்டி நிறைய வாழைத்தடல்கள் கொண்டு வந்து, பூ எடுப்பவர்கள் சாப்பிட இலைகள், தடல்கள் இல்லையென்று முருகன் தன்னிடம் கனவில் சொல்லியதாகக் கூறி, வாழைத்தடல்களைக் கோயில் அதிகாரிகளிடம் கொடுத்துச் சென்றார். வேறொரு சமயம் பூ எடுக்கும் தொண்டர்கள் தீர்த்தக் குளத்தை இறைத்துச் சுத்தம் செய்யும் பொழுது 27 சதம் அக்குளத்தில் கண்டெடுத்து அதைத் தாங்களே தங்கள் செலவுக்கு எடுத்துக்கொண்டார்கள். மறுநாள் அவர்கள் மந்துவிலுக்குப் பூ எடுக்கச் சென்று அங்கே படுத்திருக்கும்போது ஒருவர் எழுந்து "எங்கே எனது 27 சதம்? அதைக்கொண்டு வந்துதா!" என்று உருவந்து சொல்ல; அந்த 27 சதம் மறுநாள் உண்டியலிற் சேர்க்கப்பட்டது. பூ எடுக்கும் தொண்டர் இரத்தினம் (இவ்வூரைச் சேர்ந்தவர்) கூறியது: "பூ எடுப்பவர்களுக்குச் சரவணமுத்து என்பவர் தலைவராக இருந்த காலம் ஒருநாள் நடுச்சாமத்தில் நானும் சரவணமுத்துவும் சிறுநீர் கழித்து, கைகால் அலம்பி வருவோம் என்று நாகதம்பிரான் ஆலயத்திற்குப் பின்னால் வரும் வாசலால் போவதற்கு வரும் பொழுது, யாரோ ஒருவர் அந்த வாசலிலிருந்து சிறு நீர் கழிப்பதைக் கண்டு மிகவும் கோபம் கொண்டு அவரை ஏசி அனுப்பிவிட்டார்கள். பின் இவர்கள் இருவரும் தம் கடனைமுடித்துக் கொண்டு திரும்பிவந்து படுத்திருக்கும்போது சரவணமுத்துவின் கனவில் முருகன் தோன்றி "நீவந்த வேலையைச் சரியாகச்செய், அவனுடைய நன்மை தீமைகளை நான் பார்த்துக்கொள்வேன்." என்று சொல்லி மறைந்தருளினார். யாராக இருந்தாலும் முருகனிடம் வருபவர்கள் தத்தம் கடமைகளைச் சரியாகச் செய்து திரும்புவதல்லாமல் கோயிலடியில் பிறவேலைகளில் அனாவசியமாக ஈடுபட்டு முகாமைத்தனம் செய்வது முருகனுக்குப் பிடிக்காத காரியம் என்பது இத்தால் தெரிகின்றதல்லவா?"

"பருத்தித்துறை, தும்பளையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை முருகேசு என்பவர் (தற்பொழுது முருகேசு சாமியார் என்று அழைக்கப்படுவர்) பூர்வ ஜென்மத்தில் (பூர்வ ஜென்மம் என்று எழுதுவது எதனாலென்றால் இப்பொழுது இருப்பது மறுபிறவி போலும்) மதவாச்சி என்னும் இடத்தில் பெரியகடை, ரெலிபோன் இல. 807 என்றெல்லாம் வைத்துச் சகல

வசதிகளுடனும் வாழ்ந்துவந்தவர். 1960ஆம் ஆண்டு அவருக்கு வயிற்றில் நோய் உண்டாகி யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி யில் காட்டியபொழுது அவரைப் பரிசோதனை செய்த வைத்தியர்கள் இது புற்றுநோய், மகறகம ஆஸ்பத்திரியில் கொண்டுபோய்க் காட்டும்படி கடிதமும் கொடுத்து விட்டார்கள். மகறகம ஆஸ்பத்தியிலும் வேண்டிய சோதனை கள் எல்லாம் செய்தும் புற்றுநோய்தானென்று கூறி, சத்திர சிகிச்சை செய்யவேண்டுமென்றும், காந்தம் பிடிக்க வேண்டு மென்றும் திகதி குறிப்பிட்டு மருந்து கொடுத்து அனுப்பி விட்டார்கள். நோயாளிக்கு வயிறு ஊதி, வீங்கி முட்டுவைத்து ஒன்றும் சாப்பிடவோ குடிக்கவோ முடியாத நிலை உண்டாகிவிட்டது. அப்பொழுது அவருடைய நண்பர் ஒருவர் (அளவெட்டி வடக்கு அருளம்பலம் கந்தையா) முருகேசுவைத் தனது இல்லத்தில் வைத்திருந்து தெல்லிப்பளை வைத்தியசாலையில் முட்டுக்காகத் தற்காலிக வைத்தியம் செய்துவந்தார். ஒருநாள் நண்பர் கந்தையா "செல்வச் சந்திதிக்கு வாருங்கள்; அங்கு சந்நிதியானிடம் சொல்லி ஆறுதல் பெறுவோம்" என்று கூட்டிக்கொண்டு வந்து பெருமானைக் கும்பிடும் பொழுது ஒரு பெண் அடியார் இவரைப்பார்த்து "என்ன சுகமில்லாமல் வந்திருக்கிறாயா? நீ போய் புளியம் இலையை அவித்து அந்த நீருடன் ஆற்றங்கரையானின் திருநீறும் கலந்து நாளுக்கு ஒரு முறை வீதம், மூன்று நாட்களுக்குக் குடியுங்கள். எல்லாம் சரிவரும். முருகனுக்கு ஒரு வேண்டுதலும் வையுங்கள்." என்று சொல்ல; முருகேசு சாமியாரின் மனைவியார் "கோவில் வாசலில் வைத்து இந்நோய் குணமடைந்தால் இவர் முருகனுக்கே சொந்தம் என்றும், இன்று தொடக்கம் குடும்ப உறவு விட்டோம் என்றும், இனிமேல் இவர் எனது அன்புக்கும் வழிபாட்டிற்கும் உரிய குருபோலும்" என்று சொல்லிச் சத்தியம் செய்து, வேண்டுதல் வைத்தார். அத்துடன் தனது தாலியையும் விற்று அப்பணத்தை முருகனுக்கே அர்ப்பணிப்பதாகவும் கூறிச் சென்றார். அருளம்பலம் கந்தையா என்னும் நண்பர், சாமியாரைத் தனது வீட்டிற்குக் கூட்டிச் சென்று புளியமிலை அவித்து வேண்டுவார் வினை தீர்க்கும் வேலவனின் திருநீறும் கலந்து முதலாம் முறை குடிக்கக் கொடுத்தார். பத்துத்தரம் பச்சைக் கட்டிகட்டியாக வயிற்றால் கழிந்தது. அத்துடன் வீங்கிப் பொருமியிருந்த வயிறு பாதிக்குமேல் வற்றி விட்டது. இரண்டாம் நாள் குடித்தபோது

அதே மாதிரி ஆறுமுறை வயிற்றால் போனது. மூன்றாம் நாள் குடித்தபோது இரண்டு முறை போனதுடன் வயிற்று நோவு, வீக்கம், முட்டு எல்லாம் போய்ப் பூரணசுகம் ஏற்பட்டது."

"அதே ஆண்டு கதிர்காமத்திற்குப் பாதயாத்திரையாக கரையோரப் பாதையால் போக எண்ணிப் பொத்துவிலில் மாற்றக் கூடியதாக ஒரு தொகைப் பணத்தை அனுப்பிவிட்டு வேறும் பல அடியார்களுடன் நடந்து சென்றார். பொத்துவில் சென்றடைந்தபோது சனிக்கிழமை மாலையாகிவிட்டது. பணம் மாற்றிக்கொள்ள முடியாது போய்விட்டது. அடுத்தநாள் காட்டுப்பாதையில் யாத்திரையைத் தொடர இருந்ததால் பணம் மாற்றிக்கொள்ளாமலே பயணத்தைத் தொடர வேண்டிய தாயிற்று. செலவுக்குப் பணம் இல்லை. சமைத்துச் சாப்பிட அரிசி முதலியன இல்லை. மற்றைய அடியார்களிடம் எவ்வாறு கடமைப்படுவதென்று யோசித்தவண்ணம் இருக்க, ஒரு தம்பதிகள் வந்து, தாங்கள் தங்களுடைய பிள்ளைக்குக் கதிர்காமத்தில் முடியிறக்க நேர்த்தி வைத்ததாகவும், முதல்நாள் பெருமானார் கனவில் தோன்றிப் பாதயாத்திரையாக முருகேசு என்னும் அடியார் வருகின்றார் என்றும், அவரைக்கொண்டு முடி இறக்கி அவருக்கே தானங்களையும் கொடுக்கும்படியும், அப்படிச் செய்தால் அது தனக்குச் செய்ததற்கு சமமாகும் என்றும் சொல்லி அவ்வாறே முருகேசு அடியாரிடத்திலும் கூறியருளினார். முருகேசு சாமியார் என்றும் செய்யாத மயிர்வெட்டுந் தொழிலைச் செய்து, ஆறுகொத்து அரிசி, ஆறுதேங்காய்கள், புதுவேட்டி ஒன்றுந் தானமாகப் பெற்றார். அங்ஙனம் பெற்ற அரிசி தேங்காய் முதலிய சாமான்கள் அதிகமாக இருந்தபடியால் முருகேசு சாமியாரால் சுமந்து செல்ல முடியவில்லை. அப்பொழுது எங்கிருந்தோ ஒரு வேலைக்காரன் தான் தோட்டக்காட்டில் வசிப்பவனென்றும், சாமான்களைத் தான் சுமந்து வருவதாகவும், தனக்குச் சாப்பாடு தருமாறும் கூறிச், சாமான்களைச் சுமந்துகொண்டு சென்றான். வழியெல்லாம் அவ்வேலைக்காரன் மிகவும் பண்பாகவும் அன்பாகவும் பழகியதாகவும் அதனால் யாத்திரையால் மீண்டுவரும்போது அந்த வேலையாளைத் தங்களுடன் அழைத்துச் செல்லவேண்டுமென்று ஒவ்வொருவரும் தங்கள் மனதில் திட்டமிட்டிருந்தனர். அப்படியே எண்ணிக்கொண்டு செல்ல கதிர்காமம் சென்று மாணிக்க கங்கையில் நீராடி

பொங்கல் பொங்கி எல்லோரும் சாப்பிட்ட பின் அவ்வேலைக் காரன் நான் கதிர்காமத்திற்கு முன்னுக்குப் போகிறேன். நீங்கள் வாருங்கள் என்று சொல்லிப் போய் விட்டான். பின் அவ்வேலையாளைக் காணவேயில்லை. சாப்பாட்டுக்கு அரிசி தேங்காய் முதலியன இல்லையே என்றும் வாங்குவதற்குப் பணம் இல்லையே என்றும், இருந்தவேளை மூடிவெட்டும் வேலையைச் செய்வித்து அதற்குத் தெட்சணையாகச் சாமான்களைக் கொடுக்கச் செய்து, பின் அவற்றைச் சுமந்து செல்ல ஆள் இல்லையே என்று கவலைப்பட, தானே வேலைக்காரனாக வந்து தொண்டனுக்குத் தொண்டு செய்த ஆண்டவன் பெருமையை என்னென்று கூறுவது."

"மேற்கூறிய முருகேசுச் சாமியாருடன் ஆற்றங்கரை வேலவன் இடையிடையே விளையாடி வருவதுண்டு. 1979ஆம் ஆண்டு அடியார் மடத்தில் சனிசாந்தியின்போது ஒருநாள், விடியற்காலை தொண்டர்களக்கும் அடியார்களுக்கும் தேநீர் கொடுப்பதற்குச் சீனி இல்லாது போய்விட்டது. அப்போது ஒரு பெண் அடியார் மூன்று கொத்து அரிசியை நன்கு தீட்டிப் புடைத்துச் சுத்தம்செய்து கொண்டுவந்து அவ்வரிசியையும் சேர்த்து அவிக்கும்படி வேண்டினார். முருகேசுச் சாமியார் அதை வாங்கி அள்ளிப் பார்க்க அது அரிசியல்லாத ஏதோ மினுமினுப்புள்ள பொருளாகத் தெரிந்தது. அப்பொருளை வாயில் போட்டுப் பார்த்தபோது அது சீனிபோல் இனித்தது. அன்று முழுநாளும் அவ்வரிசிச் சீனியையே கலக்கி அங்கு வந்த அடியார்களுக்கும், அன்பர்களுக்கும் பானங்கள் கொடுக்கப் பட்டது."

1983ஆம் ஆண்டு சனி சாந்தியின்போது அடியார் மடத்தில் பத்துநாட்கள் அன்னதானம் வழங்கப்பட்டது. ஒரு தினம் 3 1/2 மூடை அன்னதானத்திற்கென்று வந்திருந்தது. ஆனால் பூசணிக்காயும் வெண்காயமும் மிளகாயும் மட்டும் இருந்தன. கறிக்கு காய் பிஞ்சுகள் வாங்கவதற்குப் பணம் இல்லையே என்று கவலையுடன் முருகேசுச் சாமியார் ஆற்றில் ஸ்நானம் செய்து வள்ளியம்மன் ஆலய வாசலில் உள்ள குளத்தருகே வரும்போது ஒரு அன்பர் 1000/- ரூபா கொடுத்து அன்னதானத்திற்குக் காய்கறி வாங்குவதற்கு என்று கூறிச் சென்றுள்ளார். அன்று

அன்னதானம் வெகு சிறப்பாக நடைபெற்றது. முருகேசுச் சாமியார் அடிக்கடி முரசுமோட்டைக்குச் சென்று வருவது வழக்கம். அங்கே மூன்றாம் கட்டையடியில் பொன்னம்பலம் என்னும் அன்பர் முருகேசுச் சாமியாரிடம் வந்து, ஒரு நல்ல தண்ணீருள்ள 'கிணற்று நிலையம்' எடுத்துத் தருமாறு வேண்டினார். "கிணற்று நிலையம் எடுக்க எனக்குத் தெரியாது. முருகன் திருக்குறிப்புக் காட்டினால் சொல்லுகிறேன்" என்று கூறி அன்றிரவு முருகனிடம் முறையிட்டுக் கொண்டார். முருகன் அவருக்குக் காட்டிய அக்குறிப்பின்படியே ஓர் இடத்தைக் காட்டி, அந்த இடத்தில் பதின்மூன்று முழம் வெட்டினால், நல்லநீர் கிடைக்குமென்று கூறினார். அப்படியே வெட்டியபோது சுற்றிவர உள்ள கிணறுகளில் உப்புத் தண்ணீராக இருக்க; இதில் நல்ல நீர் வருமென்ற சாமியாரின் கூற்றினை நம்பி 13 முழம் வெட்டினார்கள். ஆனால், நீர் கிடைப்பதற்குரிய அறிகுறிகளோ அல்லது ஈரக்கசிவோ இல்லாமல் கட்டாந் தரைபோல இருந்தது. வெட்டிய மண்வெட்டி முதலிய ஆயுதங்களை அப்படியே விட்டு விட்டுச் சாமியாரும், பொன்னம்பலமும் மிகவும் மன வருத்தத்துடன் முருகனை நினைந்து "ஏன் இப்படிக் காட்சி காட்டினாய்" என்று கூறிக்கொண்டே சந்நிதியை நோக்கிப் பயணமாயினர். அவர்கள் பஸ் ஏறியபின் அங்கிருந்தவர் மண்வெட்டி பிக்கான்களை எடுக்கச் சென்றபோது ஊற்றுஒன்று பாய்ந்து வந்தது. சுற்றாடலில் உள்ள எல்லாக் கிணறுகளும் உப்புத் தண்ணீராக இருக்க, அக்கிணறு மாத்திரம் நல்ல தண்ணீராக இன்றும் இருக்கிறது. முரசுமோட்டை மூன்றாம் கட்டையடி யில் பெருந் தெருவுக் கருகில் இக் கிணறு இருக்கிறது. இது அப்பகுதியில் உள்ளவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக விளங்குகிறது. வேலவனின் அருட்காட்சி என்றும் பிழை யாகுமோ."

"அடியார் மடத்தில் நடந்த புதுமைகளைச் சொல்லும்போது அம்மடத்தில் இருக்கும் நடராசா சாமியாரைப் பற்றி கூறாது விடுவது உசிதமல்ல. 1950ஆம் ஆண்டு மந்துவில் முருகர் நடராசா என்பவர் வேறு சில அன்பர்களுடன் நடை பாதையாகக் கதிர்காமம் போய், தாடியுடன் வீட்டுக்கு வந்தார். மனைவியார் கணவனின் கோலத்தைக் கண்டு "தாடியை

வெட்டிய பின் வீட்டிற்கு வா! இல்லையேல் வராதே" என்று சொல்லி அனுப்பிவிட்டார். நடராசா கவலையுடன் ஒரு கோயிலிற் போய்ப் படுத்திருந்தார். அப்பொழுது யாரோ ஒருவர் "வாருங்கள் சந்நிதிக்குப் போவோம்" என்று மூன்று முறை கூறிக்கூட்டி வந்தார். முக்கால் வழிதூரம் வந்ததும்கூட வந்தவர் "இந்த வழியால் போங்கள். நான் பூ எடுத்துக்கொண்டு வருகிறேன்" என்று சொல்லி மறைந்துவிட்டார். நடராசா சந்நிதி வந்து பதினைந்து நாட்கள் சந்நிதியிலுள்ள செல்லையா ஐயர் மடத்தில் தங்கியிருந்தார். சிலவேளை பட்டினி. சிலவேளை அங்கு நடைபெறும் அன்னதானச் சோறு இப்படியே நாட்கள் கழிந்தன. 15ஆம் நாள் அதிகாலை முருகப்பெருமான் அவருடைய கனவிலே தோன்றி "முன்னேஸ்வரம் வா. அதற்கு முன்பாக உன்னைக் கூட்டிப்போக வேலாயுதரின் செல்லையா வருவார்" என்று கூறி மறைந்தார். மறுநாள் செல்லையா என்பவர் இங்கு வந்து கூட்டிச் சென்றார். கனவில் முருகன் கூறியபடி தனது வீட்டிற்குச் சென்று மனைவியிடம் பிச்சை கொடுக்கும்படி கேட்க மனைவியார் கணவரை ஏசித் துரத்திவிட்டார். பின் சிலாபத்தில் வேலை செய்யும் ஒரு அன்பர் முன்னேஸ்வரம் செல்ல பிரயாணச் சீட்டு எடுத்துக் கொடுக்க முன்னேஸ்வரம் சென்று சுவாமி தரிசனம் செய்து மீண்டும் சந்நிதி வந்த சேர்ந்தார். செல்லையா ஐயர் மடத்திலிருந்த ஒரு குடும்பத்தினர் இவருக்கு இடையிடையே உணவு கொடுப்பது வழக்கம். அப்படி ஒரு நாள் வெள்ளிக் கிழமை ஒரு தட்டில் வழக்கம்போல உணவு கொடுக்கும்போது ஒருவர் வந்து "சாமியாருக்குத் தட்டிலேயா சாப்பாடு கொடுப்பது. திருவோட்டிலல்லவா கொடுக்க வேண்டும்." என்று சொல்லிப் போனார். அடுத்த ஞாயிற்றுக்கிழமை யாரோ ஒருவர் ஒரு திருவோட்டைக் கொண்டுவந்து ரூபா 4/-க்குக் கொடுத்துச் சென்றார். அன்று கொடுத்த திருவோடு "அட்சயபாத்திரம்" போல நடராசா சாமியாரிடம் இருக்கின்றது. 'அன்னதானக் கந்தன்' என்று சிறப்பாக அழைக்கப்படும் வேலவன் "ஒருவனுக்கு உணவு இல்லையெனில் ஜெகத்தினை அளித்திடு வோம்" என்ற பாரதியாரின் கூற்றுப்படி பசித்து வருவோர்க் கெல்லாம் உணவு வாரி வாரி வழங்கும் வள்ளலாக விளங்கு கின்றான். திருவோடு கொண்டு வந்து கொடுத்தவனும் அவ்வேலவன்தான் என்பதில் ஏதும் ஐயம் உண்டோ"

"ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை காலை தேர் வேலைக்காகக் கோவிலடிக்குப் போவோம் என்று அடியேன் புறப்பட, வல்வெட்டித்துறை ஆதி கோவிலடியைச் சேர்ந்த ஓர் அன்பன் என்னிடம் வந்து "கடலிலிருந்து ஒரு பெரிய வடம் கண்டெடுத்து வந்திருக்கிறார்கள். அதை வந்து பாருங்கள்" என்று அழைத்தார். அடியேன் அன்று மாலை வருவதாகக் கூறி முருகன் காரிய மாயிற்றே என்று எண்ணி உடனேயே தேர்த்திருப்பணி தலைமை ஸ்தபதியார் திரு.சோமலட்சுமணனையும் அழைத்துக்கொண்டு ஆதி கோவிலடிக்கச் சென்றேன். வட்டம் 8 அங்குலச் சுற்றுள்ளதாகவும் நீல நிறத்தில் பார்க்க அழகானதாகவும் இருந்தது. அப்பொழுது வடம் எடுத்துவந்த வள்ளச் சொந்தக்காரர் சிவகுரு நாராணசாமி வீட்டில் இல்லை. அவ் வீட்டிலிருந்தவர்கள் வள்ளத்தில் வாரத்திற்குப் போன தொழிலாளர்களுக்கு ஏதாவது பணம் கொடுக்க வேண்டுமென்றும் சொன்னார்கள். "எல்லாம் பார்த்துச் செய்யலாம். வடத்தைக் கோயிலுக்குக் கொண்டு வாருங்கள்" என்று கூறி, கொண்டுவருவதற்கு வாகனத்தையும் ஒழுங்குசெய்து திரும்பினோம். ஆனால், அன்று அவர்கள் அவ்வடத்தை எக்காரணத்தாலோ கொண்டு வரவில்லை. அன்றிரவு தொழிலுக்காக வடம் எடுத்து வந்தவர் வள்ளத்துடன் கடலுக்குச் சென்றபோது அவருடைய பத்தாயிரம் (10,000) பெறுமதி வாய்ந்த வலை, கயிறுகள் காணாமல் போய்விட்டன. ஒரு வாரமாகத் தேடியும் கிடைக்கவில்லை. பின் எட்டாம் நாள் அவ்வலைக்கயிறுகள் கிடைத்தன. அதன்பின் இது முருகனின் திருவிளையாடல் என்று எண்ணி அவ்வடத்தையும், கற்பூரமும் கொண்டுவந்து கொடுத்து முருகனை வணங்கிச் சென்றார். அவ்வடத்தைப் போல் புது வடம் வாங்க சுமார். U.S. டொலர் 10.000 வேண்டும். இலங்கை நாணயத்தில் ஏறக்குறைய 1,20,000 ரூபாவாகும். ஆற்றங்கரையான் தனது தேருக்கு வேண்டிய வடத்தை தேர்த்திருப்பணிச் சபையினர் பணம் கொடுத்தா வாங்கவேண்டும் என்பதற்காகப் போலும் பக்தன் நாராயண சாமியின் வலைக்கயிறுகளை எட்டு நாட்கள் மறைத்து வைத்திருந்தான். அவனடைய விளையாட்டே விளையாட்டு. இவ்வடம் கிடைத்தமை தேரில் ஒரு சிற்பமாகத் திகழ்கிறது."

" ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும், வேறு விசேஷதினங்களிலும் முருகனுக்கு ஒரு சில அன்பர்கள் பஜனை செய்வது வழக்கம். அதில் இன்பருட்டியைச் சேர்ந்த கதிரமலை என்னும் அன்பரும் உண்டு. அவ்வன்பர் கூறக்கேட்டதாவது: "ஒரு

வெள்ளிக்கிழமை பஜனை செய்து கொண்டிருந்தோம். அப்பொழுது ஒரு பெண் அடியாரும் ஒரு சிறுவனும் வந்து அதில் கலந்துகொண்டார்கள். அவர்கள் வந்த சிறு நேரத்துள் வேறொரு அன்பரும் வந்து அவர்களுடன் இருந்தார். அவ்வன்பர் 1977ஆம் ஆண்டுக் கலவரத்தில் அநுராதபுரத்தில் இருந்ததாகவும், அப்பொழுது அவருடன் இருந்தவர்கள் சிலரைச் சிங்களவர் வெட்டிக் கொலை செய்ததாகவும், தான் ஒரு அறைக்குள் ஓடி ஒளித்திருந்தாகவும், சந்நிதியானை நினைத்து 'முருகா எல்லாம் உன் செயல்" என்று கும்பிட்ட பொழுது இப்பொழுது பஜனை செய்து கொண்டிருப் பவர்களும், அந்த அம்மாவும் சிறு பையனும் உட்பட முருகன் சந்நிதி தெரிந்ததாகவும் பின் தான் ஒரு பாதிப்புக்குள்ளும் ஆளாகாமல் தப்பி வந்து இன்று முதன் முதல் இக்கோயிலக்கு வந்து பார்க்கும் பொழுது அன்று அங்கே கண்ட காட்சி அப்படியே தெரிந்தது என்று தெரிவித்தார். அந்த அம்மாவும் பையனும் ஒவ்வொரு பஜனைக்கும் வருகிறவர்களா என்று விசாரித்தார். பஜனை செய்பவர்களும் அன்றுதான் சிறிது நேரத்திற்கு முன் வந்ததாகத் தெரிவித்தனர். காக்கும் கடவுளாம் கல்லோடைக் கந்தன் உன்னைக் காப்பேன் என்று சொல்லாமல் தனது அருட்காட்சியை முன்கூட்டியே காட்டி அஞ்சேல் என்று அபய மளித்துள்ளார். அவரின் திருவிளையாடல் சொல்லத் தகுமா.

வேண்டுவார்க்கெல்லாம் வேண்டுவன வாரிவழங்கும் அருளைப் பெறுவது வெகுசுலபம். அரைகுறை மனதுடனல் லாமல் கள்ளமில்லாமுழுமனதுடன் நீயே தஞ்சம் என்று செல்வச் சந்நிதியடைந்தால் போதும், இவ்வுலகவாழ்வு சிறப்புற்று அமைவது மட்டுமல்லாமல் அவ்வுலக வாழ்வும் சிறந்து விளங்கும் என்பது திண்ணம்."

மேற்கண்ட அருட்காட்சிகள் ஆற்றங்கரையானிடம் அன்பு கொண்டவர் பெற்ற அநுபவங்கள். முருகனிடம் அசையாத நம்பிக்கை கொண்டு செய்யுந்தொழில் யாவும் அவனே என வாழ்ந்தவர் பலர். அருணகிரிநாதர் போன்ற அன்பர் வாழ்க்கை வரலாறுகளும் இதையே காட்டும். சந்நிதியில் சென்று முருகன் அருட்காட்சி பெற்றவரே இதை உணர்வர்.

**அடிக்குறிப்பு :**

1. *மா.க.ஆறுமுகசாமி ஐயர் - சித்திரப் பெருந்தேர் வெள்ளோட்டச் சிறப்பு மலர்.*

# 4

## மடங்களும் மக்களும்

ஆற்றங்கரையான் அமர்ந்திருக்கும் சூழலில் அமைந்த மடங்கள் வரலாற்றில் முக்கிய இடம் பெற்றவை. கோயிலின் தோற்றத்துடன் மடங்களின் தோற்றமும் சிறப்புடையது. கோபுரமில்லாத சந்நிதி. அதனைச் சூழ உள்ள மடங்களோ பல. அவற்றைப்பற்றிச் சற்று விரிவாகவே நோக்க வேண்டியுள்ளது. திரு.குல. சபாநாதன் சந்நிதியிலுள்ள மடங்கள் பற்றிப் பல தகவல்களைச் சேகரித்துள்ளார். அவர் எல்லாவற்றையும் மடங்கள் என்று கூறாது சிலவற்றைச் சத்திரங்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

> "மடமாவது பெரியோர்கள் இருந்துகொண்டு கல்வியறிவு ஒழுக்கத்தையும், சமயத்தையும் வளர்த்தற்குரிய இடமாகும். சத்திரமாவது ஞானிகள், துறவிகள் முதலிய பெரியோர்களுக்கும், தொழில் செய்து சீவனம் செய்யச் சக்தியில்லாதவர்களாகிய குருடர், முடவர், வியாதியாளர், வயோதிபர், சிறுபிள்ளைகள் என்பவர்களுக்கும், அன்னதானம் நடத்துதற்கும், வழிப்போக்கர் தங்குதற்கும் உரிய இடமாகும்."[1]

என இரண்டினது வேறுபாட்டையும் நாவலர் பெருமான் நான்காம் பாலபாடத்திலே குறிப்பிட்டுள்ளார். மடம் என்ற சொல்லுக்குத் தமிழ்க் **கலைக்களஞ்சியம்:** முனிவர் வாழிடம், நைஷ்டிகப் பிரமச்சாரிகளும், சந்நியாசிகளுமான ஆசாரியர் வாழும் இடம், சத்திரம், சாவடி, கோயில், இடம் என்னும் பொருள்களைத் தந்துள்ளது. 2 சத்திரம் என்ற பொருள் பழைய காப்பியமான சிலப்பதிகாரத்திலேயே இடம்பெற்றுள்ளது என உரையாசிரியர் கருதுவர். சிலப்பதிகாரத்தில் வரும்[3] "புறநிலைக் கோட்டத்து புண்ணியத்தானம்" என்னும் அடியில் வருகின்ற 'புண்ணியதானம்' என்றதொடர் அன்னதானத்தையே குறிப்பதாகக் கருதுவர். இதனால் அரும்பதவுரையிலே "சத்திர முதலான அன்னசாலை" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தென்னகத்திலே நாயன்மார்களது காலத்திலே பல மடங்களும் சத்திரங்களும் இருந்தன. அவை சமயத்தை வளர்க்கும் பணியைச் செய்தன. கோயிலைச் சூழ உள்ள இடங்களிலே மடங்களும் சத்திரங்களும் அமைக்கப்பட்டன. அங்கு இறையன்பர்கள் தங்கிச் சென்றனர். அது போன்று ஈழத்திலும் சந்நிதியிலே பெருந்தொகையான மடங்கள் கட்டப்பட்டிருந்தன. ஏறக்குறைய 45 மடங்கள் இருந்துள்ளன. அவற்றை அண்டி 30 கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. கோயிலின் சூழல் கடற்றுறையாகவும் இருந்தமையால் மக்கள் போக்குவரவும் முற்காலத்தில் அதிகமாக இருந்திருக்கலாம். பறங்கியர் கோயிலை இடிக்க எண்ணியதற்கு இந்த மடங்களும் ஒருவகையில் காரணமாக இருந்திருக்கலாம். மக்கள் கூட்டமாகத் தங்கியிருந்து வழிபாடு செய்தமையால் சந்நிதி அந்நியர் கவனத்தில் அழிக்கப்பட வேண்டிய கோயிலாக இடம்பெற்றிருக்கவும் கூடும்.

கோயிலைச் சுற்றியுள்ள மடங்கள் எல்லாவற்றினதும் பெயரை இப்போது அறியமுடியவில்லை. அங்கிருந்த ஜெர்மன் சுவாமி மடம் பற்றிய குல.சபாநாதன் குறிப்பு வருமாறு:

> "கதிர்காமத்தில் சிறிதுகாலம் டாக்டர் அப்பாப்பிள்ளை மடத்திற்றங்கியிருந்த ஜெர்மன் சுவாமியும் (கௌரிபாலா) இலங்கை ஒரு சொட்டு இரத்தமும் சிந்தாமல் இலகுவில் சுதந்தரமளித்த சோல்பரி பிரவுவின் மகன் துறவு பூண்டு யானைக்குட்டிச் சுவாமி என்ற பெயர் பூண்டவரும், பாரத நாட்டினைச் சேர்ந்த துறவி நரிக்குட்டிச் சுவாமியும் "சும்மா இருக்க" வசதியான சூழலைத் தருவது சந்நிதியே எனக் கண்டு சிறு குடிசைகள் கட்டி வாழ்கிறார்கள். யான் சென்று ஜெர்மன் சுவாமியைத் தரிசித்தபொழுது, தாம் கட்டியுள்ள குடிசைகளில் சில நாட்கள் தங்கியிருக்குமாறு என்னிடம் கூறினார்கள். சைவசித்தாந்தத்தை நன்கு விளக்கும் நூலொன்று வண. ஸ்கொமன் என்னும் ஜெர்மனியப் பாதிரியார் ஒருவர் ஜெர்மனிய மொழியில் இயற்றியிருப்பதை முதன்முதல் அறிவித்தவர் ஜெர்மன் சுவாமியவர்களேயாவர். இந்நூலைக் கலைப்புலவர் தமது செலவில் பிறிதொரு ஜெர்மனிய அறிஞர் மூலம் மொழிபெயர்த்து வைத்திருப்பதாகவும் ஜெர்மன் சுவாமி கூறினார். இலங்கைப் பல்கலைக்கழகச் சட்டப்பீடப் பேராசிரியர் திரு. த. நடராசா அவர்களும் இந்நூலை அச்சிடுவது சிறந்த சமயத்தொண்டாகும் என என்னிடம் ஒருமுறை கூறினார். எனவே, ஆங்கிலேயரும் ஜெர்மனியரும் கூடச் சந்நிதி முருகன் சந்நிதியில் ஆச்சிரமம் அமைத்திருப்பது குறிப்பிடத்தக்கது."

இக்குறிப்பின்மூலம் சந்நிதியின் மடங்களின் வரலாற்றிலே பிற நாட்டார் முருகன்மீது கொண்டிருந்த அன்பும் வெளிப்படுகிறது. ஆற்றங்கரையும், அமைதியான சூழலும் அவர்களை அங்கேயே தங்கச் செய்துவிட்டனபோலும். ஆரவாரமான மேல்நாட்டு அவசர வாழ்க்கையை வெறுத்து, ஆற்றங்கரையானின் சந்நிதியில் அவர்கள் அடைக்கலமாகியிருக்கவேண்டும்.

சந்நிதியிலே அமைந்திருந்த மடங்களில் அடியார்களுக்கு அன்னதானம் செய்கின்ற நோக்குடன் சில மடங்கள் கட்டப் பட்டுள்ளன. சடைவரதசுவாமிகளால் செல்வச் சந்நிதியிலே ஆரம்பித்து வைக்கப்பட்ட மடம் தொண்டர் மடம் அல்லது அடியார் மடம் என்றழைக்கப்பட்டது. இது சந்நிதி கோயிலுக்கு கிழக்குத் திசையிலுள்ளது. இந்த சடைவரதர் யாரென்பதை ஆராயின் அவர் கடையிற் சுவாமி பரம்பரையைச் சேர்ந்தவரென அறியமுடிகின்றது. அவருக்கு அவருடைய அருட்குருவால் வழங்கப்பட்ட பெயரே சடைவரதர் என்பது. அவருடைய கருணைபொலிந்த தோற்றமும், சிறந்த சடையழகும் காண்பவர் உள்ளத்தைக் கவர்வன. அவருடைய சாதுரியமான வாக்கு எல்லோருடைய மனத்திலும் பசுமரத் தாணிபோலப் பதியக் கூடியது. அவர் துறவியாயிருந்தாலும் அவருடைய சீடர்கள் சிலர் குடும்பஸ்தராயிருந்தனர். அவரது தயவான குணம் சீடர்பலரையும் கவர்ந்தது. "எல்லாம் இறைவன் செயலே" என்ற கோட்பாட்டையே எக்காலமும், எக்காரியத்திலும் கடைப்பிடித்து, அருளால் அனைத்தையும் பார்க்கும் அநுபவத்தை அனைவரும் அடையவேண்டு மென்பதே அவர் காட்டியவழி.

இவர் அன்பர் பொன்னையா (ஏழாலை)வை 'அருளானந்தம்' என்றும், குல சபாநாதனை 'கருணானந்தம் என்றும் அழைத்துவந்தார். இவர் ஏகாலியர் குலத்தவராதலால் பொதுவாக அவரை எல்லோரும் 'வண்ணாரச்சாமி' என அழைத்தனர். இவருக்கு சங்கீதம், நாட்டியம், மிருதங்கம் என்பவற்றிலும் ஈடுபாடிருந்தது. இதனால் அவரைப் பலர் போலிச் சாமியார் என்று இகழ்ந்து பேசுவதும் உண்டு. சைவசமயவரலாற்றிலே பல அடியார்கள் குறைந்த சாதியிலே பிறந்தவர்களாயினும் இறைவன்மீது கொண்டிருந்த பேரன்பினாற் பலரை நல்வழிப்படுத்தி நன்னிலை அடைந்துள்ளனர். அத்தகைய அன்பர்களுள்ளே திருக்குறிப்புத் தொண்டர் நாயனார் வண்ணார் குலத்தைச் சார்ந்தவர். அறுபத்துமூன்று நாயன்மார்களுள் திருநீலகண்டர் குயவர், கண்ணப்பர் வேடர், ஆனாயர், திருமூலர் இடையர், அதிபத்தர் பரதவர், நேசநாயனார் சாலியர், திருநீலகண்ட யாழ்ப்பாணர் பாணர்,

நந்தனார் புலையர், ஏனாதி நாயனார் ஈழவர்குலம், சாண்டார், சிறுத்தொண்டர் மாமத்திரர். இதைப் பார்க்கும்போது சந்நிதி அடியார் மடத்தை அமைத்த சடைவரதரும் இவர்கள் வழிநின்று பெருந்தொண்டு புரிந்தவராகிறார்.

சந்நிதியிலே ஒவ்வொரு சாதியினருக்கும் வேறு வேறாக மடங்கள் இருந்துள்ளன. இவற்றைச் சாதி அடிப்படையிலே வைத்து நோக்குவது பொருத்தமற்றது. சாதியமைப்பை மீறிய வழிபாட்டைப் பேணுகின்ற ஆற்றங்கரையானின் சந்நிதியில் சாதி பேணப்படுவது சாத்தியமாகாது. குறிப்பிட்ட பிரதேசத்தவர்கள், அன்பர்கள் தங்குவதற்கென மடங்களை அமைத்துவிடப் பின்னால் வந்து அவற்றைக் கட்டியவர்களின் வரலாறு தேடியவர்கள் சாதியையும் அந்த மடங்களோடு இணைத்துவிட்டிருக்க வேண்டும். சாதி என்ற அரக்கன் யாழ்ப்பாணத்திலே தாண்டவமாடிய காலமும்உண்டு. அப்போது 'ஆலயப் பிரவேசம்' என்ற நிகழ்வையும் சில அறிவாளிகள் முன்னின்று நடத்தினர். சாதி பேணியவர் ஆலயங்களிலே ஒரு குறிப்பிட்ட இடத்தைக் கோடுபோட்டுக் காட்டி அதனுள் யாருமே போகக் கூடாதென்றும் கட்டுப்பாடு விதித்தனர். சந்நிதி கோயிலும்கூட இதனை நடைமுறைப்படுத்தத் தவறவில்லை. இப்போராட்டக் காலத்தில் சந்நிதியில் அமைந்த மடங்களும் சாதிச்சுட்டுப் பெயரைப் பெற்றிருக்க வேண்டும். இப்போராட்ட நிலையை ஆற்றங்கரையானின் அன்னதான மடங்களும் கூட அநுபவப்பட்டுள்ளன. தொழில் நிலையால் வேறுபட்டவர்கள் அன்பு நிலையால் ஒன்றுபட்டவரே என்பதைக் காட்டும் ஆற்றங்கரையான் பூஜை மரபு. அன்பு நிலையால் இறைவனை அணுக அவரவர் அறிந்த மொழியே போதும். மந்திரச் சொற்கள் வேண்டாம். அன்னதானக் கந்தன் எனச் சிறப்பான அடைமொழி பெற்ற ஆற்றங்கரையான் மடங்கள் அமைந்த நோக்கத்தையுணர்த்தவே அந்த அடைமொழியையும் பெற்று விளங்குகிறான்.

ஆற்றங்கரையிலே இன்றும் எல்லோருக்கும் பொதுவாக விளங்கும் மடமாக ஆனந்தா ஆசிரமம் விளங்குகின்றது. பொநிலையை விளக்கப் போலும் அது மடம் என்று அழைக்கப்படுவதில்லை. தென்னஞ் சோலையின் நடுவே 'ஆனந்தாச்சிரமம்' எனப் பெயர்பொறிக்கப்பட்ட கட்டடம் அமைந்துள்ளது. அங்கு வீசும் குளிர்ந்த தென்றலும், அங்குள்ள சுவாமியாரின் அன்பான மொழிகளும், அவரின் சோதரியார் படைக்கும் அன்னமும், வழிநடந்த களைப்பாலும், உள்ளத்துயராலும் வாடிச் செல்லும் அன்பர்களுக்குப் புத்துணர்ச்சியூட்டுகின்றன. இந்த ஆச்சிரமத்தை ஆரம்பித்த மயில்வாகனம் சுவாமிகளே நல்ல முறையில்

நடத்தி வந்தார்கள். யாழ் நகரிலே வர்த்தகமூலம் பெரும் பணம் பெற்று வந்தவர். 1936ஆம் ஆண்டளவில் துறவு பூண்டு, ஊர் ஊராக யாத்திரை செய்து, சந்நிதியை அடைந்து, அங்குள்ள காடுகளில் இரவுபகலாகத் திரிந்து வந்தார். பின்னர் அடிக்கடி திருவண்ணாமலைக்கும் சென்று வருவது வழக்கம்.

இரமண மகாரிஷி வீற்றிருந்த மடத்துக்குச் சென்று அவருடைய சந்நிதானத்திலே இருப்பதையே பெரும் பேறாக எண்ணிச் சிலகாலம் அங்கே இருந்தார். மயில்வாகனச் சுவாமிக்குத் தீட்சை செய்த இரமணமகாரிஷி "நீ எங்கிருந்து வந்தாயோ அங்கேயே போய்த் தொண்டு செய்" என்று கூறினார். குருவின் வாக்கைத் தட்ட முடியாமல் 1939 ஆம் ஆண்டு மயில்வாகன சுவாமிகள் சந்நிதிக்கு வந்து சேர்ந்தார். முருகன் கோயிலுக்குத் தென்புறத்தில் காடாய்க் கிடந்த நிலத்திலே அடியார்கள் தங்குவதற்கும் தாம் பூசை செய்து தங்குவதற்குமாக ஒரு சிறு கொட்டிலை 1940 ஆம் ஆண்டு ஆடி மாதம் 20 ஆம் திகதி கட்டினார். ஒரு சிறு அறையும் ஓலைக் கூரையும் கொண்டதாகவே ஆச்சிரமம் ஆரம்பத்தில் அமைக்கப்பெற்றது. ஆச்சிரமத்திற்கு வந்து போகும் அன்பர்கள் சிறிது சிறிதாக அதனை விஸ்தரித்தனர்.

இந்த ஆச்சிரமத்திற்குத் துறவிகளும் அன்பர்களும் அடிக்கடி வருவது வழக்கம். கண்டிலிருந்து "பீர்பாவா" என்னும் முஸ்லீம் துறவி ஒருமுறை இந்த ஆச்சிரமத்திற்கு வந்தார். அதனை நல்ல முறையில் மயில்வாகனம் சுவாமிகள் நடத்துவதைக் கண்டு ஆனந்தப்பட்டு "இந்த இடம் மிகவும் ஆனந்தமாக இருக்கிறது" என்று ஆசி கூறினார். அன்று முதலாக இந்த ஆச்சிரமம் "ஆனந்தாச்சிரமம்' என்ற பெயருடனேயே தொண்டாற்றி வருகின்றது. மயில்வாகனம் சுவாமிகள் இந்த ஆச்சிரமத்தை வெறும் அன்னதான மடமாக, சோறுண்ணும் இடமாக நடத்தவில்லை. உடலும் உயிரும் உணர்வும் பெறும் வகையில் பஜனைகளும், கூட்டுப் பிரார்த்தனைகளும், பிரசங்கங்களும் ஒழுங்கு செய்து தூய்மையான எண்ணங்கள் அலைவீசும் ஆச்சிரமமாக நடத்தினார்கள். நால்வர் குருபூசைகள் சிறப்பாக நடைபெற்றன. ஆண்டுதோறும் இரமணாச்சிரமத்திற்கும் நன்றியுடன் காணிக்கை செலுத்தப்பட்டது. ஆரம்பத்தில் கட்டிய சிறு அறை இப்போது பூசை அறையாக விளங்கிறது. இதனைச்சூழ நாலா பக்கமும் மண்டபங்கள் கட்டப்பட்டுள்ளன. சிறு கொட்டிலாக ஆரம்பிக்கப்பெற்ற ஆச்சிரமம் தற்போது நூற்றுக்கணக்கான அன்பர்கள் தங்குமிடமாக வளர்ந்து விட்டது.

மயில்வாகனம் சுவாமியார் அன்பு வழியைக்காட்ட, அவர் சகோதரி இராசம்மா அன்பர்களுக்கு அன்னம் அளிக்கும் பொறுப்பை ஏற்றிருந்தார். இராசம்மையார் கணவனையிழந்தவர். ஒரே மகனும் துறவு பூண்டு புறப்பட்டுச் சென்றுவிட, சகோதரனுடன் சேர்ந்து இத்தொண்டிலே ஈடுபட்டார். இவர் வருவதற்கு முன்பு முருகர் அம்மா என்ற அம்மையாரே அமுது படைக்கும் தொண்டினைச் செய்து வந்தார். ஆனந்தாச்சிரமமே சந்நிதி கோவிலிலுள்ள மடங்களிலே பலராலும் அறியப்பட்ட புகழ் உடையது.

ஏனைய மடங்களும் முன்னர் அன்பர்கள் பலர் வந்து தங்கிச் செல்லுமளவுக்கு விசாலமானவையாகவே இருந்தன. இன்று பல மடங்கள் சிதைந்த நிலையிலுள்ளன. அவற்றைத் திருப்பிக் கட்டுவதற்குப் பெருந்தொகையான பணம் தேவை. அண்மைக்கால அசம்பாவிதச் சம்பவங்களால் மடங்களிலே வசித்த அன்பர்களில் ஏறக்குறையப் பதினைந்துபேர் துப்பாக்கிச் சூட்டிற்கு ஆளாகி இறந்துள்ளனர். இலங்கை இராணுவத்தின் தாக்குதலாற் பல கட்டடங்கள் சேதமடைந்துள்ளன. மானிட அரக்கர்களின் அசுரப்போராட்டம் ஆற்றங்கரையானின் அழகுச் சூழலை அலங்கோலப்படுத்திவிட்டது. அவன் அன்பர்களே மீண்டும் அதை ஆக்கவேண்டும். சூரனை அழித்த வீரவேல் சந்நிதி அன்பர்களின் துயர்களையும். மக்களை இப்போதாவது ஒன்று கூடி அன்னதானக் கந்தனின் அருளை நாடவேண்டும். அசையாத நம்பிக்கையுடன் ஆற்றங்கரையானின் சந்நிதியிலே அடைக்கலமாகிவிட்டால், யாவும் அவனே தருவான். மக்கள் அனைவரும் அன்புவழி ஒன்றே நல்லவழியென்று காணவேண்டும். யாழ்ப்பாணம் காலம் காலமாகக் காத்துவந்தவற்றை அழியாது பேண இளந் தலைமுறையினர் முன்வரவேண்டும். மடங்கள் யாவும் அவர் அயராத உழைப்பால் மீண்டும் ஆற்றங்கரையிலே புதிய கட்டடங்களாக அமைந்து பொலிய வேண்டும்.

> "தீராத நோய் தீர்க்கும் மருத்துவனாக சந்நிதியானைக் கொள்ளும் நம்பிக்கையும், அன்னதான நேர்த்திக்கடன் முறைமையும் இங்கு மடங்களின் தோற்றத்திற்கும் தொடர்ச்சிக்கும் காரணமாக அமைகின்ற தெனலாம். பல்வேறு ஊர்களைச் சேர்த்தவர்கள், பல்வேறு சாதிகளைச் சேர்ந்தவர்கள் மடங்களைக் கட்டி அவற்றின் நிருவாகத்துக்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்துள்ளனர். பூசகர் குடும்பங்களைத் தவிர இங்கு நிலையான ஒரு சனத்தொகை காணப்படுவதற்கும் மடங்களே காரணமாகும். தத்தம் குடும்பங்களிருந்து பிரிந்தவர்களும், பிரிக்கப்பட்டவர்களும் மடங்களைத் தமது

வதிவிடமாகக் கொண்டிருந்தமை ஒரு முக்கியமான உண்மையாகும்."[4]

மேற்கண்ட குறிப்பு, சந்நிதி கோயிலின் மடங்களின் தோற்றம், வளர்ச்சிபற்றிய நிலையை ஆய்வுநிலையாக ஆக்குவதாயுள்ளது. சந்நிதிகோயில் அமைந்துள்ள சூழலே அங்கு மடங்கள் நிறைய அமைவதற்கு முக்கிய காரணமாகும். இன்னும் போக்குவரவு வசதிக்குறைவாக இருந்த காலப்பகுதியிலே சந்நிதி மக்களிடையே முக்கியத்துவமான ஒரு வழிபாட்டுத்தலமாக அமைந்திருந்தது. நீண்ட தூரம் கால்நடையாக வருவோர் இரண்டொரு நாட்கள் கோயிலிலே தங்கிப்போகவேண்டியதும் அவசியம். 'கதிர்காமம் அனுப்பும்' சடங்கும் மடங்களின் பெருக்கத்தை விளக்கும். கதிர்காமம் செல்லும் அன்பர் ஆற்றங்கரையானிடம் வந்து அவனுடன் இணைந்தே கதிர்காமம் சென்றனர். திரும்பி வரும்போதும் அவ்வாறு சந்நிதியில் வந்து தங்கி இளைப்பாறியே தத்தம் ஊர்களுக்குச் சென்றனர். கதிர்காமப் பயணம் அக்காலத்தில் மிகவும் கஷ்டமான பயணமாகும். காட்டுப்பாதை வழியாகச் செல்லுவதால் பலர் கூடிச் செல்லுவதே பாதுகாப்பானதாகும். எனவே, எல்லோரும் சந்நிதிக்குவந்து "அடைப்பம் கட்டிச்" சென்றனர். அவ்வாறு சென்ற அன்பர்களது தொகை பெருந்தொகையாகவும் இருந்தது. வடமராட்சிப் பகுதியிலே வீட்டுக்கு ஒருவராவது வருடாவருடம் கதிர்காமம் பாதயாத்திரையாகப் போவது வழக்கம். அவ்வாறு வெவ்வேறு ஊர்களிலிருந்து வந்த அன்பர்கள் தங்கிநிற்க மடங்களையும் அமைத்தனர். அவர்களுக்கு உணவிடவேண்டிப் பலர் மடங்களிலே நிரந்தரமாகவும் தங்கினர். அன்னதானம் என்பது நேர்த்திக்கடன் என்ற நிலையிலும் சந்நிதியில் செய்யப்பட்டது. கதிர்காமம் போய்வந்தோரும் அன்னதானம் செய்யும் வழக்கமிருந்தது.

தீராத நோய்வாய்ப்பட்டோர் ஆற்றங்கரையிலே நாட்கணக்கில் தங்கிச் சென்றனர். முருகனின் 'மருந்தை' நாள் தோறும் உண்டு உடல் நலம் பெற்றனர். நவீன மருத்துவ வசதிகளற்ற காலத்தில் ஆற்றங்கரையானின் அமுதுதான் அருமருந்து. அதுவே நோயைக் குணமாக்கும் என்று அசையாத நம்பிக்கையும் மக்கள் கொண்டிருந்தனர். ஆற்றுநீர்க் குளிப்பும், சுத்தமான காற்றும், பரந்தவெளியும், நிறைந்த ஒளியும் உடல் நோயை மட்டுமன்றி உளநோயையும் மாற்றின. குடும்பத்தகராறு, காணித்தகராறு போன்ற பிரச்சினைகளால் உள்ளத்து அமைதிகுலைந்தவர்களும் சந்நிதி மடங்களிலே வந்து தங்கித் தமது பிரச்சனைகளை ஆர அமர யோசித்து நல்ல முடிவுகளைப் பெற்றனர். விரத நாட்களிலே வீடுகளைவிட மடங்களே அன்பர்களுக்கு

இறையுணர்வூட்டும் இல்லங்களாயின. முடிஇறக்கல், காதுகுத்தல், பால்பருக்கல், திருமணம் போன்ற சடங்குகளையும் சந்நிதியிலே வந்து செய்வதற்கும் தங்கிப்போவதற்கும் மடங்கள் அவசியமாயின.

மருந்துண்டு மனப்பிணி தீர்ந்தவர் வருடாவருடம் எங்கிருந்தாலும் ஆற்றங்கரையானிடம் ஓடிவருவார். மாட்டு வண்டியிலே வந்தகாலம் மாறிக் காற்றாய்ப் பறக்கும் கார்கள் வந்த பின்பும்கூட மடங்களிலே மக்கள் தங்கிச் செல்லவே விரும்பினர். சந்நிதியில் நடைபெறும் அன்னதானம் வெறும் உணவு பங்கிடும் நிகழ்வாக நடைபெறுவதன்று. கந்தசட்டி விரதம் 6 நாட்கள் பசித்திருந்து அன்பர்கள் முடிவுநாளிலே ஒன்றாயிருந்து உண்பது, பசிதீர்க்கும் பணியாக அன்றி மன உரத்தின் வளர்ச்சியைப் பகிரும் பணியாகவே யுள்ளது. "பசிவந்திடப் பத்தும் பறந்து போம்" என்ற மொழியினைப் பொய்யாக்கி 7 மிளகும் 7 மிடறு நீருமாக விரதமிருக்கும் மனவுரம் ஆற்றங்கரையானின் அருள் பருகுவார்க்கே கைகூடுவது. அச்சமயங்களில் மடங்களிலே தங்கியிருப்பர். எல்லோரும் ஒரு நிலையிலே ஒன்றுபட்டு முருகன் நினைவுதான் பொதுநினைவாக வாழ்வர். இந்த வாழ்க்கை நடைமுறையாகச் செயற்பட மடங்கள் மறைமுகமாக உதவின. 'மடத்திலிருத்தல்' என்ற வழக்கு மக்களிடையே ஆற்றங்கரையானோடு இருத்தல் என்ற நிலையிலே வழங்கப்பட்டு வருகிறது. மடங்களும் முருகன் சந்நிதிகளாகவே கொள்ளப்பட்டு வந்துள்ளன. 1965ஆம் ஆண்டு ஆவணிமாதம் 26ஆம் திகதி வீரகேசரிப் பத்திரிகையில் பின் வருங்குறிப்பு வெளிவந்துள்ளது.

**செல்வச் சந்நிதி நால்வர்:**

"உலகத்தின் பல பகுதிகளிலிருந்தும் இங்கு வந்து கூடியிருக்கும் சுவாமிகளால் சைவசமயத்தவர்களுக்குப் பெருமையும் புகழும் உண்டாகிறது. இவர்களில் நால்வர் செல்வச் சந்நிதிக் கந்தன்மேற் கொண்ட காதலினால் மயக்குண்டு அவ்விடமே வாசஞ் செய்கின்றனர்.

கௌரிபாலா என்றழைக்கப்படும் சுவாமி. இவர் ஜேர்மன் தேசத்தவர். இவர் சைவ சமய அடிப்படைக் கருத்துக்களை நன்கு தெரிந்துகொண்டு சமயப்பிரசாரமும் செய்து வருகின்றார்.

பெருமைப்படக்கூடிய மற்றொரு சுவாமி இலங்கையின் முன்னைநாள் கவர்னராகவிருந்த சோல்பரிப் பிரபுவின்

மகனாவார். இவரை ஆனைக்குட்டிச் சுவாமியென்று அழைப்பார்கள். இவரைப் பற்றி அறியாத சைவசமயத்தவர் ஒருவர்கூட இருக்கமாட்டார்கள் என்று கூறலாம். இவர் கௌரிபாலா சுவாமியவர்களின் தொடர்பால் சைவசமயத்தில் பற்றுக்கொண்டு துறவு பூண்டதாக அறிய முடிகின்றது.

இவர்களுள் ஆஸ்திரேலியா தேசத்தைச் சேர்ந்த நரிக்குட்டி என்றழைக்கப்படும் சுவாமியும் தென்னிந்தியாவைச் சேர்ந்த பன்றிக்குட்டி என்றழைக்கப்படும் சுவாமியும் இருக்கின்றனர். இவர்கள் தங்களுக்கெனத் தனித்தனியே அழகான சிறு குடிசைகள் அமைத்துக்கொண்டு அவற்றை மிகவும் சுத்தமாக வைத்து வாழ்கின்றனர். இக்குடிசைகள் கோவிலுக்குத் தென்புறமாகவுள்ள ஆனந்தாச்சிரம மடத்திற்கருகில் அமைந் துள்ளன. இவர்கள் நால்வரும் தங்களுக்குள் சைவ சமயத்தைப்பற்றிக் கலந்துரையாடியும் சைவ பக்தர்களோடு அன்புததும்பச் சம்பாக்ஷித்தும் சைவசமயப்பற்றை வளர்த்தும் வருகின்றனர்"

நோய் வாய்ப்பட்டு மடங்களில் வந்திருக்கும் மக்கள் நாளாந்தம் மாணிக்க கங்கை' என்னும் தீர்த்தக்குளத்து நீரிலே நீராடினால் நோய் குணமாகும் என நம்பினர். தொடர்ந்து 7 நாட்கள் தொண்டை மானாற்றிலே முழுகி எழுந்தால் நோய்கள் யாவும் தீரும் என்ற நம்பிக்கையும் மக்களிடையே இருந்தது. நோயாளர் மடங்களிலே தங்கியிருக்கும்போது அவர்களுக்குத் தேவையான உடல் ஓய்வும், உள ஓய்வும் கிடைக்கக் கூடியதாகவிருந்தது. பார்வையாளர் தொந்தரவின்றிப் படுக்கமுடிந்தது. காலை, மதியம், மாலை என மூன்று வேளையும் ஆற்றங்கரையானைத் தரிசித்து அவனருள் பெற்றுப் பலர் நோய் குணமாகினர்.

மடத்திலே தங்கியிருந்த அன்பர்களில் சிலர் மௌனவிரதமும் அநுட்டித்தனர். ஏழு நாட்கள் தொடக்கம் இருபத்தொரு நாட்கள் வரை வாய்பேசாது மௌன விரதமிருப்பர். கோவில் பிரசாதங்களை மட்டும் உண்பர். இதில் ஆண் பெண் என்ற பேதமில்லை. வாயைக் கட்டிப் பூசை செய்கின்ற சந்நிதியிலே வாய்திறவாமல் வழிபாடு செய்யும் அன்பர்களும் இருந்தனர். கந்தசட்டி விரதப்போது பலர் இவ்வாறு உணவை ஒதுக்கி இருப்பதுடன் வாய்ப்பேச்சையும் நிறுத்தி இருக்கும் வழக்கமுண்டு.

இத்தகைய மடங்களின் அமைப்பும் மக்கள் தொடர்பும் யாழ்ப்பாணத்தில் வேறு கோயில்களில் சிறப்பாக அமையவில்லை. பணவசதியற்ற ஏழைகள், மேனாட்டு வைத்திய வசதி பெற வழியில்லாதவர். சந்நிதியையே நோய்தீர்க்கும் மருத்துவ நிலையமாகவும் எண்ணினர். அவர்களின் முழுமனதான அன்புநிலைக்கு முருகனும் கட்டுப்பட்டு அருள் செய்வான்.

**அடிக்குறிப்புகள்**

1. ஆறுமுகநாவலர், நான்காம் பாலபாடம்
2. தமிழ்க் கலைக்களஞ்சியம் - சென்னைப் பல்கலைக்கழகப் பதிப்பு 1982, பக். 3020
3. சிலப்பதிகாரம் 5 : 180
4. கா. சிவத்தம்பி, சித்திரப்பெருந்தேர் சிறப்பு வெள்ளோட்ட மலர்.

## தற்போது அறியப்பட்ட சந்நிதியான் மடங்கள்

| | | |
|---|---|---|
| ஆனந்தா ஆச்சிரமம் | - | மயில்வாகன சுவாமிகள் |
| வைரமுத்து சாமி மடம் | - | வைரமுத்துசாமி |
| வெள்ளிக்கிழமை மடம் | | |
| தம்புச்சாமிமடம் /வாழைமடம் | | |
| மணியம் மடம் | | |
| கந்தசாமி ஐயர் மடம் | | |
| ஆறுமுகசாமி ஐயர் மடம் | | |
| சின்னத்துரைமடம் | | |
| பொன்னுத்துரை ஐயர் மடம் | | |
| அடியார் மடம் | | |
| காசிப்பிள்ளை ஐயர் மடம் | | |
| தகர மடம் | | |
| அரசம்மா மடம் | | |
| வல்லிபுரம் மடம் | | |
| வதிரி மடம் | | |
| வட்டுக்கோட்டை மடம் | | |
| பூங்கோவை மடம் | | |
| சந்நிதியான் வேதாந்த ஆச்சிரம மடம் | | |
| சந்நிதியான் ஆச்சிரமம் | - | மோகனதாஸ் சுவாமிகள் |
| பாலசுப்பிரமணிய மடம் / வைத்திலிங்கம் மடம் | | |

திருவிழாக்காலங்களின் அன்னதானமும், நேர்த்திக்கடன், முடியிறக்கல் போன்றவையும் நடைபெறுவதாக அறிகிறோம்.

**தகவல்: திரு. இரா செல்வவடிவேல்**

# 5

## மலைத் தெய்வமாம் முருகன் வேல்

முருகன் மலைத்தெய்வமாகவே சிறப்பித்துக் கூறப்படுகின்றான். பழந்தமிழ் இலக்கணமான தொல்காப்பியம் இயற்கை நிலையிலே நிலங்களுக்குரிய தெய்வங்களை வகுத்துக் கூறுகின்றது.

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்"

தொல்காப்பியம்: iii:5

இத்தெய்வங்களுள் மலையில் வைத்துப் போற்றப்பட்ட தெய்வமே முருகனாகும்.[1] முருகன் அருள்பெற்ற நல்லிலக்கியப் புலவர் அவன் பெருமையை திருமுருகாற்றுப்படை என்னும் நெடும்பாட்டிலே பரக்கப் பாடியுள்ளார். நக்கீரர் மதுரைக் கடைச்சங்கத்திலேயிருந்து தமிழாய்ந்த புலவராவார். முருகனிடத்து அன்பர்களை ஆற்றுப்படுத்து கின்றதே திருமுருகாற்றுப்படையின் பொருளாகும்.

தமிழ்மொழியானது மக்களிடத்தே வளர்ச்சி பெற்று எழுத்து, சொல், பொருள் என மூவகை இலக்கணங்கள் வகுக்கப்பட்ட காலத்திலேதான் முருகு என இறைப்பொருள் என்னும் பொருட்டாய் நின்ற சொல் 'அன்' என்னும் ஆண்பால் விகுதியைப் பெற்று முருகன் என வழங்கப்படலாயிற்று. நிலத்தை நான்காக வகுத்தகாலத்திலே தமிழ் நாட்டில் முதல் முதல் தோன்றிய இம்முருகு நான்கு நிலங்களில் ஒன்றாய் முதல் நிலமான மலைநிலத் தெய்வமாக வகுக்கப்பட்டது. இக்காலமே வடவாரியர் தமிழகம் புகுந்து தமிழரோடு கலந்து வாழ்ந்த காலமும் ஆகும். இதனால் அவர்கள் வழங்கி வந்த இந்திரன், திருமால், வருணன்

முதலிய கடவுளர்களையும் குறிஞ்சி நிலங்களுக்குத் தெய்வமாகக் கொள்ளலாயினர்.

இன்னும் வடவாரியர் கொண்டிருந்த தெய்வங்களுள் ஒன்றான ஸ்கந்தன் என்னும் தெய்வத்தையும் ஒன்றாக இணைத்து, கந்தன் என்னும் தெய்வத்தின் வரலாற்றையும் முருகனுடைய வரலாறாகவே வேற்றுமையின்றிக் கொள்ளலாயினர். குமார சம்பவம், கந்தபுராணம் முதலிய வடமொழிக் காப்பியங்களிலே ஸ்கந்தனுடைய வரலாறு கூறப்பட்டுள்ளது. அந்த வரலாறும் புராணந்தோறும் சிற்சில வேறுபாடுகளுடையது. இந்த வரலாற்றுக் குறிப்புகள் திருமுருகாற்றுப் படையில் பலவிடங்களிற் காணப்படுகின்றன. செவ்வேளின் பெருமை கூறும் இன்னொரு நூலான பரிபாடலிலும் காணப்படுகின்றன.

திருமுருகாற்றுப்படையில் முருகனுடைய ஆறுபடை வீடுகளும் விளக்கப்படுகின்றன. திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்கடி, திருவேரகம், குன்றகச் சிறுகுடி, பழமுதிர்சோலை என அவை அழைக்கப்பட்டன. இவற்றுள் தற்போது திருச்செந்தூர் என வழங்கப்படும் திருச்சீரலைவாய் என்னும் தலம் சற்று வேறுபட்டது. அது கடற்கரையிலே அமைந்துள்ளது. மலைவாழ் முருகன் கடல் வாயிலும் மகிழ்ந்துறைவான்.

"ஆங்கப் பன்னிருகையும் பாற்பட இயற்றி
அந்தரப் பல்லியங் கறங்க திண்காழ்
வயிரெழுந் திசைப்ப வால்வளை ஞரல
உரந்தலைக் கொண்ட உருமிடி முரசமொடு
பல்பொறி மஞ்சை வெல்கொடி அகவ
விசும்பாறாக விரைசெலல் முன்னி
உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும்நிலைஇய பண்பே"

திருமுருகாற்றுப்படை 118-125

திருச்சீரலைவாயில் முருகன் உறைவதுபோலச் சந்நிதியிலும் உறைகின்றான். கடலலைகள் முழங்க, ஆறு சலசலத்து ஓட, பறை இசைப்ப, பலர் பஜனை பாட ஆற்றங்கரையான் வீற்றிருக்கின்றான். எனினும் சந்நிதி கோயிலில் முருகனின் திருவுருவம் மூலஸ்தானத்தில் அமையவில்லை. வேல்தான் அமைந்துள்ளது. வேலின் பெருமையைப்

பற்றிப் பலர் பாடியுள்ளனர். வீரவேல், வெற்றிவேல், சூரன் உடல் கிழித்த வேல் எனப் புகழுகின்றனர். முருகனின் திருவுருவத்தை வெள்ளிவேலிலே அன்பர்கள் காண்கின்றனர். கதிர்காமத்திலே கதிர்வேல் பெற்று, கதிர்காமர் அதனையே முருகன் திருவுருவாக எண்ணி சந்நிதியிலே பூசை செய்து வந்தார். அந்த வேலின் பெருமை பலராற் பேசப்பட்டுள்ளது.

"தோகைமேல் உலவுங் கந்தன் சுடர்கரத்திருக்கும் வெற்றி
வாகையே சுமக்கும் வேலை வணங்குவ தெமக்கு வேலை"

எனச் செவ்வந்திப் புராணத்திற் சைவ எல்லப்ப நாவலர் குறிப்பிடுகிறார். செல்வச் சந்நிதி மூலத்தானத்திலிருக்கும் வேல்,

"வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறை மீட்ட
தீரவேல் செவ்வே டிருக்கை வேல் - வாரி
குளித்த வேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந்
துளைத்த வேல் உண்டே துணை"

என்று புகழப்படுகின்றது.

ஆற்றல் கொண்டமைந்த வேல், வடிவு ஒழுகும் வேல், தேவர்களைச் சூரனுடைய சிறைக்கூடத்திலிருந்து மீட்ட வெற்றிவேல், செம்மை நிறஞ்சேர்ந்த முருகப்பெருமானுடைய அழகிய கையினிலே அமைந்திருக்கும் வேல், பகைவரை அழித்த கறைநீங்கக் கடல் நீரிலே முழுகி எழுந்தவேல், வெற்றிவேல்; சூரனுடைய மார்பைக் கிழித்து அவனைக் காத்துத் தடுத்துநின்ற கிரௌஞ்ச மலையையும் துளைத்துப் பிளந்தவேல். அதுவே எமக்கு என்றும் துணையான வேல். தெய்வமே வேல். வேல்வேறு தெய்வம் வேறல்ல என்று வேலின் பெருமையை மறைத்திரு ஞானியாரடிகள் பேசுவர்.

"தனித்தவழி நடக்குமென திடத்துமொரு வலத்து
மிருபுறத்து மருகடுத்து இரவுபகல் துணையதாகும்"

என அருணகிரிநாதர் வேலின் பெருமை கூறுகின்றார். தனிவழி நடக்கின்ற அன்பர்களுக்கு வலப்புறத்தும் இடப்புறத்தும், முன்னும் பின்னும் எங்குமாகி இரவும் பகலும் துணையாக வேலே நின்று விளங்கும்.

"அச்சமகற்றும் அயில்வேல்"

என்றார் குமரகுருபரர்.

"மூவிரு முகங்கள் போற்றி முகம் பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற ஈராறுதோள் போற்றி காஞ்சி
மாவடிவைகும் செவ்வேள் மலரடிபோற்ற அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி"

இச்செய்யுளில் ஆறுமுகங்களுக்கு ஒரு போற்றியையும், ஆறு கருணைகளுக்கு ஒரு போற்றியையும், பன்னிரு தோள்களுக்கு ஒரு போற்றியையும், இரு திருவடிகளக்கு ஒரு போற்றியையும் கூறிவந்த ஆசிரியர் வேலுக்கு இரண்டு தரம் போற்றி கூறி விதந்து கூறியுள்ளார்.

முருகனுடைய படைக்கலமான வேல் அதிசக்தி வாய்ந்தது. அதனால் அதனை வணங்கும் நடைமுறையும் ஏற்பட்டது. கூர்முனை பொருந்திய ஆயுதமாக அமைந்த வேல் ஞானவேல் என்றும் கூறப்படுகிறது. கோயில் அமைப்புத் தோன்றுவதற்கு முன்னர், மரங்களின் நிழலிலே வேலினை நாட்டி வழிபாடு செய்துள்ளனர். ஆரம்பநிலையான முருக வழிபாடு பற்றிய தகவல்கள் சங்க இலக்கியப் பாடல்களிலே காணப்படுகின்றன. திருமுருகாற்றுப்படை, பரிபாடல் தவிர்ந்த ஏனைய நூல்களிலும் வழிபாட்டு முறைபற்றிய சில சிறு குறிப்புக்கள் இடம்பெற்றள்ளன.

மலைத்தெய்வமாகப் போற்றப்படும் முருகனுக்கு வேலன் என்ற பெயரும் வழங்கப்படுகிறது. வேலைக்கையில் ஏந்திக் காட்சியளிப்பதால் முருகனை வேலன் எனவும் அழைத்தனர். அவனை நெடுவேல் என்றும் சுட்டினர்.

"நெடுவேட் பேணத் தணிகுவள் இவளென
முதுவாய்ப் பெண்டிர் அதுவாய் கூற"

அகநானூறு : 22

சங்ககாலத்திலே மகளின் காதல் நோயினை உணராத தாய்மார் அக்காலத்தில் குறி சொல்பவனாகிய வேலனை அழைத்துக் குறிகேட்பர். அவன் தனது வழிபடுதெய்வமாகிய வேலை ஆயுதமாகக்கொண்ட வேலனையும், ஏனைய தெய்வங்களையும் அழைத்துப் பாடுவான். அப்போது தெய்வமேறப் பெற்று மகளின் நோய்க்குரிய காரணம் அந்நிலத் தெய்வமாகிய முருகனே எனக் கூறுவான். அதன் பின்னர் வேலனைக் கொண்டு வெறியாடும் களம் அமைத்து, வெறியாடுவித்து

வெறி விலக்குவர். இந்தவெறியாட்டினை முருகவணக்கத்தின் தோற்றத்திற்கு அடைப்படை என்றம் ஓர் இனக் குழுவழிபாட்டு முறை எனவும் மானிடவியலார் சுட்டிச் செல்வர்.

> "தமிழ்நாட்டில் முருகவணக்கத்திற்குத் தோற்றமாயிருந்தது வேலன் வெறியாடல். அது ஒரு இனக்குழுவழிபாட்டு முறையாகும். இம்முறையை அகப்பொருள் இலக்கியங்களிலே காணலாம்."[2]

படிமத்தான் என்று சுட்டப்படும் அக்காலத்துப் பூசாரி வேலன் என்று அழைக்கப்பட்டதற்கு முருகவழிபாட்டையுடையவனாகவும், அவனுக்குரிய ஆயுதமான வேலைக் கையில் கொண்டனவனாகவும் இருந்தமையே காரணமாகலாம்.

வெறியா டைப் பற்றிய குறிப்பினைத் தொல்காப்பியத்திலும் காணமுடிகிறது. தொல்காப்பியர்:

> "வெறியா சிறப்பின் வெவ்வாய் வேலன்
> வெறியா யர்ந்த காந்தளும்"

(தொல் iii : 63)

என இதனைக் குறிப்பிடுகிறார். இதனைப் புறத்திணைக் குரியதாகவே குறிக்கின்றார். எனினும் அகப்பாடல்களும் இது பற்றிக் கூறுகின்றன. வெறியாட்டு குறிஞ்சிநிலமான மலை நிலத்திற்குரிய சிறப்பான வழிபாடாகவும் அமைந்துள்ளது. அகப்பாடல்களில் வெறியோட்டுதல் என்ற நிலையிலுள்ளது. புறப்பாடல்களிலே வழிபாட்டு நிலையிலுள்ளது. ஆனால் இருமரபுகளின் செயல் முறைகளில் எதுவிதமான மாறுபாடும் காணப்படுவதாகவில்லை. வெறியாட்டின்கண் வேலன் செய்யும் வழிபாடு 'காந்தள்' என்றும் வழங்கப்பட்டுள்ளது. வேலன் வாயிலாக முருகன் வெளிப்பட்டுத் தோன்றுவான் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே இது நிகழ்த்தப்படுகிறது. இத்தகையதொரு நம்பிக்கை ஈழத்துவடகிழக்குப் பகுதியிலும் நின்று நிலவியது.[3] வேலன் என்ற தன் பூசாரிமீது முருகன் ஆவியுருவில் ஏறிக் குறிசொல்வான். குறிசொல்ல அவன் உள்ளத்தை இயக்கும் தெய்வம் முருகன் என்பது பழந்தமிழரின் நம்பிக்கையாயி ருந்தது.

வழிபாட்டு முறையிலே தன் மகளுடைய நோய்க்குரிய காரணத்தை அறியப் பெற்றோர் முதலில் வேலனையோ, கட்டுவிச்சியையோ அழைப்பித்து அவர்களின் குறிமுறைகளின் வாயிலாகக் காரணத்தைக் கேட்பர். அவர்களும் பலதெய்வங்களையும் வாழ்த்திப்பாடி தெய்வமேறப்பெற்று நோய்க்குரிய காரணமாக முருகனால் அணங்கப்பட்டதாகக் கூறுவர். முருகன் அணங்கியதை நற்றிணைப்பாடல் ஒன்று தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது.

"நன்னுதற் பரந்த பசலைகண்டன்ன
செம்முது பெண்டிரொடு நெல்முன் னிறீஇக்
கட்டிற் கேட்கு மாயின் வெற்பி
லேனற் செந்தினைப் பாலார் கொழுங்குரற்
சிறுகிளி கடிகஞ் சென்றுமிந்
நெடுவே ளணங்கிற் றென்னுங்கொ லதுவே"

நற்றிணை : 288

காரணத்தை அறிந்த பெற்றோர் அந்த வேலன் வாயிலாக வெறியாட்டயர்வித்து நெடுவேலுக்குப் பலியூட்டி அவன் சினம் தணிவித்து பெண் நலம்பெற வழிபடுகின்றனர். இவ்வாறு வேலன் வெறியாட்டில் இடம்பெறும் முருக வணக்கம் பிற்காலத்தில் ஆகம வழிபாட்டு முறைகளுடன் கலந்துவிட்டது. எனினும் சந்நிதியின் மூலஸ்தானத்து வேல் இவ்வழிபாட்டு முறையின் ஆரம்ப நிலையையுணர்த்துஞ் சான்றாக விளங்குகின்றது.

வேலின் முன்னிலையிலேயே சோறு படைக்கப்படும். அதுவே முருகன் மருந்து என்று நம்பப்படுகின்றது. மலைத்தெய்வமான முருகனுக்குத் தினைமாவும் தேனும் முக்கிய படையற்பொருளாகும். அவையும் சந்நிதியிலும் வேலனின் படையற்பொருளாக அமைந்துள்ளன.

வேலின்மேல் ஆணையிட்டுக் காரியங்கள் செய்யும் நடைமுறையும் இருந்துள்ளது.

"வருபுனல் வையைமண றொட்டேன் றருமணவேள்
தண்பரங்குன்றத் தடி தொட்டேன் என்பாய்
கேளிர் மணலின் கெழுவு மிதுவோ

ஏழுலகுமாளி திருவரைமே லன்பளிதோ
என்னை யருளி யருண் முருகு சூள்சூளின்
நின்னை யருளி லணங்கான் மெய் வேறின்னும்"

பரிபாடல்: 8

இங்கு பரத்தையிடம் சென்று திரும்பிய தலைவன் ஒருவன் தான் பரத்தையிடம் செல்லவில்லை என்று கூறித் தலைவிக்குச் சத்தியமொழிகள் பல கூறுகின்றான். "இதோபார் வையைமணலைத் தொட்டுக் கூறுகிறேன். திருப்பரங்கன்றத்தின் அடியைத் தொட்டுக் கூறுகின்றேன். நான் பரத்தையிடம் செல்லவில்லை" என்கிறான். அது கேட்ட தலைவனின் தோழி அவனை நோக்கி "நீ பொய்யாணை இடாதே. வையை மணலில் உனக்குள்ள அன்புரிமையும் இத்தகைய பொய்யானதோ. ஏழுலகங்களையும் காத்தருளும் முருகப்பெரு மானுடைய திருப்பரங்குன்றத்தின்பால் நீ கொண்டுள்ள அன்பும் இரங்கத்தக்கதே. நீ பொய்ச்சூள் மொழிகூறும் இயல்புடையை ஆதலின் நீ தலைவிக்கு அருள் செய்யாது பரத்தமையுடையையாயிருந்தும் தலைவிக்கு அருள் செய்வதாகச் சொல்லித் திருவருளையுடைய முருகப்பெருமான்மீது பொய்ச்சூள் மொழி கூறுவாயாயின் நின்னை அப்பெருமானைச் சார்ந்த அருள் இல்லாத தெய்வங்களுடனே அவனுடைய மெய்மைத் தன்மையுடைய வேற்படையும் பெரிதும் வருந்தும்" என்று கூறுகிறாள். "வெற்றியையே விரும்புகின்ற முருகப்பெருமான் மயில்மீதும் வேல்மீதும் ஆணையிடாதே" என்று தொடர்ந்தும் கூறுகிறாள்.

எனவே, முருகனுடைய வேல் பொய்மையை அழிக்கும் ஆற்றல் கொண்டதென்பது பழங்காலந்தொட்டே மக்களிடையே பெருநம்பிக் கையாயிருந்தமை நன்கு புலனாகின்றது. வேலின் துணையால் எந்த இடரையும் வெல்லலாம். இதனைப் பாவலன் பாரதியும் "வருவாய் மயில்மீதினிலே வடிவேலுடனே வருவாய்" என்றும் "கருதிக் கருதிக் கவலைப்படுவார் கவலைக் கடலைக் கடியும்வேல்" என்றும் போற்றிப் பாடியுள்ளான்.

ஈழநாட்டிலுள்ள முருகன் ஆலயங்கள் பல மூலஸ்தானத்திலே வேலையே கொண்டமைந்துள்ளன. நல்லூர்க் கந்தன் ஆலயம் இவற்றில்

குறிப்பிடத்தக்கதொன்று. இன்னொரு கோயிலைப்பற்றியும் இங்கே குறிப்பிடவேண்டியுள்ளது. பருத்தித்துறையைச் சேர்ந்த தும்பளைக் கிராமத்திலுள்ள முருகன் கோவிலிலே முப்பது வருடங்களுக்கு முன்னர் சந்நிதிகோயிலிற் பூசை முறையே நடைபெற்றது. கோவிந்தர் என்பவர் வாயைக் கட்டியே முருகனுக்குப் பூஜை செய்துவந்தார். அக்கோவிலின் மூலஸ்தானத்திலும் வேல்தான் அமைந்துள்ளது. கோவிந்தர் இறந்தபின்பு வாய்கட்டிப் பூசை செய்யும் மரபு ஒழிந்துவிட்டது. இன்னும் இக்கோயிலின் மாதப் பரணி நட்சத்திரத்தன்று மாதாமாதம் அன்னதானமும் நடைபெற்றது. இக்கோயிலிலும் நாகதம்பிரானுக்கு சிறு கோவில் அமைக்கப்பட்டுப் பூசை நடைபெறுகிறது. இக்கோயில் சந்நிதி கோவிலின் வழிபாட்டு நடைமுறைகள் ஏனைய இடங்களுக்கும் பரவியதை எடுத்துக்காட்டுவதாகவுள்ளது.

வேல்கள் பலவற்றை உடம்பிலே பாய்ச்சி முருகன் கோயிலில் காவடி எடுக்கும் நடைமுறையும் உண்டு. "அலகு பாய்ச்சிக் காவடி எடுத்தல்" என்னும் நடைமுறையில் காவடி எடுப்பவர் அலகுகளினூடாக நாவினூடே வேலைப்பாய்ச்சிக் காவடி எடுப்பர். அந்த வேலின் நடுவே நாகபாம்பு பொருத்தப்பட்டிருக்கும். இன்னும் இருகைகளிலும், முதுகில் இருவரிசையுமாக சிறிய வேல்களைக் குத்திவிடுவர். இவ்வாறு காவடி எடுப்பவர் வேல் குத்துவதால் ஏற்படும் நோவை அநுபவிப்பதேயில்லை. பெண்களும் சிலர் அலகு பாய்ச்சிப் பாற்செம்பு எடுப்பதுண்டு. வலிப்பு, இழுப்பு, கசம் போன்ற நோயினாலே பீடிக்கப்பட்டவர்கள் நேர்த்திக்கடனுக்காக இவ்வாறு செய்வர்.

மடங்களிலே அன்னதானம் நடைபெறும்போதும் வேலுக்கு முன்னே படையல் செய்வர். முருகன் கோயில்களுக்கு நேர்த்திக்காக வேல்கள் செய்து கொடுப்பதும் உண்டு. அவ்வாறு கொடுக்கப்பட்ட வேல்கள் பல சந்நிதியின் மூலஸ்தானததிலுள்ளன. சுடர்வீசும் வேல் முருகனின் அருட்பார்வையாக அன்பர்களைத் தழுவும். வெள்ளி வேலினில் விபூதிக்கீற்றும் சந்தனக்குங்குமம் பொட்டுவைத்து ஊர்வலத்தில் உற்சவ மூர்த்தியாக்குவர். மயில்வாகனத்தில் வேல்வடி வாய் முருகன் வீதி வலம் வருவான். வேலின் தோற்றம் மறைய; முருகன் தோற்றமே அங்கு காணும் அன்பர்கள் "முருகா! முருகா!" என்றே ஓலமிடுவர்.

கதிர்காமத்தைப் போலச் செல்வச் சந்நிதியிலும் அழகுதரும் கட்டட அமைப்போ தூபி, கோபுரசிற்ப வேலைப்பாடுகளோ இல்லை. இன்று சந்நிதியானின் கோயிலில் புதிய முகப்பும், மணிக்கோபுரமும் அமைக்கப்பட்டுள்ளன. வனப்பும் புனிதமும் மிக்க கோயிலின் மூலஸ் தானத்திலே முருகனின் திருவுருவத்திற்குப் பதிலாக அருளொளி வீசும் அழகு வேல்தான் உண்டு. ஆற்றங்கரையிலே அன்பர்கள் பலரால் ஆட்கொள்ளப்பட்ட வேலாயுதன் சந்நிதியான். சந்நிதிவேலைப் பற்றிய அன்பர் கவிதை ஒன்று வருமாறு:

சக்திவேல் செல்வச் சந்நிதிவேல் - மனச்
சஞ்சலம் தீர்த்திடும் வேல்...
பக்தி செய்யும் அடியவர்க்கே - ஞான
சுத்தி அளித்திடும் வேல்... (சக்தி)
எத்தினமும் தொழும் அன்பர்கள் - உள்ளத்தில்
தித்திக்கும் கந்தன் கைவேல்...
சத்திய நெறி வழிநின்றார்க்கே - உயர்
சித்தியெல்லாம் தரும்வேல்... (சக்தி)
அகங்காரம் கொண்ட அரக்கர் குலத்தை
அடியோடழித்திட்டவேல்...
அன்னை பராசக்தி அன்புடன் அணைத்துக்
கொஞ்சிக் குலவிடும் வேல்.... (சக்தி)
வள்ளி தெய்வானைக்கு வாய்த்த நல்வேல் - வடி
வேல் செல்வச் சந்நிதிவேல்...
தெள்ளுதமிழ்த் தேனை அள்ளித்திருப்புகழ்
பண்ணவர்க் கீய்ந்திட்டவேல்... (சக்தி)
தொண்டை மாநகரந்தனில் மேவிய
தொல்வினை தீர்த்திடும் வேல்...
திக்கற்ற ஏழைகள் பசிப்பிணி தீர்த்திடும்
திருச்செல்வச் சந்நிதிவேல் ... (சக்தி)

குன்றுதோறும் நின்றாடும் குமரன், குவலயத்தோர் கவலையழிப்போன், மலைத்தெய்வமாம் முருகன், வேல்வடிவாகி வந்து ஆற்றங்கரையினிலே அழகாக வீற்றிருந்து அருள் செய்வான். செல்வச் சந்நிதி என்று வழங்கும் சந்நிதி அடியார்நிலை தனித்துவமானது. முருகுவயப்பட்ட அன்பர் நிலைபற்றியும் யாவரும் அறியவேண்டும்.

#### அடிக்குறிப்புக்கள்

1. *மலைவணக்கம் பற்றியும், மலைத்தெய்வமான முருகன் பற்றியும், ஜப்பானியர்களிடையே வழக்கிலிருந்து வந்த இவ்வகை வழிபாடுகள் பற்றியும் அறிவதற்குப் பார்க்கவும்:* A.Sanmugadas, "Mountain Worship among the ancient Tamils and Japanese" (1988)
2. *நா. வானமாமலை:* **தமிழர் பண்பாடும் தத்துவமும்,** *நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை. 1973, பக்.40.*
3. *சு. வித்தியானந்தன்:* **தமிழர் சால்பு,** *பக். 123 பாரி புத்தகப் பண்ணை, சென்னை, (இரண்டாம் பதிப்பு), 1971.*

# 6

## ஆற்றங்கரையானின் அன்புநிலை

தமிழிலே எழுந்துள்ள பக்திப் பாடல்கள் இறைவன் மீது அவனது அன்பர்கள் கொண்டிருந்த அன்பின் தன்மையை விளக்குகின்றன. தமிழிலக்கியங்களிலே அப்பாடல்கள் தனிச்சிறப்புப் பெற்றுள்ளன. அப்பாடல்கள் எழுந்த காலப்பகுதி பக்திக்காலம் என்றும் கூறப்படுகின்றது. சைவம், வைஷ்ணவம் என்ற இரு மதங்களைச் சேர்ந்த அடியார்களும் தமது பக்தி அனுபவத்தைப் பல பாடல்களிலே புலப்படுத்தியுள்ளனர். அவை பிற்காலத்திலே தொகுக்கப்பட்டுப் பன்னிரு திருமுறைகளெனவும் நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம் எனவும் அழைக்கப்படுகின்றன. திருமாலின் குணங்களிலே ஆழமான ஈடுபாடு கொண்ட ஆழ்வார்களும் சிவனது குணங்களிலே ஆழமான ஈடுபாடு கொண்ட நாயன்மார்களும் தமது அநுபவங்களைப் பாடல்களிலே விவரித்துள்ளனர். அவர்களது தனித்துவமான அன்பு நிலையும் மனவுணர்வுகளும் பிறராலும் அறியப்பட அப்பாடல்கள் பெரிதும் உதவின.

தமிழ் நாட்டிலே முதல் முதலாகத் தனது அன்பு நிலையையும் மனவுணர்வையும் வெளிப்படுத்திக் காட்டியவர் காரைக்காலம்மையாராகும். இயற்கைத் தோற்றத்தையே இறைவனாகக் கண்டவர் அவர்.

**"காலையே போன்றிலங்கும் மேனி கூடும்பகலின்
வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு - மாலையின்
தாங்குருவே போலுஞ் சடைக்கற்றை மற்றவற்கு
வீங்கிருளே போலும் மிடறு."**

(அற்புதத்திருவந்தாதி:65)

என்னும் காரைக்காலம்மையாருடைய பாடல் அவர் இறைவன்மீது கொண்ட பேரன்பினால் எதையுமே இறைவனாகவே காண்கின்ற

நிலையை அடைந்தமையை விளக்குகின்றது. அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்ற நாயன்மார்கள் சிவனைத் தமது அன்பின் ஆழத்திற்கேற்ப பல்வேறு நிலைகளிலே கண்டுள்ளனர். இவர்களது வயது நிலையும் தனிப்பட்ட அநுபவங்களும் பாடிய பாடல்களால் வெளிப்பட்டுள்ளன. மணிவாசகருடைய திருவாசகப் பாடல்களிலே இறைவனை வழிபடும்போது உடலிலே தோன்றும் மாற்றங்களையும் காட்டியுள்ளார். மனம் கனிந்து இறைவனே தஞ்சமென நினைந்து வழிபடுகையில் அந்த உணர்வு நிலைக்கேற்ப உடல் நிலையும் மாறுபடுகின்றது. மனம், வாக்கு, காயம் என்ற மூன்றினாலும் மணிவாசகர் இறைவனை வழிபடுகின்றார்.

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழவிடேன் உடையா யென்னைக் கண்டுகொள்ளே
(திருச்சதகம் : 5 : 1)

உடலெங்கும் மெய்சிலிர்த்து நடு நடுங்கி, கைகளைச் சிரமேற்குவித்து வைத்து, கண்களின்றும் கண்ணீர் வழிய, மனம் உருகி, வாய் முருகா முருகா என்றியம்ப நின்று அன்பர் வணங்கும் காட்சியைச் சந்நிதி கோயிலிலே காணலாம். ஏனைய கோயில்களிலே இவ்வாறு மனங்கசிந்து வழிபடுவோர் குறைவு, ஆற்றங்கரையான் எழுந்தருளியிருக்கும் கோயில் அன்பர்கள் மனதிலே நெருக்கமான உணர்வைத் தோற்றுவிக்கின்றது. கட்டடங்கள் சூழப்படாத வெட்ட வெளியான கோயில் அமைப்பும், மந்திரமில்லாத பூசை முறையும் அன்பர்களது எண்ணத்திலே ஆற்றங்கரையானை அணுகுவது எளிது என்ற எண்ணத்தை ஏற்படுத்தியுள்ளன. பிராமணரோ, குருக்களோ மந்திரஞ்சொல்லி முருகனை அர்ச்சிப்பதில்லை. மனத்தாலே அவனை அர்ச்சிக்கும் சந்நிதிகோவிற் பூசகர் ஒரு சாதாரணமான மனிதனாகவே மக்களுக்குத் தோற்றுகிறார். வாயைக் கட்டி அவர் கர்ப்பூரத்தைக் காட்டும் கோலம், இந்த வழிபாட்டு முறைசகலரும் செய்யக் கூடியது என்பதைக் காட்டுகின்றது. விபூதியை நிறைத்த தட்டத்திலே கர்ப்பூரத்தை எரித்து அதனாலே முருகனை அர்ச்சிக்கும் பூசகரது கோலம்; மலர்களை எடுத்து மந்திரமோதாமல் தூவும் காட்சி முருகனின் அண்மை நிலையை அன்பர்க்குக் காட்டுகின்றன. ஏனைய தீப தூபங்கள் தற்போது சந்நிதியின் பூசை முறைகளிலே புகுந்து கொண்டாலும் ஆரம்பத்தில் கர்ப்பூர ஆரத்தி மட்டுமே செய்யப்பட்டது.

இந்த நெருக்கமான நிலையினால் மக்கள் மனத்தினுள் முருகனை நெருங்கி நின்றனர். தாமே தமது குறைகளை எடுத்தியம்பினர். மனத்துயரம் போகக் கண்ணீர் விட்டு அரற்றினர். தமது சோகக் குரல் முருகனின் திருச்செவியில் விழும் என்று திடமாக நிரம்பினர். தொண்டைமானாற்றிலே முழுகி எழுந்த கோலத்திலேயே பல பெண்கள் ஆற்றங்கரையானின் வீதி மணலில் அடி அழித்து வணங்குவர். அந்த அடிஅழிப்பு நிலை அவனடிகளையே தொடர்கிறோம் என்ற எண்ணத்தைச் செயற்படுத்துவதாயிருக்கும். உச்சியிலே கரம் வைத்து ஓலமிட்டு அழும் அன்பர் ஒருபால்; ஒன்றுமே பேசாமல் வேலையே வெறித்து நோக்குவார் இன்னொருபுறம்; கரங்களைத்தட்டியே ஆடிப்பாடுவார் சிலர்; மறுபுறம் விரித்த தலையோடு வீற்றிருப்பார் சிலர். துள்ளித் துள்ளி ஆடுவார் சிலர். சிரித்துச் சிரித்து முருகனோடு வார்த்தையாடுவார் பலர். இவர் எல்லோரையும் ஒரு சேரப் பார்க்கும் போது சந்நிதி கோயிலின் அற்புதமான சூழல் அனைவரையுமே கவர்ந்து விடும். அன்பர்களை மனநோயாளர்களென்று ஒருவரும் கருதுவதில்லை. அவர்கள் கோலங்களைக் கண்டு யாவரும் கேலி செய்வதில்லை. இவ்விடத்தில் மணிவாசகரது திருவாசகம் ஒன்றும் இதே நிலையை விளக்கியிருப்பதை ஒருசேற எண்ணுவது பொருத்தமாகும்.

> "சிரிப்பார் களிப்பார் தேனிப்பார் திரண்டு திரண்டுன் திருவார்த்தை
> விரிப்பார் கேட்பார் மெச்சுவார் வெவ்வே றிருந்துன் திருநாமம்
> தரிப்பார் பொன்னம்பலத்தாடும் தலைவா என்பார் அவர் முன்னே
> நரிப்பாய் நாயேன் இருப்பேனோ நம்பி இனித்தான் நல்காயே
> (கோயின் மூத்த திருப்பதிகம்:9)

இறையன்பை உணர்ந்தவர்கள் அவன் நினைவிலே அவனைப்பற்றியே பேசுபவர்களாகவும், அவனைப் பேசுபவர்களின் வார்த்தைகளைக் கேட்பவர்களாகவும், அவனைப் போற்றிப் பாடுபவர்களாகவுமிருப்பர். அத்தகைய அன்பர் கூட்டத்திலே இறையன்பை உணராத மூடர்கள் சென்றால் என்ன செய்வார்கள்? கேலிசெய்ய முற்படுவார்கள். ஆற்றங்கரையானின் அன்பை உணராதவர்களும் அப்படித்தானிருப்பார்கள். முருகன் புகழ்பாடிப் பேசித்திரிபவரைப் பைத்தியக்காரர் என்றே விமர்சிப்பர்.

சந்நிதியிலே பூசை நேரப்போது பறை ஒலிக்கப்படும். அந்தப்பறை ஒலி அன்பர்களைப் பரவசப்படுத்தும். நிறைந்த கர்ப்பூர ஒளியிலும், செறிந்த புகைமண்டல நடுவிலே மின்னல்போல ஒளிரும்

வேலின் தோற்றத்தைக் கண்டு பரவசப்படாதார் மனிதர்களேயன்று. பறையொலிக்கேற்பப் பலர் உரு ஆடுவர். இருந்தபடியே அவர்கள் தலையை மட்டும் சுழற்றி ஆடுவர். இடையிடையே கூக்குரலிடுவர். இத்தகையோரைப் பேய்பிடித்தோர் என வருணிப்பவரும் உண்டு. பறைஒலியின் தாளலயத்திற்கேற்பத் தலையசைத்து ஆடுபவர்கள் தாமிருக்கும் சூழலை மறந்தவர்கள். வேலன் வெறியாட்டிலே ஒன்றி விட்டவர்கள். ஆடலின்இடையே குரவையொலி செய்கின்றனர். இது பண்டைத்தமிழ் வழிபாட்டு மரபு. மதுரைக்காஞ்சி இதனை வர்ணித்துள்ளது.

"அருங்கடி வேலன் முருகொடு வளைஇ
அரிக்கூட்டின்னியங் கறங்க நேர்நிறுத்துக்
கார்மலர்க் குறிஞ்சி சூடிக் கடம்பின்
சீர்மிகு நெடுவேட் பேணித் தழூஉப் பிணையூஉ
மன்று தொறும் நின்றகுரவை சேரிதொறும்
உரையும் பாட்டும் ஆட்டும் விரைஇ"

(மதுரைக்காஞ்சி : 611-616)

"அச்சந்தரும் தோற்றமுடைய வேலன் இத் தீங்கு உமக்கு முருகனால் வந்ததென்று கூறும் சொல்லாலே வளைத்துக்கொண்டு இனிய இசைக்கருவிகள் முழங்க, முருகனை முன்னிலையாக்கி, குறிஞ்சிப்பூவைக் கடப்பமரத்திலே சூடி, அங்கு புகழ்பெற்ற முருகனைப் பாடிப் பரவி வழிபடுதலால் மகளிர் தழுவிக் கைகோர்த்து மன்றங்கள் தோறும் நின்று ஆடும் குரவைக்கூத்தும் சேரிகளிடத்தே புனைந்துரைகளும், ஆடல் பாடல்களும் கலப்பதனால் ஒரே ஆரவாரமாயிருக்கின்றது." இந்த நிலையைத்தான் ஆற்றங்கரையின் அருகுள்ள சந்நிதியிலும் பல வருடங்களுக்கு முன் காணக்கூடியதாக இருந்தது. இத்தகைய அன்பர்களது நிலையும் வழிபாட்டு முறையும் சந்நிதி கோயிலின் தோற்றப் பழமையைக் காணவும் உதவுகின்றன. முருக வழிபாடு மிகப் பழைய நிலையிலே ஈழத்திலே பேணப்பட்டு வந்ததையும் உணர்த்துகிறது.

பூசகரை விழுந்து வணங்கி விபூதி பெறுவதும் சிலருடைய வாயிலே பூசகர் விபூதியை இட, அவர்கள் கண்மூடி நிற்பதும் சந்நியிலே நாள்தோறும் காணும் காட்சிகள். இத்தகைய அன்பர்கள் பலர் சாதிநிலையிலே குறைந்தவர்களாகக் கருதப்பட்டனர். சந்நிதியைக் கீழ்சாதியினரின் வழிபாட்டுத்தலம் என்றும் வர்ணித்தனர். அன்னதானச் சோற்றுக்காக அலையும் ஏழைகளெனக் கூறினர். ஆனால் அவர்களின்

அன்பு நிலையை யாருமே அறியவில்லை. கண்ணப்பரின் அன்பையுணராதவர்கள் பலர் உளர். தெய்வமென்பதோர் சித்தமுண்டாகில் அவர் செயல் எப்படியாகும் என்றும் பாரதியார் கூறியுள்ளார். பக்தியுடையார் காரியத்திற் பதறார். மிகுந்த பொறுமையுடன் வித்து முளைக்கும் தன்மைபோல மெல்லச் செய்து பயனடைவாராம். முருகனையுணர்ந்தவர் செயல்கள் மற்றவர்க்குச் சிரிப்பாய் இருப்பினும் முருகன் அன்பர்கள் அதைப்பற்றி எள்ளளவும் கவலைப்படுவதில்லை. இருகாதிலும் செவ்வரத்தம் பூச்சூடி, கழுத்திலும் மலர்மாலை அணிந்து, கையிலே கோலொன்றுடன் ஆடிப்பாடும் அன்பர்களைக் காணும்போது வேலன் வெறியாடும் கோலம்தான் நினைவுக்கு வரும். இந்த அன்பு நிலையை ஆய்வுப் பொருளாக்கிப் பார்க்கவேண்டியதில்லை. அறிவாற்றல் கூடும்போது பந்தங்கள் விலகிவிடும். முருகனை நன்கு உணர்ந்தவர் அவன் கோயிலிலே குடியேறிவிடுவர். தமது உடல் அலங்காரங்களிலே கருத்துக்கொள்ளார். பல பெண் அன்பர்கள் தமது நீண்ட அழகான கூந்தலையே மொட்டையடித்துவிடுவர். ஆண்கள் முகச்சவரம் செய்யாமல் தாடி வளர்ப்பர். ஆற்றங்கரையிலே சடைமுடியோடு உலாவும் அவரைத் துறவிகளாக நாம் காண்கிறோம். முருகன் அன்பின் தன்மையுணர்ந்து அதை மட்டுமே சிந்தித்து வாழும் அன்பர்கள் அவர்கள். முருகனை அண்மித்து வாழ்பவர்கள்.

சந்நிதியிலே நடைபெறுகின்ற நேர்த்திக்கடன்கள் அன்பர்களின் இன்னொருவகையை அறிய உதவுகின்றது. முருகனிடம் இன்னது நான் செய்வேன் என்று நேர்ந்து பின்னர் அதனைச் செய்து முடிக்கும் உறுதி நிலை எல்லோருக்கும் உரியதன்று. அநேகமாக நோயுற்றவர்கள் நோய் குணமடைந்தால் காவடி, அல்லது பாற்செம்பு, அல்லது கர்ப்பூரச்சட்டி எடுப்பதாக நேர்ந்து முதற்காணிக்கையாக ஒரு ரூபா பணத்தை மஞ்சட்துணி ஒன்றிலே முடிந்து நோயாளியின் கையில் கட்டிவிடுவர். நோய் குணமானதும் நேர்த்திக் கடனை உடனடியாக நிறை வேற்றுபவரும் உண்டு. சிலர் பொருளாதார வசதிக் குறைவால் சற்றுக் காலம் தாழ்த்தி நிறைவேற்றுவதும் உண்டு. குறிப்பிட்ட நாளிலே செய்வதாக நேர்ந்திருப்பின் அந்த நாளிலேயே அதை நிறைவேற்றுவர். நேர்த்தியைச் செய்யப் பொருள் வசதியற்றவர்கள் மடிப்பிச்சை எடுத்தும் அதை நிறை வேற்றுவர். சந்நிதியில் அன்னதானம் கொடுப்பேன் என நேர்த்திக்கடன் வைத்தவர் வீடு வீடாகச் சென்று மடியேந்தி நிற்பவர். அந்தந்த வீட்டவர்கள் மடியிலே போடுகின்ற அரிசியைச் சேர்த்து எடுத்துப்போய் சந்நிதி மடத்திலே அன்னதானம் வழங்குவர். அன்னதானத்தினத்தன்று குறிப்பிட்ட நேர்த்திக்குரியவர் மொட்டை வழிக்கும் வழக்கம் உண்டு.

அன்னதானக் கந்தனின் சந்நிதியிலே குழந்தைகளுக்குப் பால்பருக்குவதாகவும் சோறு தீற்றுவதாகவும் சில பெற்றோர் நேர்த்தி வைப்பதுண்டு. குறிப்பிட்ட நாளன்று குழந்தையைக் கோவிலுக்குக் கொண்டுவந்து மொட்டை வழித்து, மாணிக்ககங்கையிலே முழுக வார்த்துக் கோயிற்பூசை முடிய சந்நிதானத்திலேய ஆற்றங்கரையான அமுதான மருந்தை, அன்னத்தைக் குழந்தைக்குப் புகட்டுவர். சிலர் பால் பருக்குவர். தாய்ப்பாலிலிருந்து பசுவின் பாலுக்குக் குழந்தையுணவை மாற்றும்போது ஆற்றங்கரையானுக்கும் பாலும் இளநீரும் கொணர்ந்து அபிஷேகம் செய்து பால்பருக்கும் சடங்கை நிறைவேற்றுவர்.

குழந்தைகளின் கையினாலே கோவிலுக்கு அள்ளு காசும் தென்னம்பிள்ளையும் கொடுக்கும் வழக்கமும் உண்டு. பணத்தைச் சில்லறையாக மாற்றி ஒரு தட்டத்திலே போட்டு குழந்தையின் கைகளால் அதிலிருந்து மூன்று முறை அள்ளிப் பூசகரிடம் கொடுப்பர். தென்னம்பிள்ளையும் குழந்தையின் கையில் கொடுத்தே கொடுப்பிக்கப் படும். அன்றைய தினமும் குழந்தைக்கு மொட்டை வழித்து நீராட்டி தலையிலே சந்தனத்தை நிறையப் பூசிவிடுவர்.

காவடி எடுக்கும் நேர்த்தி ஆண்களாலேயே செய்யப்படும். காவடி எடுத்துமுடிய அவர்கள் மீண்டும் கோயிலைச் சுற்றி அங்கப்பிரதட்சணை செய்வதும் உண்டு. திருமணமான தம்பதியர் ஆற்றங்கரையானிடம் செல்லும்போது மாவிளக்குப் போடும் வழக்கம் உண்டு. சந்நிதிகோயிலிலே அன்பர்கள் தங்கள் வாழ்நாளினது நன்மையான தினங்களை ஆரம்பிக்கின்றனர். அவன் முன்னிலையிலே செய்யும் காரியங்கள் யாவும் விக்கினமின்றி நின்று நிலைக்கும் என நம்பினர். இன்று புதிய வாகனங்களை வாங்குபவர்கள்கூட வெள்ளோட்டத்தை ஆற்றங்கரையானின் வீதியிலேயே நடத்துகின்றனர்.

'செல்வச் சந்நிதி' என்ற பெயரும் அன்பர்களின் அன்பு நிலை அங்கு பரவக் காரணமாயிற்று. சந்நிதியானிடம் குறையிருப்பின் எல்லாம் தருவான். நிலவளமும், கடல் வளமும் சேருமிடத்தில் அமர்ந்திருக்கும் அவன் செல்வத்திற்கு ஏது குறை. அருட்செல்வத்தை அவன் வாரிவழங்க, அன்பர் அதுபெற்றுப் பொருட் செல்வம், கல்விச் செல்வம், வெற்றிச் செல்வம் என்பவற்றைப் பெறுகின்றனர். வெள்ளிக்கிழமை தோறும் கால்நடையாகவேனும் சென்று வேவனைப் பணிபவர் பலர். அதிகாலை இருள் பிரியுமுன்பே சென்றுதொண்டைமானாற்றிலே முழுகியெழுந்து முருகனை வலம்வரும் அன்பர்கள் பலர். சாதாரண நாட்களிலும் சந்நிதியில் அன்பர்கள் கூட்டத்திற்கு குறைவில்லை. அங்கு

நடைபெறுகின்ற அன்னதானத்தினால் கோயிலில் நிலையாகத் தங்கிவிட்ட அன்பர்கள் தொகையும் முற்காலங்களிலே அதிகமாகவே இருந்தது. யாருமற்ற அனாதைகளும், தொழில் செய்து பிழைக்க முடியாத அங்கவீனர்களும் ஆற்றங்கரையான் சந்நிதியிலே நிரந்தரமாகத் தங்கியிருந்தனர். அவர்கள் தம்மாலியன்ற கோயிற் தொண்டுகளைச் செய்தனர்.

சந்நிதியின் உற்சவ காலத்திற் கூடும் அன்பர்களில் வர்த்தகர்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள். யாழ்ப்பாணத்துக் கிராமப்புற மக்களுக்கு, கோயில் உற்சவ காலங்களே பொருட்களைக் கொள்வனவு செய்யுங் காலங்களாயுமிருந்தன. பெட்டி. பாய், பாத்திரம், அலங்காரப் பொருட்கள், தின்பண்டங்கள் என்பன கோயிலிலே விற்கப்பட்டன. பல சிறிய கடைகள் கோயில் வீதியெங்கும் அமைக்கப்படும். தூரத்துக் கிராமங்களில் வசிப்போர் மாட்டு வண்டிகளிலும், கால்நடையாகவும் வந்து பொருட்களை வாங்குவர். ஓராண்டுக்குரிய பொருட்களைக் கொள்வனவு செய்வர். முன்னர் சுவைத்திராத நகரப்புறத்துத் தின்பண்டங்களைச் சுவைத்து மகிழ்வர். திருவிழாவிலே பொருட்கள் வாங்குவதற்கெனச் சிறுவர் உண்டியலில் சில்லறைக் காசுகளைச் சேகரித்து வைப்பர். பெரியவர்கள் உழைப்பின் ஒரு பகுதியை ஒதுக்கிவைப்பர். கோயில் வீதிக் கடைகளில் வியாபாரம் சுறுசுறுப்பாகவே இருக்கும். மேற்கு வீதியிலே வண்ணப்பாய்களும், கடகங்களும், அடுக்கு மூடல்களும் மலைபோலக் குவிக்கப்பட்டிருக்கும். தீவுப்பகுதிகளிலிருந்து கூட பன்னவேலைப் பொருட்கள் விற்பனைக்கு வருவதுண்டு. இந்த விற்பனைப் பொருள்களிலே குறிப்பிடக் கூடிய இன்னொரு பொருள் கடலை., கச்சானாகும். பலவகையான கடலைகள் விற்கப்படும். கச்சான்கடலை, கொண்டைக்கடலை, சிந்தாமணிக் கடலை, சோளப்பொரி என்பவற்றைப் பல கடகங்களிலே பரப்பி வைத்துக் கொண்டு பெண்களே வியாபாரம் செய்வர். கச்சான் கடலையை "மணிலாக்கொட்டை' என்றும் அழைப்பார். அது மருவி "மள்ளாக்கொட்டை" என்றும் வழங்கப்பட்டது. இந்த கடலை வியாபாரத்தைப் பெண்களே பெருமளவு செய்தனரென்பதற்குப் போதிய ஆதாரமுண்டு. பெண் கடலை வியாபாரிகளுக்கு மொத்தவியாபாரம் செய்த கரவெட்டியைச் சேர்ந்த பெண் வியாபாரியொருவர் தந்த தகவல்கள் இதற்குச் சான்றாகும். இவருக்கு தற்போது வயது அறுபத்து மூன்று. அவர் தந்த தகவல்கள்.

> **"எனது வீட்டிலிருந்த சொந்தக் கடையில் நடைபெற்ற பலசரக்கு வியாபாரத்தில் கடலையும் ஒரு பொருளாக, பெண்கடலை வியாபாரிகளுக்கு மொத்தமாக விற்கப்பட்டது.**

40 வயது தொடக்கம் 70 வயது வரையுள்ளவர்கள், ஏறத்தாழ முப்பது பெண் கடலை வியாபாரிகள் கடலையை வாங்கி அவற்றை வறுத்து கோயில்களில் விற்றார்கள். சந்நிதிக்கோயில் திருவிழாக் காலங்களில் தான் ஆகக் கூடுதலான கடலை வியாபாரம் நடைபெற்றது. மட்டூர் கடலை 30 மூடை, சிந்தாமணிக் கடலை 25மூடை, சோழம் 15மூடை, கொண்டைக் கடலை 10 மூடை, கச்சான் கடலை 25 மூடை. இவை சந்நிதித் திருவிழாக் காலத்தில் மட்டும் தான் விற்பனை செய்த கடலை வகைகளாகும். என்னிடம் வாங்கியது போல கரவெட்டி கிழக்கில் மட்டும் வேறு ஐந்துக்கு மேற்பட்ட மொத்த வியாபாரிகளிடமும் பெண் கடலை வியாபாரிகள் கொள்வனவு செய்வதுண்டு. பெண் கடலை வியாபாரிகள் பல சாதிகளைச் சேர்ந்தவர்கள். அநேகமாக எல்லோரும் 35 வயதுக்கு மேற்பட்டவர்களாயிருந்தனர். ஒவ்வொரு பெண்வியாபாரியும் இரண்டாயிரம் ரூபாவுக்கும் குறையாது கடலை கொள்வனவு செய்வதுண்டு. மாட்டுவண்டி, பஸ், வான் போன்ற வாகனங்களில் கடலையைக் கொண்டு செல்வார்கள். கடலைகளை ஓலைப்பெட்டிகளில் வைத்து விற்பார்கள். ஒவ்வொரு பெட்டியும் ஏறத்தாழப் பத்துக் கொத்து அளவான கடலையைக் கொள்ளக் கூடியதாகவிருக்கும். ஏறத்தாழ 9" - 6" விட்டங்கள் கொண்ட வட்ட வடிவான அடுக்குப் பெட்டிகளை காசு வைக்க பாவித்தனர். சில்லறைக் காசுகளை ஒவ்வொன்றிலே போட்டுவைப்பர்.

மேற்காட்டிய தகவல்கள் ஆற்றங்கரையானின் சந்நிதியில் பெண் வியாபாரிகள் தொகை அதிகமாக இருந்ததைக் காட்டுகின்றன. குடும்பச் செலவுகளைச் சமாளிக்க முருகன் வாசலிலே இருந்து தொழில்புரிந்த அந்தப் பெண்களும் அவனது அன்பர்களே. கோயிற் பிரசாதத்துடன் கடலை கச்சான் வாங்கிப் போவதுவும் யாழ்ப்பாணத்திலே நடை முறையாக உள்ளது. இந்த வழக்கம் எப்படி ஏற்பட்டதென்பது தெரியவில்லை. எனினும் பயற்றம் பருப்பை உகக்கும் முருகனின் அன்பர்கள் கடலைகச்சானையும் முற்காலங்களில் நிவேதித்துமிருக் கலாம். இன்னும் சுண்டல் கடலை இப்போதும் கோவில்களில் நிவேதனப் பொருளாக இருந்துவருகின்றது.

ஆற்றங்கரையானின் அன்பினால் கட்டுண்டவர்கள் பலர் தமது குடும்பங்களைத்துறந்து அங்குவந்து தங்கிவிடுவதும் உண்டு. அங்குள்ள மடங்களிலே கட்டுப்பாடில்லாமையால் எவரும் எப்போதும் வந்து

தங்கிச் செல்லலாம். அவர்கள் காலக்கிரமத்தில் பற்றற்று துறவிகளாகி முருகனின் அன்பர்களாகிவிடுகின்றனர். வேறு கோயில்களில் இவ்வாறு நிரந்தரமாகத் தங்குவதற்கு வசதிகள் குறைவு.

இன்னும் முருகனின் அன்பால் கட்டுண்டு அவனுக்கான பணிசெய்வோர் பலர். ஆற்றங்கரையானின் புதியசித்திரத்தேர் அமைக்கப்பட்டபோது தேரோடும் பாதை முழுதுமே முருகனடியார் பணியால் செய்யப்பட்டது. பதினைந்துக்கு மேற்பட்ட ஊர்மக்கள் தினமும் இப்பணியைச் செய்தனர். பல இளைஞர்கள் ஆர்வத்துடன் தம் உடலுழைப்பை நல்கினர். இந்தச் சிரமதானப் பணியினாலே சுமார் ஒரு லட்ச ரூபா மீதப்படுத்தப்பட்டது. அன்பர்கள் யாவரும் தமது சொந்தப்பணிபோல முருகன் பணியைச் செய்தனர். சிரமதானம் என்ற தானத்தையும் முருகனுக்கு கொடுத்தனர். அவனும் அவர்களுக்கு என்றும் அன்னதானமளித்துவருகின்றான். முருகனின் முன்னின்று கும்பிட்டுப் பொருள்பெறுவதை விட அவன் வலம் வருகின்ற வீதியைச் செப்பனிட்டுத் தம் வாழ்வையும் வளம்பெறவைத்த அன்பர்கள் பலர்.

அன்புநிலையாலே கோயிலின் அருள் நிலைகூடும் . தெய்வம் கொண்டாடும் இடத்திலே தான் குடியிருக்கும். 'கோயிலில்லா ஊரிலே குடியிருக்க வேண்டாம்' என்று நம்முன்னோர் கூறிப்போந்தனர். கோயில் அன்புநிலையால் அனைவரையும் ஈர்க்கும் ஓர் ஒப்பற்ற இடம். மனத்தூய்மையுடையவரே முருகனை முற்றாக உணரமுடியும். மற்றவர் மணிவாசகர் போல் "நாடகத்தாலுன்னடியார் போல்" நடித்து வாழ்பவர்கள். முழுமையான அன்புநிலையை உணர்ந்தவர் காரைக்காலம்மையார். அவர் உருவத்தினைக்காணாமலே இறைவனில் ஈடுபாடு கொண்டவர். வழிபடுவோரது சிறப்பினாலேயே கோயில்கள் சிறப்புப்பெறுகின்றனர். செல்வநிலை காட்டுகின்றன. இதைப் பரிபாடலடிகளும் விளக்குகின்றன.

"உடம்புணர் காதலரு மல்லாருங் கூடிக்
கடம்பமர் செல்வன் கடிநகர் பேண
மறுமிடற் றண்ணற்கு மாசிலோடந்த
நெறிநீர் அருவி யசும்புறு செல்வ
மண்பரிய வானம் வறப்பினும் மன்னுகமா"

மாறாத அன்பு கொண்ட அனைவரும் ஒருங்கே குழுமி செவ்வேள் காவலையுடைய கோயிலை வழிபட, மழையற்றுப் போயினும் செல்வம் நிலைப்பதாக என்று கூறும் வாழ்த்து. அன்பர்களின்

அன்பு மழையே எல்லாவற்றிலும் பெரிய செல்வம் என்று உணர்த்துகின்றது. அந்த அன்புதான் உலகத்தை இடுக்கணிலிருந்து விடுவிக்கும் சக்தியுடையது. எல்லோரும் ஓர் நிலையுற்று, ஏற்றத்தாழ்வற்று ஆற்றங்கரையானின் அன்பிலே ஈடுபட்டுநிற்கும் இடம் என்ற பெருநிலையால் செழிப்புற்றே அக்கோயில் 'செல்வச் சந்நிதி' என்று அடைபெற்று அழைக்கப்பட்டது போலும். அழியும் பொருட்செல்வமன்றி அழியாத அன்புச் செல்வம்நாடிச் சந்நிதி வந்து அடைக்கலமானவர் ஆற்றங்கரையானின் அருகு உணர்ந்தனர். வேலின் துணையே துணையாகவும் துறந்து பயமற்று வாழ்வர். மக்கள் வாழுமிடங்களிலே மண் வளம் மிக்கது ஆற்றங்கரை. அதிலும் ஆறு கடலுடன் சங்கமமாகும் கழிமுகம் மிகவும் செழிப்பானதென்பர். கழிமுகத்தமர்ந்த வேலனை, சூரன் உடல் கிழித்துவானவர் துயர் தீர்த்த வெய்யோனை, விண்ணவர் சிறைமீட்டானை, அன்பர் நெஞ்சில் வந்து அமர்ந்தானை, சந்நிதி கொண்டானை, வழிபாட்டால் வாழ்த்தின் செல்வம் பெருகும். துயர் அருகும். அவன் அருளால் அவன் தாள் வணங்கினோர் பலர். அவர் வழிச் சென்றோர் பலர். எல்லோரும் சென்ற வழியே நாமும் சென்று ஆற்றங்கரையானைக் கூடுவோமாக. செல்வச் சந்நிதியை நாடுவோமாக.

ஆற்றங்கரையானை அடையும் நாளும் எதுவோ!

# 7

## செல்வச் சந்நிதியும் மக்கள் கலையும்

தமிழர்களுடைய கோயில்கள் அவர்களுடைய பண்பாட்டு நிலக்களன்கள் என்று கொள்வதிலே எவருக்கும் கருத்துவேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை. பண்பாடு என்றால் என்ன என்பதுபற்றி இவ்விடத்திலே விளக்கமளிப்பது அவசியமாகும். மனித சமூகங்களை மக்கள் வாழ்க்கை நிலைகளுடன் தொடர்புறுத்தி ஆராய்வது பண்பாட்டு மானிடவியல்துறை. அவ்வாறு ஆராயும்போது, ஒவ்வொரு சமூகத்தின் குறிப்பிட்ட வாழ்க்கைக் கோலம் களமாக அமைந்து விடுகின்றது. மானிடவியற்றுறையைச் சார்ந்த கலைச்சொல்லாக பண்பாடு கருதப்படும்பொழுது, அச்சொல் மனிதவாழ்வின் சகல அம்சங்களுடன் பொருந்திய முழுவரலாற்றையுமே சுருக்கிக் கூறிவிடுகின்றது. அவ்வரலாற்றிலே குடும்பம் ஒரு சமூகத்தின் பகுதியாக அமையும் பொழுது அக்குடும்பத்தின் அங்கத்தவனாகிய மனிதனின் வாழ்வு, செயற்பாடுகள் ஆதியனபற்றிய கதையே கூறப்படுகின்றது. உணவு, உடை முதலியன தயாரிப்பதிலும், உற்பத்தி செய்யப்படுவதிலும் பின்பற்றப்படும் வழக்கங்கள், பழக்கங்கள், வீடு கட்டுவதில் கவனிக்கப்படும் வழக்கங்கள்,திருமண நடைமுறைகள், மரியாதை செலுத்துவதிலே பின்பற்றப்படும் முறைமைகள், பொதுவான நடத்தைகள், குறியீடுகள், மரபுகள், புராணக் கதைகள், பரம்பரைக் கதைகள், கூத்துக்கள், கிராமியப் பாடல்கள், கதைகள், வைத்திய முறைகள் மாந்திரீகம், சமய நூல்கள், சமயக் கிரியைகள், வழக்கங்கள், விழாக்கள், சடங்குகள், கல்வி முறை, இசை, நடனம், விவசாய வாழ்வு, கலைகள், கைப்பணிகள் போன்றனவும், மனித வாழ்வுடன் தொடர்புடையனவும், அவ்வாழ்வினை நெறிப்படுத்துவனவுமாகிய வேறு பல விடயங்களும் பண்பாடு என்னும் சொல்லாலே சுட்டப்படுகின்றன.

செல்வச் சந்நிதிக் கோயிலின் சமூக, பண்பாட்டுப் பின்னணி பின்னர் ஆராயப்படவுள்ளது. எனினும், இவ்வியலில், பண்பாட்டுக்

கூறுகளுள் முக்கியத்துவம் பெறும் கலைபற்றி நோக்கப்படுகின்றது. பண்டைக்காலந்தொட்டே கோயில்கள் கலைமலிந்த இடங்களாக அமைந்து வந்துள்ளன. வழிபாடும் கூத்தும் எப்படிக் கோயிலை நிலைக்களனாகக் கொண்டமைந்தன என்பதுபற்றி எம்முடைய இத்திமரத்தாள் (பக். 61-71) என்னும் நூலிலே விரிவாக விளக்கியுள்ளோம். கோயில்களிலே, ஆடலும் பாடலும் இடம் பெற்றமைக்குப் பல சான்றுகள் உண்டு. திருஞானசம்பந்தர் திருவையாற்றுக் கோயிலிலே வீற்றிருக்கும் இறைவனைப் பாடுமிடத்து,

"புலனைந்து நெறிகலங்கி யறிவழிந்
திட்டைமே லுந்தி
யலமந்த போதாக வஞ்சேலென்
றருள்புரிவா னமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்றஞ்சி
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவையாறே"

எனக் கோயிலைச் சுற்றிப் பெண்கள் நடனமாடுவதையும் அந் நடனத்துக்குப் பக்கவாத்தியமாக முழவு அதிர்வதையும் குறிப்பிடுகிறார். பிற்காலத்திலே அந்தணப் பெருமக்கள் பூசை செய்யும் பெருங் கோயில்களிலே ஆடல் பாடற் பண்புகள் வெகுவாகக் குறையத் தொடங்கின. வேத கோஷமும், வாழ்த்தும் அங்கு முக்கியத்துவம் பெறலாயின. கிராமங்கள்தோறும் அமைந்திருந்த சிறுகோயில்களி லேயே திராவிட மக்கள்சார்புக் கலைகள் தொடர்ந்தும் பேணப்பட்டன. "கரக ஆட்டம், குளிர்த்தி, மடை, கஞ்சி வார்த்தல் போன்றவை அம்மனுக்குரியவை. அம்மன் கோயில்களிற் சித்திரபுத்திரநாயனார் கதை, செட்டிச்சி அம்மைகதை போன்றவை படிக்கப்படுவது வழக்கம். கரக ஆட்டத்துடன் உடுக்குப் பாட்டு, அம்மன் காவியம் போன்றவை படிக்கப்படும்." என்று சண்முகசுந்தரம் (1977:62) கூறிச்செல்கிறார்.

அம்மன் கோயில்களிலே கரக ஆட்டம் முக்கியத்துவம் பெற, முருகன் கோயில்களிலே காவடி ஆட்டம் முக்கியத்துவம் பெறுகின்றது. 'காவடி' என்ற சொல்லின் தோற்றம்பற்றி இங்கு விரிவாக நோக்குதல் அவசியமாகும். தமிழருடைய தொன்மை வாய்ந்த இலக்கியங்களாகிய சங்க இலக்கியங்களிலே முருகன் மலைத்தெய்வமாக வணங்கப் பட்டதற்குப் பெருந்தொகையான சான்றாதாரங்கள் உண்டு. (பண்டைத் தமிழருடைய மலை வணக்கம்பற்றிய விவரங்களுக்குப் பார்க்கவும்

A.Sanmugadas 1988). திருப்பரங்குன்றம், பழனி, திருத்தணி, கதிரைமலை போன்ற குன்றுகளிலே இன்றும் முருகன் கோயில்கள் இருக்கின்றன. குன்றின் உச்சியிலேயுள்ள குமரப்பெருமானுக்கு நிவேதிப்பதற்காகப் பால், பழம், பூ, பன்னீர், சந்தனம் போன்ற பொருட்களை எடுத்துச்செல்லும்போது அக்காலத்திலே அவற்றைக் காவுதடிளின் உதவியுடன் மலையுச்சிக்கு எடுத்துச்சென்றிருப்பர். நேர்த்தி வைப்பவரே இவற்றை எடுத்துச் செல்பவராயிருந்திருக்க வேண்டும். மட்டக்களப்பில் மிக அண்மைக்காலத்திலுங்கூட மணம் பேசும்போது 'வேள்வு' எடுக்குமிடத்துப் பழம், தயிர் முதலியனவற்றைக் 'கா' விலே கொண்டு செல்லும் வழக்கமிருந்தது. ஆண்கள் 'கா' தூக்குமிடத்துப் பழம், தயிர் முதலியனவற்றைக் 'கா' விலே கொண்டு செல்லும் வழக்கமிருந்தது. ஆண்கள் 'கா' தூக்குவதாலும் பெண்கள் பெரும்பாலும் 'கா' அசைச்சொல் சேர்த்துப் பேசுவதாலும் "ஆடவர் தோளிலுங் கா; அரிவையர் நாவிலுங் கா" என்றொரு தொடர் மட்டக்களப்பிலே வழக்கில் உண்டு. இவ்விடத்திலே 'காவடி' என்பதற்கு த. சண்முகசுந்தரம் (1981:2-3) கொடுக்கும் நீண்ட விளக்கத்தினைப் பயன் கருதி தருகின்றோம்.

> "உன் அருளாலே விளைந்தவற்றை உனக்குப் படையல் செய்கிறேன்" என்பதே படையலின் நோக்கம். அப்படிப் பொருள்களை வீட்டிலேயே இருந்து கோயிலுக்கு எடுத்துச் செல்லக் காவுதடிகளைப் பயன்படுத்தினர். இந்தக் காவுதடிகளின் இரு பக்கத்திலும் பழம், பால், நெற்கதிர், தினைக்கதிர் என்பவற்றைக் கட்டித் தொங்கவிட்டனர். அப்படித் தொங்கவிட்ட காவுதடிகளை எடுத்துச் செல்லும்போது ஆடலும் பாடலும் இடம்பெற்றன. "வேலா! வேலா! விறகுதடி வேலன் பெண்டில் காவுதடி" என்ற மக்கள் பாடல் இங்கு நோக்கற்பாலது. காவுதடி எடுத்துச் செல்லும்போது பறை முதலாம் இசைக்கருவிகளும் ஒலிக்கப்பட்டன. நாளடைவிலே காவுதடிக்கு அழகு ஏற்றும் வண்ணப் பூக்களும், மயிற்பீலிகளும் சேர்க்கப்பெற்றன. "காவுதடி" என்னும் உழவர் காணிக்கையே நாளடைவில் "காவடி" என்றாயிற்று. காவடி எடுக்கும் நோக்கம் கடவுளருக்கு நன்றி செலுத்தல் என்ற நிலை ஏற்பட்டது. புயல், வரட்சி என்பவைகளைத் தவிர்த்து நிலத்தை விளையச் செய்பவன் கடவுள். அவனுக்கு நன்றிக்கடன் தெரிவிப்பதே காவடியின் முதல் நோக்கம். அதற்குப் பிற்காலத்தில் மெய்ப்பொருள் அடிப்படையில் விளக்கங்கொடுக்கப்பட்டது."

இந்த வகையிலேதான் "பாற்காவடி", 'சந்தனக்காவடி', 'பன்னீர்க்காவடி', 'புஷ்பக் காவடி' என்ற பெயர்கள் ஏற்பட்டன. செல்வச் சந்நிதி முருகன் கோயிலில் ஆண்டுதோறும் நடைபெறும் விழக்காலங்களில் பல்வேறு வகையான காவடிகள் யாழ்ப்பாண மாவட்டத்தின் பல இடங்களிலு மிருந்த வந்துசேரும். அவற்றை "ஆட்டக்காவடி", பாட்டுக்காவடி, செடிற் காவடி, முள்ளுமிதியடிக் காவடி, பறவைக்காவடி, அந்தரக் காவடி, பாற்காவடி, பிள்ளைக் காவடி, பிரதட்டைக் காவடி" எனச் சண்முகசுந்தரம் (1981 : 4) பாகுபடுத்துவார்.

எவ்வித ஆட்டமோ பாட்டமோ இல்லாமல் தம்முடைய நேர்த்திக்கடன்களைத் தீர்ப்பதற்குக் காவடிகளை எடுத்து முருகன் சந்நிதானத்திலே இறக்குவர். காவடிகள் எடுக்குமிடம் இரண்டு வகைப்படும். சாவகச்சேரி, கொடிகாமம் போன்ற தூர இடங்களில் இருப்பவர்கள் முதல்நாளே காலையில் சந்நிதியானின் தீர்த்தமாகிய தொண்டைமானாற்றிலே மூழ்கியெழுந்து, தத்தம் மடங்களிலிருந்து காவடிகளை எடுத்துக் கோயிலை வலம்வந்து இறக்குவர். இது ஒருவகை, தொண்டைமானாற்றுக்கு அண்மையிலுள்ள கிராமங்களிலுள்ளோர் தத்தம் கிராமங்களிலுள்ள கோயில்களிலிருந்து காவடிகளை எடுத்துவருவர். அவரவர் வசதிகளுக்கும், நேர்த்திகளுக்குமேற்றபடி காவடிகள் அமையும். வடமராட்சிப் பகுதியிலுள்ளோர் பலர் சந்நிதியிலிருந்து சிலமைல்களுக்கப்பாலுள்ள (பொலிகண்டியிலுள்ளது) கந்தவனக்கடவை கோயிலிலிருந்து காவடி வருதல் வழக்கமாகும். இவ்வாறு காவடி எடுக்கும்போது, நேர்த்தி வைத்தவர் தன்னுடைய உற்றார் உறவினர்களை வீடு வீடாகச் சென்று அழைப்பர். காவடி எடுத்து வந்து முருகன் முன்றிலிலே இறக்கிய பின்னர் ஏதாவது ஒரு மடத்திலே உணவு சமைத்து உற்றார் உறவினர்க்கு வழங்குவதும் உண்டு. பெரிய அளவிலே உணவு தயாரித்து அன்னதானம் வழங்குவதும் வழக்கம்.

காவடி வகைகளுள், ஆட்டக்காவடி எடுப்பவர்களுக்கு பயிற்சி அவசியமாகும். இக் கலையிலே கைதேர்ந்த கலைஞர்கள் செல்வச் சந்நிதி முருகனுக்குத் தங்களுக்குக் கைவந்த இக் கலையினையே நிவேதிப்பதற் காகக் காவடி எடுத்து இசையுடன் ஆடி வருவர். சந்நிதி முருகன் தேர்த் திருவிழா அன்று தொண்டைமானாற்றுப் பகுதியெல்லாம் ஆட்டக் காவடிக்காரரின் சலங்கை ஒலிகளாலே கலகலத்துப் போய் விடும். விழவொலியின் ஒரு கூறாக இதுவும் அமையும். இவ்வாறு பயிற்சி பெற்று ஆடுகின்ற ஆட்டக் காவடியைத் 'தாளக் காவடி' என்று அழைப்பர். "தாளக்காவடி ஆட விரும்பும் ஆர்வலர்கள் இதில் துறைபோகிய அண்ணாவிமாரிடம் மூன்று நான்கு மாதங்கள் முதல் ஆறு மாதங்களுக்கு மேல் முறையான பயிற்சி பெறவேண்டும். கிராமியக் கோலங்களும் கலைத்துவமும் இணைந்த கலைவடிவம் தாளக்காவடி" என்று கூறுவர்

கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை (1989 :2) இக் கலையிலே துறைபோன அண்ணாவிமார்களென ஆவரங்கால் கந்தப்பிள்ளை, நெல்லியடி சுந்தர், கதிரேசு, நற்குணம், குரும்பசிட்டி சின்னத்துரை, முருகன் தம்பன், கிருஷ்ணன், நவக்கிரி நாகலிங்கம், இணுவில் ஏரம்பு, அளவெட்டி இளையதம்பி, ஆகியோரைக் குறிப்பிடுவர். கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை. செல்வச்சந்நிதி முருகன் பெயரிலே அமைந்த தாளக்காவடிப் பாட்டும், தாளக்கட்டுகளும் பின்வருமாறு:

செல்வச் சன்னிதியிலே யமரும்
பன்னிருகை வேலவனே தா, தக
தாகுட சும்தரி தெய்

செல்வச் சன்னிதியிலே யமரும்
பன்னிருகை வேலவனே தா, தக
தாகுட சும்தரி தெய்

தத்தா ஆ அகனி இஇ...
நிதில்லில்லானா சும்தரி தெய்

தத்தா ஆஅகனி இஇ....
நிதில்லில்லனா சும்தரி தெய்

சும்தரி தா சும்தரி தெய்
சம்தரி தா சும்தரி தெய்
நிதில்லில்லானா சும்தரி தெய்

தெய் தெய் தெய் தெய்
தெய் தெய் தெய் தெய்
தெய் தெய் தெய் தெய்
தெய் தெய் தெய் தெய்
தெய் தெய் தெய் தெய்
தெய் தெய் தெய் தெய்

தாளக்கட்டு

தத்தி தகணக சொம்தரி கிடதக
தாகு சிணுத சிணு, தாகு சிணுத சிணு
தாதா கிறுதக சொம்.

தகதித் தகணக சொம்தரி கிடதக்
தாகு சிணுத சிணு, தாகு சிணுத சிணு
தாதா கிறுதக சொம்

தத்தி தகணக சொம்தரி கிடதக
தகதித் தகணக சொம்தரி கிடதக

தத்தி தகதி
தாத்தா கிறுதக சொம்
தாத்தா கிறுதக சொம்

தகத தீம் தக
ததீம் தத்த தா

நடை

தத்தித்தா தகதித்தைய்
தத்தித்தா தகதித்தைய்
தத்தித்தா தகதித்தைய்

தெய் தெய் தெய் தெய்
தெய் தெய் தெய் தெய்
தெய் தெய் தெய் தெய்

பாட்டு

பாஸ்கரன் பணிய நன்மை
தருவாரே
பச்சை மயில் ஏறி நிதம்
தத்தா கிறுதத் தொம்
கிறுதத் தா
கிறுதத் தெய்
பாஸ்கரன் பணிய நன்மை
தருவாரே
பச்சை மயில் ஏறி நிதம்
தத்தா கிறுதத் தொம்
கிறுதத் தா

(மீட்டல்)

பாஸ்கரன் பணிய நன்மை
தருவாரே
பச்சை மயில் ஏறி நிதம்
தத்தா கிறுதத் தொம்

(மீட்டல்)

நடை

தெய் தெய் தெய் தெய்
தெய் தெய் தெய் தெய்
தாதித்தா தாதித்தித் தெய்
தாதித்தா தாதித்தித் தெய்
தரிதொம் தரிதொம்
தரிதொம் தரிதொம்
தெய் தெய் தெய் தெய்
தெய் தெய் தெய் தெய்

தாளக்கட்டு

தாதா தாதா திங்கிண்ணா
தகதா தாதா திங்கிண்ணா
தளாங்குதா
தளாங்கு தெய்
தளாங்கு தரிகிட
தக, ததிங்கிண தொம்

(மீட்டல்)

பாட்டு

பஸ்கரன் பணிய நன்மை
தருவாரே
பச்சை மயில் ஏறி நிதம்
(வள்ளி தெய் வானையுடன்)
தாதா கிறுதத் தொம்; கிறுததா, கிறுத தெய்

தெய் தெய் தெய் தெய்
தெய் தெய் தெய் தெய்
தாதொம் தரிதொம்

தாதொம் தரிதொம்
தெய் தெய் தெய் தெய்
தெய் தெய் தெய் தெய்

தாளக் கட்டு

தகணக சொம் ஸூம்
தத்தா தித்தெய்,
தரிகு சொம் சொம்
தத்தா தித் தெய்,
தகணக சொம் சொம்,
தரிகு சொம் சொம்
தக்கரம்,
டக்கரம்,
டட்ட,
டிங்கிட,
டணக
டிங்கிட,
டணக
டிங்கிட
கிறுதா, தத்திதொம்

(மீட்டும்)

நடை

த தொம் தரி தொம்
த தொம் தரி தொம்
தெய் தெய் தெய் தெய்
தத்திதா தகதி தெய்
தத்திதா தகதி தெய்
தத்திதா தகதி தெய்

செல்வச் சந்நிதியிலே....

தாளக்கட்டு

தாகுட சும்தரி தா
ததிங்கிண தொம்
தக ததிங் கிண தொம்
தகதிகதக ததிங்கிண தொம்

தரிகிட சுந்தரி தா
தகிங்கிண தொம்
தகததிங்கிண தொம்
தகதிக தக ததிங்கிண தொம்

தனகுட சுந்தரி தா
ததிங்கிண தொம்
தக ததிங்கிண தொம்

தரிட சுந்தரி தா
ததிங்கிண தொம்
தகததிங்கிண தொம்

தாகுட சுந்தரி தா
ததிங்கிண தொம்

தரிகிட சுந்தரி தா
ததிங்கிண தொம்

தாகுட சுந்தரி
தரிகிட சுந்தரி
தாகுட சுந்தரி
தரிகிட சுந்தரி

தாதா கிறுதகனூம்
தாதா கிறுதகனூம்
தகுத தீம்தக
ததீம் தத்த தா

பாட்டு

செல்வச் சந்நிதியிலே யமரும்
பன்னிருகை வேலவனே தா, தக
தாகுட சும்தா தெய்

தெய் தெய் தெய் தெய் தெய்

தெய் தெய் தெய் தெய் தெய்
தாதெய் தாதெய்
தாதெய் தாதெய்

தீர்மானம்

தித்தாம் கிறுதக
தித்தாம் கறுதக
தித்தாம் கிறுதக
தீந்த தீம்

தித்தாம் கிறுகதீம்
தித்தாம் கிறுகதீம்

தகுத தீம்தக
ததீம் தத்தா.

முடிவு

ஏலையலோ தத்தெய்யாம் ஏலையம்மா
ஏலையலோ தத்தெய்யாம் ஏலையம்மா
ஏலையலோ தத்தெய்யாம் ஏலையம்மா
ஏலம் சிலாபமும் மன்னாரும் கண்டு
எழில் மேவு பாம்பன் வாய்க்காலும் தாண்டி
சீரான புத்தளம் கற்பிட்டி முனையும்
சிறப்போடு தாண்டி போகுதடா கப்பல்

தெய் தெய் தெய் தெய்
தெய்யக்க தெய்தோம்
தரிகிட தரிகிட
தகதீம் தெய்தோம்

(மீட்டும்)

நீர் கொழும்பு தெரியுதடா - தென்றல்
நேராக வீசுதடா - ஏலோ
ஏலையலோ தத்தெய்யாம் ஏலையம்மா
ஏலையல்லோ தத்தெய்யாம் ஏலையம்மா

தெய் தெய் தெய் தெய்
தெய்யக்க தெய்தோம்
தரிகிட தரிகிட
தகதீம் தெய்தோம்

தெய் தெய் தெய் தெய்
தெய் தெய் தெய் தெய்

தித்தாம் கிறுதக
தித்தாம் கிறுதக,

தித்தாம் கிறுதக
தீந்த தீம்,
தித்தாம் கிறுதக தீம்
தித்தாம் கிறுதக தீம்,

தகுத தீம் தக
ததீம் தத்த
தா.

தாளக்காவடியில் 'கப்பலாட்டம்' சிறப்பு மிக்கதாகும். (மேற்படி தாளக்காவடிப் பாட்டில் "ஏலையெலோ..." என்று தொடங்கும் பகுதியைப் பார்க்கவும்) "கப்பலாட்டத்தில் ஆடுபவர்கள் ஒரு பக்கத்துக்குப் பார்த்தபடி ஆட்டத்தைத் தொடங்கி, பின் நான்கு பக்கங்களையும் பார்க்கக் கூடியதாகத் திரும்பித் திரும்பி ஆடுவர். நாட்டுக்கூத்தில் வட்டக்களரியில் ஆடும்போது நான்கு பக்கங்களுக்கும் நடிகர்கள் சுற்றிவந்து ஆடுவதுபோலக் கப்பலாட்டம் நாலுபக்கமும் பார்க்கத்தக்க விதத்தில் அமையும். அலை வீசுதல், கப்பல் ஆடுதல், வேகமாகச் செல்லுதல், நங்கூரம் பாய்ச்சுதல் போன்ற விதத்தில் பாடல்களும் தாளவரிசைகளும் ஆட்டங்களும் இணைந்து பிணையும், நான்கு பக்கங்களுக்கும் சென்று ஆடும்வேளை ஓர் அந்தத்தில் இருந்து இன்னோர் அந்தத்துக்குச் செல்லும்போது ஒருவகை அழகு துள்ளல், பாய்ச்சல் என்பன ஆட்டத்தில் இடம்பெற்று மெருகேற்றும்" (ஏ.ரி. பொன்னுத்துரை, 1989 : 6).

முறையான பயிற்சியின்றிப் பக்கவாத்திய இசைக்கேற்றபடி ஆடிவரும் காவடிகளை ஆட்டக்காவடி என்று கூறுவதைவிடப் பாட்டுக்காவடி என்று கூறுவது பொருத்தமாகும்.

"கூத்தாடி யாடியே ஆடாடுபக்தா
குரைவையிட்டழுது ஆடாடுபக்தா

நேத்திரம் நீர்சொரிய ஆடாடுபக்தா
நெஞ்சில் நேசம்செறிய ஆடாடுபக்தா

வேண்டுவன் வேண்டிநின் றாடாடுபக்தா
வேதங்க ளோதிநின் றாடாடுபக்தா
ஆண்டுதோ றும்வந்து ஆடாடுபக்தா
ஆனந்த சந்நிதிமுன் ஆடாடுபக்தா

என்று பக்தர்கள் பாட உடுக்கு, சல்லாரி, நாதஸ்வரம், தவில் முதலியன அப்பாடல்களுக்கு அணிசெய்ய காவடிகள் ஆடிவரும் காட்சி கண்ணைக் கவரும்; பாடல்கள் உள்ளத்தை உருக்கும்; எம்மையுமே ஆடும்படி அவை உருக்கூட்டும். செடிற் காவடி என்பது உடலெல்லாம் அலகு (இரும்பினாலே செய்யப்பட்ட ஊசிகள்) பாய்ச்சிக் காவடி எடுத்து வருவதாகும். முதுகிலே பல சிறிய அலகுகள் குத்தப்பட்டு, அவற்றுடன் தனித்தனியே பொருத்தப்பட்டுள்ள சிறிய கயிறுகள் எல்லாவற்றையும் ஒருங்குசேர்த்து ஒருவர் (இதிலே அனுபவம் வாய்ந்தவர்) பின்னாலே இழுத்துப் பிடிக்க செடிற் காவடிக்காரர் ஆடிவருவார். "முருகா முருகா" என்ற கோஷங்களும், காவடிப் பாடல்களும் செடிற் காவடிக்காரருக்குப் பக்திப் பரவசத்தை ஏற்படுத்தும்.

முட்கள் (இரும்பு) பதித்த மிதியடிகளைப் பாதங்களிலே அணிந்துகொண்டு காவடி எடுத்துச் சந்நிதிக்குவரும் பக்தர்கள் பலர். இத்தகைய காவடியை முள்ளுமிதியடிக் காவடி என்பர். தூக்குக் காவடி அல்லது அந்தரக் காவடி என்பது செல்வச் சந்நிதியிலே 1955ஆம் ஆண்டு முதலே எடுக்கப்பட்டுவந்தது என அறியப்படுகின்றது. (இத்தகவலைச் சொல்லியவர் கவிஞர் காரை எஸ். சுந்தரம்பிள்ளை) தூக்குத்தண்டனை தீர்க்கப்பட்ட ஒருவர் அத்தண்டனையிலிருந்து விடுபட்டபோது நேர்த்திக்காகச் செல்வச் சந்நிதியான் கோயிலைச் சுற்றித் தூக்குக்காவடி எடுக்கமுனைந்தார். சகடை போன்ற ஒன்றிலே இரு பக்கத்திலும் மரங்கள் நிறுத்தி, அவற்றின் மேல்முனைகள் இரண்டையும் பொருத்தி ஒரு குறுக்கு மரம் அமைக்கப்பட்டது. காவடிக்காரர் இரண்டு சுன்னங்களூடாக ஊசி ஏற்றப்பட்டுப் பத்மாசன நிலையில் இருப்பார். அவருடைய இரண்டு தொடைகளிலும், முதுகின் இரு பக்கங்களிலும், இரண்டு தோள்களிலும் பெரிய முட்கள் ஏற்றப்பட்டு அவற்றின் முனைகள் கயிறுகளுடன் தொடுக்கப்படும். எல்லாக் கயிறுகளையும் ஒன்றாகச் சேர்த்துக் குறுக்கு மரத்திலே இறுக்கமாகக் கட்ட, காவடியைத் தோளிலே தாங்கிய நேர்த்திக்காரர் அந்தரத்திலே தொங்கிக்கொண்டு ஆடிக்கொண்டிருப்பர். அந்தரத்திலே தொங்கிக் காவடி கொண்டு வருவதால் இது அந்தரக் காவடி எனவும் அழைக்கப்பட்டது. இவ்வாறு தொங்குபவருடைய காலிலும் செடில் குத்தப்பட்டு, பின்பக்கமாகக்

கால்களையும் நீட்டிப் பறவை போல அந்தரத்திலே தொங்கிக் காவடி எடுத்தவருதலே பறவைக் காவடி எனப்பட்டது.

இவ்வாறு பலவகைப்பட்ட காவடிகள் ஆற்றங்கரையானின் சந்நிதியை வலம்வரும். இக்காவடிகளுக்கு இசைக்கப்படும் இசைக்கருவிகள்பற்றியும் சிறிது நோக்கவேண்டும். காவடிகளுக்குப் பொதுவாக நாதஸ்வரமும் தவிலும் உபயோகப்படும். "இதற்குக் காவடி மேளம் என்ற பெயருண்டு" எனக் கூறுவர் த, சண்முகசுந்தரம் (1981 :5) காவடிக்குத் தவில் தனித்துவமான முறையிலே முழங்கும். "காவடி மேளம் கலகலத்துப் பேசும்" என்ற பழமொழிக்கேற்ப ஆற்றங் கரையானின் வீதியிலே எண்ணிலடங்காக் காவடிகளின் ஆட்டமும் அதற்கேற்ப மேளங்களின் ஒலியும் உண்மையில் கலகலப் பாகவே இருக்கும். காவடி ஆட்டத்துக்குப் பறைமேளம் உபயோகப்படும் விடயம் இங்கு விதந்து கூறப்படவேண்டிய தொன்றாகும். பறை பண்டைத் தமிழருடைய சிறப்பான இசைக்கருவியாக அமைந்தது. அது பற்றித் தமிழர் சால்பு ஆசிரியர் சு. வித்தியானந்தன் பின்வருமாறு கூறுவார். (பக், 283):

> "ஆடலிலும், போரிலும், இசை விழாக்களிலும் பறைக்கருவி சிறந்த இடம் பெற்றுந்தது. பறையின் சீர்க்கு ஏற்ப மக்கள் ஆடினரென முன்பு கூறினோம். பலவகைப் பறைகளைச் சங்க நூல்கள் குறிப்பிடுகின்றன. அவை யாவும் பெரும்பறை, சிறுபறை என்ற இரு பிரிவில் அடங்கும். பெரும் பறைகள் முழவு எனவும் வழங்கும். இவ்விரண்டில் முழவு சிறப்பாக விழாக்காலங்களிலேயே முழங்கியது. முரசம் போர்ப்பறையாக வழங்கியது"

இவ்வாறு தமிழருடைய சிறப்பான கருவியாக விளங்கிய பறை பிற்காலத் தமிழர்களிடையே, குறிப்பாக, ஈழத் தமிழரிடையே ஓர் அமங்கல வாத்தியமாகவும், இழிந்த சாதியினரின் இசைக்கருவியெனவும் கொள்ளப்பட்டது. எம்முடைய துரதிர்ஷ்டமே. பறையின் முழக்கு ஈழத்திற் சில கோயில்களிலேயே கேட்க முடிந்தது. இக்கோயில்களிலே பொங்கல், படையல், குளிர்த்தி, காவடியாட்டம் போன்ற சந்தர்ப்பங்களிலேயே பறையின் முழக்கு இடம் பெற்றது. இதனை பொங்கற்பறை, குளிர்த்திப்பறை, காவடிப்பறை என வகைப்படுத்திக் கூறலாம். பொங்கல், குளிர்த்தி நடைபெறும் சந்தர்ப்பங்களிலும், காவடி ஆடிவரும் வேளைகளிலும் உருவேறிச் சிலர் ஆடுவதுண்டு. அச் சந்தர்ப்பத்திலே முழக்கப்படும் பறையினை உருவாட்டப் பறை எனக் கூறுவர். பொங்கற் பறையினையும், குளிர்த்திப் பறையினையும் அம்மன் கோயில்களிலே கேட்கலாம். காவடிப் பறையினையும், உருவாட்டப் பறையினையும் முருகன் கோயில்களிலும் கேட்கலாம். ஆற்றங்

கரையான் சந்நிதியிலே இப்பறைகளின் ஒலியினைத் திருவிழாக் காலங்களிலே கேட்கலாம்.

பறை தொடர்பாக ஆற்றங்கரையான் ஆலயத்திலே ஆண்டுதோறும் நிகழ்ந்துவந்த ஒரு நிகழ்வு குறிப்பிட வேண்டிய தொன்றாகும். சந்நிதியில் ஆண்டுதோறும் திருவிழாக் காலங்களில் நெல்லியடியிலிருந்து ஒருவருடைய தலைமையிலே ஒரு குழுவினர் வந்து கோயிலைச்சுற்றி அற்புதமான முறையிலே பறை முழங்கிவரும் காட்சியினைக் காணலாம். பல்வேறு வகையான தாளக்கட்டுகளை இச் சந்தர்ப்பத்திலே கேட்டு மகிழக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. இக்குழுவின் தலைவருக்கு நெடுங்காலமாகப் பிள்ளைப் பாக்கியமில்லாது இருந்தது. சந்நிதியானின் அருளை வேண்டியிருந்த இவர் தனக்குப் பிள்ளைப் பாக்கியம் உண்டாயின் ஒவ்வோராண்டும் பெருமானின் சந்நிதியிலே பறை முழக்குவதாக நேர்த்தி செய்துகொண்டார். முருகப்பெருமானின் அருளாலே பத்துக்குக் குறையாத பிள்ளைகள் அவருக்குக் கிடைத்தன. சந்நிதியானுக்கு ஆண்டுதோறும் பறைமுழக்கும் கிடைத்தது. (இத்தகவலைத் தந்தவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த் துறையைச் சேர்ந்த எஸ். சிவலிங்கராசா). எவருமே அழையாமல் இக்குழுவினர் வந்து உள்ளம் உருகிஉருகி கோயிலைச் சுற்றிப் பறை முழக்குவதைக் கேட்டவரும், கண்டவரும் இந் நிகழ்ச்சியினை என்றுமே மறவார்.

காவடிக்கு இசைக்கப்படும் இன்னோர் இசைக்கருவி உடுக்கு ஆகும். இக்கருவியினுடைய முக்கியத்துவம் பற்றி, ஏ.ரி. பொன்னுத்துரை (1989) :

> "ஒரு கோணத்திற் பார்க்கும்போது உடுக்கு இக் கருவிகளுள் தனித்துவமும், முக்கியத்துவமும் உடையதெனலாம். ஆடற் தெய்வமாகக் காட்சியளிக்கும் இறைவன் கரத்தில் உடுக்கினைத் தாங்கி ஆடுகின்றான். நாதவடிவாய்ப் பிரபஞ்சம் இருக்கும் வகையைக் காட்டுவதென்றும், படைத்தல் தொழிலை இது பிரதிபலிக்கின்றதென்றும் சமயவாதிகள் கருதுவர். ஆனால், நாம் நம்பவேண்டிய முக்கிய அம்சம் உடுக்கு மிகப் பழமையான ஏன் மூலாதாரமான - ஒரு வாத்தியக்கருவி என்பதே ஆகும்."

என்றும் கூறுவர். "காவடி மேளம் கலகலப்பது" போல உடுக்கு வாத்தியமும் "பேசும்" என்று கூறுவர்.

"சிற்றுடுக்கோ பேசுதில்லை - எங்கள்
தேவியரே வாருமம்மா
பெரிய உடுக்கோ பேசுதில்லை - எங்கள்
பேச்சியரே வாருமம்மா"

என்று காத்தவராயன் நாடகத்திலே காப்புப் பாடுபவர்கள் பாடுவதை இங்கு மனங்கொள்ளலாம். உடுக்குப் பண்டைத் தமிழருடைய இசைக்கருவிகளுள் ஒன்றாக அமைத்திருந்தது. சிறுபறைகளுள் ஒன்றாக உடுக்க அல்லது உடுக்கை என்னுங் கருவி அமைந்திருக்கவேண்டும். சங்க இலக்கிய நூல்களுள் ஒன்றாகிய பரிபாடலில் (2 : 22)

"புகையிரு ளுடுக்கைப் பொலம்பனைக் கொடியோற்கு"

என்று செய்யுளடியிலே பலதேவரின் கையிலிருப்பதாக இக்கருவி குறிப்பிடப்படுகிறது. உடுக்கை வாத்தியத்துக்குத் 'துடி' என்றொரு பெயரும் உண்டு. ஏனைய சங்க இலக்கிய நூல்களிலே பல சந்தர்ப்பங்களில் 'துடி' பற்றிக் கூறப்பட்டுள்ளது. சூரனை வாரியிலே இரண்டாகப் பிளந்த பின்னர் முருகன் ஆடிய கூத்து 'துடிக்கூத்து' எனச் சிலப்பதிகாரம் கூறும். திருப்பரங்குன்றத்திலே வீற்றிருக்கும் முருகனை முன்னிலைப் படுத்தி பெண்ணொருத்தி ஆடுவதை,

"சுடுபொன் ஞெகிழத்து முத்தரி சென்றார்ப்ப
துடியி னடிபெயர்த்துத் தோளசைத்துத் தூக்கி
அடுநறா மகிழ்தடப வாடுவா டகைமையின்"

என்று பரிபாடல் (21:18-20) கூறும். இங்கு சூரனை வென்று திருப்பரங்குன்றத்து வீற்றிருந்த முருகன், அச்சூரனை வென்று ஆடிய துடிக்கூத்தினைப் பாவனை செய்து ஒரு பெண் ஆடுகிறாள். அவளுடைய ஆட்டத்துக்கு உடுக்கையாகிய துடி இசையொலி வழங்குகின்றது. கடவுளர் தொடர்பான புராணக் கதைகளைத் திரும்பக் கூறுமிடத்து, அக்கடவுளாகவே தோன்றி ஆடும் மரபும், அதற்கு உடுக்கை பக்க வாத்தியமாக அமையும் நிகழ்வும் பண்டைத்தமிழர்களிடையேயும், ஜப்பானியரிடையேயும் காணப்பட்டது. பண்டைத் தமிழர் மரபுக்குப் பரிபாடலிலிருந்து முன்னர்க்காட்டிய கூத்து உதாரணமாக அமை கின்றது. பண்டைய ஜப்பானியரிடையேயும், இன்றும் அவர்களிடம் காணக்கூடியதுமான 'நோ' நாடகம் மேற்குறிப்பிட்ட கூற்றுக்கு ஆதாரமாக அமைகின்றது. பெரும்பாலும் கடவுளர் மாற்று வடிவத்திலே மனிதருக்கு முன்னர் தோன்றித் தாங்கள் யாரெனக் கூறிவிட்டுத் திடீரென மறைந்து, பின்னர் அக்கடவுளரே மேடையிலே தோன்றி மக்களுக்கு அருள்வழங்கும் வகையாக விறுவிறுப்பான கூத்து ஆடுவர். அவ்வேளையில் உடுக்கையின் வீறிட்ட ஒலியினைக் கேட்கலாம். ஜப்பானியரிடையே உடுக்கை ஒரு முக்கிய இசைக் கருவியாகத் திகழ்ந்து வருகின்றது.

இனி, 'உடுக்கை' என்னும் சொல் எப்படித் தோன்றியது என்பதை நோக்கலாம். 'துடி' என்னுஞ் சொல் 'உடுக்கை' என்பதை விடப் பழையதெனக் கொள்ள இடமுண்டு. 'துடி' யினுடைய பிற்கால நிலை

'உடு' ஆகியிருக்கலாம். நாணிலே அம்பினை ஏற்றி விடுவதற்குமுன், நாண்பின்னோக்கிக் கூம்பு வடிவாக வர, அக்கூம்பின் நுனிப் பகுதியே 'உடு' எனப்பட்டது. இவ்வாறு இரு கூம்பு நுனிகள் சேர்ந்த அமைப்பிலேயே துடி அல்லது உடுக்கை அமையும். பெண்களின் இடையினைத் 'துடியிடை' என்று கூறுவதை இங்கு மனம் கொள்ளலாம். 'துடி' என்ற சொல்லுக்கு நிகரான ஜப்பானிய மொழிச்சொல் 'துதுமி' என்பதாகும்.

ஆற்றங்கரையான் ஆலயத்துக்கும் உடுக்கைக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாலேயே, அக்கருவிபற்றி விரிவாக இங்கு நோக்கப்பட்டது.

செல்வச்சந்நிதி ஆலயத்திலே கூத்துக்கள் ஆடப்பட்டதற்கான சான்றுகளோ செய்திகளோ கிடைக்கவில்லை. இந்நூலுக்கு நிறைவுரை, எழுதிய பேராசிரியர் கா. சிவத்தம்பி பின் குறிப்பாகப் பின்வரும் செய்தியினைத் தந்துள்ளார்.

**பி.கு:** இந்நூலின் 117ஆம் பக்கத்திலே "சந்நிதியிற் கூத்துக்கள் ஆடப்பட்டதற்கான சான்றுகளோ, செய்திகளோ கிடைக்க வில்லை" என ஆசிரியர் குறிப்பிடுகின்றனர்.

1963ஆம் ஆண்டு இலக்கிய 'உலகில்' மரபுப் போரட்டம் நடந்து கொண்டிருந்த பொழுது, ஒரு சனியன்று இரவு கட்டுவனில் நடந்த ஒரு விவாதத்திற் கலந்துகொண்டுவிட்டு, அன்றிரவு சந்நிதியிற் நடந்த காத்தவராயன் கூத்தினைப் பார்க்கச் சந்நிதி சென்றேன். ஞாயிறு காலை எமதுறவினர் ஒருவர் அளித்த அன்னதானத்திற் கலந்து கொண்டு வீடு திரும்பினேன். அக்கூத்தினைப் பார்க்க எனது தகப்பனாரும் வந்திருந்தார்.

கா.சி

# 8

## செல்வச் சந்நிதி: சமூக, பொருளாதார, பண்பாட்டுப் பின்னணி

செல்வச்சந்நிதி பழந்தமிழர் பண்பாட்டின் சின்னமாக அமைந்துள்ளது. பண்டைத்தமிழ் இலக்கியங்களாகிய சங்க நூற் செய்யுட்களைப் படிப்பவர்கள் அக்காலத் தமிழ் மக்களுடைய பூர்வீக வாழ்வு வரலாற்றைக் கண்டுகொள்வர். அப்பாடல்கள் பல நூற்றாண்டுக் காலங்களைச் சேர்ந்த உதிரிப் பாடல்கள். உதாரணமாக: புறநானூறு என்னும் சங்க நூற்றொகுதியிலுள்ள 400 செய்யுட்களும் ஒரே காலத்தைச் சேர்ந்தவையல்ல. அப்பாடல்கள் குறிக்கும் தமிழர் வாழ்வு வரலாற்றை இப்பெருங் காலப்பகுதியாகப் பாகுபாடுசெய்து நோக்கலாம். இப்பாகுபாட்டுக்கு அடிப்படையாக அமைவது 'அரிசிப் பண்பாடு' (Rice culture) எனக் கூறலாம். நெல்லரிசி உணவாக முக்கிய இடம் பெறுவதற்குமுன், தினையே தமிழருடைய சிறப்பான உணவாக அமைந்திருந்தது. நெல்லரிசி தமிழரது உணவாக அமைதற்குமுன் வரகரிசி, தினையரிசி போன்றனவே அவர்களுடைய உணவாயமைந் தன. புறனானூறு 335ஆம் பாடலில் மாங்குடி கிழார் என்னும் புலவர் தம்முடைய உணவு. குடி, கடவுள்பற்றித் தெளிவாகக் குறிப்பிடுகிறார்:

"கருங்கால் வரகே யிருங்கதிர் தினையே
சிறுகொடிக் கொள்ளே பொறிகிள ரவரையொ
டிந்நான் கல்ல துணாவு மில்லை
துடியன் பாணன் பறையன் கடம்பனென்
றிந்தான் கல்லது குடியுமில்லை
ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி
ஒளிறேந்து மருப்பிற் களிறெதிர்ந்து வீழ்ந்தெனக்
கல்லே பரவி னல்லது
நெல்லுகுத்துப் பரவுங் கடவுளு மிலவே".

(இ-ள்) "கரிய அடிப்பாகத்தையுடைய வரகு, பெரிய கதிர்களையு டைய தினை, சிறு கொடிகளிலே விளையும் கொள்ளு. புள்ளிகளையுடைய அவரை என இந்நான்கு தானியங்களை விட வேறு உணவு எமக்கு இல்லை. துடியன், பாணன், பறையன், கடம்பன் என்னும் நான்கு குடிகளன்றி, வேறு குடிகள் எம்மிடையே இல்லை. ஒருவழிப்படாத பகைவர் முன்னிலை யிலே நின்று அவர் மேற்செலவை விலக்கி ஒளிபொருந்திய தந்தங்களையுடைய யானையினாலே எறியப்பட்டு வீழ்ந்த மறவனுக்கு அமைத்த வீரக் கல்லாகிய நடுகல்லினை வணங்குவது அன்றி நெல் உகுத்து வழிபாடு செய்யும் வேறு கடவுளர் நம்மிடையே இல்லை."

தமிழருடைய வரலாறு தொடர்பாக இப்பாடல் முக்கியமான தோர் இடத்தினைப் பெறுகின்றது. நெல்லரிசியும் பிறகடவுளர்களும், தமிழர் சமுதாயத்துக்கு அறிமுகமாகுஞ் சந்தர்ப்பத்திலே இச்செய்யுள் பாடப்பட்டுள்ளது. நெல்லரிசி பற்றியும் பிற கடவுளர் பற்றியும் புலவர் அறிந்திருக்கிறார். எனினும் காலங்காலமாக அவர் சமுதாயத்திலே இருந்துவந்த உணவு நெல் அல்ல; தினையும் வரகும் கொள்ளும் அவரையுமே. அங்கு நிலவிவந்த வழிபாடு நடுகல்லைத் தொழுதலே. நான்கு வகையான தானியங்களுள்ளும் தினையே பெருவாரியாகப் பயன்பட்டிருக்க வேண்டும். சங்கப் பாடல்களிலே தினைபற்றிப் பலஇடங்களிலே, குறிப்புக்கள் வருகின்றன. ஜப்பானிலும் நெல்லரிசி அறிமுகம் ஆகுமுன்னர் தினையே முக்கிய உணவாயிருந்தது. ஜப்பானிய மொழியிலே தினை "ஸினெ"(Sine) எனப்படும். தமிழ் நாட்டிலே தினையரிசி வழக்கிலிருந்த காலத்திலேயே முருகவழிபாடு இருந்ததென்பதற்கு முருகன் பற்றிய பிற்காலப் புராண மரபு வள்ளி முருகனுக்குத் தேனும் தினைமாவும் கொடுத்தது பற்றிக் கூறுவது ஓரளவு சான்றாகிறது. முருகக் கடவுளுக்குப் படையலிடும் போது, தினை முக்கிய இடம்பெறுவதைச் சங்கப் பாடல்கள் பல எடுத்துக் கூறுகின்றன:

**"களநன் கிழைத்துக் கண்ணி சூட்டி**
**வளநகர் சிலம்பப் பாடிப் பலிகொடுத்**
**துருவச் செந்தினை குருதியொடு தூஉய்**
**முருகாற்றுப் படுத்த உருகெழு நடுநாள்"**

(இ-ள்) "வெறியாடும் களம் நன்கு அமைக்கப்பட்டு, (வேலிற்கு)க் கண்ணி சூட்டி, வளம் பொருந்திய கோயிலில் ஒளியுண்டாகப் பாடிப் பலிகொடுத்து, அழகிய செந்தினையை இரத்தத்துடன்

கலந்து தூவி முருகனை வரவழைத்த அச்சம் பொருந்திய நடு இரவில்"

என்று அகநானூறு22ஆம் பாடல் கூறுகின்றது. திருமுருகாற்றுப் படையில்,

"சிறுதினை மலரொடு விரைஇ மறியறுத்து" (218)

"குருதிச் செந்தினை பரப்பிக் குறமகண்
முருகிய நிறுத்து முரணின ருட்க
முருகாற்றுப் படுத்த வுருகெழு வியனகர்" (242-44)

என்று முருகனுக்குத் தினை பலியாகக் கொடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது. இவ் வழிபாட்டின் எச்சமாகவே இன்றும் ஈழத்துப் பண்டைய முருகன் கோயில்களாகிய கதிர்காமம், செல்வச் சந்நிதி ஆகிய தலங்களில் தினை வழிபாட்டுப் பொருட்களுள் முக்கிய இடம் வகிக்கின்றது. கதிர்காமம் தொடர்பாகச் சண்முகசுந்தரம் (1977-56).

"செல்வச் சந்நிதியில் அந்தணர் அல்லாதோர் பூசை நடத்துகின்றனர். கதிர்காமம் உண்மையிற் காட்டில் உருவான பண்டைய முருகன் வழிபாட்டின் படிமுறை வளர்ச்சியே யெனலாம். வள்ளியைப் பற்றிச் செவிவழிவந்துள்ள கதிர்காமக் கதைகள் இக்கருத்தையே வலியுறுத்துகின்றன. இன்றும் வள்ளி வழங்கியதான தேனும், தினைமாவும் முருகனுக்குக் கதிர்காமத்திற் சிறப்பாகப் படையல் செய்யப்படுகின்றன."

என்று கூறியிருப்பது இச்சந்தர்ப்பத்திலே மனங்கொள்ளத் தக்கதாகும். செல்வச் சந்நிதியிலும் திருவிழாக் காலங்களிலே பெருந்தொகையானோர் தேன், தினைமா ஆகியவற்றாலே மாவிளக்குப் படையலிட்டு வழிபாடு செய்வதும் பண்டைய முருக வழிபாட்டின் எச்சமே. அத்துடன் செல்வச்சந்நிதி நெல்லரிசிக்கு முற்பட்ட அவரை இனத்தைச் சேர்ந்த பயறுடனும் தொடர்புடையதாயுள்ளது. செல்வச்சந்நிதி தொடர்பான கர்ண பரம்பரைக் கதையொன்று இதனை வெளிக்காட்டுகின்றது. கதிர்காமத்தில் கொடியேற்ற நாளில் முருகனைச் செல்வச்சந்நிதியிலிருந்து வழியனுப்புவதும், பின்னர் கதிர்காமத்துத் தீர்த்தத் திருவிழா அன்று நடுநிசியில் இங்கு திரும்பி வருவதாகவும் (கதிர்காமத்திலும் தீர்த்தத் திருவிழா அன்று முருகனை யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கும் நிகழ்ச்சி நடைபெற்று வந்தது.) சடங்குகளாக இன்றும் செல்வச் சந்நிதியிலே நடைபெறுவதை முன்னர்க் குறிப்பிட்டுள்ளோம். முருகன் இவ்வாறு திரும்பி வந்த ஒரு நாள் தனக்குப் பசியாகையால் உணவு கொடுக்கும்படி பூசகரைக் கேட்டதும், பயற்றந்

துவையலும் இளநீரும் கொடுக்கப் பட்டதுமான விடயம் கர்ண பரம்பரைக் கதைகளுடன் முன்னர் குறிப்பிடப்பட்டது. இன்றும் முருகன் கதிர்காமத்திலிருந்து திரும்பி வரும் நாளன்று நடைபெறும் பூசையிலே பயற்றம் உருண்டைகள் படையலாக்கப்படுகின்றன. கதிர்காமத்திலே முருகனுக்குத் தினைமா. செல்லச்சந்நிதியிலே அவருக்குத் தினைமாவுடன் பயற்றந்துவையலும். கதிர்காமத்திற்கும் யாழ்ப்பாணத்துக்கும் முருகவழிபாட்டுடன் இருந்த நெருங்கிய தொடர்பினைக் கதிர்காமத் தீர்த்தத்தின்போது முருகனை யாழ்ப்பாணம் அனுப்புஞ் சடங்கும்; செல்வச்சந்நிதியில் முருகனை வரவேற்குஞ் சடங்கும் சுட்டி நிற்கின்றன. இதனாலேயே கதிர்காமம் பற்றி நன்கறிந்த அருணகிரிநாதர் அத்தலம்பற்றிப் பல திருப்புகழ்கள் பாடிவிட்டு பின்வரும் பாடலில் யாழ்ப்பாணம் பற்றியும் பாடுகின்றார்:

பூத்தார் சூடுங் கொத்தலர் குழலியர்
பார்த்தால் வேலுங் கட்கமு மதன்விடு
போர்க்கார் நீடுங் கட்சர மொடுநமன் விடுதூதும்

போற்றார் நாளுங் கைப்பொரு ளுடையவர்
மேற்றாளர்தம் பற்றிடு ப்ரமையது
பூட்டா மாயங் கற்றமை விழியின ரமுதூறல்

வாய்த்தார் பேதஞ் செப்புபொய் விரகியர்
நோற்றே நூலின் சிற்றிடை யிடைபட
வாட்டாய் வீசுங் கர்ப்புர மிர்கமதை மகிலாரு

மாப்பூணாரங் கச்சணி முலையினர்
வெட்பூ ணாகங் கெட்டன னுனதுமெய்
வாக்கான ஞானம் பெற்றினி வழிபட வருளாயோ

ஆத்தாள் மாலதங் கச்சிக னியையுமை
கூத்தா டானந்தச்சிவை திரிபுரை
யாட்பேய் பூதஞ் சுற்றிய பயிரவி திரிலோக

மாக்கா யாவும் பற்றிய பரிபுரை
நோக்கா டேதுஞ் செற்றின டிருவிளை
யாட்டா னீசன் பக்கம் துறைபவள் பெறுசேய

ஏத்தா நாளும் தர்ப்பண செபமொடு
நீத்தார் ஞானம் பற்றிய குருபர
யாப்பா ஞாயுஞ் சொற்றமி ழருடரு முருகோனே

ஏற்போர் தம் வந்திச்சையின் மகிழ்வொடு
வாய்ப்பாய் வீசும் பொற்ப்ரபை நெடுமதிள்
யாழ்ப்பா ணாயன் பட்டின மருவிய பெருமாளே.

ஆண்டுதோறும் கதிர்காமத்திலிருந்து யாழ்ப்பாணம் வழியனுப்பப்படும் சடங்கினை மனதிற்கொண்டு, "யாழ்ப்பாணாயன் பட்டின மருவிய பெருமாளே" என்று முருகனைப் பாடுகின்றார் அருணகிரிநாதர். யாழ்ப்பாணத்திலிருந்த எத்தலத்தினை அருணகிரிநாதர் பாடினார் என்பது சான்றுகாட்டி நிரூபிக்கக்கூடிய வகையிலே அத்திருப்புகழிலே எவ்வித செய்தியுமில்லை. நல்லூர்க் கந்தசுவாமி கோயில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், செல்வச் சந்நிதி ஆகிய மூன்னுள் செல்வச்சந்நிதியையே அருணகிரிநாதர் பாடியிருக்கலாமென ஊகிக்க இடமுண்டு. அருணகிரிநாதர் கதிர்காமத்துக்கு நேரே தரிசிக்க வந்தாரோ என்னவோ தெரியவில்லை. ஆனால், அத்தலம் பற்றி நன்றாக அறிந்ததுடன் அதிலே அதிதீவிர ஈடுபாடும் உடையவராயிருந்தார். கதிர்காமத்திலே அமைந்துள்ள செல்வக்கதிர்காமம், தீர்த்த உற்சவம் முடிவடையும்போது யாழ்ப்பாணத்திலுள்ள செல்வச்சந்நிதிக்கு முருகனை வழியனுப்பி வைக்கும் சடங்கு ஆகியனவற்றை அருணகிரிநாதர் அறிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கலாம். எனவே, செல்வச்சந்நிதி மேவியிருக்கும் முருகனையே "யாழ்ப்பாணாயன் பட்டினமேவிய பெருமாளே" என்று பாடியிருக்கவேண்டும். கதிர்காமமும் செல்வச்சந்நிதியும் நெல்லரிசிப் பண்பாட்டுக்கு முற்பட்ட முருகவழிபாட்டு முறைமைகளைக் கொண்டமைந்துள்ளன.

கதிர்காமத்துக்கும் செல்வச்சந்நிதிக்கும் நெருங்கிய தொடர்பு இருந்ததென்பதற்கு, செல்வச்சந்நிதி தொடர்பான கர்ணபரம்பரைக் கதையே ஓரளவு சுட்டிநிற்கின்றது. செல்வச்சந்நிதியிலே முருகனை முதன்முதல் பூசித்து ஆதரித்துவந்த கதிர்காமர் என்வருடைய பெயரே ஒருவகையிலே அத்தொடர்புக்கு ஒரு குறியீடாக அமைகின்றது. அத்துடன் இரவோடிரவாகக் கதிர்காமம் சென்று கதிர்காமர் வேல் பெற்று வந்த கதையும் ஒருவகைக் குறியீடாக அமைகின்றது. கதிர்காமத் தீர்த்தத் திருவிழா அன்று செல்வச் சந்நிதியிலிருந்து கதிர்காமத்துக்கு

வேல் அனுப்பும் வைபவம் நடைபெறுவதுண்டு. அவ்வேல் கதிர்காமம் நோக்கி வானூடு ஆகாயத்தைக் கிழித்துக்கொண்டு செல்லும் என நம்பப்படுகின்றது. அன்று மாலையிலே வேல் ஆகாயமார்க்கமாகச் செல்வதைக் கண்டதாக வடமராட்சி கிழக்கு, தென்கிழக்குப் பகுதியைச் சேர்ந்த கிராமத்தவர்கள் தம்மிடையே கதைப்பதுண்டு. கதிர்காமத்துடன் செல்வச் சந்நிதிக்கிருந்து வந்துள்ள நெருங்கிய தொடர்பினை இக்கதையும் சுட்டி நிற்கின்றது.

உரு ஆடல், சந்நதம், வெறியாட்டு என்பனவெல்லாம் 'தெய்வேமேறல்' அல்லது 'தெய்வத் தன்மையுறல்' (Shamanism) பாற்படும். "தெய்வத்தன்மை பெற்றவன். மதசம்பந்தமான ஒரு தொழிலைச் செய்பவன். குடிகளாலே இயற்கைக்கப்பாற்பட்ட அனுபவம் என்று கருதப்படுகிற சக்திகளைக் கடவுகளிடமிருந்து நேராகப் பெற்றவனாக அவன் கருதப்படுகிறான்" என்று ருத் பெனடிக்ட் பண்பாட்டுக் கோலங்கள் (1934) என்னும் தன்னுடைய நூலிலே (தமிழாக்கம் 1964 : 95) குறிப்பிடுகிறார். செல்வச் சந்நிதிக் கோயிலின் முதற்பூசகராகிய கதிர்காமர் இத்தகைய தன்மையுடையவராகவே கருதப்பட்டார். இவர் வழிவந்த பூசகர்களும் இவ்வாறே கருதப்பட்டனர். தெய்வத்தன்மையுறலிலே மாயா ஜாலப் பயணங்களும் (Magical flights) அடங்குமென எலியாடே (1964 : 407-412) குறிப்பிடுவர். அவருடைய கூற்றின் ஒரு பகுதியை அப்படியே ஆங்கிலமொழியில் கீழே தருகிறோம்.

> "Ascension and magical flight have a leading place among the popular beliefs and mystical techniques of India. Rising into the air, flying like a bird, traveling immense distances in a flash, disappearing these are some of the magical powers that Buddhism and Hinduism attribute to arhats, kings and magicians. There are numerous legends of flying kings and magicians ......... But we would emphasize the identity in expression between such superhuman experiences and the archaic symbolism of ascent and flight, so frequent in shamanism."

சுவாமியார் மருதர் கதிர்காமரைக் 'கதிர்காமத்திற்குவா' என அழைக்க அவர் மறுத்தபோது, "நீ கண்ணை மூடி விழி" என்று கூற; கதிர்காமரும் அப்படியே செய்தார். அவர் கண்ணை மூடி விழிக்கத் தான் கதிர்காமத்திலே இருப்பதை அறிந்தார். இத்தகைய பயணம் தெய்வத்தன்மையுறலின் அடையாளமாகும். செல்வச்சந்நிதி ஆலயம் உலகத்தின் பல பாகங்களிலும் பண்டைக்காலந்தொட்டே நிலவி வருகின்ற, நம்பப்பட்டுவருகின்ற தெய்வத்தன்மையுறல் நடைமுறையுடன் தொடர்புடையதாயுள்ளது. தெய்வத்தன்மையுறல் சங்க

இலக்கியங்களிலே வெறியாடல், 'வேலன் ஆடல்' எனப்பட்டது. இது முருக வழிபாட்டுடனேயே தொடர்புற்றிருந்ததென்பது இங்கு மனங்கொள்ள வேண்டியதொன்று. தெய்வத்தன்மையுற்று, முருகனை முன்னிலைப்படுத்தும் அவனுடைய ஆயுதமாகிய அல்லது அவனைப் பிரதிபலிக்கும் வேலினை ஏந்தி ஆடிய காரணத்தாலே வேலனாடல்' எனப்பட்டது. சங்க இலக்கியங்களிலே வெறியாட்டுப் பற்றிக் குறிப்பிடுமிடங்கள் பின்வருமாறு:

"........................................ முன்றில்
நனைமுதிர் புன்கின் பூந்தாழ் வெண்மணல்
வேலன் புனைந்த வெறியயர் களந்தொறும்
செந்நெல் வான்பொரி சிதறி யன்ன"

(குறு. 53)

(இ-ள்) நீர்த்துறையின் முன்னிடத்தேயுள்ள அரும்பு முதிர்ந்த புன்கினது மலர்கள், உதிர்ந்துகிடக்க விளங்கும் வெண்மணற் பரப்பானது, வேலனாற் செய்யப்பெற்ற வெளியாட்டுக் களந்தோறும் செந்தெலினது வெண்பொரியைச் சிதறினாற் போன்ற தோற்றத்தைக் கொடுக்கும்."

கடபுகொடி யாத்துக் கண்ணி சூட்டி
வேறுபல் குரல ஒருதூக்கு இன்னியம்
காடுகெழு நெடுவேட் பாடுகொளைக்கு ஏற்ப
அணங்கயர் வியன்களம் பொலியப் பையத்
தூங்குதல் புரிந்தனர் நமர்................"

(அகம். 382: 3-7)

(இ-ள்) கடம்பினிடத்தே கொடியினைக் கட்டி, அதற்குக் கண்ணியும் சூட்டிப், பல்வேறு குரலையுடைய ஒரு தூக்கினையுடைய தாளத்தின் இனிய இசையினை முழக்கியவராக, நம்மவர், காட்டிற்பொருந்திய நெடுவேளாகிய முருகப்பெருமானுக்குப் பாடுகொள்ளுதற்குப் பொருத்தமான, வெறியாட்டுச் செய்யும் பரந்தகளம் சிறப்புற, மெல்ல வெறியாடுதலை நிகழ்த்தலையும் விரும்பினர்".

"முருகயர்ந்து வந்த மதுவாய் வேல"

(குறு. 362 : 1)

(இ-ள்) "முருகப் பெருமானை வழிபட்டு இங்கு வெறியாடுவதற்கு வந்தவனாகிய அறிவு முதிர்ச்சியுடைய வேலனே"

"முருகுமெய்ப் பட்ட புலைத்தி போல" (புறம் : 259:5)

(இ-ள்) "முருகனாகிய தெய்வம் மெய்யின்கண் ஏறிய புலைமகளைப் போல"

செல்வச்சந்நிதியிலே தெய்வமேறி ஆடுபவர்கள் பலரைக் காணலாம். முருகவழிபாட்டின் பண்டைய நிலையின் எச்சமாகவும், தெய்வத்தன்மையுறல் என்னும் நடைமுறைக்கு எடுத்துக்காட்டாகவும் இத்தெய்வமேறி ஆடும் நிகழ்வு அமைகின்றது. தெய்வத்தன்மையுறலின் ஓர் அங்கமாகப் பறை பற்றியும் எலியாடே (1964 : 168-176) கூறியுள்ளார். தெய்வத்தன்மையுற்றவர் தெய்வ உலகுக்கு ஏறவும், இவ்வுலகுக்கு இறங்கவும் பறையே துணை செய்கின்றதென அவர் கூறுவர். செல்வச்சந்நிதியிலே பறையறையச் சந்நதக்காரருக்கு "உரு ஏறுகின்றது" என்று கூறுவார்கள்.

சந்நிதிக்கந்தனை "அன்னதானக் கந்தன்" என அடியவர்கள் அன்புடன் கூறுவர். "இக்கோயிலின் முக்கிய நடைமுறைகளில் ஒன்று இங்கு நடைபெறும் அன்னதானமாகும்" (சிவத்தம்பி, 1984). அன்னதானம் பற்றிய விவரங்களும், அதன் நடைமுறைகளும் முன்னர்க் குறிப்பிடப்பட்டுள்ளன. சந்நிதி நேர்த்திகளின் ஒன்று அன்னதானமாகும். இங்கு அன்னதானம் கொடுப்பதும், அன்னதானச்சோறு சாப்பிடுவதும் வணக்கமுறைகளாக அமைந்துள்ளமை குறிப்பிடற்பாலதாகும். இச்சமய நடைமுறையின் அடிப்படைக்குச் சிவத்தம்பி (1984)

> **"அன்னதானத்தின் சமூக பொருளாதார முக்கியத்துவத்தை நோக்குதல்வேண்டும். ஒரு நிலையில் இது "குழுமநிலை உணவுப் பகிர்வினைக் (Communal meal) குறிக்கும். இன்னொரு மட்டத்தில் உபரிச் செல்வத்தைக் குழுமத்துக்குப் பயன்படும் முறையின் செலவு செய்வதையும் குறிக்கும். (Communally useful way of sharing the surplus)"**

என்று விளக்கங் கொடுக்கிறார். இந்நடைமுறையின் அடிப்படையை யாம் வேறொரு வகையிலே நோக்குகிறோம். சந்நிதி; நெல்லரிசிப் பண்பாட்டுக்கு முன்னர் இருந்த நிலைப்பாட்டினைப் பிரதிபலிக்கும் முருகக்கடவுள் வீற்றிருக்கும் தலம் எனவும், தினை, பயறு போன்ற தானியங்களுடன் தொடர்புடைய வழிபாட்டு நடைமுறைகளைப் பிரதிபலிக்கும் இடம் எனவும் இவ்வியலின் முற்பகுதியிலே குறிப்பிட்டுள்ளோம். நெல்லரிசி தமிழர் சமூகத்திலே இடம்பெறத் தொடங்கியபோது அது உபரிச் செல்வமாகவன்றி, அரிய செல்வமாகவே அமைந்தது. சங்கப்பாடல்களைப் படிப்பவர்கள் நெல்லரிசிச் சோற்றின் அருமையை அக்காலப் புலவர்கள் தம்பாடல்களிலே குறிப்பிடப் பட்டுள்ளமையை நினைவு கூர்வார்கள். "நெல்லென்னா

பொன்னென்னா கனற்றக் கொண்ட நறவென்னா" (புறநானூறு 384) எனவும் "நெற்பல பொலிக பொன்பெரிது சிறக்க" (ஐங்குறுநூறு 1) எனவும் பொன்னைவிட நெல் முதன்மை பெற்றதாக இருந்தது. சங்க இலக்கியங்களுள், ஆற்றுப்படைச் செய்யுட்களைப் படிக்கும்போது, குறிப்பிட்ட சில இடங்களிலேயே நெல்லரிசிச் சோறு கிடைப்பது பற்றிய செய்தியினை அறிகிறோம். உதாரணமாகப் பெரும்பாணாற்றுப் படைச் செய்யுளை நோக்குவோம். எயிற்றியர் குடிக்குச் செல்லும் பாணர்களுக்கு புல்லரிசியையும் தசையையும் இட்டு ஆக்கிய சோற்றினைத் தேக்கிலையிலே கொடுப்பார்கள். எயினர் அரணிலே தங்கினால், அவர்களுக்கு ஒவ்வொரு வீட்டிலும், மேட்டு நிலத்தே விளைந்த நெல்லினது சிவந்த அவிழாகிய சோற்றை உடும்பினது பொரியலுடன் கொடுப்பர். இடையர் குடியிருப்புக்குப் போனால் அங்கு வரகரிசியுடன் அவரை விதையின் பருப்பும் சேர்த்துச் செய்யப்பட்ட உணவினைப் பாணர் பெறுவர். உழவருடைய பெரிய ஊரின்கண்ணே தங்கினால், வெள்ளிய நெற்சோற்றைக் கோழிப் பொரியலுடன் பெறுவர். வலைஞர் குடியிருப்பிலே தங்கினால், நறிய கள்ளும், சுட்ட மீனும் பெறுவர். நெல்லரிசிப் பண்பாடு நன்கு வளர்ச்சியுற்ற ஒரு காலப் பின்னணியிலேயே பெரும் பாணாற்றுப்படை பாடப்பட்டதற்குரிய சான்றுகள் காணப்படுகின்றன. (உதாரணம்: நெல்லரிசியை மாத்திரம் உணவாகக் கொள்ளாமல், அதனை இடித்து மாவாக்கிப் பண்டங்கள் செய்வதை "நெல்மா வல்சி தீற்றி" (343) என்னும் அடி குறிப்பிடுகின்றது). அப்படிப்பட்ட காலத்திலும், எல்லா இடங்களிலும் நெல்லரிசி உபயோகிக்கப்படவில்லை என்பதை மேற்காட்டிய சான்றிலிருந்து அறியமுடிகின்றது.

ஒரு காலத்திலே நெல்லரிசிச் சோறு எல்லோராலும் சாப்பிட முடியவில்லை. தெய்வத்துக்கப் பலியிடுவதெனத்தினை, வரகு அரிசிச் சோற்றினைக் குவித்துப் பின்னர் பகுத்துப் பலரும் உண்ணும் வழக்கம் சங்க இலக்கியங்களிலே கூறப்பட்டுள்ளது. (பார்க்கவும்: புறம். 168 : பெரும்பாண். 104). இவ்வழக்கம் பின்னர் நெல்லரிசிச் சோற்றுடனும் தொடர்புற்றிருக்கலாம். செல்வச் சந்நிதி அன்னதானம் இந்நிலை யினையே பிரதிபலிக்கின்றதென ஊகித்துக்கூற இடமுண்டு.

அன்னதான நடைமுறை செல்வச் சந்நிதியிலே நடைபெற்று வரவதற்கு இன்னொரு வகையான விளக்கமும் கொடுக்கமுடியும். கருணாகரத் தொண்டைமான் தொண்டைமானாற்றை வணிக நோக்குக்காகவே வெட்டினான். தொண்டைமானாற்றுத் துறையிலே பெருந்தொகையான வணிகர்கள் வந்திறங்கிப் போன காரணத்தால்,

அவர்களுக்கு, முருகனுக்குக் குவியலாகச் சோற்றினைப் படைத்து, பின்னர் பகுத்துக் கொடுக்கும் வழக்கம் இருந்திருக்க வேண்டும். இந்நடைமுறைக்கு இவ்வணிகர்களே பொருளுதவியும் செய்திருக் கலாம். இறைவனுக்குப் பலியிட்டதாயு மாயிற்று. இக்காரணத்தாலேயே இவ்வழக்கம் இடையிலே நின்றுவிடாமல் தொடர்ந்து நடைபெற்று வந்த தெனலாம். இன்றும் அன்னதானம் கொடுப்பவர்கள் தங்கள் வயலிலே விளைந்த நெல்லின் உபரிப்பகுதியை இங்கு கொண்டுவந்து சமைத்து அன்னதானம் செய்தார்கள் என்று கூறுதற்கில்லை. எனவே, சிவத்தம்பி கூறுவதுபோல உபரிச்செல்வத்தைக் குழுமத்தக்குப் பயன்படும் வகையிலே செலவு செய்தலைச் சந்நிதி அன்னதான நடைமுறை குறிக்கின்றதோ என்னவோ தெரியவில்லை. எனினும் நிச்சயமாக இது, அவர் குறிப்பிடுவதுபோல, குழுமநிலை உணவுப் பகிர்வு எனக் கொள்ளலாம்.

அறுபத்தைந்து ஆலம் இலைகளிலே சோறு படைப்பதும், அதனை மருந்து என உண்பதுமாகிய நடைமுறை செல்வச் சந்நிதியிலே இருப்பதுபற்றி முன்னர் குறிப்பிட்டுள்ளோம். பசிநோய் உடையவர்களுக்குச் சந்நிதியிலே வழங்கப்படும் அன்னதானம் மருந்தாக அமைவது வெளிப்படையான விடயம். ஆனால், பிணியுடையவர்கள் பலருக்கும் அது மருந்தாக அமையும் தன்மை நம்பிக்கையின்பாற் பட்டதாகும். இந்நடைமுறையினை உலக சமய நடைமுறைகள் கொண்ட பயன்பாட்டு ஒப்பீட்டடிப் படையிலே நோக்கவும் இடமுண்டு. சந்நிதியிலே படைக்கப்படும் அன்னம் தனிப்பட்ட ஒருவருடைய நோய்க்கு மருந்தாகப் படைக்கப்படுவதில்லை. அது புனித நிவேதன உணவாகவும், பிணி தீர்க்கும் மருந்தாகவும் அமையும். இந்த வகையிலே இந்நடைமுறையினை ஸுனி மக்களுடைய (நியூ மெக்ஸிகோவிலுள்ள ப்யூப்லோ மக்களின் ஒரு குழுவினர்) நடைமுறையுடன் ஒப்பிட்டு நோக்கலாம். அவர்கள் கூட்டமாகச் சேர்ந்து செய்யும் சடங்கின் மூலமே இயற்கைக்கப்பாற்பட்டவைகளை அணுக முடியும் என்று நம்பினர். ஒரு தனிப்பட்டவனுடைய நோய்க்காக அவர்கள் தொழுவதில்லை. ஆனால், மருத்துவக் கூட்டத்தின் சடங்குகளிலே நோயாளிகள் பங்குபற்றுவர். ருத் பெனடிக்ற் (1947 : 103) கூறும் இந்நிலைதான் சந்நிதியிலும் காணப்படுகிறது. மேலும், மருத்துவக் கூட்டத்தின் வணக்கப் பொருளாக ஒரு முழுத்தானியக்கதிர் அமைந்தமை பற்றியும் அவர் குறிப்பிடுகின்றார் (பக். 71). நெல்லரிசிச் சோறு சந்நிதியிலே 'மருந்தாக' அமையும் நம்பிக்கையுடன் இது ஒப்பிடற்பாலது. இத்தகைய நம்பிக்கை பண்டைக்காலம் தொட்டே தமிழரிடையே இருந்து வந்துள்ளது. பண்டைக் காலத்திலே இது இருந்தமைக்குப் பரிபாடல் இலக்கியத்திலிருந்து சான்றாதாரம்

முன்னர்க் காட்டப்பட்டது. பலரும் சிறிதளவாவது பெற்று உண்டு பயன்பெற வேண்டுமென்ற நோக்கத்தக்காகவே 65 ஆலம் இலைகளிலே இந்த 'மருந்து' படைக்கப்படுகின்றது. தமிழர்களின் குழுமநிலைச் சமயச் சடங்கின் ஓரம்சமாகவே இதனை நாம் கொள்ளவேண்டும். இந்த வகையிலே, செல்வச்சந்நிதி தமிழர்களின் பண்டைய சமய - பண்பாட்டு நிலைகள் சிலவற்றைப் பேணிவரும் ஒரு கோயிலாகக் கொள்ள வேண்டும்.

சந்நிதியிலே நடைபெறும் பூசை முறை தனித்துவமானது. பூசகர் வாய் கட்டி முருகனுக்குக் கற்பூர தீபம் காட்டும் பூசை முறைக்குச் கர்ணபரம்பரைக் கதை காரணம் கூறுகின்றது. இப்பூசை முறை இங்கு நிலவி வருவதற்கு இத்தலத்துடன் தொடர்புற்று வந்த சித்தர் பரம்பரையும் காரணமாயிருந்திருக்கலாம்.

"வெந்தநீறு மெய்க்கணிந்து வேடமும் தரிக்கிறீர்
சிந்தையுள் நினைந்துமே தினஞ் செபிக்கு மந்திரம்
முந்து மந்திரத்திலோ மூலமந் திரத்திலோ
எந்த மந்திரத்திலோ ஈசன் வந்தியங்குமே?"

என்று சிவவாக்கியர் (225) என்னுஞ் சித்தர் பாடுகின்றார். சித்தர்கள் தமிழ்நாட்டிலே நிகழ்ந்துவந்த சில வழிபாட்டு முறைகளை நடைமுறைகளை, கண்டித்தும் பாடியுள்ளனர். அவர்களுக்குச் சடங்கு, கிரியை ஆகியவற்றிலே நம்பிக்கையில்லை. எதுவுமே பேசாமல் இறைவனை மனத்திலே இருத்திவிடலாம் எனக் கண்டவர்கள் சித்தர்கள். இத்தகைய சித்தர்களுடைய தொடர்பு நீண்டகாலமாகச் சந்நிதியுடன் இருந்திருக்கவேண்டும். ஐராவசு என்ற கந்தருவன் தவஞ்செய்து அடங்கிய இடமே தற்போது செல்வச்சந்நிதி ஆலயத்தில் நாகதம் பிரானுக்கு அருகிலுள்ள பூவரசு நிலையம் எனக் கூறப்படும் ஐதீகத்தையும் இங்கு நாம் மனங்கொள்ளவேண்டும். சித்தர்கள் தம் விருப்புக்கேற்ப ஏகாந்தமாகத் திரிவதற்கு ஏற்ற இடமாகவே சந்நிதி ஆலயம் விளங்கியது. இந்த நூற்றாண்டிலே ஜேர்மன் சாமியார், ஆனைக்குட்டிச் சாமியார் ஆகியோரை இவ்வாலயச் சூழல் கவர்ந்தது. 'சும்மா இரு' என்று தன்கையிலே பச்சை குத்திக்கொண்டு திரிந்த வெளிநாட்டுச் சாமியாரையும் இவ்விடத்திலே நினைவு கூரவேண்டும். யாழ்ப்பாணம் யாழ்ப்பாணத்துச் சாமியார், கடையிற் சாமியார், யோகர் சுவாமிகள் போன்ற சித்தர்களைத் தந்த பிரதேசம். முருகனைத் துணங்கை ஆடியும், வெறியாடியும், பறை முழக்கியும், பாடல்கள் பாடியும் வழிபட்டு வந்த நடைமுறையிலே சித்தர்கள் நெறியும் சேர்ந்து உருவாகிய ஒரு தனித்துவமான வழிபாட்டுமுறை செல்வச்சந்நிதியிலே உருவாயிற்று.

கோயிலுக்கு வெளியே கரகங்கள் - காவடிகள் ஆட்டம், உடுக்கின் ஓங்கார ஓசை, பறையின் முழக்கு, முருகு புணர்ந்து ஆடும் ஆட்டம் என்பனவெல்லாம் நிகழ, கோயிலுக்கு உள்ளே கர்ப்பக் கிருகத்தில் எவ்வித அரவமுமற்ற 'வாய்கட்டி'ப் பூசை நடைபெறுகின்றது. இது பண்டைத் தமிழருடைய வழிபாட்டு முறையும், ஈழத்துச் சித்தர் நெறியும் சேர்த்த நிலையேயாகும்.

செல்வச்சந்நிதிபோன்று ஈழத்துத் தமிழர் பிரதேசத்தில் வேறு எந்தக்கோயிலும் பல மடங்களாற் சூழப்பட்டதாயில்லை. இது செல்வச் சந்நிதிக்குரிய ஒரு சிறப்புப் பண்பாகும். இம்மடங்கள் பற்றி கா. சிவத்தம்பி (1984)

> "தீராநோய் தீர்க்கும் மருத்துவனாகச் சந்நிதியானைக் கொள்ளும் நம்பிக்கையும், அன்னதான நேர்த்திக்கடன் முறைமையும் இங்கு மடங்களின் தோற்றத்துக்கும் தொடர்ச்சிக்கும் காரணமாக (காரணங்களாக) அமைகின்றன வெனலாம். பல்வேறு ஊர்களைச் சேர்ந்தவர்கள், பல்வேறு சாதிகளைச் சேர்ந்தவர்கள், மடங்களைக் கட்டி அவற்றின் நிர்வாகத்துக்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்துள்ளனர். பூசகர் குடும்பங்களைத் தவிர இங்கு நிலையான ஒரு சனத்தொகை காணப்படுவதற்கும் மடங்களே காரணமாகும். தத்தம் குடும்பங்களிலிருந்து பிரிந்தவர்களும், பிரிக்கப்பட்டவர்களும் மடங்களைத் தமது வதிவிடமாகக் கொண்டிருந்தமை ஒரு முக்கியமான உண்மையாகும். மடங்களற்ற சந்நிதியைக் கற்பனை பண்ணக் கூட முடியாத அளவுக்கு மடங்கள் சந்நிதியின் ஓரமிசமாக வுள்ளன."

எனப் பொருத்தமுறக் கூறியுள்ளார். (மேற்படி மேற்கோள் முன்னர் தரப்பட்டுள்ளது. (பக். 79). அழுத்தம் கருதி மீண்டும் இங்கு தரப்பட்டுள்ளது). செல்வச் சந்நிதியில் இம்மடங்களின் தோற்றம் அன்னதானத்துடனேயே முதலில் தொடர்புற்றிருக்க வேண்டும். தொண்டைமானாற்றுத் துறைமுகத்திலே வந்திறங்கிய வணிகர்களும் பிறரும் முருகனைத் தரிசிப்பதற்கும், அன்னதானத்திலே பங்குபற்று வதற்கும், தங்கிச் செல்வதற்கும் மடங்கள் பயனுள்ளனவாயமைந்தன. இவற்றின் பயன்பாடு கால ஓட்டத்திலே பன்முகப்பட மேலும் பல மடங்கள் கட்டப்பட்டன. இம்மடங்கள் இக்கோயிலைச் சூழ இருப்பதாலே கூட்டுவழிபாடு இங்கு நடைபெற ஏதுவாயுள்ளது. திருக்கேதீச்சரம், கதிர்காமம் போன்ற மடங்களிலே உற்சவ காலங்களிலே அடியார்கள் சென்று தங்கிச் செல்வர். ஆனால், சந்நிதியிலோ, மடங்களிலே வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் இருக்கின்றனர்.

# 9

## செல்வச்சந்நிதியில்
## ஒரு வாழ்வியற் பண்பாடு

### 1. தோற்றமும் பணிகளும்:

செல்வச்சந்நிதி கோயிற் சூழலில் இன்று ஒரு வாழ்வியற் பண்பாடு பயிற்றப்பட்டு வருகிறது. பழைய மடங்களில் அன்றைய காலகட்டத்திற்கு ஏற்ற தொண்டுப்பணிக்கான பயிற்சிகளே நடைபெற்றன. வறுமையால் வாடியவருடைய பசிப்பணியைப் போக்குவதும், தீராத நோயால் அல்லற்படுவோரை ஆதரிப்பதும் முக்கிய சேவைகளாயிருந்தன. குடும்பத்திற் பிணக்குற்றோர் பிரிந்து வாழுமிடமாகவும் மடம் பயன்பட்டது. ஆனால், மக்கள் வாழ்வியல் தேவைகளைக் காலத்திற்கேற்ற வகையிற் கவனித்து நிறைவேற்ற ஒரு மடம் தேவை. காலத்தின் கடப்பில் மக்கள் எதிர்கொண்ட இடர்களை யெல்லாம் தாங்கும் மனவுறுதியைக் கொடுக்கும் தொண்டுப்பணிகள் தேவைப்படுகின்றன. சந்நிதிகோயில் பற்றி அறியாதவரும்கூட, இன்று இத்தகைய பணிகளாற் கோயில்பற்றி அறிந்து வழிபட வருவர். அந்த வகையில் முருகன் அருளாற் சிறந்த பணிகள் நடைபெறும் 'சந்நிதியான் ஆச்சிரமம்' ஒன்றுதான் சந்நிதிகோயிலின் வரலாற்றோடு இணைந் திருக்கிறது.

பண்டைய கோயிற்சூழலையும், மடங்களின் பொலிவையும் மனக்கண்ணிற் காணும் அடியவர் இடிந்த கட்டடச் சிதைவுகளையும், புதர்களையும் காணும்போது கண்ணீர் சொரிவர். முருகன் வாயிலிலே வந்து வாய்புலம்பி நிற்பர். 'உன்னுடைய திருக்கோயிலிலே தங்கி இளைப்பாறிப் போக ஓரிடம் எமக்கு அமைத்துத் தரமாட்டாயா' என அல்லும் பகலும் வேண்டிப் பணிந்து நின்றனர். செயற்கையின் கொடுமையும், இயற்கையின் சீற்றமும் சந்நிதியான் அடியவரைத்

துன்பத்திற்குள்ளாக்கிய போதெல்லாம் முருகன் தமக்கு நல்வழி காட்டுவான் என அடியவர் நம்பிக்கையுடன் காத்திருந்தனர். அந்த நம்பிக்கை வீண்போகவில்லை.

செல்வச்சந்நிதி முருகன் வாசல் நேர்வீதியில் சிறிது தூரத்தில் அமைந்திருந்த 'அரசம்மா' மடமே 'சந்நிதியான் ஆச்சிரமம்' என்ற பெயருடன் 1988ஆம் ஆண்டு பங்குனி உத்தரத்தன்று தொடங்கப் பெற்றது. சிறுவயது முதலே ஆனந்தாச்சிரம நிர்வாகியாக விளங்கிய மறைந்த மயில்வாகன சுவாமியவர்களுடன் நேரடித்தொடர்பாற் பெற்ற அனுபவமும் சுவாமிகளின் அறிவுரையும் திரு. செ. மோகனதாஸ் ஆச்சிரமப் பணியில் ஈடுபடுவதற்கு வாய்ப்பளித்தது. 'எனது மறைவுக்குப் பின் "நீ எங்குமே போக வேண்டாம். முருகன் காலடியிலேயே இந்த அன்னப்பணியையே தொடர்ந்து செய்துவா ! முருகன் துணைநிற்பான்." என்ற மறைந்த மயில்வாகனம் சுவாமியின் கூற்றையே மந்திரமாகவும், அவரையே மானசீகமாகக் குருவாகவும் கொண்டு திரு. செ. மோகனதாஸ் தொடங்கிய பணி இன்றுவரை சிறப்பாக நடைபெற்று வருகிறது.

அன்னதானப் பணியையே முதற்பணியாகக் கொண்டு வெள்ளிக்கிழமை சந்நிதிமுருகனை வழிபட வருகின்ற அனைத்து அடியவர்களுக்கும் அன்னதானம் வழங்கும் பணி தொடங்கப்பெற்றது. 1990களில் இப்பணிக்கும் பல சோதனைகள் ஏற்பட்டன. வெள்ளியன்று அன்னதானப்பணி நிறைவடைந்ததும் அடுத்த வெள்ளிக்காக அரிசிப்பயணம் மேற்கொள்ளப்படும். சனியன்று காலை மோகன் சுவாமியும், உதவியாளர்களும், துவிச்சக்கரவண்டியில் கொம்படி ஊரியான் பாதையினூடாகப் பல சிரமங்களையும் தாண்டிச் சென்று வட்டக்கச்சி, இராமநாதபுரம், கண்டாவளை, கனகாம்பிகைக் குளம் போன்ற பல இடங்களுக்கும் சென்று பலரிடமும் நெல்லைப் பெற்று, அரிசி ஆலையிற் கொடுத்து அரிசியாக்கி, மூடைகளிலே கட்டிச் செவ்வாய் அல்லது புதன் ஆச்சிரமம் சேருவர். அந்த அரிசி வெள்ளி அன்னதானத்திற்குப் பயன்படும். ஆனால், அக்காலகட்டத்தில் வணிகர்களும் அரிசி ஆலைச் சொந்தக்காரரும் நல்ல உதவிகள் செய்தனர். அரச அதிபரும், உதவி அரச அதிபரும் மக்கள் பசிபோக்கக் கொடை கொடுத்தனர்.

இக்காலகட்டத்திற் காலஞ்சென்ற தும்பளை முருகேச சுவாமிகளும் ஆச்சிரமப் பணிகளில் உதவியாக இருந்தமையும் முருகன் திருவருளே. உடுப்பிட்டியைச் சேர்ந்த அன்பர்கள் ஆச்சிரமம் அமைக்கக் காணிவாங்கி அன்பளிப்பாக நல்கினர். அங்கு புதிய கட்டடம் 5.5.1995ஆம் ஆண்டு திறந்து வைக்கப்ட்டது. பின்னர் 17.03.1997இல் முருகேசு சுவாமிகள் சிவபதமடைந்தபோது விஸ்தாரமான மண்டப மொன்று அவர்நினைவாகக் கட்டப்பட்டது. 1998இல் 'தவத்திரு.வே.முருகேசு சுவாமிகள் நினைவு மண்டபம்' என்ற பெயருடன் பொலிவாக அமைக்கப்பட்டது. இம்மண்டபத்தை மறைந்த, ஆனால் எமது மனங்களை விட்டு அகலாத துர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டியவர்கள் திறந்து வைத்துள்ளார்கள். பின்னர் 'சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டுப் பல பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன.

**2. சைவக் கலை பண்பாட்டுப்பேரவை**

தமிழர் வாழ்வியலில் கோயில்களிற்றான் பண்பாட்டுப் பயிற்சி நடைபெற்றது. சந்நிதியில் வழிபாட்டு நடைமுறைகளுடன் கிராமியக் கலைகள் தொடர்புற்றிருந்தன. காவடி, கரகம், கும்மி, இசைக்கருவி, கூத்துப் போன்றவை மக்களால் நேர்த்திக்கடன் நிலையில் நடை பெற்றன. ஆனால், நவீன விஞ்ஞான, தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் இக்கலைகள் யாவும் வழிபாட்டு நடைமுறைகளிலிருந்து விலகின. விலகியதால் இக்கலைகளைப் பயில்வோர் தொகையும், சுவைப்போர் தொகையும் குறைவடையலாயிற்று. சமூக நிலையிற் கிராமியக் கலைகள் மறையக்கூடிய நிலையொன்றும் உருவாகலாயிற்று. சந்நிதி கோவிலுக்கு வருகின்ற அடியார்கள் முருகன் சந்நிதியிற் பின்புறமாக உள்ள பூவரச மரத்தடியில் ஒன்றுகூடிப் பஜனை செய்கின்ற ஒரு முறைமை இருந்தது. இப்பணியிற் பெயரிவர்கள் மட்டுமே கலந்து கொண்டனர். இளந்தலை முறையினர் இப்பணியிற் பெரிதும் ஈடுபாடு காட்டவில்லை. மோகன்சுவாமி இந்நிலையை மாற்ற எண்ணங்கொண்டு 1993 இல் 'சைவ கலை பண்பாட்டுப் பேரவை' என்ற அமைப்பை உருவாக்கினார். இந்தப் புண்ணியமான புதிய பணி சந்நிதி கோயிலின் வரலாற்றில் ஒரு புதிய வளர்ச்சிப் பாதையைத் திறந்துவிட்டதெனலாம். வெள்ளிக்கிழமை தோறும் சன்நிதியான் ஆச்சிரமத்திலே பஜனை, பண்ணிசை,

வில்லுப்பாட்டு, சொற்பொழிவு எனப்பல நிகழ்வுகள் நடைபெற வாய்ப்பு ஏற்பட்டது.

சந்நிதியானுக்கு கலைநிவேதனம் செய்யும் இப்புதிய செயற்பாடு இளந்தலைமுறையினரையும் வழிபாட்டில் பங்குகொள்ள வாய்ப்பளித்தது. வைகாசி மாதத்திலே நடைபெறும் வைகாசிப் பெருவிழா ஆண்டுதோறும் பல அறிஞர்களையும், கலைஞர்களையும் ஒருங்கிணைக்கும் நிகழ்வாக விளங்குகிறது. சிறியவர் முதல் முதியவர் வரை எல்லோரும் பங்குகொள்ளும் கலைவிழாவாகவும் உள்ளது. சைவசமயம் பற்றிய விழிப்புணர்ச்சியையும், எழுச்சியையும் இதன்மூலம் ஏற்படுத்தும் பணியொன்றும் நடைபெறுகிறது. இன்றைய காலத்தில் வீட்டிலும் பாடசாலையிலும் சமயம் பற்றிய விளக்கமும் உணர்வும் சிறார்களுக்குக் கிடைப்பதில்லை. அந்தக்குறையைச் சந்நிதியான் ஆச்சிரமம் நிறைவு செய்துவருகிறது. சமயப்போட்டிகளை நடத்தியும், கலை நிகழ்ச்சிகளிற் பங்குபற்றச் செய்தும் சிறாருக்கு ஒரு புதிய சமயச் சிந்தனையை ஏற்படுத்திவருகின்றது. ஊடகங்கள் மூலமாகச் சிறாருடைய பங்களிப்பு விளம்பரம் செய்ப்படுவதால் அவர்களிடமும் பங்களிப்புச் செய்யவேண்டும் என்ற முனைப்பும் தோன்றி வளர்கிறது. பாடசாலைகளிடையேயும் போட்டிநிலையில் தம்மை முன் நிறுத்தவேண்டும் என்ற ஆர்வமும் தோன்றியுள்ளது. எதிர்காலத்தில் சமயப்பணிகளைச் செய்வதற்கு ஏற்ற பயிற்சியும் சிறாருக்கு இங்கே கிடைக்கின்றது.

ஆச்சிரமத்தில் அன்னதானம் நடைபெறுவதற்கு முன்பாகச் சமயச் சொற்பொழிவுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. தனிப் பொருளிலும் தொடர்புராண இதிகாசக் கதைகளிலும் சொற் பொழிவுகள் நடைபெறுகின்றன. ஈழத்திலே உள்ள சமய ஆர்வலரும் தமிழ்நாட்டுச் சொற்பொழிவாளர்களும் இதிற் கலந்து பணிசெய்து வருவது குறிப்பிடத்தக்கது. கந்தபுராணம்,மகாபாரதம், இராமாயணம், தேவிபுராணம் போன்ற இலக்கியங்கள் பற்றிய அறிமுகமும் தெளிவும் அடியார்க்கு இத்தொடர்ச் சொற்பொழிவுகள்மூலம் கிடைத்தன. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் முருகதரிசனமும், செவிக்குணவும், வயிற்றுக்குணவும் பெறுவதற்காக அடியார்கள் ஆச்சிரமத்தை நாடிச்செல்லும் மரபு தோன்றியுள்ளது. நாவலர் யாழ்ப்பாணத்திலே

தொடக்கிவைத்த பிரசங்க மரபு சந்நிதியான் ஆச்சிரமத்தில் தொடர்கிறது. யாழ்ப்பாணத்திலே கிறிஸ்தவ சமயம் வேகமாகப் பரவிய சூழலிற் சைவர்களுடைய சமய நம்பிக்கையைத் தகர்த்தெறியும் முயற்சிகள் நடைபெற்றன. கல்வியறிவற்றவர்களைக் காலங்காலமாகத் தமது முன்னோர் வழிபாட்டு நடைமுறைகளைப் பின்பற்றி வாழ்ந்தவர்களைப் பேச்சாற்றல் கொண்டு ஈர்க்கும் தொழிலில் கிறிஸ்தவர் ஈடுபட்டனர். இவ்வேளையில் நாவலர் சமூகப் பயன்பாடு கருதிக் கருத்துகளை எல்லோருக்கும் ஏற்ற மொழிநடையில் வழங்கிய தமிழ்ச் சான்றோர்களின் பணியைத் தாமும் முன்னெடுத்தார். பொது அம்பலங்களில் இத்தகைய அறிவுரையும் விளக்கமும் பொது மக்களுக்கு முன்னர் அளிக்கப்பட்டதைச் சங்க இலக்கியப்பாடல்களும், மணி மேகலையும், சிலப்பதிகாரமும் பதிவு செய்துள்ளன. அதை நாவலர் கருத்திற்கொண்டு மரபான வாய்மொழிப் பரப்பலைத் திருக் கோவில் களிலே மீண்டும் செயற்படுத்தினார். அதனால் 19ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் சைவசமயம் அழிந்து போகாமல் காப்பாற்றப்பட்டது. அதேபோலத் தற்காலத்திலும் சைவமக்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட இடர்களால் மனந்தளர்ச்சியடைந்திருக்கும் வேளையில் அவர்களை மனம் மாற்றி, மதம் மாற்றும் செயற்பாடும் நடைபெறுகிறது. இந்நிலையில் நாவலர் பணியை மீண்டும் சந்நிதியான் ஆச்சிரமம் கைக்கொண்டமை சைவசமயத்தைச் சீர்குலையாமல் காப்பாற்றி வருகிறது. வறுமையின் கொடுமையால் வாழ்வை வெறுக்கும் முதியவர்களைப் பராமரிக்கும் பணியையும் செய்துவருகிறது. இது காலத்தின் தேவையாக உள்ளது. வெள்ளிக்கிழமைகளிற் பிரசங்கம் செய்யும் கல்வியாளர்கள் பொதுமக்களின் மனஅழுத்தங்களையும், கவலைகளையும் களைவதற்கு நல்லுரையாற்றுகிறார்கள். திரு.இராசெல்வவடிவேல், திரு. குமாரவேல் இருவரும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள். பலமாணவர்களுக்குத் தேர்வுக்காகப் பாடங் களைப் புகட்டும் ஆசிரியப் பணிபுரியும் இவர்களுடைய சமயப்பணி பலரையும் சைவ ஆர்வலராக மாற்றிவருகிறது.

ஆனால், பொதுமக்கள் மனம் குழம்பாமற் சைவ வாழ்வியலில் நம்பிக்கைக்கொள்ள இந்த நல்லுரைகள் பயன்பட்டாலும் கல்வியாள ரான புத்திஜீவிகளிடையே நம்பிக்கை சிதறிப்போவது ஏன் என்ற கேள்வியும் எழுகின்றது. காலங்காலமாகக் கல்வியும், நல்ல வளர்ப்புச்

சூழலும், பெற்றோரும் தந்த சமய நம்பிக்கையைத் தூக்கி எறியும் கற்றவர்களை என்ன செய்யலாம்? சந்நிதியான் ஆச்சிரமம் அவர்களைப் போன்றவர்களையும் கவனிக்கவேண்டியுள்ளது. துன்பம் கண்டு மதம்மாறிய நாவுக்கரசர் வரலாறும் சைவத்திற்கு உண்டு. ஆனால், அதே நாவுக்கரசர் திலகவதியாரிடம் மீண்டும் வந்துசேர்ந்து உழவாரப்பணி செய்து தன்னை சைவத் தொண்டனாக மாற்றினார். சந்நிதியான் ஆச்சிரமப்பணி இத்தகைய சமயச்சீர்குலைவைத் தடுக்கும் பண்பாட்டுக் களமாகப் பணிசெய்து வருகிறது.

சைவ, கலை பண்பாட்டுப் பேரவையால் வெளியிடப்படுகின்ற 'ஞானச் சுடர்' என்னும் சஞ்சிகை நல்லதொரு ஆவணப்படுத்தலைச் செய்துவருகிறது. மாதந்தோறும் வெளிவரும் இந்த ஆன்மீகச் சஞ்சிகையின் நோக்கம் வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

> **"ஆச்சிரமப் பணிகளை வெளிக்கொணர்வதும், ஆர்வம் உள்ள அனைவரையும் ஆன்மீகப் பணியில் தூண்டுவதும், தினசரி அன்னப்பணிக்கு அள்ளிக் கொடுப்போரை அறிமுகப்படுத்தி ஏனையோரையும் இப்பணியில் ஊக்குவிப்பதும் ஆன்மீகம் சார்ந்த கட்டுரையாளர்களதும், சிந்தனையாளர்களதும் திறமைகளை வெளிக்கொண்டு வருதலும் ஞானச் சுடரின் பிரதான நோக்கமாக இன்றுவரை இருந்து வருகிறது"**

நெல்லியடி தமிழ்ப் பூங்கா அச்சகத்தில் 250 பிரதிகளுடன் 1998 தை மாதம் முதற்சுடர் வெளியிடப்பட்டது. ஆடி மாதம் வரை இந்நிலை நீடித்தது. ஞானச்சுடரின் பணியினை விரிவுபடுத்தி, துரிதப்படுத்த விரும்பிய மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரமத்திற்கென்றே அச்சியந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்து 1998 தொடக்கம் ஞானச்சுடர் பிரதிகள் ஆச்சிரமத்திலேயே அச்சிட்டு வெளியிடச் செய்தார். 2004 ஆம் ஆண்டு தொடக்கம் கணினி அச்சுப்பதிவாக முகப்பு அட்டையிலே வேலவனின் திருத்தோற்றத்தைத் தாங்கி வெளிவருகிறது. வெளியிடும் பிரதிகளின் தொகையும் ஏறக்குறைய இரண்டாயிரத்தை எட்டியுள்ளன. உலகெங்கும் வாழும் முருகபக்தர்களுக்காக இணையத்தளத்திலும் பார்வையிட வசதி செய்யப்பட்டுள்ளது. சராசரி 52 பக்கங்களுடன் வெளிவரும் 'ஞானச்சுடர்' சஞ்சிகையில் விளம்பரம் எதுவும் வருவதில்லை. ஆசிரியர் என யாரும் இல்லை. மலருக்கான ஆக்கங்களைத் தெரிவுசெய்ய மலர்க்குழு ஒன்றுமட்டும் இயங்குகிறது.

முகப்பட்டையில் முருகனின் வண்ணத்தோற்றம் தொடர்ந்து குறள்வழி, நற்சிந்தனை, வெளியீட்டுரை, மதிப்பீட்டுரை, சுடர்தரும் தகவல், இடையிடையே ஆறுமுகத்து அண்ணலின் புகழ்பாடும் கவிதைகள்- இவ்வாறு பக்கங்கள் புரளும். அறிஞர் பெருமக்கள், கற்றறிந்தோரின் தரமான கட்டுரைகள், தொடராகவும், தனியாகவும் சுடரில் ஒளிரும். கீழே கறுப்பு வெள்ளைக் கட்டத்திற் பொன்மொழிகள், சொற்றொடர்கள், அறிவூட்டும் அழுகுதமிழ் வாக்கியங்கள் மின்னும். நித்திய அன்னப் பணிக்குக் கொடை செய்தோர் பட்டியலும் பதிவாயிருக்கும். பின்புற அட்டையிற் சந்நிதி முருகனுக்கு நிரந்தரமான ஒதுக்கீடு அந்தந்த ஆண்டுக்கான செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த நிகழ்வுகள் வருடம் முழுவதும் வெளிவரும். இதுவே ஞானச் சுடரின் அழகுவடிவமாகும். இதுவரை 150 சுடர்கள் வெளியிடப்பட்டுள்ளன.

வருடந்தோறும் ஞானச்சுடர் ஆண்டு விழாவினை ஒட்டி வாசகர் போட்டி நடத்தப்படுகிறது. இப்போட்டியிலே பல நூற்றுக் கணக் கானவர்கள் பங்கு கொள்கின்றனர். வருடாவருடம் போட்டி யாளர் தொகை அதிகரித்து வருகிறது. வெற்றி பெற்றவர்க்கு உரிய பரிசுகள் கொடையாளர்களால் வழங்கப்பட்டு வருகின்றன. ஞானச்சுடர் ஆற்றங்கரையானின் அருள்பரப்பும் சுடராக விளங்குகிறது. சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் அறுபத்து மூவர் குருபூசை பற்றியும் மகேஸ்வரபூசையும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. சேக்கிழார் பாடிய 63 நாயன்மார்களையும் நினைவுகூரும் வகையில் இக்குருபூசை நடைபெறகிறது. இப்பூசை மறைந்த தவத்திரு. வே. முருகேசு சுவாமிகள் வருடந்தோறும் முன்னின்று நடத்திய பூசையாகும். இப்பூசையின் நடைமுறைகளை வருமாறு விளக்கலாம் :

1. அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் 63 நாயன்மார்களாக 63 பேரும், முருகப் பெருமானாக ஒருவரும் ஆக மொத்தம் 64 பேர் மண்டபத்தில் இருத்தப்படுகின்றனர்.
2. 64 தலைவாழையிலையில் அன்னம் பரிமாறப்படுகிறது.
3. வெற்றிலை, பாக்கு, பழம், தட்சணையாக ரூபா 11/- ஆகியவையும் வாழையிலையின் ஒரு பக்கம் வைக்கப்படும்.
4. மண்டபத்தில் சிவபுராணம் ஓதப்பட அடியார்கள் 64 பேரும் இணைந்து வழிபாட்டில் ஈடுபடுகிறார்கள்.
5. தனியாக எல்லா அடியார்களுக்கும் (நாயன்மார் + முருகன்) பஞ்சாரத்தி காட்டப்படுகிறது.

6. 64 பேரும் வாழையிலையிலுள்ள அனைத்து உணவு வகைகளையும் தொட்டுப்பிசைந்து ஒரு 'பிடிசாதம்' தருகிறார்கள்.

7. ஒரு முடிச்சிலே சேகரிக்கப்பட்ட பிடிசாதம் தொடர்ந்து நடைபெறுகின்ற அன்னதானத்தில் அனைவருக்கும் முருகன் மருந்தாக வழங்கப்படுகிறது.

இந்நிகழ்வு வாராந்த வெள்ளி நிகழ்வுகள் முடிந்து அன்னதானம் தொடங்குவதற்கு இடையேயுள்ள நேரத்தில் நடைபெறுகிறது. பார்ப்போர் அனைவரும் பரவசப்படும்படியான பக்திபூர்வமான ஒரு நிகழ்வாக நடைபெறுகிறது.

ஆச்சிரமத்தில் அன்னதானம் நடைபெறும்போது, உணவு பரிமாறப்படும்போது, பண்டைய தமிழ் விருந்தோம்பல் முறைமைப்படி நடக்கிறது. வாழையிலையின் வெட்டு வலப்பக்கத்தில் வரும்படி வைத்துத் தண்ணீர் தெளிக்கப்படும். அருகில் இடப்பக்கத்தில் நீர்க்குவளை வைக்கப்படும். அதன்பின் கறிகள் இலையிலே பரிமாறப் படும். அதற்குப் பிறகு சோறு அளவாக நடுவிலே வைக்கப்படும். சோற்றின் மேலே பருப்புக்கறி பரிமாறப்பட்டு அதன்மேல் நெய்விடப்படும். எல்லோருடைய இலையிலும் நெய்விட்ட பின்னர் பரிமாறியவர் எல்லோரும் உண்ணுங்கள் என்று கூற அதன்பின் உணவை அருந்துவர்.

ஆண்டுதோறும் திருவாசக விழாவும், அருணகிரிநாதர் விழாவும் ஆச்சிரமத்தில் நடைபெறுகின்றன. தமிழ்நாட்டிலிருந்தும் பேச்சாளர் கலந்து சிறப்பிக்கின்றனர். சேக்கிழார் அடிப்பொடி, தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார், ஸ்ரீமத் குமாரசாமித்தம்பிரான் போன்றோரது விசேட பொற்பொழிவுகளும் இடம்பெற்றுள்ளன.

சமுதாயப் பணியிலும் ஆச்சிரமம் விசேட செயற்பாடுகளைச் செய்கிறது. நலிவுற்றோருக்கு உதவிகள் வழங்கப்படுகின்றன. வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ள பல குடும்பங்களுக்கு மாதாந்த உதவி வழங்கப்படுகிறது. 11.01.2004 இப்பணி தொடங்கப்பெற்றது. ஆச்சிரமத்தில் விழாக்கள் நடைபெறுகின்றபோது மூக்குக் கண்ணாடி, தையல் இயந்திரம், முச்சக்கரவண்டி என்பன வழங்கப்படுகின்றன.

மாணவர் கல்வியிற் பின்வரும் பணிகள் செயற்படுத்தப்படுகின்றன.

1. கண்களிற் குறைபாடுள்ள மாணவர்களுக்கு மூக்கக் கண்ணாடி
2. பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள்
3. வசதி குறைந்த மாணவ மாணவியருக்குத் துவிச்சக்கரவண்டி
4. பாடசாலை மாணவர்களுக்குக் கொப்பி புத்தகங்கள் வழங்கல்.
5. உயர்கல்வி மாணவர்களுக்கான மாதாந்த நிதியுதவி.
6. சிலமாணவர்களுக்குத் தனியார் கல்வி வகுப்புகளுக்கு மாதாந்த உதவி வழங்கல்.

முன்பள்ளிச் சேவைகளையும் ஆச்சிரம் செய்துவருகிறது. ஏறக்குறைய 93 முன்பள்ளிகள் நிர்வகிக்கப்படுகின்றன. ஆசிரியர்களுக்கு உடுபுடைவை களும் மாதாந்த வேதனமும் வழங்கப்பட்டன. ஆனால், தற்போது இப்பணி காலச்சூழ்நிலை காரணமாகவும், மக்களின் இடப்பெயர்வு காரணமாகவும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இலவச வைத்தியப் பணியும் நடைபெறுகிறது. இப்பணி 14.10.2001இல் Dr. சி. கதிரைவேற்பிள்ளையால் தொடக்கி வைக்கப்பட்டுத் தொடர்ந்து நடைபெற்றது. இலவச மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டன. மருத்துவப் பரிசோதனைகளும் நடைபெற்றன. தற்போது காலஞ்சென்ற முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் நினைவாக ஒரு வைத்தியசாலை, அவர் மனைவியும் தற்போது பாராளுமன்ற உறுப்பினருமான திருமதி ம. ஜெயகலாவால் அமைக்கப்பட்டிருப்பது வைத்திய சேவையைத் தொடர்ந்து செய்வதற்கு உதவியுள்ளது. சந்நிதியான் ஆச்சிரமப் பணிகளுக்கு அமரர் தி. மகேஸ்வரனின் ஆன்மீக நிலையும் பொருள் வளமும் உறுதுணையாக உள்ளன. அவர் பற்றிய ஆச்சிரமத்தின் மதிப்பீடு வருமாறு ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

> "யாழ் குடாநாட்டிற் சந்நிதியான் ஆச்சிரமம் ஒரு சமய நிறுவனமாக மட்டுமன்றி சமூக நிறுவனமாகவும் செயற்படு கின்ற முற்போக்கான நிறுவனம் என்பதை அமரர் அவர்கள் நன்கு விளங்கிக்கொண்டவர். இதனால் அவர் வர்த்தகராக, பாராளுமன்ற உறுப்பினராக, அமைச்சராகப் பல்வேறு

படிநிலைகளில் இருந்த காலங்களில் அந்தந்த நிலைகளில் நின்று ஆச்சிரமத்திற்கும், அதன் செயற்பாடுகளுக்கும் தமது முழுமையான பங்களிப்பினைச் செலுத்திய பெருமைக்குரிய ஒருவராக அவர் எம்மால் மதிக்கப்படுகின்றார்."

சந்நிதியான் ஆச்சிரமப்பணிகள் செல்வச்சந்நிதியில் ஒரு வாழ்வியற் பண்பாட்டைப் பயிற்றுகின்றன. சமயம் ஒருவாழ்வியல். தன்னலம் கருதாது பிறர்நலம் கருதும் கொடை மனத்தைப் பண்படுத்துவது சமய நடைமுறைகளே. வெறுமனே கல்வியால் மட்டும் சமயம் பற்றி அறிந்திருப்பது சமய வாழ்வாகாது. மக்கள் சேவையே மகேசன் சேவையென எமது முன்னோர் சொன்ன மூதுரைப்படி வாழ்வதே சமய வாழ்வியலாகும். சந்நிதிக் கந்தன், அன்னதானக் கந்தன் என்ற புகழைப் பெற்றவன். தன் அடியவர்களும் அன்னதானப்பணியில் ஈடுபடவைக்கவும், அதனை உலகெங்கும் பரவச் செய்யவுமே ஆச்சிரமத்தை அங்கு அமைத்துள்ளான்.

ஆற்றங்கரையானை வழிபட வருவோர் தொண்டைமானாற்றில் நீராடினால் உடல்நலம் பெறுவர் என்ற நம்பிக்கை பண்டு தொட்டு இன்று வரையும் நிலவுகிறது. அதேபோலச் சந்நிதியான் மருந்து உண்டால் நோய் அணுகாது என்ற நம்பிக்கையும் உண்டு. மனமும் உடலும் நலமுற ஆற்றங்கரையானை நாடிவருபவர் சந்நிதியான் ஆச்சிரமம் செல்லாமல் வீடு திரும்பமாட்டார்கள். அன்னதானத்தில் வயிறார உணவு உண்டபின்னரே வீட்டைப் பற்றி நினைப்பர். முருகனின் திருவிழா நாட்களில் அடியவர் தங்கிச் செல்வதற்குப் போதிய இடவசதி இல்லை. முன்னர் 45 மடங்கள் இருந்தன. எனவே, ஆச்சிரமத்தின் இடப்பரப்பு அகலவேண்டும். அடியார்கள் வந்து தங்கிச் செல்லவேண்டும். அதற்குரிய செயற்பாடுகளை உலகெங்கும் உள்ள அடியவர்கள் உரிய முறையிலே செய்யவேண்டும். துன்பத்தால் உறைந்துபோன உள்ளங்கள் ஆற்றங்கரையானிடம் வந்து ஆறியிருந்து போக முருகன் அருள்புரிவான் என்பதில் ஐயமில்லை.

# 10

## புலம்பெயர் தமிழரின் பக்திநிலையும் பரவசமும்

சந்நிதி கோயிலின் வரலாற்றிற் கடந்த 30 ஆண்டுகளில் நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலையும் நடப்புகளும் சிலபதிவுகளை ஏற்படுத்தியுள்ளன. கோயில் கொண்டிருந்த பக்திச் சின்னங்கள் பாதிக்கப்பட்டன. அவற்றுள் கோயிலில் ஒலித்துக்கொண்டிருந்த கண்டாமணியும், சித்திரத்தேரும் முக்கியமானவை. ஏறக்குறைய 55 ஆண்டுகளாக ஒலித்துக் கொண்டிருந்த கண்டாமணி, இலங்கை இராணுவத்தின் செயற் பாட்டால் அழிவுக்குள்ளாயிற்று. பிரணவ நாதமாய், சந்நிதியான் அடியார்களின் வேண்டுதல்களுக்கெல்லாம் செவிசாய்க்கும் முருகன் திருக்குரலாய் நின்றொலித்த மணி; உலகிலேயே 54 அடி உயரமான மணிக்கோபுரம் கொண்டு தொலைவில் 5 மைல் தூரம்வரை ஒலித்த மணி; அந்த அருள் நிறை மணி ஒலி கேளாது மக்கள் மனம் வருந்தினர்.

இந்த மணி பிரபல வணிகரும், ஒருகாலத்திற்கொழும்பு மாநகர பிதாவாக விளங்கியவருமான அதிகார் செல்லமுத்து அவர்களின் புதல்வன் திரு. சோமசுந்தரமும், அவருடைய மனைவி நாகேஸ்வரியும் நேர்த்திக்கடனாகச் செய்து கொடுக்கப்பட்டதாகும். நெடிய கோபுரத்தில் நின்றொலித்த அம்மணியோசை நீண்டகாலமாக முருகன் அடியவர்க்கு அருட்குரலாக விளங்கியது. 1952இல் அமைக்கப்பட்ட கோபுரத்தின் கண்டாமணி கடந்த வன்செயலால் 8.4.1986 இல் சின்னா பின்னமாயிற்று, 21.04.1986 முதல் கோயிலும் சேதமாகியதாற் பூசை, வழிபாடும் நிறுத்தப்பட்டது. காலம் செய்த நன்றியாற் கோவில் புனரமைக்கப்பட்டு 20.03.1988இல் குடமுழுக்குடன் வழமையான பூசை வழிபாடுகள் தொடங்கின. எனினும் கண்டாமணி ஓசை கேட்காதது பெருங்குறையாகவே இருந்தது.

மீண்டும் ஒரு மணியை உருவாக்க 2000ஆம் ஆண்டு முருகன்அருள் செய்தான். 30.06.2000 அன்று சில முருகன்அடியவர்கள் புதிய மணியை உருவாக்கும் முயற்சியை முன்னெடுத்தனர். லண்டனில் அமைந்துள்ள வைற் சப்பல் மணியுருவாக்கும் ஸ்தாபனத்திற்கும் (White Chapel Bell foundry Ltd.) மற்றும் லவ்ஸ்பறோவில் அமைந்துள்ள ஜோன் டெய்வர் மணியுருவாக்கும் ஸ்தாபனத்திற்கும் (John Taylor Founders Ltd.) நேரே சென்று தகவல்களை அறிந்து கலந்துரையாடி ஜோன் டெய்லர் மணியுருவாக்கும் ஸ்தாபனத்திலேயே மணியைச் செய்விக்க முடிவு செய்தனர். இது பற்றி திருமதி கௌரி ஸ்ரீராகவனின் தகவல்களை இங்கு தருவது பயனுடைத்து.

> "01.07.2000 அன்று பல அடியார்கள் கூடி லண்டனில் நாட்டில் முத்துமாரி அம்மன் கோவிலில் பூசை பஜனையுடன் ஸ்ரீ செல்வச் சந்நிதியானின் மாமணிக்கான திருப்பணியை இனிதே ஆரம்பித்தனர். மாமணிக்கான திருப்பணி நிதிக்காக தொண்டைமானாறு நற்பணி மன்றத்தின் வங்கியிற் புதிதாக ஒரு கணக்கு ஆரம்பிக்கப்பட்டது. (Thondaimanaru Welfare Association - Bell Project Account) பல நாடுகளில் இருந்து திருப்பணி நிதிவந்தது. 29.06.2001 அன்று ஜோன்டெய்லர் மணியுரு வாக்கும் ஸ்தாபனத்திற்கு மணிவேலைகள் ஆரம்பிக்கும்படி கடிதமும் முற்பணமும் ( 5,980 - ஐயாயிரத்து தொளாயிரத்து எண்பது பவுண்ஸ்) அனுப்பப்பட்டது. திரு. அன்ரூஹிக்ஸன்(Mr. Andrew Higson - Bell Master) என்பவரே மணிசெய்வதின் பொறுப்பாளர். பின்வரும் விபரங்களும் பரிமாறப்பட்டன. மணி செய்யும் உலோகம் 23 வீதம் தகரம் 77 வீதம் செம்பு. எடை 1200 கிலோகிராம். விட்டம் 1295 மில்லி மீற்றர் மற்றும் சங்கீத Note D (Bell Metal is a mixture of copper and tin having 23% tin the balance being copper, Bells weight is 1200 Kg with a Diameter of 1295 MM Made to musical note - D) அத்துடன் வேலின் வடிவமும், ஸ்ரீ செல்வச் சந்நிதி கோவில்மணி என்ற எழுத்துக்களும் பொறிக்கப்பட்டன.

04.10.2001 மணிவார்க்கப்பட்டது. 27.01.2002 மணி பூசைவழிபாட்டின் பின்னர் ஒலிக்கப்பட்டது. லண்டன்வாழ் முருகன் அடியவர்கள் ஆசைதீர மாமணியை அடித்து ஒலியெழுப்பி மகிழ்ந்தனர். 6.3.2002 மணியின்

மிகுதிச் செலவு 9, 255 பவுண் டெய்லர் மணியுருவாக்கும் ஸ்தாபனத்திற்கு அனுப்பப்பட்டது. பெரிய நா ஒன்று போட்டால் நல்லதென அடியவர் கருத்துத் தெரிவித்தமையாற் புதிய நா ஒன்றும் செய்யப்பட்டது. மீண்டும் முருகன் அருளாற் புதிய நாவுடன் மணி 26.04.2002 அன்று ஒலித்தது. வெள்ளி முலாமும் பூசப்பட்டு முருகன் மாமணி புதியபொலிவைப் பெற்றது. 09.05.2002 அன்று சௌதாம்டன் (Southampton) எனும் இடத்தில் இருந்து புறப்பட்ட ஹயுண்டாய் லிபேடி (Hyundai Liberty) என்ற கப்பலில் மணி அனுப்பி வைக்கப்பட்டது. 23.05.2002 அதிகாலை கொழும்பைச் சென்றடைந்து பின் 08.06.2002 அன்று தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதியான் கோயிலை வந்தடைந்தது. இந்த மணி செய்வதற்காக மொத்தமாக ஜோன் டெய்லர் மணியுருவாக்கும் ஸ்தாபனத்திற்கு 18, 425 கொடுக்கப்பட்டுள்ளது. புலம்பெயர் தமிழ் மக்களின் முருக பக்தியின் வெளிப்பாடாக ஆற்றங்கரையான் நிழலிலே மாமணி இன்று அல்லும் பகலும் ஒலித்துக் கொண்டிருக்கிறது. சுற்றுச்சூழலில் வாழும் மக்களின் செவிகளில் மணியோசை நாளும் கேட்கிறது. கோபுரத்திற் பொருத்தப்பட்டிருக்கும் வெள்ளிமணியின் தோற்றம் ஆற்றுநீர் பகலவனின் ஒளிபட்டுப் பளபளக்கும் தோற்றத்தோடு போட்டி போட்டு நிற்கிறது. கடல் கடந்து வந்த வெள்ளி மணியின் நாதம் கடலோரம் வாழும் கந்தன் அடியவர்க்கெல்லாம் காவல் ஒலியாய் வலம் வருகிறது. தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாயின் எதையும் சாதிக்கலாம் என்பதைப் புலம்பெயர் மாக்கள் செயற்பாடு நன்கு உணர்த்தி நிற்கிறது.

சந்நிதியான் வழிபாட்டுத்தலச் சூழலிலிருந்து பெருந்துயரோடு புலம்பெயர்ந்த தமிழ்மக்களின் பக்திக்காணிக்கையால் லண்டனில் உருவாகிய மாமணியைப் பார்க்கும் தோறும் பரவசம் ஏற்படுகிறது. பலரது அயராத உழைப்பாலும், ஆர்வத்தாலும் பொருட் கொடையாலும் உருவாகிய மாமணி, முருகனடியார் அனைவரையும் கோயிலிற் கூடச்செய்ய ஒலியெழுப்பும்போது உள்ளத்தில் ஏற்படும் ஆனந்தம் சொல்லால் விரித்துரைக்கமுடியாது. கண்களில் சுரக்கும் கண்ணீர்தான் கதைசொல்கிறது. மாமணிஓசையை இனிமேல் கேட்கமுடியாதே என மனந்நொந்த தாயக அடியாரின் துன்பந்துடைத்த புலம்பெயர்ந்த அடியவரின் காலமறிந்த பக்திக்கடனை நினைக்கும்

போது கரங்கள் தாமாகவே அவர்வாழும் திசை நோக்கிக்குவிந்து வாழ்த்துகின்றன. பின்வரும் கவிதையொன்று இந்த உணர்வை மேலும் விளக்கி நிற்கிறது.

"தொண்டைமான் ஆற்றருகே தொண்டர்குறை தீர்க்கவா
வேலாக நின்றவனே வேண்டும் வரம் தந்திடவா
நீயாடும் அழகைக்கண்டு மயிலாடி வருகுதப்பா
மயிலாடும் அழகைக்கண்டு மனமாடி வருகுதய்யா
மணியாடும் அழகைக்கண்டு மணியாடும் அழகைக்கண்டு
மணியாடும் அழகைக்கண்டு மக்கள் கூட்டம் ஆடுதய்யா"

16 ஆண்டுகள் கேட்காதிருந்த கண்டாமணி ஓசை மீண்டும் முருகனருளால் கேட்கமுடிந்தது பக்தி வரலாற்றில் ஒரு புதுமை. புலம்பெயர் நாடுகளில் அடியவர்கள் பலருடைய கனவிலே அப்போது மணியோசை கேட்டதாகக் கூறுகின்றனர். பக்திவயப்பட்ட ஆழ்மனதிலே தேங்கிக்கிடந்த பேராவல், அவர் வாழும் காலத்திலேயே நிறைவேற்றப்பட்டபோது முருகபக்தி மேலும் பெருகுகிறது. எத்தகைய மனக்குழப்பத்துடன் இரவிற் படுக்கைக்குச் சென்றாலும் மறுநாள் அதிகாலையிலே காற்றில் கலந்துவந்து காதிற்புகும் சந்நிதியின் கண்டாமணியோசை உடலிலும் உள்ளத்திலும் ஒரு புத்துணர்ச்சியையும் தெளிவையும் ஊட்டும். கண்டாமணி ஊரில் ஒரு கோயில் இருப்பதை அறிவிக்கும் அறிவிப்பு மணியல்ல. வல்லை ந. அனந்தராஜ் அதன் பொருளை வருமாறு கூறியுள்ளார்:

ஓர் ஆலயத்தின் 'கண்டாமணி' என்பது ஆன்மாக்களில் ஞான ஒடுக்கத்தை ஏற்படுத்தி, ஐம்புலன்களையும் ஒரு முகப்படுத்தி இறைவனுடன் சங்கமிக்கச் செய்யும் சக்திவாய்ந்த 'ஞானஒலி'. ஓர் ஆலயத்தின் 'கண்டாமணி' என்பது நாத பிரம்ம சுவரூபத்தைத் தெரிவிப்பது. அது வெண்கலத்தினால் ஆனதாகவும் நல்ல கணீரென்ற ஓசையுடையதாகவும் இருத்தல் வேண்டும். அந்த மணியின் நாதஒலி எவ்வளவு தூரத்திற்குக் கேட்கப்படுகின்றதோ அவ்வளவு தூரம் வரைக்கும் வாழ்பவரின் பாவங்கள் நீங்குவதாக வேதங்கள் கூறுகின்றன. நம்மையும், நாம் வாழும் சூழலையும் சுற்றி நிற்கும் பூத பிசாசுகள் அனைத்தும் கண்டாமணியின் நாதஒலியினால் நீங்கிவிடும் என்று சுப்பிரபேதம் கூறுகிறது."

புலம் பெயர் நாடுகளில் வாழும் முருகனடியார்கள் அமைத்திருக்கும் தொண்டைமானாறு நற்பணி மன்றம் சந்நிதியான் மாமணி மீண்டும் ஒலிக்க அயராது பணி செய்துள்ளது. இலண்டனில் இயங்கும் இம்மன்றம் நல்லதொரு பணியைச் செய்துள்ளது. அவர்கள் மணி சந்நிதிகோயிலிலே பொருத்தப்பட்ட போது வெளியிடப்பட்ட மாமணி சிறப்பு மலரில் ஒரு வாழ்த்துச் செய்தியை இணைத்துள்ளார்கள். அது வருமாறு :

> "மீண்டும் சந்நிதியான் மணியோசை கேட்டுக் காய்ந்துபோன ஊரெல்லாம் ஞானஒளி பெறவும் புதுமணியின் வரவோடு தொண்டைமானாறு புத்துயிரும் புதுப்பொலிவும் பெறவும் அடியவர்கள் அவன் வாசலிலே நாடிவந்து பாடிடவும், காவடிகள் கரகமொடு மீண்டும்வந்து ஆடிடவும் வாழ்த்து கிறோம். அன்னிய நாட்டில் இங்கே இருந்திடினும் தொண்டை மானாற்றிற்கு உதவ என்றே அமைந்திட்ட எம் மன்றமதன் சார்பில் 'அரோகரா' கோசமிட்டுக் கோபுரத்தில் ஏறும் கொஞ்சும் மணியோசை எங்கள் காதிற் கேட்டிடவே வாயார வாழ்த்துகின்றோம். வாழிய சந்நிதிமுருகா வாழிய வாழியவே"

இந்த மன்றத்தார் வாழ்த்து நிறைவேறியுள்ளது. இன்று ஆற்றங்கரையான் கண்டாமணியோசை, பூசை நேரம் ஒலிக்கும்போது அவ்வொலியைக் கேட்டு ஆடிப்பாடும் அடியவரை நேரிற் காணமுடிகிறது. மற்றவர்க்காக எம்பணிகள் முன்னெடுக்கப்படும்போது அவை மிக விரைவாகவே நிறைவேறும். புலம்பெயர் தமிழர் கண்டாமணியோசை தம்முடைய காதில் மட்டும் கேட்க வேண்டும் என்று எண்ணாமல் அதை ஆற்றங் கரையான் வாசலிலே அனைவருங் கேட்கவேண்டுமென விரும்பினர். அதுவே பக்தியின் வெளிப்பாடு.

செல்வச் சந்நிதிகோயில் வழிபாட்டு மரபில் தேர்த்திருவிழாவும் இணைந்தபோது கட்டுத்தேரிலேயே முருகன் வீதிவலம் வருவான். சகடையிலே மரங்களால் கட்டுத் தேர் நிர்மாணிக்கப்படும். வெள்ளை சிவப்பு நிறத்துணிகளால் விதானம் அமைக்கப்படும். அலங்காரத் (திருத்தொங்கல்) தொம்பைகளும் தொங்கவிடப்படும். வாழை, செவ்விளநீர், கரும்பு, பூமாலை என்பவற்றாலும் அலங்கரிக்கப்படும். காலம் செல்லச் சித்திரத்தேரில் முருகன் உலாவரும் நடைமுறை ஏற்பட்டது.

1984 ஆம் ஆண்டுத் தேர்த்திருவிழாவின்போது புதிய சித்திரத்தேர் பயன்படுத்தப்பட்டது. 1980-1984 ஆம் ஆண்டுவரை தேர்த்திருப்பணிச் செயலாளராக இருந்த துரைசாமி துரைரத்தினம் வருமாறு கூறுகிறார்:

> "1984ஆம் ஆண்டு தேர்த்திருவிழாவின்போது 15 அங்குல அகலமும் 6 அடி உயரமுமான ஆறு சக்கரங்களுடன் தமிழ் நாட்டின் மிகச் சிறந்த சிற்பாசிரியர்களாற் செதுக்கப்பட்ட வரலாற்றுச் சம்பவங்கள் நிறைந்த 500க்கு மேற்பட்ட சிற்பங்களுடன் காலைச் சூரியனின் கதிர்களால் தேரின் விமானப்பகுதியில் பதிக்கப்பட்ட பித்தளைத்தகடுகள் தகதகக்க 1008 வெண்கல மணிகள் அசைந்தாடி நாதமெழுப்ப எங்கும் என்றுமில்லாத பக்தர்களின் 'அரோகரா' என்ற கோஷம் வானைப்பிளக்க, சந்தனப் பலகைகளால் பதிக்கப்பட்ட சிம்மாசனத்திற் சந்நிதி முருகனைக் கொண்டு சித்திரப் பெருந்தேர் அசைந்தபோது காலத்தால் அழிக்க முடியாத ஒரு கலைப்பொக்கிசம் அங்கு தோன்றியதை அனைவரும் கண்டனர். ஆனந்தத்தில் உறைந்தனர்.

இத்தகைய அற்புத பரவசத்தைத் தந்த ஆற்றங்கரையானின் அற்புதத்தேர் 1986ஆம் ஆண்டு தீயால் அழிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான தமிழர்களின் அயராத உழைப்பினாலும், ஒற்றுமையாலும் உருவாக்கப் பட்ட தேர், தீயில் கருகிக் கிடந்த காட்சி முருகனடியார் நெஞ்சத்தையே எரித்தது. ஆனால் அந்த எரிமலையாகப் பொங்கிய துன்பத்தையும் புலம் பெயர்ந்த தமிழ் அடியவர்தான் ஆற்றி வைத்தனர். மீண்டும் புதிய சித்திரத்தேர் உலகெங்கும் வாழும் அடியார் கொடையாற் செய்யப் பட்டது. புலம்பெயர்ந்து வாழும் முருகன் அடியவர்களின் பக்தி நிலையின் தனித்துவம் நம் நாட்டவர் அறிய வேண்டியது. கனடாவில் ஏறக்குறைய 4 இலட்சம் தமிழ் மக்கள் வாழுகின்றனர். அவர்களில் பெரும்பான்மையோர் இலங்கைத் தமிழராக உள்ளனர். அரசியல் நிலைப்பாட்டினால் அகதிகளாய் நம் தமிழர் பல நாடுகளுக்கும் சென்றுள்ளனர். வாழ்விடத்தைவிட்டு உயிரைப் பாதுகாப்பதற்காக உலகெங்கும் தமிழர் சிதறியோடினர். இந்நிகழ்வு தமிழர் வரலாற்றிலே இதுவரை காணாத ஒன்று. காலங்காலமாகத் தலைமுறை தலை முறையாக வாழ்ந்த தாயகமண்ணை விட்டுச் செல்லும்போது அவர்கள் முருகனையும் நெஞ்சிற் சுமந்து சென்றனர். ஆற்றங்கரையான் கோயில்

யாருமே அருகே செல்ல முடியாத இடமாகத் தடைசெய்யப்பட்ட போது இடம்பெயர்ந்த புலம்பெயர்ந்த மக்களின் உள்ளத்திலே பக்திக்கனல் மூண்டெழுந்தது. தாம் வாழுகின்ற இடத்திலே முருகனை அழைத்து வழிபடும் நடைமுறையை மேற்கொண்டனர்.

முருகனைப் பற்றிய பண்டைய இலக்கியங்களில் முருகன் உறையுமிடமாக மலை குறிப்பிடப்பட்டுள்ளது. மலைநாட்டவர் முருகனை வரவழைத்து வணங்கும் பண்புடையவர். நம்பிக்கையோடு ஆடல் பாடல் நிவேதனம் செய்து வேண்டிய வரங்களைப் பெற்றனர். அதேபோலச் சந்நிதிமுருகனைத் தாம் வாழுகின்ற பிறநாடுகளிலே வரவழைத்து வணங்கும் மனப்பக்குவமுடைய அடியார்களின் பக்திக்கு ஈடு எதுவும் இல்லை. கனடா முருகன் கோவிலிற் சந்நிதியானைக் காணக் காவடியும் பாற்செம்பும் எடுப்பதாக நேர்த்திக்கடன் செய்யும் முருகன் அடியாரை நினைக்கும்போது மெய்சிலிர்க்கிறது. பெண்கள் அலகு பாய்ச்சிப் பாற்செம்பு எடுத்துப் போகும் கோலம்; கண்கொள்ளாத காட்சி. பிறநாட்டவர் நம்மை எள்ளி நகையாடுவரே என்ற எண்ண மின்றிப் பக்தி நிலையிலே முருகன் கடன்தீர்க்கிறார்கள். இச் சமய வழிபாட்டு நிலையில் முதியவர் மட்டும் பங்கு கொள்வதில்லை. பன்னிரண்டு வயதுக்குட்பட்ட சிறுமியர் வண்ணப்பட்டாடை அணிந்து விளக்கெடுத்துச் செல்லும் நடைமுறையும் செயற்பாட்டில் உள்ளது. நமது எதிர்காலத் தலைமுறையினரிடம் பக்திப் பண்பாடு கையளிக்கப் படும் காட்சி எம்முன்னோரின் பண்பாட்டுப் பயிற்சியைப் பறைசாற்றி நிற்கிறது. ஆற்றங்கரையானை நேரிலே வந்து வழிபட முடியாததேபாது தாம் வாழுமிடத்திலே மானசீகமாக வழிபட்ட அவர்கள் நம்பிக்கை வீண்போகவில்லை. இவ்வாண்டு உலகில் வாழும் அனைவரும் சந்நிதியான் கோயிலுக்கு வந்து வழிபட முருகன் அருள் செய்து புலம்பெயர்ந்த அடியவர்க்கு ஆறுதலைத் தந்துள்ளான். செல்வச் சந்நிதி முருகன் உற்சவ காலங்களிற் சாம்பியா நாட்டிலே திரு.சி.வ. ஆறுமுகம் அவர்களால் விழாநடத்தப்பட்டது. முருகனின் அலங்காரம் வெகு சிறப்பாகச் செய்யப்படும். மலர்களால் செய்யப்படும் அலங்காரம் கண்ணையும் கருத்தையும் நிறைவிக்கும். லண்டனில் நடைபெற்ற சந்நிதியான் மாமணி விழாவிலும் திரு.சி.வ. ஆறுமுகத்தின் குடும்பத் தினர் பங்கு கொண்டுள்ளனர்.

இதே போன்று ஓமான் நாட்டிலும் சந்நிதி முருகன் விழாக் காலத்திற் சிறப்பான பூசை வழிபாடுகள் நடைபெற்றன. திரு.க. இரவீந்திரன் என்பவருடைய இல்லத்திலே வழிபாடு நடைபெற்றது. முருகனுக்கு அடியார் தமது கைகளால் அபிடேகம் செய்யும்பேறு பெற்றனர். மனம் சந்நிதி முருகனில் ஒன்றிநிற்கப் பக்தி பரவசத்தோடு அதனைச் செய்தனர். இந்த இல்லப்பூசையிலே இலங்கையர் மட்டுமன்றி இந்தியாவில் டெல்லி, தமிழ்நாடு, கேரளா, கர்நாடகம், குஜரத் போன்ற மாநிலங்களைச் சார்ந்தவர்களும் பங்குபற்றினர். மௌனமான வழிபாட்டை ஏற்கும் சந்நிதி முருகன் அவர்களுடைய வேண்டுதலையும் நிறைவேற்றினான். இப்பூசை பற்றி க. இரவீந்திரன் வருமாறு குறிப்பிடுகிறார்.

> *1991ஆம்ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் தொண்டமானாறு சந்நிதித் திருவிழா நடக்கவேண்டிய பதினைந்து நாட்களும், நாம் மஸ்கட்டில் முருகனுக்கு விழா எடுத்தோம். எமது பூசைகளுக்கு மலர்கள், மாலைகள் இலங்கை, இந்தியா, ஓமான் நாட்டின் மஸ்கட் நகரத்திலிருந்து நூற்றுக்கணக்கான கிலோமீட்டர் தொலைவில் உள்ள சலாலா போன்ற இடங்களிலிருந்தும் வந்தன. பூசைகள் முடிவுற்ற பின்னர் சந்நிதியிற் பூசையிற் பங்குபற்றிய உணர்வோடு முருகன் அடியார்கள் செல்வார்கள்."*

புலப்பெயர்ச்சியிலே முருகன் பூசகர் குடும்ப வாரிசுகளும் கனடா சென்றனர். அவர்களே முருகன் அடியார்களுக்கு ஆறுதல் தருபவராய் இருந்தனர். மாமணி அமைக்கும் முயற்சியில் முன்னின்றனர். இதுவும் சந்நிதியானின் அருள் என்றே கூறவேண்டும். வேல் வடிவில் ஆறுமுகனை வழிபடும் மனப் பக்குவம் பெற்ற ஆற்றங்கரையானின் அடியவர் எங்கு சென்றாலும் முருகனை மறக்கமாட்டார்கள். 'யாமிருக்கப்பயமேன்' என்ற முருகன் அருள்வாக்கை எண்ணித்துணிவோடு வாழ்வார்கள். ஆற்றங்கரையில் அமர்ந்திருக்கும் முருகன் முழுமுதற் கடவுளாகப் பலராலும் வழிபடப்படுவதாற் கடல் கடந்த நாடுகளிற் பிற நாட்டவரிடையே தற்போது பரவி வருகிறது. மனித மனங்களைப் பக்குவப்படுத்தி வழிபாடே சாலச் சிறந்ததென்பதை உலகமும் உணர முருகனடியார்களே காரணமாயுள்ளனர்.

### ஆற்றங்கரையானிடம் அமைதியைக் கண்டவர்கள்

வழிபாட்டிடம் என்பது அமைதியான சூழலிலே இருக்க வேண்டும். நீரின் வளமும், நிழலின் தன்மையும், தென்றல் வீசும் சூழலும் எவரையும் கவரும் தன்மையன. செல்வச் சந்நிதி கோயிலின் அமைவிடம் இத்தகையதே. அதனால் இங்கு வழிபட வரும் அடியார்கள் மீண்டும் மீண்டும் வரவிரும்புவர். ஆனந்தாச்சிரமம் என்ற ஆச்சிரமம் தென்னஞ் சோலைகளிடையே அமைந்திருந்த, அந்த ஆச்சிரமத்தில் ஜேர்மன் நாட்டிலிருந்து வந்த ஒருவர் தன் துறவு வாழ்க்கையைத் தொடர்ந்தார். அவரைப் பற்றிய வரலாறு விரிவாக அறியப்பட வேண்டும். அவருக்குப் பின்னேயும் பலர் தமது ஆத்மீக வாழ்வைத் தொடரச் சந்நிதியானை நாடி வந்துள்ளனர். அவர்களைப் பற்றிய சிலதகவல்களை இங்கு சுருக்கமாகத் தருவது பயனுடைத்து.

### கௌரிபாலா சுவாமிகள்:

இவருடைய பிறப்பிடம் ஜேர்மன் நாடாகும். 1907இல் உயர்குலத்திற் பிறந்தவர். பீற்றர் யேச்சிம் ஸ்கொன்பெல்ட் என்பது இவருடைய இயற்பெயராகும். இளமையிலே மேற்படிப்பிலே ஈடுபட்டிருந்த வேளையிலே தலயாத்திரை ஒன்றை மேற்கொண்டார். அப்போது கடல்வழியாகவே பயணங்கள் நடைபெற்றன. இவரும் கடல்வழிப் பயணத்தை மேற்கொண்டு இலங்கைத் தீவுக்கு வந்து சேர்ந்தார். இரண்டாம் உலகப் போர்க்காலத்திற் பல துன்பங்களை எதிர்கொள்ள நேர்ந்தமையால் இந்தியாவுக்குத் தனது ஆன்மீகப் பயணத்தை மேற்கொண்டார். அங்கு பல திருத்தலங்களையும் சென்று வழிபட்டார். ஆதிசங்கராச்சாரியார், ரமணமரிஷி போன்ற மகான் களையும் சந்தித்து ஆசியும் பெற்றார். ஆதிசங்கராச்சாரியார் இவரை ஆசீர்வதித்து 'கௌரிபாலா கிரி' என்ற பெயரையும் வழங்கினார். இந்தியாவிலிருந்து மீண்டும் இலங்கையை வந்தடைந்தார். யாழ்ப்பாணம் வந்தபோது காங்கேசன்துறை வீதியிலுள்ள புத்தகக் கடைக்குச் சென்றிருந்தார். அங்கு அவர் நூலை வாசிப்பதற்கு வாங்குவதற்காகக் கையில் எடுத்தபோது ஒருவருடைய கை அதைப் பறித்தெடுத்தது. "நீ ஒரு முட்டாள், நீ தேடுவதை இந்நூலைப் படிப்பதன் மூலம் பெறமுடியாது. சும்மா இரு" என்று கடுமையான குரலிலே கூறினார். அவ்வாறு இவரைக் கடிந்து உரைத்தவரே யாழ்ப்பாணத்திலே பெரிய மகானாக இருந்த, நாம் எல்லோரும் மதிக்கின்ற யோகர்

சுவாமிகளாகும். கௌரிபாலாகிரியின் வாழ்க்கையில் இந்நிகழ்வு திருப்பு மையமாக அமைந்தது. அன்றிலிருந்து யோகர் சுவாமிகளையே தனது குருநாதராக ஏற்று வாழ்ந்து வந்தார்.

கௌரிபாலா சுவாமிகளிடம் ஏனைய சமயங்கள் பற்றிய அறிவும் இருந்தது. சமயம் பற்றிய அடிப்படையான விளக்கங்களை அறிந்திருந்தார். இதனாற் சைவசமயத்தைப் பற்றிய தெளிவை மக்களிடையே ஏற்படுத்திப் பிரசாரமும் செய்துவந்தார். முருகனடிய வர்களுக்கு ஆசியுடன் கூடிய நல்லுரைகளை வழங்கி அவர்களை நல்வழிப்படுத்தும் பணியையும் செய்து வந்தார். ஒவ்வொரு மனிதனும் நீ யார்? என்ற வினாவுக்கு விடை காணும் தேடல் நிலை ஏற்படும்போது தன்னையும் சுற்றத்தாரையும் பற்றித் தெளிவாக விளங்கிக்கொள்வான் என்பதே இவரது கருத்தாகும். தனது ஆன்மீக வாழ்வியலாலும், அதன்மூலம் பெற்ற அனுபவங்களாலும், யோகர் சுவாமிகளின் வாக்கை ஞானவாக்காகக் கொண்டமையாலும் "சும்மா இருக்க சூத்திரம்" என்ற நூலை எழுதி வெளியிட்டார். அத்தோடு தன்னைத்தான் உணரும் நோக்கில் "சும்மா இரு" எனத்தனது கையில் பச்சை குத்திக் கொண்டு வாழ்ந்தவர்.

சந்நிதியான் வழிபாட்டு நடைமுறையில் வாய்கட்டிப் பூசை செய்யும் மௌனபூசையை கௌரிபாலா விரும்பினார். மேலைத்தேச ஆடம்பரமான வாழ்வியலைவிட அமைதியான சூழலில் வாழ்க்கை பற்றிய சிறந்த விளக்கத்தைப் பெறவேண்டும் என்ற அவருடைய இலக்கும் நிறை வேறியது.

**ஆனைக்குட்டிச் சுவாமிகள்**

இவர் இலங்கையிற் பிறந்தவர். இவரது இயற்பெயர் ஜே.எச். இராம்ஸ்பொதம். இவரைத் தமிழில் "சந்தசுவாமி" என்றும் அழைப்பர். இவருடைய தந்தையார் இலங்கையின் முன்னாள் பிரித்தானிய ஆளுநராக இருந்து சுதந்திர இலங்கைக்கான யாப்பை ஆக்கியவருமான சோல்பரிப்பிரபு ஆவார். இவர் கௌரிபாலா சுவாமியுடன் கொண்ட தொடர்பினால் ஞான உபதேசம் பெற்று சைவசமயத்தைத் தழுவினார். சந்நிதியிலே துறவு வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்ந்தவர். 1955ஆம் ஆண்டில் ஜேர்மன் சுவாமி என எல்லோராலும் அழைக்கப்படும்

கௌரிபாலாவுடன் சேர்ந்து மார்க்கண்டு சுவாமிகளைத் தரிசிக்கச் சென்றார். அங்கு சிலகாலம் தங்கியிருந்த அவரைக் குருநாதராக ஏற்று ஆச்சிரமத்திலே சேவை செய்து வாழ்ந்திருந்தார். பின்னர் மட்டக்களப் பிற் செங்கலடியில் சிவதொண்டன் நிலையத்தை அமைத்து அதனை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றார். நிலையம் அமைந்த காணியிலே விவசாயம் செய்தார். அதனால் பெற்ற விளைபொருளைச் சிவதொண்டன் நிலையத்தின் மகேஸ்வர பூசைக்குப் பயன்படுத்தினார். மேலதிகமாகப் பெற்ற வருவாயை ஏனைய செலவீனங்களுக்குப் பயன்படுத்தினார். பின்னர் 1980ஆம் ஆண்டில் தமது குருநாதரின் வேண்டுகோளின்படி தமது ஆன்மீக சேவையை ஆற்றுவதற்காக லண்டன் சென்றார்.

**பன்றிக்குட்டிச் சுவாமிகள்:**

இவர் தென்னிந்தியாவைச் சேர்ந்தவர். சந்நிதியானின் அற்புதங்களை அநுபூதியூடாகவே உணர்ந்து இலங்கைக்கு வந்தவர். தொண்டமான் ஆற்றங்கரையில் ஆச்சிரமத்தில் வாழும் விருப்போடு வந்தவர். கௌரிபாலாசுவாமி, ஆனைக்குட்டிச் சுவாமி, நரிக்குட்டிச் சுவாமி, பன்றிக்குட்டிச்சுவாமி என்னும் நால்வரும் தங்களுக்கெனப் பர்ணசாலை (சிறுகுடில்) அமைத்து அவற்றை மிகவும் தூய்மையாகவும், அழகாகவும் பக்திப் பொலிவோடு வைத்து வாழ்க்கை நடத்தியவர்கள். இவர்களுடைய குடில்கள் முற்காலத்திலே மிகச் சிறப்பாக இயங்கிய ஆனந்தாச்சிரமத்திற்கு அருகிலேயே அமைந்திருந்தன. சந்நிதியானை வழிபடவரும் அடியவர்கள் இக்குடில்களைப் பக்தியுணர்வோடு தரிசித்துச் செல்லும் வழக்கமும் இருந்தது. நால்வரும் ஆன்மீக விடயங்களைத் தமக்குள் கலந்துரையாடுவர். அதனால் சந்நிதிச் சூழலிற் சமயப்பற்றுப் புத்தெழுச்சிபெற வாய்ப்பாயிற்று. பிறமொழியாளரின் சமயவாழ்வு பொதுமக்களைப் பெரிதும் கவர்ந்தது. இவர்களுடன் சமகாலத்தில் வாழ்ந்த 'புலிக்குட்டி' என அவர்களால் அழைக்கப்பட்ட 'சாம்விக்ரமசிங்க' என இயற்பெயர் கொண்ட அடியார் ஒருவரும் வாழ்ந்தார்.

**நரிக்குட்டி சுவாமிகள்:**

இவர் அவுஸ்திரேலிய நாட்டைச் சேர்ந்தவர். சந்நிதிக்கு வந்து ஆச்சிரமத்திலே தங்கி வாழ்க்கை நடத்தியுள்ளார். கோயிலின் சூழல் அவரை இடங்கே தங்கவைத்து வழிபாட்டைச் செய்ய உதவியுள்ளது.

**மௌனகுரு கடவுள் சுவாமிகள்**

இவருடைய சொந்த ஊர் அல்வாயாகும். தந்தைபெயர் கந்தர் கணபதிப்பிள்ளை. தாயின் பெயர் இலட்சுமிப்பிள்ளை. இவர் 1906 ஆம் ஆண்டு சித்திரைமாதம் 28 ஆம் திகதி பிறந்தார். சுவாமிகள் முன்னர் இல்லற வாழ்விலே ஈடுபட்டிருந்தவர். 24 வயதிலே இல்லறத்திற் புகுந்து ஒன்பது பிள்ளைகளைப் பெற்றார். அவர்களுடைய கடமைகளைச் செவ்வனே செய்து முடித்த பின்னரே ஆத்மீக வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளார். பலமுறை இந்தியாவிலுள்ள தலங்களுக்கு யாத்திரை மேற்கொண்டுள்ளார். அவ்வாறு சென்றபோதே பொன்னம்பல சுவாமிகளைக் கண்டு ஆசியும் அறிவுரையும் பெற்றார். அவருடைய வழிகாட்டலிலேயே மீண்டும் தாய்நாட்டிற்கு வந்தார். செல்வச் சந்நிதியிலே வாழ்ந்து கொண்டிருந்த சின்னத்தம்பி சுவாமிகளைக் குருநாதராக ஏற்று ஆன்மீகப் பணிகளில் ஈடுபட்டார். முன்னைய தகரமடத்திற்கு அண்மையிலுள்ள கடை ஒன்றிலே ஆத்மீக சிந்தனையுடன் வாழ்ந்தவர். இவர் செல்லுமிடம் எல்லாம், பார்க்குமிடமெல்லாம் கடவுளையே கண்டார். அதனாற் காண்பவரை யெல்லாம் 'கடவுள்' என்று அழைத்து வந்தார். அதனால் அவருக்கு 'கடவுள்சாமி' என்ற பெயர் நிலையான பெயராகிவிட்டது. இவர் தொடக்கத்தில் குருவாரத்திலும் பின்னர் ஆதிவாரத்திலும் மௌன விரதத்தை மேற்கொண்டு வாழ்ந்தார். 1976 ஆம் ஆண்டிலிருந்து நித்திய மௌனவிரத்தை மேற்கொண்டார். அதனால் அனைவரும் அவரை மௌனகுரு சுவாமிகள் என அழைக்கலாயினர். பேசாநிலையிற் பெரும் பொருளைக் காணும் அவருடைய பக்திநிலை ஆற்றங்கரையானின் அருட்பேறாகும்.

சின்னத்தம்பி சுவாமிகளின் ஆண்டுக்குருபூசை 1980இல் நடைபெற்றபோது அன்று மௌனகுரு சுவாமிகள் தனது சமாதி அமையவேண்டிய இடத்தையும் மறவன் புலவிலே காட்டினார். அதன்பின்னர் குருபூசை நிறைவெய்திய நான்காம் நாளில் சீடரான மௌனகுரு சுவாமியும் ரௌத்திரி வருடம் புரட்டாதித் திங்கள் 8ஆம் நாள் புதன்கிழமை உத்திரட்டாதி நட்சத்திரம் கூடிய சுபவேளையில் சமாதியடைந்தார். தற்போது சுவாமிகளின் ஜயந்திதினம் சித்திரை மாதம் 15ஆம் நாள்நினைவு கூரப்படுகிறது.

**திருவாசக சுவாமிகள்**

இவரை சபாரத்தின சுவாமிகள் என்றும் அழைப்பர். சந்நிதிச்சூழலில் வாழ்ந்து முருகனடியார்களுக்கு நன்னெறி புகட்டியவர். திருவாசகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.

**நடராசா சுவாமிகள்:**

இவர் பிறந்த இடம் மந்துவில் என்னும் கிராமம் ஆகும். 1950ஆம் ஆண்டு முருகர் நடராசர் என்ற இயற்பெயரையுடைய நடராசா சுவாமிகள் வேறு சில முருகனடியார்களுடன் கால் நடையாகக் கதிர்காமம் சென்றார். அங்கு முருகனின் அற்புதக் காட்சிகள் பலவற்றைக் கண்டார். அந்தக் காட்சிகளின் நினைவாகவே வீட்டிற்கு வந்தார். அவரது கோலத்தைக் கண்ட மனைவி மிகவும் கோபம் கொண்டு போய்த்தாடியை வெட்டிவிட்டு வீட்டுக்குவா! இல்லா விட்டால் வரவேண்டாம்' என்று பேசிக் கலைத்துவிட்டாள். அதனால் மிகவும் மனமுடைந்து வெளியேறிய நடராசாவை ஒரு பூக்கூடையுடன் வந்தவர் எதிர்கொண்டார். நடராசாவைப் பார்த்து அன்பாகப் பேசினார். "நடராசா ! என்ன யோசிக்கிறாய் ! எல்லாம் நல்லபடியே நடக்கும்! சந்நிதிக்குப் போவோம்! வாருங்கள்" என்று கூட்டிச் சென்றார். அன்று தொட்டுச் சந்நிதியிலுள்ள செல்லையா மடத்திலும், பின்னர் அடியார் மடத்திலும் வாழ்நாளைக் கழித்தார். முருகனை வழிபடப் பூக்கூடையுடன் கோயிலை வலம்வந்து வாழ்ந்தவர். தொண்ணூறு களில் தனது சொந்த மண்ணிலேயே இறைபதம் அடைந்தார். இவரைக் கோயில் வழிபாட்டிற்குச் செல்லும் போதெல்லாம் தரிசிக்கும்பேறு கிடைத்தது.

**சடைவரத சுவாமிகள்:**

அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சுப்பையா என்னும் சலவைத் தொழிலாளியின் மகனாவர். இவரை வேளாளர்குலத்தைச் சேர்ந்த அம்மையார் ஒருவர் தத்தெடுத்து வளர்த்து வந்தார். அவருக்குக் குழந்தைமேல் அன்பிருந்தபோதும் சாதிநிலையால் சற்று மனந்திரிந்தவராகவே இருந்தார். ஒரு நாள் அம்மையாருடைய கனவிலே ஒரு சந்நியாசியார் தோன்றி "நீ இந்தச் சரவணனை யாரென்று நினைத்தாய்? இந்தச் சரவணன் என்பது அடியவன் அல்லவா? இவன் பண்டாரப்பிள்ளை" என்று கூறி மறைந்தார். அன்று தொடக்கம் அம்மையார் சரவணனைத் தன் பிள்ளையாக ஏற்றுக்கொண்டார். அவருடைய பார்வையிலும் குழந்தை சோதி ரூபமாகவே என்றும் காட்சியளித்தது. முருகேசு சுவாமிகளிடம் உபதேசம் பெற்று 'சடைவரதர்' என்ற நாமத்தைப் பெற்றுச் சுவாமிகளானார். சிறுவயதி லேயே கடையிற் சாமியிடம் ஆசியும் அருளும் பெற்றவர். 'எல்லாம் திருவருட்செயல்' என்பதே இவருடைய கொள்கையாகும். அதையே

எக்காலமும் எல்லாக் கருமங்களிலும் கடைப்பிடித்தவர். அருளால் அனைத்தையும் பார்க்கும் அநுபவத்தைப் பெற்றுய்ய வேண்டுமென்பதே அவருடைய இலக்காக விளங்கியது. செல்வச் சந்நிதியிலுள்ள அடியார்மடம் சடைவரத சுவாமிகளால் தொடக்கிவைக்கப்பட்டது. இன்றும் அன்னதானப் பணியை நடத்திவருகிறது. சுவாமிகள் யுவ வருடம் ஆடி மாதத்து உத்தர நட்சத்திரத்தில் ஏழாலையிலே சமாதியடைந்தார்.

**மயில்வாகனம் சுவாமிகள்:**

இவர் 1913ஆம் ஆண்டு புரட்டாதித்திங்கள் 26ஆம் நாள் யாழ்ப்பாணம், ஆனைப்பந்தியிலே பிறந்தவர். யாழ். நகரிலே வர்த்தகராக வளமாக வாழ்ந்தாலும், உள்ளத்தெழுந்த ஆன்மீக உணர்வின் உந்துதலால் இந்தியா சென்று திருவண்ணாமலையிலே ரமண மகரிஷியின் சீடனாகச் சிலகாலம் வாழ்ந்தார். 'நீ எங்கிருந்து வந்தாயோ அங்கேயே போய்த் தொண்டு செய்' என்று குரு கூறியதை ஏற்று 1939ஆம் ஆண்டு சந்நிதிகோயிலுக்கு வந்து சேர்ந்தார். அப்போது சந்நிதி கோயிலின் பிரதம பூசகர்களில் ஒருவராக இருந்த தங்கராசா ஐயரின் உதவியுடன் அவரது வளவிலே தென்னஞ்சோலை சூழ்ந்த சூழலில் மனதிற்கு அமைதி தருமிடத்திற் சிறுகுடிசை கட்டி வாழ்ந்து வந்தார். அத்துடன் தேவார, திருவாசகங்களைப் பாடி, முருகன் அடியார்களை மகிழ்வித்தார். "முருகன் பாமாலை" என்ற முருகன் பாராயண நூல் ஒன்றையும் இயற்றியுள்ளார். பசியோடுவரும் முருகன் அடியவர்க்கு சோற்றுக் கொடை கொடுத்து அடியர்க்கு அடியானாக வாழ்ந்தார். 1940 ஆம் ஆண்டு இப்பணிக்கென ஆடி மாதம் 20 ஆம் திகதி 'ஆனந்தாச்சிரமம்' என்ற மடத்தையும் தொடக்கி வைத்தார். நூற்றுக்கணக்கான அடியாரை ஒரே நேரத்தில் அமர்த்திச் சோறு படைத்து கூட்டுப்பிரார்த்தனை செய்து அரோகரா என்ற ஒலிப்புடன் அன்னதானம் தொடங்கும். உணவுக் கொடை ஒழுங்குடனும் கட்டுப்பாட்டுடனும் நடைபெற்றது. இந்த ஆச்சிரமத்தில் உணவு ஆயத்தம் என்பதற்கு அடையாளமாக ஆச்சிரம வாயலிலே ஒரு கொடியை ஏற்றுவார்கள். இக்கொடியை அன்னக்கொடி என்றே அழைத்தனர். இவ்வாறு சிறந்தபணி செய்த அடியார் உள்ளத்திலே முருகன் அருள் ஒளியை ஏற்றிய சுவாமிகள் 1985இல் சமாதியடைந்தனர். செல்வச் சந்நிதி கோயிலில் இன்னலுறும் மானிடரைத் துன்பத்தினின்றும் விடுவித்து அவர்களுக்கு அமைதியையும் ஆனந்தத்தையும் தேடிச்

கொடுப்பதே தம்பணியென இறுதிவரை செயற்பட்டவர். இவருடன் இருந்து ஆசியைப் பெற்றவரே இன்று சந்நிதியான் ஆச்சிரமத்தை நிர்வகிக்கும் அருட்பணி செய்யும் திரு. செ. மோகனதாஸ். மயில்வாகனம் சுவாமியாரின் பணியைத் தொடர்வதோடு அன்னக் கொடையோடு வேறுபல சமூக நலக் கொடைகளையும் செய்து வருகிறார்.

**முருகேசு சுவாமிகள்:**

இவர் 23.05.1920ஆம் ஆண்டு பிறந்தவர். 1960இல் இல்லற வாழ்விலிருந்து விடுபட்டு முருகன் அடியவரானார். அடியவர்களை உறவு நிலையிலே தொடர்பு கொண்டார். எல்லோரையும் மகனாகவோ, மகளாகவோ பேரப்பிள்ளையாகவோ பாவனை செய்தே ஆசி வழங்குவார். 'சாமி ஐயா' என்று செல்லமாகவும் அன்பாகவும் இவரை எல்லோரும் அழைப்பர். தன் வாழ்நாளிற் பெரும்பகுதியைத் தொண்டு செய்வதிலேயே கழித்தவர். 17.03.1997ஆம் ஆண்டு முருகனடி சேர்ந்தார்.

**புங்குடுதீவு சுவாமிகள்:**

இவர் புங்குடுதீவு சிவன் கோயில் உற்சவத்தில் வேட்டைக்கு வீதி உலா சென்ற சுவாமி சரிவதைப் பார்த்து அதனைத் தாங்கமுற்பட்டு அதனால் நோய் வாய்ப்பட்டார். வைத்தியசாலையிற் சிகிச்சை பெற்றபோதும் அவரது உடம்பில் ஏற்பட்ட உள்நோயை மாற்றமுடிய வில்லை. அதனாற் சந்நிதி கோயிலை வைந்தடைந்தார். சந்நிதிக்கு வருமுன்னர் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் நிகழ்வுகளை ஞானத்தால் உணர்ந்திருந்தார். அரங்கம், அங்கு நடைபெறும் நிகழ்வுகள் யாவும் நேரடியாகக் காணும் பாக்கியத்தைப் பெற்றபோது பெரிதும் வியப்படைந்தார். முருகன் அருளை எண்ணி எல்லோரும் அதைப் பெறப் பணி செய்கிறார்.

**பாபா சுவாமிகள்:**

இவரது இயற்பெயர் 'அருட் செல்வம்' என்பதாகும். இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தற்போது சந்நிதியில் வாழ்கிறார். ஆலயத்தில் நடைபெறும் அன்னதானப் பணிக்குத் தனது முழு ஈடுபாட்டையும் நல்கி வருகிறார். அடியார்களுக்கு ஆசியும் வழங்கி வருகிறார்.

மேற்படி சந்நிதியான் கோவிலில் வாழ்ந்த அடியவர்களுடைய தகவல்கள் ஜீவகி பத்மராஜனுடைய கட்டுரையிலிருந்து (செல்வச் சந்நிதிச் சூழலிற் சித்தர்களும் யோகிகளும்) பெறப்பட்டவை. இந்த ஞானிகளுடைய வரலாறுகள் மேலும் விரிவாக எழுதப்பட வேண்டியவை. சாதாரண பொதுமக்களுடைய வழிபாட்டுத்தலமாக இருந்த சந்நிதி இத்தகைய சுவாமிகளின் ஆத்மீகப் பணியால் உலகமறியும் திருத்தலமாயிற்று. மனித வாழ்வியலில் துன்பங்கள் தொடரும்போது அவற்றிலிருந்து விடுபட முருக வழிபாடுதான் சிறந்தது என்பதை இந்த மெய்யடியார்கள் விளக்கியுள்ளனர். எமது சமயத்தவர் முருகவழி பாட்டிலே ஆழ்ந்து ஈடுபடுவதற்கும் இது உதவியது.

மனத்தைப் பண்படுத்த ஓர் அமைதியான சூழல் தேவை. அத்தகைய சூழலை சந்நிதி ஆலயம் கொண்டுள்ளது. ஆற்றங்கரையின் தண்மையும் மரங்களின் நிகழலும் தென்னஞ்சோலையும் முன்னைய காலத்தில் ஒரு தெய்வீகத்தைத் தந்தன. துறவு பூண்டு சமயப்பணி செய்யவும் ஏற்ற இடமாக ஆற்றங்கரை இருந்தது. இந்தச் சூழல்தான் இன்று சிதைவடைந்த போதும் லட்சக்கணக்கான பக்தர்களைத் தன்பால் ஈர்த்து வருகிறது. முற்காலங்களில் 'சின்னக்கதிர்காமம்' என்றும் அழைக்கப்பட்டது. மேலும் சந்நிதி கோயிலைப் பற்றி யாழ்ப்பாணம் யோகர் சுவாமிகள் குறிப்பிடும்போது கோயிற்பரப்பிலே நிலத்தடியில் ஆயிரக்கணக்கான சிவலிங்கங்கள் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். தீராத நோய்தீர்க்கும் தலமாகச் சந்நிதி விளங்குவதால் நோயால் நலிவுற்றோரும், பசிப்பிணியால் வாடியவர்களும் சந்நிதியிலே வந்து தங்கும் வழக்கம் ஏற்பட்டது. பொல்லா வினைகளின் வேரறுக்க வல்ல வேலவனின் திருக்கோலம் எல்லோரையும் பரவசப்படுத்தும். ஏனைய ஆலயங்களைவிடச் சந்நிதிகோயிற் பக்தி அநுபவமும், வரலாறும் புனிதமானதாகக் கருதப்படுகிறது. இயற்கையோடு இயைந்த வழிபாட்டு நடைமுறைகளும் அமைதியை நிலைநாட்டுகின்றன. 'சந்நிதி' என்ற சொல்லே அண்மையிலிருக்கும் அமைதியைக் குறிக்கிறது.

# சந்நிதி முருகனின்....



முன்னைய தோற்றம்...



புதுமையின் உருவம்...



மூலஸ்தான வேல்...



வள்ளியம்மன்
கோவில்



மாணிக்ககங்கைக் கேணி...



மாமணியும்
கோபுரமும்...



கட்டுத்தேரிற் சந்நிதியான்...



சித்திரத்தேரில் எம்பெருமான்...



தேர்முட்டி



பறையடிப்பு



65 ஆலமிலைப்படையல்...




மாவிளக்குப் போடல்...




அன்னதானம் வழங்கல்...




சித்தர்கள்...



சந்நிதியான் ஆச்சிரமம்...



மருதமரச்
சோலை...



தலவிருட்சம்
இன்றும்...



ஆற்றங்கரை

# கனடாவில் சந்நிதியான் அடியார்கள்



பாற்செம்பு எடுத்தல்...



சிறுமியர் விளக்கெடுத்தல்...

## சந்நிதி இலக்கியங்கள்

உ

வல்வை இயற்றமிழ்ப் போதகாசிரியர் ச. வயித்திலிங்கம்பிள்ளை இயற்றிய

### செல்வச்சந்நிதி முருகன்

# திருப்பள்ளியெழுச்சி

சீருறு நினதருள் செறியடி யவர்தஞ்
சிந்தையி னிலமில கினவவரருள்மா
மேருறு கிரியெழு சிதமென வல்லோன்
இந்திர திசைவரை யினிலெழு கின்றான்
பேருறும் அரி முதல் அமரர்கள் பரவப்
பேசரு மறைமிகும் ஒலியோடு பரவ
நேருறு தொண்டைநன் நகருறு வளசந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே.

ஆண்டலை கூவின வன்னி புட்ட
மன்பொடு கூவின புள்ளொலி பரந்த
மாண்டகு சங்கமொ லித்தன வானின்
மருவிய தாரகை மறைந்தன கடன்மேல்
ஏண்டகு கதிரவன் றோன்றினன் அன்பர்க்
கெளிவரு மறுமுக விறையவ மிகவே
நீண்டிடு மரநிறை வனமுறு வளச்சந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே.

தோத்திர மிசைத்திடு மடியவ ரொருபால்
சுற்றியஞ் சலிசெயு மடியவ ரொருபால்
காத்திடு வெனவரு மடியவ ரொருபால்
கைகுவித் தேதொழு மடியவ ரொருபால்
பூத்திரள் சிந்திடு மடியவ ரொருபால்
பொற்புர வெங்கணு நிறையவந் தெடுத்தார்
நேத்திர மணியெனக் குருபர வளச்சந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே.

மணிமயி லதன்மிசை நீயிருந் தாங்கு
மறிகடன் மிசையொடு கதிரவ னுதித்தான்
அணியுறு மரைமலர் நினதரு ளடைந்த
வன்பர்த முகமென விகசித மான
கணியுறு புனமதில் வருகிற மாது
காதலோ டணைதரு வாகுமுன் நான்கா
நிணதரு படைநிசி சரர்தமை யடுசந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே.

அயனரி முதலிய வமரர்க ளறியா
வானந்த மெய்ப்பொருள் ளேநின தடித்தொண்
டியன்முறை புரியடி யவர்தமக் கௌியாய்
இன்னமு தேகரும் பேமுடி மணியே
நயனம திடைநின்று களிதரு தேனே
நாயக னேகுக னேயறு முகனே
நியமமோ டுறுபவர்க் கருடரு வளச்சந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே.

ஓதரு மொளிவிடு முனதயில் கண்ட
வுறுமயில் புரியவஞ் சனிபடை யொப்பக்
கோதரு கதிரறி யெழுவத கண்ட
கூரிரு ளழிந்தது குலவிய மதிய
மூதொளி மழுங்கிய துனதமர்க் கழிந்த
மொய்யறு மவுணர்த மகமென வறமார்
நீதரு மறிஞரும் வருதிரு வளச்சந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே.

திறற்புய னாதிய வீரர்கள் சூழத்
திண்டிறல் கெழுமிய பூதர்கள் சூழப்
பிறப்படு முனிவரொ டமரர்கள் சூழப்
பேரயில் முதலிய படைத்திறஞ் சூழ
வறற்படு குழற்சசி மகள்குற மகளோ
டருடர வமர்தரு வறுமுக வர்த்த
நிறக்கடம் பணிபுய நிறைதரு வளச்சந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே.

பச்சிலை யொடுமலர் பரிவொடு கொணர்ந்தார்
பாலுறு காவடி பலப்பல கொணர்ந்தார்
வச்சிர நவமணி மாலைகள் கொணர்ந்தார்
மாமணி செறிநன் மகுடங்கள் கொணர்ந்தார்
இச்சையொ டிருவழி முதலிய கொணர்ந்தா
ரெண்ணிய வரம்பெற வீண்டின ரிங்கண்
நிச்சய முறுதவர் தொழிதரு வளச்சந்
நிதியரசே பள்ளி யெழுந்தருள ளாயே.

ஐந்தொழில் நடம்புரி கையனு முமையு
மன்பொடு தழுவுதற் சுகநினை வுற்றார்
சிந்துர வதனவைங் கரத்தலை வனுநற்
சிரமுகந் திடவிரும் பின்னரி முதலாஞ்
சுந்தர வமரர்கள் பணிசெய வந்தாய்
தூயதன் மறைமுதற் கலையுணர் புலவ
நிந்தையி லவர்துதி புரிநிறை வளச்சந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே

தென்மலை முனிவனுக் கருளிய குருவே
தேவர்க ளிடர்களைந் திடவரு முருவே
அன்னையம் பிகைக்குமுன் னுறவிடு பாதா
வரன்செவி யினிற்பிர ணவமுறை நாதா
முன்னடு முடிவில தாகிய சோதீ
முத்தர்க டமதுள மேவிய வாதீ
நெல்மணி வயல்புடை சூழ்திரு வளச்சந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே

செல்வச்சந்நிதி முருகன் பெயரில்

# திருஊஞ்சல்

திருச்சிற்றம்பலம்

காப்பு

பொன்னுலக மன்னவற்குப் பூங்கா விதியருளும்
முன்னவனே ஆனை முகத்தவனே - என்னுடைய
தீத் தொழிலகல நீக்கியே சிந்தைதனில்
உறைந்து காத்தருளல் உந்தன்கடன்.

பொன்பொருந்தும் தென்கதிரைப் பதிபேரி லொன்றும்
புகழ் பொருந்தும் தொண்டவர் வேலவன் பதிவாழ்
மின் பொருந்தும் செங்கதிரைக் கந்தர் தன்மேல்
விந்தை பெறம் அன்ன ஊஞ்சல் விரும்பிப்பாட
வன்பொருந்தும் கொங்கைமலை மங்கை பாகன் மைந்தனோடு
கந்த ணிந்து மகுடம் தாங்கும்
கொன் பொருந்தும் சிந்துர மாமுகன் கல்லோடைக்
குணபதியாம் கணபதிதாழ் கும்பிட்டோமே.

திருமருவுபுணரி இருபுறமு மேவும் தெய்வசின்னச்
சந்நிதியில் சிறந்து மேவும்
உருமருவு ஓங்காரத்து முதல்வனாகும் உந்தன்மேல்
ஊஞ்சலிசை உவந்து பாட
மருமருவும் மலர்மாலை மதியமொடு வைத்த
சடை உத்தமனார் மகிழ்வீன்ற
கருமருவு மும்மதத்து கும்பதம்ப கணபதியை
எஞ்ஞான்றும் கருது வோமே.

நாதமுறும் ஓங்காரக் கோயில் மூட்டி
நம்புமகா மேருவைப்போல் தம்பம் நாட்டி
சோதிநிறை பாதுமதி வளையைச் சூட்டி
தூங்கு கதிர்தாங்கு கரவடத்தைப் பூட்டி
பூதலமாம் மாதரெனும் பொற்பலகை ஈட்டி
புற்ப சயனம் பரப்பிப் பூதகராற்க.
வேத விதிப்படி ஏறி ஆடீ ரூஞ்சல்
வேதநாயகி முதல்வா ஆடீ ரூஞ்சல்.

நகர உகரங்கள் இரு தூணதாக
நால்வேத ஓங்காரம் வளையதாக
பகர அகரம் புரிந்த கயிறதாக
பன்னரிய றீங்காரம் பலவகையாக
சிகரமொடு தகரமுறும் அடியார் வாழ்க
தெய்வசின்னச் சந்நிதியில் சிறந்து மேவி
அகர முதலானவரே ஆடீருஞ்சல்
ஆறுமுக ஆண்டவரே ஆடீருஞ்சல்

வட்டமலை எட்டுமிரு தம்பமாக
வன்னமுறும் ஆகாயம் வளையதாக
விட்டமுறும் உலகமது பலகையாக
வீரமணி வாசுகியே கயிறதாக
சிட்டர் இருபங்கில் தொட்டே ஆட்ட
சின்னவண்ணச் சந்நிதியில் சிறந்து மேவும்
அட்டதிக்கும் கொண்டாட ஆடீருஞ்சல்
ஆறுமுக ஆண்டவரே ஆடீருஞ்சல்

தேவர் முனிவோர்கள் வடந்தொட்டே ஆட்ட
சித்தவித்தியா தரகர்கள் சேர்ந்துபாட
பூமடந்தை நாமடந்தை முதலானோர் தேட
பொன்னுலகு மன்னனுடன் புகழ்ந்து கூட
தேன்மொழிசேர் இமயவரும் அன்பு கூர
சின்னவண்ணச் சந்நிதியில் சிறந்துமேவி
கோமளஞ்சேர் ஆறுமுகா ஆடீருஞ்சல்
குறக்கொடிக்கு நாயகரே ஆடீருஞ்சல்.

வாமமுறு வாரணத்தில் பிள்ளை மேவ
மற்றவலப் பக்கத்தில் வள்ளிமேவ
ஏமன்முதல் இந்திரனும் கவரி சாய்ப்ப
இமயவரும் அடப்பமதை ஏந்தி நிற்பக்
கோமுறைசேர் இருஷிகளும் குடைகளேந்த
குலவுசின்னச் சந்நிதியில் குழந்தையான
மேவிவளர் வேலவரே ஆடீருஞ்சல்
வேதநாயக முதல்வா ஆடீருஞ்சல்.

முத்தாட முடியாட மாலை ஆட
முண்டகந்தோய் செய்பகருங் குண்டலங்களாட
மத்தாரும் மருவில்செறி ஓடை யாட
வளமை செறிவாகு வளையங்களாட
கர்த்தாவின் காற்சிலம்பு கலீரென் றாட
கருதுசின்னச் சந்நிதியில் கருணையான
வித்தார மோடிருந்து ஆடி ரூஞ்சல்
வீரமணி வாசுகியே ஆடீ ரூஞ்சல்.

கருணைசெறி ஆறுமுகா கார்த்தி கேயா
கங்கையருள் காங்கேயா கருணைநேயா
பொருனர் தொழும் மந்திரதந்திர சொந்தகந்த
புனிதவனை அனுதினமும் போற்றுவோர்கள்
வருணமுறு நான்கினுமே வார்த்தை யீந்து
வருணமுறு சின்னச்சந்நிதியில் வாழும்
அருண வடிவேற் கரத்தாய் ஆடீ ரூஞ்சல்
ஆறுமுக ஆண்டவரே ஆடீ ரூஞ்சல்.

வாழி

மருவுமேவு சிவபரனும் உமையும் வாழி
வயங்கு திருநீறு சிவமணியும் வாழி
உருமேவு அரசன் மனுநீதி வாழி
உலமுயிர் பரவகல் லோடை வாழி
கருமேவு முகில்வாழி கடலும் வாழி
கற்றறியா அடியேன் சொற்கவிதை
திருமேவு சேவலுடன் மயிலும் வாழி
சின்னச் சந்நிதி முருகர் வாழிதானே.

மங்களம்

மங்களம் ஜெயமங்களம் நித்தியசுப மங்களம்
ஆனைமுகவர்க்கு மங்களம் எங்கள் ஆறிரண்டு கையருக்கு மங்களம்
செங்கமல நாதருக்கு மங்களம் செல்வச் சந்நிதிவாழ் முருகருக்கு மங்களம்
வீராதிவீரருக்கு மங்களம் நல்லவெள்ளி மயில்வாகனருக்கு மங்களம்
சோதிவடி வேலருக்கு மங்களம் சிவசுப்பிர மணியருக்கு மங்களம்.

## எச்சரிக்கை

கருணாகரப் பொருளே கணபதியே எச்சரிக்கை
கதிராபுரி தரமேவிய கந்தா எச்சரிக்கை
கந்தா செல்வா கரமேவிய கருணா எச்சரிக்கை
வந்துயர் தீர்க்குமெங்கள் வணிகா எச்சரிக்கை
வணிகா செட்டிகுமரா கார்த்திகேசா எச்சரிக்கை
வருவார் பிணிநீக்கிய முருகா எச்சரிக்கை
மருகா அரிமருகர் ஆறுமுகனே எச்சரிக்கை
கருவான துதிக்கும் எங்கள்கந்தா எச்சரிக்கை
கந்தா கடம்பணிகா திருத்தணிகா சுப்பிரமண்யா
எத்தாகிய பேரூர் வருகந்தா எச்சரிக்கை
கதிரமலைக் கரசேஎனும் கருணைக் கிருபைக்கடலே
அதிரூப சிங்கார ஆறுமுகனே எச்சரிக்கை.

## பராக்கு

தந்திமுகத் தைந்துகரன் தம்பி பராக்கு
கந்தர் துணைவந்த ஒற்றைக்கொம்பா பராக்கு
கதிரமலை தனில்வந்த கந்தா பராக்கு
கனகமணி குஞ்சரிதன் கணவா பராக்கு
போதவடிவா யமர்ந்த புலவா பராக்கு
புள்ளிமயில் ஏறிவரும் புனிதா பராக்கு

-தொண்டைமானாறு வைத்தியர் ஆண்டியப்பர் இயற்றியது-

திருச்சிற்றம்பலம்

தொண்டைமானாறு வைத்தியர் ஆண்டியப்பர் இயற்றிய

# செல்வச்சந்நிதி அகவல்

திருச்சிற்றம்பலம்

சிந்தையி லெழுந்த செழுஞ்சுடர் வெள்ள
செங்க மலத்துள் செந்திப் பதியே
உந்தியி லுதித்த ஓங்காரத்துள்
அந்தமி லொத்த ஐங்கர முதல்வா
உகார உயிராய் ஓரைந்த தெழுத்தாய்
சிகாரத்தி னுள்ளே செம்மை சிறந்தும்
அகாரத்தி னுள்ளே ஆட்டிய தாயும்
நகாரத்தி னின்ற நண்பா சரணம்
நாலிதழ் இருக்கும் நரதா சரணம்
ஆறிதழ் இருக்கும் ஆதீ சரணம்
பத்திதழ் இருக்கும் பதியே சரணம்
பன்னிரண்டு இதழில் பரமா சரணம்
பதினாறு இதழில் புருடா சரணம்
இரண்டாம் இதழில் இறைவா சரணம்
எல்லாம் தானாய் ஏகாந்தத்தில்
நில்லா நிலையில் நிறுத்தியே என்னை
ஒத்த இடத்தில் ஒருவரு மறியா
அந்த வெளியதனில் ஆக்கமந் தன்னில்
நித்திய மான நிலாவு மண்டபத்தில்
மூல நாடியின் மும்மண் டலத்தில்
மேலை வாசல் ஆலயந் தன்னில்
ஆயிரம் இதழ் அனந்த கோடி
ஆதித்தன் ஒளியும் அனந்தகோடி சந்திரனொளியும்
மனந்தன்னில் உதித்த மதிமுக மாறும்
கதுவிய கன்ன கவச குண்டலமும்
விண்களிற் றோன்றிய கண்க ளீராறும்
வேத வொளியில் அணி முடி யாறும்
விந்து நாதமும் மேலாந் தரத்தில்
சோதி நீறம் சந்தரத் தழகும்
செவ்விதழ் கனிவாய் செம்முகச் சிரிப்பும்

பங்கையை இதழ்சேர் பன்னிரு புயமும்
பன்மணி யணிந்த பதக்கமு மார்பும்
நன்மணி முத்தும் நவரத்தின மாலையும்
பொற்புரி நூலும் பொருந்திய அழகும்
விற்பொரு வேளை வென்றதோர் வீறும்
உந்திச் சுழியும் உரோமத் தொழுங்கும்
செந்தியை ஒத்த செவ்வரிப் பட்டும்
சிறந்த மருங்கிற் சீரா வழகும்
பாதச் சிலம்பும் பன்மணித் தண்டையும்
ஓங்கார மென்னும் ஓமையி லேறி
பாங்கான கோழிக் கொடியொரு கையும்
ஆங்கார மென்னும் மவ்வொரு கையும்
பாசந் த்ன்னைப் பகர்ந்த கையொன்றும்
அங்குசம் தன்னை அணிந்த கையொன்றும்
வச்சிரம் தன்னை வகத்த கையொன்றம்
கடகம் கவர்ந்த கை யொன்றும்
வள்ளியை மணந்து அணைத்த கையொன்றும்
தெய்வத யானையை சேர்த்த கையொன்றம்
நகார மொருகையும் தனு வொருகையும்
சங்கொரு கையும் சக்கர மொருகையும்
மின்னிய வயிறும் பன்னிரு கையும்
விண்ணும் மண்ணும் மேருவும் தானாய்
என்கண்ணுக்குள் நிறைந்த கந்தா சரணம்
காலும் கனலும் புனலு மாகப்
பொருந்தி யிருந்த புதல்வா சரணம்
சாக்கிரம் சாக்கிரம் சாக்கிரம் தன்னில்
தாக்கி யிருந்த சண்முகா சரணம்
சொப்பனம் சுளுத்தி துரியத் துரியாதீதந்தன்னில்
விற்பொருளாகிய விழித்தாய் சரணம்
திசையும் திக்கும் தேவரும் தானாய்
அசைவா யமர்ந்தாய் சரணம்
பசுவும் பாசமும் நேசமும் தானாய்
இதய மாக்கிய இறைவா சரணம்
ஊனாய் உயிராய் ஒன்றாய் எங்கும்

நீயாய் நானாய் நின்றாய் சரணம்
நின்சரணம் தன்னை நினைப்பவர் தங்கள்
நீண்ட பிறப்பைத் தவிர்ப்பாய் சரணம்
நிலாவுலாவிய நீண்மணி மண்டபத்துள்
உலாவு கின்றதோர் ஒருவன் பெருமையை
அகில சோதியோ டானந்த மாகி
திலக மாமயில் தித்தியென் றாடும்
திருச்செங் கோட்டுறை செல்வமென் சிந்தையே.

திருச்சிற்றம்பலம்

தொண்டைமானாறு சி. ஆ. வேதநாயகம்பிள்ளை இயற்றிய

## திருச்சந்நிதிப் பதிகம்

திருச்சிற்றம்பலம்

**வெண்பா**

சுந்தரச்சீர் சந்நிதிவாழ் சோதி திருத்தாடுதித்தா
சுந்தரச்சூர் போக்கத் துணையாமே - சுந்தரநீ
தாதாவே ரம்பவெனச் சார்ந்தோர்க் குதவுதிருத்
தாதாவே ரம்புயப் பொற்றாள்.

**நூல்**

சீர்பூத்த தினகரப் பிரகாச மொருகோடி
செறிவுற்ற திருவதன முஞ்
சித்திக்கு மன்பர்களைத் தீரவே யருளொழுகு
திருநயன மோரிரண்டு
மேர்பூத்த திருநீறிலங்கு திரு நெற்றியு
மிறையிடப் பாகமேவு
மின்னருட் பாலுண்ட சின்னவரா யுந்நன்ன
ரிளநகையு மபயவரத
நேர்பூத்த விருகரமு மிருசெவியு முபயரவி
நேர் குண்டலங்களுஞ்சீர்
நின்றசெங் கமலமல ரொன்றுதிரு வடிகளோடு
சேர்நின்ற பாலவடிவாய்

தார் பூத்த பொற்சிலம் படியனேன் காணவே
சாமிவந் தருள்கசெல்வச்
சந்நிதித் தலவாச சின்மயக் குருராஜ
சண்முகக் குமரேசனே.

தஞ்சமுன் சரணார விந்தமே யன்றியித்
தரணிதனில் வேறில்லைக்காண்
சருவலோ கைக்குண வாரிநீ யென்றுனது
சந்நிதியை வந்தடைந்தே
னெஞ்சலில் லாததோர் கோடாநு கோடிபவ
மீட்டுமொரு மாபாவிநா
னென்றாலு மவையெல்லாம் போக்கியெனை ரட்சிப்ப
திறைவனின் கடனாகுமே
கஞ்சிநேர் வஞ்சியுமை கொஞ்சுமுக மாறுடைய
கடவுளே யடலவுணராங்
களைகட் டறப்பயிர் தளைத்தோங்க வைத்தமுரு
காகருணை மழைமேகமே
சஞ்சலந் தீரவரு மன்பர் களிகூரவே
சாற்றுதி யோங்கு செல்வச்
சந்நிதித் தலவாச சின்மயக் குருராஜ
சண்முகக் குமரேசனே.

இராசாதி ராசனீ பிரகாச சோதிநீ
யேழைபங் காளனுந்நீ
யொன்றுமழி யாதவொரு பொருளுநீ யருளுநீ
யெற்பவர்க் கீபவனுநீ
கரசாலம் முதுலா ரெறும்பிறுதி யானவுயிர்
காத்தளித் திடுமென்னைநீ
கங்குல்பக லில்லாத பேரின்ப பூரணக்
காட்சிதரு மோட்சமுதனீ
தராதல மனைத்துநீ யேயெனப் பகர்வருள்
சாதித்த மெய்ஞ்ஞானிகள்
சற்றேனு மறுவிலா நாயகனே வுன்பெருமை
சாற்றவெளி தாகிவருமோ

சராசரப் பிரபஞ்ச மீடேற வானரு
டரித்தவ தரித்தசெல்வச்
சந்நிதி தலவாச சின்மயக் குருராஜ
சண்முகக் குமரேசனே.

சூரனொடு தாரகன் சிங்கனே யாதியாச்
சொல்லொணா வலிபடைத்த
தொலைவிலா வசுரருக் கஞ்சினோ மையநின்
றுணையடிகள் சரணமென்றே
பாராவிண் ணாதனரி பங்கயன் முதலாய
பண்ணவர்கள் வந்துவேண்டப்
பண்டவுண ரைத்தொலைத் தமரருக் கடருடந்த
பரதனே வரதகோவே
தீரகத் தில்லாத நீசனே னானாலும்
நினதடிமை யென்றுமிந்த
நேர்மை யொன்றைக் கொண்டிரங்கி யெனையாளுவாய்
நேசனே நித்தமுத்தித்
தாரகத் தருவான வேலகத் தமலனே
சச்சிதானந்த செல்வச்
சந்நிதித் தலவாச சின்மயக் குருராஜ
சண்முகக் குமரேசனே.

உலகத்தி லேழைகளை மிகவாட்டி யேயவர்
குற்றப்பொருள் கொள்ளைகொண்டே
யுற்றமத யானைபோல் முற்றகங் காரமா
யொன்றையுங் கருதிடாமற்
பலமற்ற விவர்துரும் பாயிரஞ் சேர்ந்துமெம்
பருவலிக் கீடாவரோ
பாருமிது வெனவேபி னாடுவோர் தம்மோடு
பரிகாச வார்த்தைபேச
நலமற்ற பாவிகளை யருளற்ற லோபிகளை
நாஸ்திகம் பேசுவோரை
நானணுகி டாமலுன் சீலமுறு மடியாரொடு
நாடியே வாழவைப்பாய்

சலமுற்று மமிர்தெனப் பிணிவீட்டி யணிகாட்டு
தவளத் தடாகமருவுஞ்
சந்நிதித் தலவாச சின்மயக் குருராஜா
சண்முகக் குமரேசனே.

பாம்பின் வாய்ப்பட்டதொரு தேரையைப் போலவும்
பாய்புலியின் வாய்ப்பட்டதோர்
பலமிலா மானதைப் போலவு மியானேழை
பையுளுற் றயருநிலையை
யோம்பியருள் பொழிகின்ற வீராறு கண்கொண்ட
வுயர்சோதியான குமரா
வுணரா திருத்தலென் னோதெய்வ மேதுன்
பொழிந்தமரர் யாரும்வாழ
வாம்பிரப் பேர்மரம தாகியயர் சூர்முதலை
பட்டவடி வேன்முருகனே
யம்புவியில் மெய்யன்பர் சிந்தைகளி லோங்கவே
யாதியுமை யாதியருள்கூர்
சாம்பசிவ மூர்த்திதர வந்ததிரு மைந்தனே
சாந்தவினை போக்குசெல்வச்
சந்நிதித் தலவாச சின்மயக் குருராஜா
சண்முகக் குமரேசனே.

ஆயுள்வே தியரெலாங் கைவிட்டு மாறாத
வருநோய்க ளின்னதருளா
மருமருந் தாற்போக்கி யானந்த முறகின்ற
வன்பர்கூறுங் களவுபொய்
யோயுநா ளில்லாத வஞ்சகக் கோண்மூட்
டுலுத்தர்தம் பொய்வழக்கி
னுக்கிரமிகு தண்டனைச் சிறைமீளு மன்பரிவ
ரொருகோடி பேர்களன்னை
வேயுள்வரு முத்தேயிவ் வுலகுக்கு வித்தேயெம்
வினைநீக்கி யாளவந்த
விமலவென் றிசைபாடி யுருகவே யானொருவன்
வேதனைப் படனீதியோ.

தாயுமாய்த் தந்தையா யாவுமா யேகமாய்ச்
சற்குருவுமான செல்வச்
சந்நிதித் தலவாச சின்மயக் குருராஜா
சண் முகக் குமரேசனே.

ஐயகோ கானலைச் சலமென்று நம்பியே
யரணிய மலையுமான்போ
லடியனே னிவ்வுலக மாயையி லகப்படீஇ
யஞ்ஞான வங்சகருறையும்
பொய்யான வித்தேக மெய்யென்று நம்பியே
பொருட்படுத் தாதுனுபயப்
பொன்னடித் தாமரையி னன்நேச மாகமெய்ப்
போதமென் றோவருளுவாய்
மெய்யர்க்கு மெய்யனாய் மேதினி யெலாமாகி
மேலிடம தாகியென்று
மேவுற்ற சோதியா யாதியாய் நீதியாய்
விண்ணவர்கள் போற்றுகின்ற
தையலுமை யான்பெற்ற செல்வனே செல்வமுறு
தண்டலைகள் சூழ்ந்திலங்குஞ்
சந்நிதித் தலவாச சின்மயக் குருராஜ
சண் முகக் குமரேசனே.

மாடுண்டு கன்றுண்டு மக்களுண் டழகான
மாடமா ளிகைகளுண்டு
மதியுண்டு குறையாத நிதியுண்டு சொகுசுண்டு
மாளாத சேனையுண்டு
நாடுண்டு நகருண் டெனக்கருதி வாழ்வுற்ற
நவகோடி முடிமன்னர்
நமனார்த முலகேற நாங்கண்டு மிவ்வுலக
நாட்டத்தி னோக்கமுற்றே
யாடுண்டு பெரியார்நாம் வலியரென் றுலகோரை
யறைகூவு முறைகேடர்தம்
மறியாமை யாம்போயி தென்னவழி யாததோ
வயின்ஞான வேலேந்தியே
தாடுண்ட மாயவுணர் கோடுண்ட மாய்விழச்
சமரோடு குமரச் செல்வச்

சந்நிதித் தலவாச சின்மயக் குருராஜ
சண்முகக் குமரேசனே.

கற்றுமறியேன் பெருமை கேட்டுமறி யேன்சென்று
காதலுட னடியார்தம்மைக்
கண்டுமறி யேன்றொண்டு செய்துமறி யேனொன்று
காசினியி லிட்டுமறியேன்
பற்றுமொழி யில்லாத பாவியே னின தருட்
பாங்குசெறி சந்நிதியிலாம்
பண்புவர வந்தடைந் தேனைய னேனையேனைப்
பாதுகாத் தருள்புரிவாய்
கற்றுபர மானந்த சோதிமழை மேகமே
தொல்வினை மாற்றுதெய்வச்
சுத்தமது ரப்பிரச மொத்தமல முத்தருரை
சொற்றதிரு மாமருந்தே
சற்றொழிவி லாதகிரு பைப்பெரிய வெள்ளமே
சந்தத முயர்ந்த செல்வச்
சந்நிதித் தலவாச சின்மயக் குருராஜா
சண்முகக் குமரேசனே.

காலாயு தத்துவச நாதாவொ ராதரவு
காணேன் கடற்புவியிலே
கருதுதுணை தந்துநீ கடுநோ யடுக்கிலொரு
கைமருந் தாகிநமனென்
பாலாயு நம்விடுங் காலதி நேர்நின்று
பாதகாத் தருள்புரியவும்
பண்புதரு திருநாம மன்பினா லோதியே
பாடிக் கசிந்துருகவும்
வேலாயு தாதிரு வுளம்பெற வேணுமருள்
வெள்ளமே வெள்ளவமுதே
விளையாடு மயிலேறு ஜெகதீச னேயமரர்
வேண்டுகார்த் திகைமாதரார்
தாலாட்டு கந்தசர வணபவா னந்தனே
தவராசர் போற்றுசெல்வச்
சந்நிதித் தலவாச சின்மயக் குருராஜ
சண்முகக் குமரேசனே.

வல்வை ச. வயித்திலிங்கம்பிள்ளை இயற்றிய

# திருச்சந்நிதித் தோத்திரமாலை

## கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

### விநாயகர் காப்பு

தங்கச்சிற் சந்நிதி கல்லோடை சின்னக் கதிரை தன்பேர்
தங்கச் சினகர வேலோனைப் போற்றியென சார்பிணிக்கே
தங்கச் சிரிக்க வருடரு வாயன்பர் தஞ்சநன்மா
தங்கச் சிதாதனத் தென்மேற் றளியமர் தற்பரனே.

விக்கினந் தீர்க்கும் விநாயக னேயென் வினைகளெல்லாம்
உக்கிர மாக எனைவாட்ட வாட்ட உளம்பதைத்தே
இக்கண மேஎன் னுடல்பொரு ளாவியை ஏழைமையேன்
தக்கிணை யாகத்தந் தேன்சிவ மேயெனைத் தாங்கிக்கொள்ளே.

### நூல்

ஒன்றறி யெனென் னுளக்குறை யாவு முனக்குரைக்கச்
சென்றடைந் தேன்செல்வச் சந்நிதி மேவியதேசிகனே
நன்றறி யாதபுன் நாய்நிகர்ப் பேனை நவையகற்றி
உன்றயைக் காளினி யாக்குவை யோவென் னுயிர்க்குயிரே.

ஆனோர்செல் வச்சந் நிதியர சேநின் னடைக்கலமென்
பானேசங் காட்டி யருளுமை யாவிந்தப் பாருலகிற்
றானோர் துணையொன் றிலாதேனன் னேதவப் பூரணனாங்
கோனே யடியர்க் கெளியவ னேயென் குலதெய்வமே.

பரிமளத் தீர்த்தம் படிந்தாடி யன்பர்கள் பாடுதுதி
அரிமல ரோன்சுரர்க் காரமு தாகவு மன்புகொள்ளாத்
திரிமனக் கேடு சகிக்கவொண் ணாதினிச் செய்வதென்யான்
சொரிமலர் சூழ்செல்வச் சந்நிதி நீதித் துரையரசே.

நீதாசெல் வச்சந் நிதிநேச னேயிரு நீருலக
மாதா வளித்த குமார வுதாரர் மனமலர்ந்த
பாதார விந்த சிவானந்த னேயிப் படிதனில்யான்
ஆதார மொன்றறி யேனடி யேனுன் னடைக்கலமே.

பத்தி நெறிக்கெனைப் பாரேலை யாபெரும் பாவியென்று
சித்தத் தயைகொண்டி ரங்குபொல் லாச்சிறை சேர்சயந்தன்
புத்திக் கனவினி லோடிப் புரந்தருள் புண்ணியனே
சத்தி தருஞ்செல்வச் சந்நிதி மேவிய சண்முகனே.

வேலா லசுரரை வீட்டிச் சுரர்க்குவிண் ணாடளித்த
சீலாபொற் சந்நிதி வாழ்முரு காதிருக் கார்த்திகைமார்
பாலா வெனைக்கடைக் கண்பார் பசித்தபன் றிக்கிரங்கி
மாலா யமுதளித் தோன்கும ராமயின் மாணிக்கமே.

நல்லார்க்கு நல்ல துணையான ஞானத் தயாபரனைப்
பொல்லாங்கு தீர்க்குங் குருநா தனைமறை போற்றுகின்ற
கல்லா லமர்செல்வச் சந்நிதி மேவிய காவலனைச்
சொல்வா யுருகிப் பணிவா யினியென் றுயர்நெஞ்சமே.

அன்பா லுருகு மடியார் தமைக்கண் டிருகியருள்
மின்பால் விளங்கிய வேலவ னேவினை யான்மெலிந்தே
உன்பா லடைந்தே றுனக்கே யாமினி யோங்குதெய்வப்
பொன்பால னேசெல்வச் சந்நிதி மேவிய பூரணனே.

போதத் திருமணி போற்றிசைக் குங்செல்வச் சந்நிதிபோய்ப்
பாசத் திருமணி கொஞ்சுமின் னோரிறு பாலமர்கோ
மேதத் திருமணி மஞ்ஞையின் மீதுசெவ் வேல்சிறந்த
வேதத் திருமணி யொன்றுகண் டாலென்கொல் வேண்டுவதே.

விண்பா லமரரை வாழவைத் தாயன்ற வெற்பகத்திற்
பண்பார்ந்த கீரன் கவியான் மகிழ்ந்து பலர்பிழைக்கக்
கண்பார்த் தனையினி யானுமொரேழையுன் காவல்கண்டாய்
மண்பா லுயர்செல்வச் சந்நிதி மேவிய மன்னவனே.

பொய்ச்சாட்சி பொய்க்கையெழுத்தாகி பாவப்புலைத் தொழில்கள்
மெய்ச்சாட்சி யென்னப் புரிந்தே பிறர்பொருள் வேண்டிநின்றா
ரைக்காட்சி கண்டென் னறிவுகுன் றாம லருடருவாய்
செய்க்காட்சி சேர்செல்வச் சந்நிதி ஞானச் செழுஞ்சுடரே.

மத்தளம் யாழ்கொம்பு வார்குழல்கின்னரம் வாழ்த்தெடுப்பப்
பத்தியி னாற்பலர் போற்றநற் பாற்கா வடியுயர்த்தே
எத்தனை பேரிரு கண்ணீர் சொரிய விறைஞ்சிச்சென்று
சித்தபெற் றார்மன மேசெல்வச் சந்நிதித் தேவனுக்கே.

வஞ்சர்தஞ் சூழ்ச்சி மயக்க விரவும் வழக்கிரவுங்
கொஞ்சிப் பொருள்கொள் குழையாக ரிரவும் விடாக்கொடிய
பஞ்சப் படிதனிற் சஞ்சலந் தீர்க்கம் பரிசருள்வாய்
மஞ்சத் திருச்செல்வச் சந்நிதித் தூண்டா மணிவிளக்கே,

கன்னெஞ்ச ராயினுங் காமலர்ச் சோலைகை காட்டுச் செல்வச்
சந்நிதி நேருறி னாண்டவ போற்றிநற் சண்முகனே
மன்னவ போற்றியென் றன்பர்கள் போற்ற மகிழ்ந்துருகி
நன்னயப் பாதம் பணிந்திரு போகமு நண்ணுவரே.

சோதி மலைமருந் தொன்றான தெய்வச் சுவைமருந்தெய்
தாத மருந்துசெல் வச்சந் நிதித்தனி மாமதுரப்
போத மருந்தன்பர் கையார் மருந்தற் புதம்புரிவேள்
வேத மருந்தது கண்டுகொண் டார்க்கில்லை வெம்பிணியே.

ஆரணங் கோடி துதிப்பவ னேயெனக் கார்நரக
மாரண வேதனை தீர்த்தருள் வாய்மல ரோன்சுரர்மால்
சீரணங் கொடுதம் மூர்வாழ வைத்த சிவக்கொழுந்தே
பேரணங் கோட்டுபொற் சந்நிதி யார்ந்த பெருமருந்தே.

ஒய்யார மான மயின்மீது வோங்கி யுயர்ந்த தெய்வக்
கையா றிரண்டுடை யானைப்பொற் சந்நிதிக் கற்பத்தை
மெய்யாய்ச் சுருதி யடையவல் லார்க்கு விரும்பியதொன்
றெய்தாத தில்லைகண் டாய்மன மேயிவ் விருநிலத்தே.

அருளா லுலகுயி ராள்பவ னேயெனை யாதரித்தே
னிருளாம் பிணிகெடப் பாருமை யாவிம வானளித்த
வருளாண் முதல்வி புதல்வாகிக் கற்றவர்க் கார்ந்ததுணைப்
பொருளாள னேசெல்வச் சந்நிதி தோற்றிய பூரணனே.

பிறந்தவ ராருயி ரோடிருந் தாரெனப் பேருலகோர்
துறந்தவர் போலச் சுடலையின் ஞானமுஞ் சொல்லியுமே
னறந்தவ மாற்றா திறந்தவ ராவரை யாவெனைநீ
சிறந்தவ னாக்குவை யோசெல்வச் சந்நிதித் தேசிகனே.

மாபாத கம்புரி தீயோரை மாய்த்த மகிமைப்பிர
தாபா தவத்தர் மகிழ்செல்வச் சார்முதலுன்
சீபாத கஞ்ச மறவாத தஞ்சத் திருவருள்வாய்
கோபலன் மாமரு கோனேகிட் டாத குருமணியே.

அன்ன பிதாத்தெய்வ மியாவையு நீயென் றடைந்த வென்னை
யின்ன றுணிந்து வருத்தலென் னோவிறை வேல்விடுத்துப்
பன்னக ராச னடுங்க வுயர்ந்த பழுமரச்சூர்
மின்னினிற் சாய்த்தவ னேசெல்வச் சந்நிதி மேலவனே.

ஏற்காம லேற்பவர்க் கில்லையென் னாம லிழிந்தபொய்சூ
தாற்றாமற் றீயவ ரோடணு காமல மார்க்கர்களைத்
றோக்காம னன்றி மறவாமற் றோன்றுசெல் வந்தருவாய்
மாற்றா லுயர்செல்வச் சந்நிதி மாமயில் வாகனனே.

ஓலமென் றேசுரர் கூப்பிட்ட போதத் துயர்வடிவாய்ச்
சாலநின் றேயஞ்ச னீவிரென் றோதும் தயாபர நின்
பாலருள் கூட வடைந்தனன் பாவி புரிபவந்தீ
ராலமுண் டார்மக னேசெல்வச் சந்நிதி யாண்டவனே.

கற்றங்க டீர்க்குந் திருமுரு காவிக் குவலயத்தி
லுற்றலைந் தேனினி யாகிலுந் தானல் லுறுதிநிலை
சற்றரு ளாய்துரை யேசோலை சூழ்செல்வச் சந்நிதிவாழ்
கொற்றவ னேநற் றவர்போற்று ஞானக் குருபரனே.

தோகை மயின்மிசை மேவும் பிரானைச் சுரபதிக்கு
நாக வரசு நிலையீந்த நாதனை நல்லுயிர்க்குப்
போக முதல்வனைப் பொற்சந் நிதிசென்று போற்றிருயிந்தத்
தேகம் பெறுபயன் றேடலன் றோபெருஞ் செல்வத்தே.

விண்ணவர் சூரைத்தொலைத்தாண்ட நாதவென் வெம்பிணியாந்
திண்ணவிச் சூருந்தொலைத்தருள் வாய்நினைத் தேடுகின்றார்க்
கண்மைய னாகி யவலந்தீர்த் தாறு முகங்கொடுக்கும்
பண்ணளி யார்செல்வச் சந்நிதி வாழும் பராபரனே.

சுப்ர மணியனைச் சூரசங் காரச் சுடர்வடிவேற்
கைப்பெரு மானைபொற் சந்நிதி யானைக் கசிந்துருகிச்
செப்பிப் பணிபவ ரன்றோ சிறந்த புகழ்நிறுத்தி
யிப்புவி போற்று முயர்போகந் துய்த்தங் கிருப்பவரே.

பண்கொண்ட கார்மயில் வாகன னேயொரு பாங்குமின்றி
மண்கண்டு போத நகையாட வோவென வைத்தனையாற்
கண்கண்ட தெய்வங் கலியுகத் தேயெனக் காசினியோ
ரெண்கொண்டு போற்றுபொற் சந்நிதி யார்த்த விறையவனே.

தோத்திரம் பாடி யடியார் பணியத் துலங்கிரண்டு
நேத்திர நேச மழையா னனைந்து நினைந்துருகி
யாத்திரந் தீர்ந்தரு ளுக்கிலக் காவரஞ் ஞானிகளுந்
தீர்த்தன் றிருச்செல்வச் சந்நிதி யாலயஞ் சேர்ந்திடினே.

தாய்போ லினிய முகங்காட்டி யன்பரைத் தாங்குகின்ற
காய்போது தேன்கனி மாறாத காட்டுசெல் வச்சந்நிதிச்
சேய்போல வேறொரு தெய்வமுண் டோவிந்தத் தேசத்திலே
நாய்போ லலையன் மடநெஞ்ச மேயினி நன்றெமக்கே.

சங்கர பால சராசர ரூப சவுந்தரமா
மங்கல பாத மனோகர வன்பர் மனோலயனே
சங்கடந் தீர்த்தெனைக் காத்தரு ளாய்செல்வச் சந்நிதிவாழ்
செங்கடம் பாமலை மங்கையமைந் தாசச்சி தானந்தனே.

செய்வதென் யானறி யேன்செல்வச் சந்நிதி சேர்முருகா
தெய்வமுன் னாலன்றி யென்றணு காது சிறிதிரங்கி
யையவென் னாகலந் தீர்மறை போலரு ளாறிரண்டு
கைவர வேல குமாரவுல் லாச கலாபத்தனே.

அஞ்ஞானி கட்டொழி யாநர கென்றறை வாரவர்க்கும்
மெய்ஞ்ஞான சைவத் திருமார்க்கங் காட்டிய மேலவனே
செய்ஞ்ஞான தேசிக னேநின் பெருமை சிறிதுணர
செய்ஞ்ஞான மீசெல்வச் சந்நிதி நேச விழுப்பொருளே.

தம்பவம் போல வழியுமித் தேகஞ் சதமெனக்கொண்
டம்பலத் தாடி யருள்செல்வச் சந்நிதி யாண்டவன்றாட்
செம்பது மந்துதி செய்யா ரறம்புரி யாச்சிறியோர்
கம்பமுற் றென்செய்பவர் காணம னார்வருங் காலத்திலே.

அடைக்கல மென்றடைந் தோர்தமைக் காக்கு மறுமுகன்வேற்
படைக்கல வேள்செல்வச் சந்நிதி வாழும் பராபரனா
ரடிக்கம லந்தலைக் கொண்டார்தம் பாதத் தருந்துகளோர்
முடிக்கணி யாகக் கிடைத்தவர்க் கேகுறை முற்றறுமே

ஆறுமில் லாதுகைக் கோறுணை யாக வடைந்தவெல்லாப்
பேறுமுன் னாலல்ல நீரவும் யானொரு பேதைகெட்டாற்
பாருமை யாசெல்வச் சந்நிதி யாய்பழு தாகுமன்றே
யூருமுள் ளாய்சர்வ பேருமுள் ளாய்நின் னுயர்ச்சிக்கதே.

திருமா லயனிந் திரன்சுரர் வாழச் சிறந்தவைவேற்
பெருமான் மகிழசெல்வச் சந்நிதி மேலோன் பெரும்புகழை
யொருமா மனதுட னோதி யுருகி யுருகினன்றோ
கருமா மலைபிணி மாளநின் றாடிக் களிப்பதுவே.

அன்புகொண் டார்தமை யாதரிப் பாயென்ப ரன்புகொள்ளாப்
புன்பிழைப் பாலரைப் போக்குவவோபுலன் சோர்ந்துபொற்றாள்
பண்பது போற்குற்றம் யாதிருந் தாலும் பரிந்தெனக்கு
னன்புதந் தாள்செல்வச் சந்நிதி யோங்கிய வற்புதனே.

கல்லா லமர்ந்து மறைநூ லுரைத்த கடவுளுக்குஞ்
சொல்லார் பொருளுப தேசித்த சோதி சுடர்ப்பொதியை
யெல்லார் முனிக்கு மியலை யுணர்த்து மினியபெம்மான்
வெல்லார் பதமலர் சந்நிதி வேண்டு வினைநெஞ்சமே.

வேதச் சிரசில் விளங்கும் பிரானைவிண் ணோர்கலக்கம்
போதச் சிவனடி வேலேந்தி னோனைப் புளக்குறமா
னேசச்செல் வச்சந் நிதிமுரு கோனைநின் றேவணங்கிப்
பாதச்செந் தாமரை சூடவல் லோர்க்கில்லைப் பாவங்களே.

அந்தர நேரினு மல்லல்வந் தாலு மரசர்களாற்
றொந்தாரை நேரினுந் துட்டர்வந் தாலுந் தொடர்நமனார்
மந்தர நேரினு நேர்செல்வச் சந்நிதி வாழ்பெருமான்
சுந்தரப் பாலசுப் பிரமணி யாதுணை தோன்றுவையே.

என் புத்தி யொன்றையுங் கேட்கின்றி லாய்மன மேயினிநா
னுன்புத்தி கொண்டு வருத்த விடேனுனை யோர்கொடியோன்
றன்புத் திரர்குலஞ் சுட்டவெவ் வேள்செல்வச் சந்நிதிச்சேய்க்
கன்புத் திருத்தமிழ் விண்ணப்ப மாலை யனுப்பினனே.

ஐயாநம சிவன்செல்வாநம வெமை யாதரித் தாண்
மெய்யாநம செல்வச் சந்நிதி யாய்நம வேல்விளங்குங்
கையா நமசுப்ர மணியா நமவெனக் காதல்கொண்டான்
மையா ருலக வருத்தங்க ளேர்த்து வரந்தருமே.

அஞ்சாத சூரை யமராடி வென்று மடைந்தவர்க்கே
துஞ்சா தருடந்து முய்யவைத் தாயென்ன சொல்லுமையா
மஞ்சார்செல் வச்சந் நிதியர சேபெரு மாருதத்தோர்
பஞ்சாய்ச் சுழன்று நிலைதடு மாறிய பாவிக்குமே.

வஞ்சப் பெருங்கொடுங் கூற்றுற னோக்கி வரும்பொழுது
தஞ்சத் திருமயின் மேலரு ளோரிரு சார்விளங்கக்
கஞ்சக் கரமலர் வேல்கொண்டு காட்டிக் கருணைதரக்
கெஞ்சிப் பணிமன மேசெல்வச் சந்நிதி கிட்டிநின்றே.

குணமந் தனமு மறிவும் பதியுங் குலமுமில்லாப்
பணமுந் துணையும் பயன்றரு மோகொண்டு பார்க்கிற்சர்வ
கணமும் பணிகரு ணாகர நீயருள் காட்டினல்லான்
மணமுந்து சோலை மலர்செல்வச் சந்நிதி மாணிக்கமே.

ஊரா ரிருந்துமென் னுற்றா ரிருந்துமென் னோமருந்துப்
பேரா ரிருந்துமென் பேணுவ ரோபிணி வந்துருமேற்
சாரா முதச்செல்வச் சந்நிதி சார்கந்த சாமிநன்னா
ளாராவிக் கஞ்சத் தடிமல ருண்டின்ன வற்றிடற்கே.

நாடுக டோறு மிருண்மூடி நிற்க நலிவிளக்குகள்
வீடுக டோறொரு கோடியிட் டாலென் விளங்கிடுமோ
தேடுங்கள் செல்வநற் சந்நிதி யாகிய சீபதியே
யாடுங் கலாப மயிலார்மெய்ஞ் ஞானமெய் யாதித்தனே.

பச்சை மயில்வடி வேலோ னெனது பரிவந்தீர்த்
தச்ச மகற்றி யருடரு மோதுய ரான்மெலிய
வைச்சிடு மோவறி யேனரு ளாழி வராசலநே
ருச்சித மாஞ்செல்வச் சந்நிதி வாழிறை யோன்செயலே.

ஐயா கவலைக் கிலக்காகி னேனிவ் வுலகத்துள்ளோர்
பேயாக் கணிப்ப ரிதுவோ வழகி துன்பொருட்கே
தாயா யுயிர்க்குயி ராகிப் புரக்குந் தனிப்பொருணீ
யாயாய்செல் வச்சந் நிதியர சேயென தாண்டவனே.

அத்தா வருக வருகபொற் சந்நிதி யாரகில
கத்தா வருக வருகசெவ் வேற்கரக் கார்மயிலார்
முத்தா வருக வருகவொ ராறு முகம்படைத்தே
நித்தா வருக வருக பராமுக நீத்தினியே.

உண்டே மலுண்டு வேலுண்டு சேவ லுருகிநின்றோர்க்
கண்டே யருள்பொழி யாறு முகமுண்டு காணநல்ல
தண்டார் துரைவீர வாகுண்டு தாமப் பணிபுரியப்
பண்டார்செல் வச்சந் நிதிமுத லாகிய பண்ணவற்கே.

கண்மணி யேயன்பர் காரிரு ணீக்கும் கதிபடைத்த
விண்மணியே விண்ணவர் வாழவேல்கொண்ட மெய்ப்பொருளாந்
திண்மணி யேசெல்வச் சந்நிதி யாருந் திருப்பதிவாழ்
தண்மணியே தளர்ந்தேனெம் பிரானென்னைத் தாங்கிக்கொள்ளே.

கொண்டாடி னார்மனத் துள்ளே புகுந்து குடியிருக்கும்
பண்டார மாஞ்செல்வச் சந்நிதி ஞானப் பராபரனே
கண்டாலுங் கண்கள் துயின்றாலும் உன்னிரு கான்மலர்மேல்
தொண்டா யிருக்கும் வரமரு ளாய்நின் றொழும்பனுக்கே.

கண்ணாரக் கண்டுன்னை வாயார வாழ்த்திக் கருதுமன்பால்
எண்ணார வுன்றிரு நாமங்க ளேநிதம் எண்ணியெண்ணிப்
பண்ணார் பவப்பிணி தீர்ப்பதென் றோபக ராய்வடிவேற்
றண்ணார் திருச்செல்வச் சந்நிதி வாழுந் தயாபரனே.

ஆலத்தி னாலமு தாக்கிய நாதன் அருள்வடிவாஞ்
சீலத்தி னாற்பொலி சந்நிதி வாழுந் திருக்கந்தனே
காலத்தி னால்வரு தீமையும் பாவக் கடும்பிணியும்
கோலத்தி னாற்றொலைத் தேயெம்மை யாளுங் குருபரனே.

பதினா யிரங்குற்றம் செய்தாலு மென்னையுன் பாதத்திலே
பதமாக்கி வைத்தல் முறையல வோபதி னாலுலகும்
பதமாய் விளக்க மிகுகோரு சூரபன் மாவினையோர்
பதமாக்கி யாண்ட குருவே கதிரைப் பராபரனே.

பாவலர் போற்றும் பழம்பொரு ளேயென்றன் பாவமெல்லாம்
பூவலர் போற்றுப் பொறுத்தர ளாய்புது நஞ்சையுண்டு
தேவர்கள் போற்றப் புரந்தருள் பூத்த சிவப்பொருளாம்
காவலர் போற்றுபொற் சந்நிதி யாகிய கற்பகமே.

பொல்லாத பாவி இவனென நீயெனைப் பூதலத்தோர்
எல்லாரு மேச இகழ்ந்துவிட் டாலினி ஏதுசெய்வேன்
கல்லா லெறியவும் பொல்லா லடிக்கவும் காவல்கொண்ட
சொல்லாளன் மாமுரு கோனே பொற் சந்நிதித் தாமணியே.

மீதார் கதிரைப் பராபர னேயெம் வினையகற்றப்
போதா ரயனரி தேவர்கள் போற்றவிப் பூதலத்தே
தாதாருஞ் சோலை செறிசெல்வச் சந்நிதி சார்ந்துவைவேற்
பாதார விந்தம் பணியநின் றான்சென்று பார்மின்களே.

நோயான தென்னை மிகவாட்ட வாட்ட நுவலுமுடல்
பேயாட்ட மாடத் துடித்தே புலம்பிப் பெரிதுமுன்னைச்
சேயான வேற்கந்த னேதுதித் தேனுன் செவியிலெல்லாம்
பாயா திருத்தலென் னேயரு ளாழிப் பராபரமே.

பெறுதற் கரியவிம் மானிடப் பேற்றினைப் பெற்றுமுன்னைக்
குறுகிப் பணிந்துயர் பேரின்ப வீட்டைக் குறித்தடையாச்
சிறுமக்கள் போலத் திரியாம லேழையுன் சீரடிக்கே
உறுதிப் படவன்பு தந்தெனைக் காத்தருள் உத்தமனே.

சுடச்சுடமாற்றுயர் பொன்னதைப் போலமெய்த் துன்பமெல்லாஞ்
சுடச்சுடத் தொண்டர் தமைக்கரை யேற்றிச் சுருதிமொழி
திடப்படக் காட்டிச் சிவகதி சேர்க்குந் திருக்கதிரைத்
தடப்பதி யாஞ்செல்வச் சந்நிதி வாழுந் தயாநிதியே.

தேவேசெல் வச்சந் நிதிப்பதி மேவித் திருந்துமன்பர்
பாவே விரும்பும் பராபர மேபத மாமுனிவர்
கோவேவிவ் வேழை தனக்கிரங் காயெண் குணக்குன்றமா
மாவே சுகவடி வேலாயுதங் கொண்ட மாதவனே.

கல்லா கியவென் மனமது சாலக் கசிந்துருக
நல்லா யெனக்கு வரந்தரல் வேண்டும் நவிலுமன்பர்
சொல்லான பாடற் கிரங்குமை யாசொர்ணச் சந்நிதிவாழ்
வல்லாள னேதொல்லை மாமயி லேறிய மாணிக்கமே.

அருட்குடை யோன்செல்வச் சந்நிதியீச னடியவர்தா
மிருட்குடை யார்துன்ப மெய்தார் பிறவி யெடுக்கினுநற்
பொருட்கொடையா ரெனவாழ்ந்தே புவியிற் பொருந்தியபொய்த்
திருக்கடையா நீக்கியப் பேரின்ப மோட்சமுஞ் சேர்குவரே.

துணையின்றி வாடுந் தமியேனைப் பார்த்தென் றுயர்களைய
வணைகின்ற காலமெக் காலங்கொ லோவரு ளாயலந்தோர்க்
கிணைகின்ற தஞ்சமு மின்பது மாகி யிசைந்த செல்வத்
திணைகொண்ட சந்நிதி யானே யமரர் சிகாமணியே.

வேல்போற்றி வேள்செல்வச் சந்நிதியீசர் விளக்குதண்டைக்
கால்போற்றி சேவல்மயில்போற்றி போற்றி போற்றி கருதுமன்பர்
மால்போற்றி ஞானத் திருவரு ளாகி மலர்ந்த பச்சைப்
பால்போற்றி போற்றியென றெந்நாளு மோதப் பயமில்லையே.

வெண்பா

நிதியுண்டாங் கல்வி நிலையுண்டா நேச
மதியுண்டாம் வாழ்வுண்டாம் வானோர் - துதிசெல்வச்
சந்நிதித்தென் மேற்பதிவாழ் தந்திமுகத் தெந்தைபத
முன்னிப் பணிய முறை.

வீராசெல் வச்சந் நிதிபூத்த விண்ணவனே
பாரா யெனைக்கடைக்கண் பாருமையா - நேரார்
திருமா லயன்றேடுஞ் சீராளா சோதி
தருபாலா நின்றாள் சரண்.

பையாடு பாம்பின்வாய்ப் பட்டதனித் தேரையைப்போ
லையாநான் வாட லழகிதோ - மெய்யா
கலியுகத்திற் கண்கண்ட கர்த்தனே செல்வம்
பொலிசந் நிதியாய் புகல்.

பொரு ளழப்பா லாழி புரிந்தளித் தார்சே
யருளலர்பொற் சந்நிதிவா ழத்த - னிருளழியப்
பார்ப்பானென் னெஞ்சே பதறேல் கருதையன்
சீர்ப்பாதப் போது தினம்.

நவக்கிரக தோஷமெனை நண்ணாமற் காத்துத்
தவக்கிரமத் தாள்பணியத் தாதா - வநுக்ரக செங்
கோலா லுலகாளுங் கோவே குருராஜா
வேலாபொற் சந்நிதிவாழ் வே.

எங்கே யிருந்தாலு மென்னவினை வந்தாலுந்
தங்குமன மேசெல்வச் சந்நிதிவாழ் - தங்க
வரைராசன் போற்றுலக மாதா வளித்த
துரைராசா னுண்டே துணை.

தாயைப் பிரிந்தகன்று தானலையும் பெற்றியைப்போன்
மாயைப் புவியிலெனை மாழ்கவிடேல் - நேயத்
திருவாருஞ் சந்நிதியா செல்வா சுரர்க்கா
யுருவாகி வந்த வொளி.

சங்கத் திருந்து தமிழாய்ந்த பண்டிதனே
பங்கப் படாமலெனைப் பாருமையா - சங்க
வனவேடர் போற்றிசைப்ப வானுருவங் காட்டுங்
கனவேல நீயே கதி.

ஓதி யுணர்ந்தறியே னுன்புகழ்பொற் சந்நிதியாய்
காதிலே கேட்டறியேன் கைதவனிப் - போதுற்றே
னும்பர் குறைகேட் டுருகி யிரங்கியநற்
சம்புதவு தேவா சரண்.

தொண்டர்க் கெளியானைச் சோதிவடி வேலோனே
யண்டர்க் கருள்புரிந்த வண்ணலே - விண்ட
விதியால் வருந்திடுமிவ் வேழைக்கு மேசந்
நிதியா யருள்புரிய நேர்.

இன்பமுறு மேவினைக ளெல்லா மொழியும்
துன்பறுமே பொற்சந் நிதித்தூய - வன்பாளர்
கந்தா குகனே கதிர்வேலா கன்னியுமை
மைந்தா வெனமகிழு வார்க்கு.

பச்சைமயில் மேலோனே பண்ணவர்க்கு வாழ்வழித்த
நிச்சவடி வேலோனே நின்மலனே - அச்ச
மகற்றியெனை யாள்செல்வச் சந்நிதிவா ழத்தா
சதற்கா ரணசண் முகா.

பாற்கா வடியேந்திப் பாடிமகிழ்ந் தையாநின்
னாற்காக்கப் பட்டவரை நானுருகிப் - பார்த்தே
பணிந்து செல்வச் சந்நிதியார் பண்ணவனே துன்பந்
தணிந்து சிறப்பவரந் தா.

விசவ னுயிர்க்கிரங்கி வேடுவனாய்ச் சென்று
விசயனடி பட்ட விருண்மேலோ - னிசைசிறுவ
னெப்படியுங் காப்பா னிறைசெல்வச் சந்நிதியா
னிப்படியி லென்று மெனை.

முத்தி முதலே முழுமூல மந்திரமே
சக்தியுமை கந்தசெல்வச் சந்நிதியார் - முத்தே
பெருமருந்தே நாயேன் பிணிவீட்ட வுள்ளத்
தொருமருந்தே யாகி யுறை.

அஞ்ச முகங்காணி லாறு முகங்காட்டி
யஞ்சலென நின்றருளு மாண்டவனார் - செஞ்சரனே
தஞ்சமெனச் சென்று தழைக்கும்பொற் சந்நிதி
னெஞ்சமே நின்று நினை.

ஆட்டுக் கடாவரவுக் கஞ்சியவிண் ணோர்துதிக்க
ஆட்டுக் கடாவதுவே வாகனமாகக் - காட்டுங்
கருணைப்பொற் சந்நிதிவாழ் கந்த சாமி
தருணத் துதவி தரும்.

ஆமய வாழ்வி லடியேனைக் காத்துச்சா
காமயவாழ் வுங்காணக் காட்டுவாய் - சேமத்
திருச்சந் நிதிவாழுந் தெய்வமே தூய
வருட்சந் நிதானத் தமர்ந்து.

அடியார்க் கெளியன்பொற் சந்நிதி வாழத்தன்
முடியாப் பெரும்புகழை முன்னிற் கிடையாத
தொன்றில்லைக் கண்டா யுயர்வா யுழனெஞ்சே
சென்றிறைஞ்சு வாய்நீ தினம்.

அஞ்சாத சூர னணி மயிலாய்த் தானமையத்
துஞ்சா வரங்கொடுத்த சோதியே - கஞ்ச
மலர்ப்பாத னேசெல்வச் சந்நிதியாய் வந்தே
னவப்பாவம் போக்கி யருள்.

ஒருமான் மகிழ வொருமானைக் கொன்ற
வொருமான் மருக னொருமான் - பெருமான்
தருமான்செல் வச்சந் நிதிமானைச் சாற்ற
வருமா லிருமான் வசம்.

தாராத் தனிக்கொடையாத் தந்தெனக்குள் சேமவருள்
தீராயென் செம்மத் திருக்கெல்லாஞ் - சீரா
ரனத்தோன்மல் காணா வணிசந் நிதியாய்
வனப்பூர் மயிலாய் மகிழ்ந்து.

மெய்யடியார் போற்றி விளங்குசெல்வச் சந்நிதிவா
ழையனருள் போற்றிதுணை யானமயில் - செய்யவேல்
போற்றி யுயர்சேவல் போற்றிதிருப் பாதமலர்
போற்றிநிதம் போற்றியெனப் போற்று.

திருச்சிற்றம்பலம்

# பிள்ளைத் தமிழ்

திருச்சிற்றம்பலம்

அஞ்சிறைப் பவளவாய்ச்செஞ்சூட்டு மடவன்ன மாங்குறு தடத்தின் மூங்கி
யலர் பொதுளுநாகத் திருந்துசிறை யாற்றிய யந்தியம் பொழுது தன்ன
றுஞ்சிடத்தினது பெடைவதியமம் போருகந்துற்றிடக் கண்டலைத்தன்
றோற்றவிகடத்தினா லூடிப்பறக்கவே துயர்கொண்டு கங்குன் முழுதும்
பஞ்சின்மெல் லடிமாதர் செஞ்சிலம் பொலியெனப் பாடுமிகவேயிரங்கிப்
பதறிவைகறையினி லரம்பையிலுறக் கண்டபர மொழித்துப் புணருநன்
மஞ்சுளத் தொண்டைநன் னாடனே முருகனே மஞ்சைவாகன வருகவே
வளமுற்ற சந்நிதியிலுளமுற்ற வளமொரு மழவுச் செல்வேள் வருகவே.

ஒளிமணிப் பத்திசெறி மகுடமுடியும் பட்டமொளிரு நுதலுங்கிம்பரி
யொன்றொரு மருப்பநற்சிகரச் சிவணமுட்டுளைக்கையு மாருங்
களிமதப் பொங்கடி முகத்துலம் போதரக் கடவுளெனு முன்னவன்மடிக்
கட்டிகழுமொரு குமரகர மிருதுபடை யரக்கன் மடியவம்பு தொட்ட
துளவமுடி யோன்மருக தும்பிமுக வசுரனொடு சூரனுரம் வீட்டுவேற்கைச்
சூரகிரிராஜகன்னிகை புதல்வ வமரரொடு சுருதியறியாத பாத
வளியென வழங்கு கவனப்பசும் பொற்சிறைய மஞ்சை வாகனவருகவே
வளமற்ற சந்நிதியிலுளமுற்று வளரு மழவுச் செவ்வேள் வருகவே.

இடையறா தெந்நாளும் வருவிருந்தினராதி யெவரைய முவப்பவூட்டற்
கேயடுதல் பரியரிசி மால்வரையினைக் கழுவுமீரத்தினோடிப்
புடையறா வளர்சாலி தனைமிக வளர்த்திடும் பொற்புமிகு தொண்டை நாட்டிற்
பொலிவுறவமர்ந் தருளுமையனே மெய்யனே
பூனிதவேலுறை கையனே
விடையறா வடியார்முன் வருபரமசிவ னள்ளின்மெய்ம் மறைமுதற்
பொருளுரை விமலனே வேற்படைக் குளசத்தி
தனதென்ற வேதனை வெகுண்டு புவியில்
மடைமையா லுலைய வம்பாவன மளித்தருளு மஞ்ஞைவாகன வருகவே
வளமுற்றசந்நிதியிலுளமுற்றுவளருமொருமழவுச்செவ்வேள்வருகவே.

## முத்தப் பருவம்

நாகமரத்திற் பிரவாளநல்ல கொடியால் யாப்பறுத்து
நறியமுத்தம் பொதிபலகை நாட்டு முசன்மிசைமடவார்
மேகநிகர்த்த குழலவிழ வீசியாட வந்துருமம்
விளங்கு முத்தா பலந்தரல் போல்வீயை யுகுக்கும் வளமுடைய
சோகமொழிக்குந் தொண்டைநகர்ச் சோதியுறு வேற்கரமார்செஞ்
சடரே தூய்மையுறு மணியே சுருதியொடு விண்ணவரும்
யோகவிருடிகளும் வணங்குமொருவா முத்தந்தந் தருளே.
யுயர் செல்வச் சந்நிதி வாழு மொழியே முத்தந் தந்தருளே.

## வருகைப் பருவம்

வானிலுயர் வரைமீது திரிகளங்ஙனம் வந்துபடி முகில்கிழித்து
வாரியண்டிடியினை வெகுண்டெடுத் துதறியேவரு
தடித்தைப் பிடித்தங்
கானபிடி மீப்போர்வை யென்னப் புனைந்தஃதை யன்புறச் செய்துமிருகா
மாசையொடு கூடி விளை யாடிடுவளஞ் செறியுமத் தொண்டை
நாடததில் வாழ்
மானமுறு வேலசுர ராஜகன்னிகை மேவுமரும மலவிருளகற்று
மாண்புபெறு சோதியடி மன்னவிருவிளை யொப்பவரு மடியார்
தம்மையினிதே
வானவரு மேவல் புரியுயர் நிலையின் வைத்தருளு மஞ்ஞை வாகனவருகவே
வளமுற்ற சந்நிதியி லுளமுற்று வளருமொரு மழவுச் செவ்வேள்
வருகவே.

## அலங்காரம்

சீராரும் செல்வஞ் செறிசந்நிதிவளர் தேவையன்பர்க்
கேராரும் வாழ்வுதரும் வேலனையினிதே பரவிப்
பேராறு நூறு கவிபாடவப்பதிப்படுறுதென்
சாராரு மாணிக்க பிள்ளைக் கணபதி தாடுணையே.

பெருவாழ் வடையந் தவமுன் செயாதவிப் பேதமையேன்
கருவாரி தன்னைக் கடந்திடவே நற்கருணை செய்வாய்
அருவாயருவுருவாயு ருவாய்மன்ன ரன்மதலாய்
திருவாழுஞ் சந்நிதித் தேவே யமரசிகாமணியே.

காலாயுதக் கொடியோன் மயில்வாகனன் கைத்தலஞ்சேர்
வேலாயுதன் றிருச்சந்நிதி வாழ்பரன் மேவடியார்
பாலாய்தம் பரிசூருங் கழுதும் பகையரவஞ்
சூலாயுதக் கரகாலனும் பின்னிடத் தோன்றுவனே.

கோங்கரும்பன்ன முலையார்தமின்பைக் குறித்துமய
லோங்கமடமனமே கதிர்காம வுயர்சந்நிதிப்
பாங்கமர் சேய்குகன் செவ்வேள் முருகன் பதாம்பயுத்தை
நீங்கலிலாது குறிப்பாய் வருமுத்தி நிச்சயமே.

செல்வத் திருச்சந்நிதிவாழ் முருகன்றன் சிற்றடிசீர்
கல்விப் பயிற்சியினாடொறு மோதிக் கடலுலகிற்
சொல்வைத்த புண்ணியர்க் கெட்டுணையாயினுஞ் சோறிடுவார்
அல்லற் படா ரடைவா ரமராபதி யந்தியத்தே.

திருச்சிற்றம்பலம்

## சோதிமயில் ஏறிவரும் முருகனே!

பரமசிவன் கருணையுரு மைந்தனே ஆறுமுகம்
சொரியும் நலச்சோதி எழிற் கந்தனே
கருதரிய சூழ்ச்சிபுரி சூரனை தேவர் தொழுப்
பொருதழியச் செய்தபெரு வீரனே!

கூறுபயன் பாடுகுறை தொண்டைமா னாறுகுடி
யேறிவிளை யாடமனங் கொண்டதேன்?
ஆறுபடை வீடுகள லுத்தவோ பேறுமிகு
கூறுமடி யார்பிடிவ லுத்தவோ?
மாசிலரு மாகமம் எறிந்ததேன் எழைகளின்
வாசியெனச் சந்நிதி நிறைந்ததேன்?
பூசைபுதி தால்நிறைவு கொள்ளவோ வடமருயர்
பேசுதமி ழின்பொருளை யள்ளவோ?

தந்தைக்கு தேசம்புரி தனயனே தமிழ் ஔவை
சிந்தை மகிழச்செய்த னினியனே
பந்தயம் தமையனுடன் கண்டவா பழனிதனில்
விந்தையுருப் பூண்டுகுடி கொண்டவா!

வேல்வடிவில் விளங்குவது மென்னவோ ஆறுமுகத்
தாலருளும் அழகெங்கு மன்னவா?
வேல் செயலில் மெலென்னுந் தென்பதோ அன்பர்பகை
வேலினது போர்க்கும்படை என்பதோ?

கருவியது கருத்தாவோ வேலனே நின்கூத்தைப்
புரியவுன தருணகிரி யல்லனே
கருவிதனில் கருத்தாவைக் காணுவார் வேறெதுவுந்
தெரியாதுன் னருள்வடிவே பேணுவார்!

சோதிமயில் ஏறிவரும் முருகனே மாலவரின்
வேதமகள் படருபுய மருகனே!
தீதிலிளங் குறவர்குலக் கொடியினை மணம்புரிந்து
சாதியிடர் களைந்தபெருங் கடவுளே!

ஆயுரிவே தியருலப் பிலரிந் தார்பொரு ளளப்பில பறித்தவிடத
மானவை யெலாம்விடுத் தமரரடியேன் பிணிக்கஞ்சி யோடினர் சோதிடர்
மாயுநா ளளவில கணித்துப் பிணிக்கெதிர் வராதொழிந் தார்மந்திரர்
வாய்மென்று மென்றுவெட் கித்திரும் பாரினரை மாட்டுபிணி யோட்டியருள்வாய்
வேயுளளு முத்துண்மணியே புனக்கணியே விழைந்திடு மெனக்கணியதே
வீறு செந்தூரோ கம்பரங் கரியாதி வெற்பின்விளை தருமருந்தே
தோயுமெந் னாவிலுன் னாமமெந் நாளுமே சொல்ல வெளிதாகிவந்த
சுத்தனே கல்லோடைவைத்தநேயத்தனேதொத்துநீபத்தொடையனே.

எண்ணிரண் டாண்டுதொட் டிதுகாறும் நாத்தமும் பேறரோ மாஞ்சிதமுற
விள்கியுணர் வவிழமொழி குழறவச மழிய வுள் ளென்பு நெக்குருசு மழைபோற்
கண்ணிரண் டும்பொழிய வானந்த நீரன்னை காணாத மகவுபோலக்
கதிரினைக் காணாத வுலகுபோ லையநின் தாள் மலர்கள் பாடிவீழ்ந்தேன்
பெண்ணிரண் டாண்ட விருபாகனே யேகனே பின்னைநா னென்னசெய்வேன்
பெற்றதந் தாய் பராமுகமே னுனக்கெனைப் பேணி யினியாள்கைகடனே

சுண்ணவெண் ணீரூர்ந்த பண்ணவக் குமரனரே துரியவடி வாகிநின்ற
சுத்தனே கல்லோடை வைத்தநே யத்தனே தொத்துநீபத்
தொடையனே

வேலுமயி லுந்துணையெனச்சதா காலமும் விருப்படலுரைக்க வருள்க
மெய்ப்பிணியொ ரெட்டுணையு மணுகாது பாறியெமை
விலகிவிட் டோடவருள்க
ஏலுமள வும்பிச்சை யென்பர் நடுங்க னிலையென்னாது வாழவருள்க
வில்லையென்பார் பாலிருக்கு நல் குரவேகியெனை
யகன்டோடவருள்க
காலுநம னும்பாச சூலமொடு வரினயிற் காட்டிமயி லோட்டிவருக
கண்ணின்மணி யேயினி யெனக்குருகி யனவரத காட்சி தந்தருள
வருக
தோலுமணியுங் கொண்ட மாலவன் மருகனே சோதிமயமான தில்லைச்
சுத்தனே கல்லோடை வைத்தநே யத்தனே தொத்துநீபத்
தொடையனே.

செல்வச் சந்நிதி சுப்பிரமணிய சுவாமி

## நிந்தாஸ்துதி

அல்வாயூர் மு. செல்லையா அவர்கள் இயற்றியது.

பெருகுந் திருவருள்போற் பேராநீர்க் கேணி
அருகமரு மானைமுகத் தையன் - மருமலர்ந்தான்
சித்தை பணிந்து செல்வச் சந்நிதிவாழ் சேய்மீது

### நிந்தாஸ்துதி

பொன்னமருந் தொண்டை மானாற்றிற் பொலிந்த செல்வச்
சந்நிதியில் மேவுந்த யாநிதியே - நின்னப்பன்
எப்பொழுதும் நட்டமுற எம்மவர்க்கி லாபம் நீ
தப்பாது செய்குவையோ தான்.

நங்கையர்க்கு நான்குவிழி நாதனுக்கீ ராறுவிழி
தங்கமயிற் காயிரங்கண் தானமைந்தும் - எங்குறைகள்

கண்டொழிக்க வன்மையிலாக் கந்தா நின் சந்நிதி சேர்
தொண்டருக்கு யாதோ சுகம்.

வாழும் பதிசெல்வச் சந்நிதியாய் மன்னமன்பர்
ஆளும் பெயர் செட்டி என்றமைந்தும் - நாளுமுனை
வாழ்த்து மடியார் வறமையுறக் காரணமென்
சூழ்த்த மங்கைமார் தடையோசொல்.

சட்டியிலே கொக்கவித்துச் சாறாக்கி நீ தரலால்
பெட்டியிலே அன்னம் பெருகினதென் - றிட்டமுடன்
சிந்தைகளித் தார்வழியார் சேர்ந்துபசித் தாரடியார்
முந்துந் துலாமதியில் முன்.
(கந்தசட்டி நாளிலே ஏழைகளுக்கு அன்னதானம் அளிக்கப்படுவது வழக்கம்)

ஓங்குங் கடைமகனாய் உன் தந்தைக் கோதுவித்து
வீங்குறை நான்முகனை நீ விடுத்த - தீங்கையெண்ணிப்
பெண்தருவா ரின்றியோ பேசுமுன்பர் யானையொடு
மண்தருமா னைமணந்தாய் மன்.

செட்டியெனும் பேருடை நீ செல்வர்களே உன் பாதங்
கிட்டிய யுரைப்பவற்றைக் கேட்பதன்றி - எட்டிநின்றே
ஏழை உரைப்பதனை ஏற்காயென் றெண்ணாமல்
நாளைகூ ணாக்கினனே நான்.

அஞ்சுதலை நானுடையேன் ஆறுதலை நீயளித்தால்
விஞ்சுதலை பாரமெனை மேவாதோ - துஞ்சுதலை
விட்டளிகள் மூசுமலர் மேவுசெல்வச் சந்நிதியில்
இட்ட சித்தி ஈ எந்தனையே.

பன்னிருகைச் செல்வன்நீ பாழும் பிணிவருத்தும்
என்னொருதைத் துன்பத்தை யெண்ணாயேல் - சந்நிதிவாழ்
கந்தா அபய வரதக் கரமுடைய
மைந்தா எனல்வீண் மதி

அக்கினியி லேயுருவாம் ஆனவன்றன் மேனியிலே
இக்குநி ரான்பால் இறைத்தாலும் - மிக்க அனல்
ஆறிநெஞ்சு நீகுளிராய் ஆனதினால் என்துயரம்
மாறமனம் கொள்ளாய் மதி

வன்மைமிகு சூர்முதலை வாட்டியநீ கானம்வாழ்
மென்மைமிகு வள்ளிக்குத் தோற்றதுமேன் - உன்னிடத்தில்
நம்பிக்கை கொள்ளவொரு ஞாயமுண்டோ சந்நிதிவாழ்
தும்பிக்கை யான்தம்பி சொல்.

### காவடிச் சிந்து

ஆடாடு பக்தாநீ ஆடாடுபக்தா
அன்போடு காவடி கொண்டாடுபக்தா
ஆடாடு பக்தா நி ஆடாடு பக்தா
ஆனந்த சந்நிதிமுன் ஆடாடு பக்தா

வேலா வேலா வென்று ஆடாடுபக்தா
வேதா வேதா வென்று ஆடாடுபக்தா
பாலா பாலா வென்று ஆடாடுபக்தா
பன்னிருகை வேலா வென்றாடாடு பக்தா - ஆடாடு

கந்தா கடம்பா வென்றாடாடு பக்தா
கதிரை மலையானே யென்றாடாடு பக்தா
செந்தில் முருகாவென்று ஆடாடுபக்தா
சேவற் கொடியோனே யென்றாடாடு பக்தா ஆடாடு

மயில் வாகனாவென்று ஆடாடு பக்தா
மாணிக்க மணியேயென் றாடாடு பக்தா
தயிர்திருடி மருகாவென் றாடாடு பக்தா
தாசர் விசுவாசனென் றாடாடுபக்தா ஆடாடு

மாரிமழை பொழியவென் றாடாடு பக்தா
மாநதிகள் வழியவென்றாடு பக்தா
பாரினிலே பகைவன்மை மாவினைகளெல்லாம்
பற்றறுத் தொழிய வென்றாடு பக்தா ஆடாடு

செந்நெல் செழிக்க வென்றாடாடு பக்தா
செல்வங் கொழிக்க வென்றாடாடு பக்தா
பன்னிருகை வேலவனின் நல்லருள்களெல்லாம்
பாலர்க்களிக்க வென்றாடாடு பக்தா - ஆடாடு

வேலோடு வாவென்று ஆடாடு பக்தா
விருதோடு வாவென்று ஆடாடு பக்தா
பாலோடு சர்க்கரையு முக்கனிபடைத்து
பக்தி செய்வோமென்று ஆடாடுபக்தா ஆடாடு

கற்பூரங் காட்டிநின்றாடாடு பக்தா
கையாட்டி யாட்டியே ஆடாடு பக்தா
அற்புதம் தாவென்று ஆடாடு பக்தா
அன்பர்முன் வாவென்று ஆடாடபக்தா ஆடாடு

கூத்தாடி யாடியே ஆடாடு பக்தா
குரவையிட்டழுது ஆடாடுபக்தா
நேத்திரம் நீர்சொரிய ஆடாடு பக்தா
நெஞ்சில் நேசம்செறிய ஆடாடுபக்தா

வேண்டுவன வேண்டி நின்றாடாடு பக்தா
வேதங்களோதி நின்றாடாடு பக்தா
ஆண்டு தோறும் வந்து ஆடாடுபக்தா
ஆனந்த சந்நிதிமுன் ஆடாடுபக்தா ஆடாடு

## கண்ணிகள்

சந்நிதியில் வந்துதித்த வெற்றிவேலோ - ஒரு
சங்கதிநீ செய்ய வேண்டும் வெற்றிவேலோ - ஒரு
தோகைமயில் மீதிலேறி வெற்றிவேலோ - எம்முன்
தோன்றிவந்து நிற்கவேண்டும் வெற்றிவேலா
வள்ளி தெய்வானையினோடு வெற்றிவேலா - வந்து
வர்ணமுகங் காட்டவேண்டும் வெற்றிவேலா
பன்னிருகை வேலுடனே வெற்றிவேலா - வந்து
பாலர்முகங் பார்க்கவேண்டும் வெற்றிவேலா
ஆனைமுகன் தம்பியான வெற்றிவேலா - எம்மை
ஆதரித்த அள வேண்டும் வெற்றிவேலா
கண்ணனின் மருமகனான வெற்றிவேலா - எம்மைக்
கண்திறந்து பார்க்க வேண்டும் வெற்றிவேலா
ஆறுபடை வீடுடைய வெற்றிவேலா - நித்தம்
ஆறுதலளிக்க வேண்டும் வெற்வேலா
மாரிமழைபெய்ய வேண்டும் வெற்றிவேலா - இந்த
மானிலங்களுய்ய வேண்டும் வெற்றிவேலா
பஞ்சங்கள் ஒழியவேண்டும் வெற்றிவேலா - செல்வப்
பாக்கியம் வழியவேண்டும் வெற்றிவேலா
வஞ்சனைகள் வாடவேண்டும் வெற்றிவேலா - பகை
வன்மமெல்லாம் ஓடவேண்டும் வெற்றிவேலா
அன்புகள் சுரக்கவேண்டும் வெற்றிவேலா - உன்மேல்
ஆசையும் பிறக்கவேண்டும் வெற்றிவேலா
ஆவிநீங்கும் போதினிலும் வெற்றிவேலா - எம்முன்
அன்புடனே நிற்கவேண்டும் வெற்றிவேலா

*கரவெட்டிப் பண்டிதர், சைவப்புலவர் த.பொ. கார்த்திகேசு அவர்கள் பாடிய*

## செல்வச் சந்நிதி வேற்பெருமான் தோத்திரப் பாமாலை

*யிலிருந்து சில பகுதிகள்*

### மாணிக்கப் பிள்ளையார் துதி

**வெண்பா**

பூமேவுந் தொண்டைமான் போற்றாறு மாமுகன்மேல்
பாமேவும் பத்துப் பகருதற்கு - காமேவும்
மாணிக்கப் பிள்ளையார் மாணின்பம் நல்கிடுநல்
ஆணிப்பொன் பாதம் அரண்.

### ஒருபா வொருபஃது

**கட்டளைக்கலித்துறை**

சொல்லாருந் தொல்பதி யாகிய தொண்டைமா னாறதனில்
நல்லாரும் நாடிடுங் சுற்றாரும் நாடொறும் நானிலத்தில்
எல்லாரு மேத்த வெழில்வே லுடனே யிலங்குமையா
பொல்லாத பாவியென் துன்பங்கள் நீங்கப் புரிந்தருளே

அருவே வடிவுடை யத்தனே நற்செல்வச் சந்நிதிவாழ்
குருவே குழாத்தொடு முன்னைக் குலாவநான் கூட்டுகண்டாய்
திருவே திகழ்ந்திடுஞ் சைவந் தழைத்திடச் செய்தவனே
மருவே செறிந்த மரகதக் காவுடைச் சிற்பரனே.

முதலே யெனவும் மொழியுங் குழகனே முன்னிடுநின்
பதமே கொடுத்துப் பரம்பொருள் நீயெனைப் பார்பதமே
சதமே கதியெனச் சொல்லும் முருகநான் சாற்றுவது
இதமே செவிக்கே றலையோ சுலோடையா யேதுசொல்லே

## ஒருபா வொருபஃது

### வெண்பா

துய்யா முருகா தொண்டைமா னாறதனில்
மெய்யாய பேர்க்கு மெய்யனே - ஐயா
அடியேன் படுந்துயரம் ஆனமட்டும் சொன்னேன்
வடிவாருங் கந்தாநீ வா.

தினமுந் தொழுவார் தீவினைகள் தீர்க்கும்
கனவடிவேல் ஏந்தும் கடம்பா மனமுள்ள
காவடிகள் அன்னதானக் காட்சிநிறை சந்நிதியாய்
சேவடியாய் என்வருத்தம் தீர்

தீரா சிவன்மைந்தா செப்புசெல்வச் சந்நிதியாய்
நேராய் உனையே நினைக்கின்றேன் - சீராய்ப்
பதித்தேனே நெங்சிற் பன்னிருகை வேலா
துதித்தேன்நீ யெற்கத் துணை.

## திருப்பதிகம்

### ஆசிரியவிருத்தம்

அன்புகொண்டோர் தமக்கு அகலாத அப்பனே
அண்லே ஆறுமுகனே
ஆர்வமுடன் இன்னல்கள் அகற்றிடும் மெய்யனே
அடியேன்நான் என்செய்குவேன்
துன்புகொண்டோர் எவரும் துதித்திடத் தொடர்ந்துநீ
துரிதமாய்ச் சுடர்வேலுடன்
தோகைமயில் மீதேறித் தொல்லைகள் நீக்கியே
தோற்றிநீ ஆண்டருளுவாய்
இன்புகொண்டிடத் தேவர் இயைந்துமே ஏத்திட
எதிர்த்தவுணர் குலமழித்தோய்
எந்தையே ஏழையேன் என்னையும் இவ்வேளை
இரட்சிக்க வேண்டுகின்றேன்
சன்மித்த நீயே சரணமுனை நம்பினேன்
தாங்குத லுன்கடன்காண்

சந்ததம் புகழ்தொண்டை மானாற்றி லமர்செல்வச்
சந்நிதி வேன்முருகனே.

எங்கும் மருந்துசெய்வித் தேலாதுன் சந்நிதியில்
ஏத்தித் தொழுதபேர்க்கு
இசைந்தநின் மருந்தினால் எவ்வித நோய்களையும்
எளிதினில் நீகளைந்தே
தங்குசென்மப் பிணிக்கும் மருந்தாகுந் தற்பரா
தகுஞான பண்டிதா
தருணமிது வந்தெனையும் தான்காக்க வேண்டினேன்
சடாட்சரா கந்தவேளே
இங்குமுனை நம்பினேன் ஏற்தணை வேறில்லை
ஏங்கித் தவித்துநின்றேன்
எரிலாரந் தெய்வமே இன்ப சங்சவியே
இறைவனே யருள்புரிகுவாய்
சங்குதவழ் நெய்தலும் தென்றல்நல் மாரதமும்
சார்ந்தினி திலங்குகின்ற
சந்ததம் புகழ்தொண்டை மானாற்றி லமர்செல்வச்
சந்நிதி வேன்முருகனே.

ஒளியுநீ இருளுநீ ஒலியுநி ஒருவனீ
உலகங்கள் அனைத்தும்நீயே
உரைக்கின்ற மறைகள்நீ ஒதுமாக மங்கள் நீ
ஒளிர்ந்திடும் உட்பொருளுநீ
வளியுநீ ககனநீ புகலுநி அனலுநீ
மண்ணுநீ மற்றவையுநீ
வடிவுக்கோர் தெய்வநீ வகையுள அறிவாற்றல்
வருசெயல்கள் யாவுநீயே

அளியிலா நெஞ்சினேன் அனுதினம் நினையாது
ஆணவங் கொண்டலைந்தேன்
அப்பனே பிழைபொறுத் தடியேற்கு நின்கருணை
அளித்தென்றும் ஆண்டருளுவாய்
தளியிலும் மற்றுமுள தலங்களிலு முறைகின்ற
சத்தனே சாத்துவீகனே

சந்ததம் புகழ்தொண்டை மானாற்றி லமர்செல்வச்
சந்நிதி வேன்முருகனே.

## வேலாயுதக்கண்ணி

சொற்கண்ட தொண்டைமான் ஆறதனில் தோற்றியே
விற்கொண்ட வள்ளியொடு விளங்கும்வே லாயுதனே

செல்வச் சந்நிதியே தீர்க்கும் வினைகளென்ற
கல்வியுளோர் தம்கருத்தே காக்கும்வே லாயுதனே

கதிர்காமக் காட்சிகளைக் காட்டுநற் சந்நிதியாய்
கதிர்வேலா என்னைநீ காப்பாய்வே லாயுதனே

வேண்டுவோர் வேண்டியதை வேண்டியவா றேகொடுக்கம்
ஆண்டிநீ ஐயா அருள்வாய்வே லாயுதனே

உன்றன் அருளாலே உரைத்தேனிப் பாடல்தனை
என்னிரு கண்ணே இறைவாவே லாயுதனே.

## திருப்புகழ்

*தனதான தனதான தனதான - தனதான*

அலையாது உலையாது அடியேனுக் காதரவாய்
நிலையாகி முருகாநீ நீள்சுடராய் - வள்ளியுடன்
கலையாகி மருத்துவனாய்க் காத்திடுவாய் - கண்ணியனே
தலையாய் பதிசெல்வச் சந்நிதிவேற் - பெருமானே.

## திருவூஞ்சல்

திருவோங்கி வளரீழ மண்ட லத்து
சிவம்பெருக்கும் யாழ்ப்பாணத் தேயந் தன்னில்
தருவோங்கி வளர்தொண்டை மானா றென்னும்
தலமதனின் தென்பாலில் இனிது மேவும்
உருவோங்கி வளர்செல்வச் சந்நிதி யுற்று
ஒளிர்கின்ற வேலவர்மேல் ஊஞ்சல் பாட
மருவோங்கி வளர்சோலைப் பாங்கர் மன்னும்
மாணிக்கப் பிள்ளையார் காப்ப தாமே .

## நூல்

சொல்லாரும் நாதவிந்து கால்க ளாகத்
துதித்திடுநற் சத்தியதே விட்ட மாகா
நல்லார்சொல் தந்திரநா லிழைய தாசு
நாடுகின்ற நான்மறைகள்
வல்லார்சொல் உபநிடதம் பலகை யாக
வாகுதரும் பிரணவமே பீட மாக
எல்லாரு மேத்துசெல்வச் சந்நிதி மேவும்
எழிலாரும் வேலவரே யாடீ ருஞ்சல்

நக்கீரன் அருணகிரி நவிலு மின்னோர்
நலிவுற்ற துயர்களைந்தீர் ஆடீ ருஞ்சல்
உக்கிரமாய் வருடகலைச் சுவற விட்ட
ஓங்காரத் துட்பொருளே யாடீ ருஞ்சல்
நெக்குருகித் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
நின்றொளிரும் நீர்மையரே யாடீ ருஞ்சல்
தக்கவொரு பதிசெல்வச் சந்நிதி மேவித்
தமிழ்தழைக்க வேலவரே யாடீ ருஞ்சல்.

## வாழி

சீராரும் திருநீறும் அக்கம் வாழி
திகழ் மறைகள் ஆகமங்கள் சிறந்துவாழி
நேராரும் அந்தணர்கள் நிறைந்து வாழி
நெடுவேலின் புகழ்பரவும் நெறியோர் வாழி
ஏராரும் தமிழ்சைவம் இயைந்து வாழி
எழிலாரும் யாழ்ப்பாணத் தேயம் வாழி
பேராரும் தொண்டைமா னாறும் வாழி
பிறங்குசெல்வச் சந்நிதியும் வாழி வாழி.

## எச்சரிக்கை

அன்பருளம் மேவுகின்ற ஐயாவெச் சரிக்கை
ஆறுபடை வீடுகளில் அமர்ந்தோயெச் சரிக்கை
துன்புசெய்த அவுணர்களைத் தொலைத்தோயெச் சரிக்கை
தொல்பிறவிப் பிணிதீர்க்கும் துய்யாவெச் சரிக்கை

முன்பவ்வைக் கருள்புரிந்த மூர்த்தியெச் சரீக்கை
மொழிவள்ளி மகிழ்கணவ முருகாவெச் சரீக்கை
இன்புதர வேலேந்தும் எழிலோயெச் சரீக்கை
இனியசெல்வச் சந்நிதியின் இறைவாவெச் சரீக்கை

## பராக்கு

ஆடுமயில் மீதிவரும் அழகா பராக்கு
அணிசேவற் கொடியுயர்த்த அமலா பராக்கு
கூடசுரர் குலமொழித்த கோவே பராக்கு
குலவு தெய்வ யானைமகிழ் குழகா பராக்கு
நாடுவள்ளி தனைமணந்த நாதா பராக்கு
நம்பனருள் நாயகனே நலனே பராக்கு
தேடுகின்ற வேலேந்தும் செல்வா பராக்கு
செல்வச்சந் நிதியமரும் தேவே பராக்கு.

## இலாலி

பிரணவப் பொருளதைத் தந்தோயி லாலி
பிறங்கிடுந் தமிழினை வளர்த்தோயி லாலி
சரணவப் பொய்கையில் வந்தோயி லாலி
சங்கரன் தந்தநற் சாமியேயி லாலி
அருண கிரிக்கருள் செய்தோயி லாலி
ஆதியாய் நின்றிடும் அன்பேயி லாலி
அரணதாய் எமக்கதவும் அமுதேயி லாலி
அருள்செல்வச் சந்நிதிவே லப்பாவி லாலி.

## மங்களம்

எங்குநிறை ஈசருக்கு மங்களம் - எழில்
இயைந்தமயில் இவர்பவர்க்கு
கங்கைதன் சிறுவருக்கு மங்களம் - மகா
கணபதியின் இளவலுக்கு மங்களம்
பங்கமெலாம் அகற்றுவோர்க்கு மங்களம் - குரு
பரனாகும் குமரருக்கு மங்களம்
செங்கைவடி வேலவர்க்கு மங்களம் - சீர்
செல்வச்சந் நிதிக்குகற்கு மங்களம்.

### பண்டிதர் க. வீரகத்தியின் செழுங்கமலச் சிலம்பொலியிலிருந்து செல்வச்சந்நிதி பற்றிய சில பாடல்கள்

## மனித்தப் பிறவியும் வேண்டுவதே

சன்னிதி யென்னச் சரீரஞ் சிலிர்க்கும். கசிந்துருகிச்
சன்னிதி யுன்னச் சகல துயருஞ் சரிந்துபடும்
சன்னிதி சாரநல் லின்பம் மகிழ்ச்சி சுரந்துவரும்
சன்னிதி பாடச்சா ராதன இல்லைச் சரணடைவோம் !

காவடி கொண்டு களிப்பூட்டு கண்ணப்பன் அன்னவர்கள்
காவடி வேலவ என்று கரையக் கரச்சமையைக்
காவடிப் பங்கயம் காணி பணந்திரு வற்ற வெறுங்
காவடி யென்னையுங் கண்ணிமை போல்நிதங் காத்திடுமே!

வெங்காய வாசனை வேரறுக்கம் குகன் சன்னிதியில்
வெங்காய நாற்று விளைவது கண்டு விதிர்ப்படைந்து
தங்காதலன் தவ வாற்றலுக் கீதறை கூவிலென
வெங்காய முள்ளூறும் வள்ளி! இருவினை யொப்பிதுவோ?

தனித்த புகழ்வளந் தாங்குந் தவச்சுனை சன்னிதியிற்
பனித்த மனத்தொடு வாய்புதைத் தையர் பரவியுளம்
இனிக்க எடுக்குந்தீ பாரா தனையெழில் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே!

## சன்னிதி என்னிதி!

சோற்றுச் செருக்கல வோதமிழ் மூன்றுரை செய்ததெனப்
போற்றுங் கவிதை பொருளுரை யேககண் சன்னிதியிற்
சோற்றுக் குவியற் சுணைபட வேசுதி கூடியமென்
காற்றுங் கவிசொலும் கந்தலுஞ் சொல்லும் கனிவெழவே.

வள்ளி யொருபுறம் வள்ளல் மறுபுற மாகநின்று
அள்ளி யெடுத்தெனைத் தாங்கலின் ஆய்த எழுத்தெனவே
கொள்ளமுடியும். நுணுகிய ஓசை குறைதலினால்
தள்ளி விடுவர் தமிழ்ப்புல வோரிசை தந்திடுவாய் !
வல்ல வெளியிலென் வாணி கொலுவிருப் பாளவனைத்
தில்லை வெளியிற் திருநடக் கூத்தன் புதல்வதினைக்
கொல்லை வெளியிற் குறமகள் கூட்டும் தமிழ்ச்சுவையால்
நல்ல வழியிற் பணிசெயக் காக்குதி நாயகனே.

தமிழினி குணமோ தனிமை யிலேபிணை நற்களவு?
களவின் மொழியோ கனியைப் பழித்த தமிழ்? பெருஞ்கூ
தளவின் நகிலில் அதரத் திதழில் குறத்தியுளம்
விளையுஞ் சுவையோ? எதுவென் றறிய விழைகவனே!

## கோடிமுறை பாடும் குமரன்!

வள்ளியொடு கூடி வாழ்சுவையை நாடி
வளருதமிழ்க் காதற் - பெருமான் நீ
வாடுமடி யார்கள் கோடிமுறை பாடித்
தேடியுனைக் கூடும் - பெருமான் நீ
புள்ளிமயில் மீதில் பொலியவரு போதில்
புலவர்விளை யாடும் - பெருமான் நீ
பொன்மலையி லன்னை புதல்வனென வுன்னைச்
சன்னிதிவைத் தேத்தும் - பெருமான் நீ
கொள்ளைபசி யாறக் குவியுமன்ன தானக்
குன்றிலனை வேற்கைப் - பெருமான் நீ
குற்றுயிரில் வைத்துக் கொடியபிணி தீய்க்கும்
குறையினரைக் காக்கும் - பெருமான் நீ
துள்ளிவரு வேலைத் தொட்டழகு சொட்டித்
தோகைமயி லாடும் - பெருமான் நீ
துங்கமுற யார்க்குந் தோன்றியரு ளீயும்
தூயசன் னிதியிற் பெருமானே!

ஓடிவரு கங்கை பாதிமதி கொன்றை
ஓர்மிடறில் நஞ்சம் இவைசூடி
ஊழிநட னஞ்செய் நாதனுனை நண்ணி
'ஓதுபொருள்' என்ன விடையாக
ஈடிணையி லாத வேதமுதல் மந்ரம்
ஈசனும்வி ளங்க அருள்பாலா
ஏழையடி யோமைச் சூழும்வினை மாள
ஈழமுழு தாள வரவேணும் !
வேடுவர்ம டந்தை காடுபடு கொம்புத்
தேனொடுபி சைந்த தினைமாவை
தேடிமுன்றி றைந்த கானிடை நடந்து
சேவடிசி வந்த பெருமானே
ஆடிவரு தொண்டை மான்நதிம ருங்கில்
ஆயிரம்அ றங்கள் வளர்கோயில்
ஆடுமெழில் கொஞ்சு காவடியு கந்த
ஆறுமுக னேசந் நிதியானே !

- சோ. பத்மநாதன் -

# செல்வச் சந்நிதிக் கந்தன் கழற்கோர் கவிமாலை

காப்பு

அலையது எறியு நதியத னருகி
லயிலதன் வடிவி - லமர்ந்தேதான்
அருளினை யெறியு மழகனு னடியி
னருமைசொல் புகழை - நான்பாட
கலைமக ளவளும் கஜமுக னவனும்
கடைவிழி யருளைத் - தரவேணும்
கருதரி பொருளும் கவினுறு தமிழும்
கடிதினில் வரைய - வரவேணும்
இலையெனு மிடையு ளரிவைய ரிருவ
ரிணைதர நிதமு - மருள்வேலா
இனியொரு கதிய திலையென அழுமென்
இழிநிலை யழிய - அருளாயோ?
நிலைபெறு விமலி நிறைமதி வதனி
நிமலிய ளருளு - வடிவேலாய்
நினதடி பணிவர் நிறைவினை யடைய
நிலமருள் தருசந் - நிதியானே.

நூல்

01. ஆறுதலை வார வென்று ஆறுதலை யோடெ ழுந்து
ஆறினரு கேய மர்ந்து - அருள்வேலா
ஆலிலையி லேவ ழங்கு சீலவமு தேவி ரும்பி
ஆசையுட னேய ருந்த - மருந்தாகி
தேறியுடல் நோய கன்று வீறுடனு லாவி டென்று
தேவுனரு ளேவ ழங்கு - முருகோனே!
தேசிடைய னாக வன்று சேவடிகள் நோவ வந்து
தேடியவர் காண நின்று - உரையாடி
பேறடைய வேயு கந்துன் நீறுதனை யேவ ழங்க
பீடுபெறு வார்க ளென்று - புகல்வேலா
பேரருள தேக ரந்து பாவியிவ னேனும் வந்துன்
பாதமதி லேயு றங்கு - வரந்தாராய்

மாறுபடு சூரன் நெஞ்சு கூறுபட வாரி யஞ்சு
மாறுனது வேலை யன்று - விடுவோனே
மாவயில தாயி ருந்து மாதனம தாகு முந்தன்
மாசிலரு ளீய வந்த - கந்தவேளே!

02. இடைய னாக வேலாவி மருத ரோடு மேபேசி
இகமுன் பூசை யேகாணும் - முறையாக
எளிமை யாக வாய்மூடி கதிர காம மேபேணு
மவுன பாஷை யேகூறி - மறைவேலா
விடையி லேறு வார்காதில் விநய மாக வேயோதி
விளைவ தால தேநாதன் - குருவாகி
விமலி வேல தேமூலம் விரவி யாடு வார்வாழ
விரைவி னோடு மேநாளு - மருள்வேலா
கடைய னாகி யேபாத கசிவி லாத மாமூடன்
கதியி லாது வாழ்சேய - னுனைநாடி
கவின தாக வேபாடி கழலின் மீதி லேசூட
கருணை வாரி யேநீயும் - அருளாயோ?
படைய லாக வேயால மிலையின் மீதி லேதூவிப்
பரவு வோரு மேவாழ - அருள்கோனே!
பகரு நாம மேயோத பரிவி னோடு மேயாள்சந்
நிதியை நாடி யேவாழு - முருகோனே.

03. கருவதுரு வாக வைத்து கவனமுட னேவ ளர்த்து
கதியடைய நீற ளித்து - அருள்வேலா
கழலிணைய தேது திக்கக் கதிரமலை பூசை வைப்பைக்
கரிசனைய தாய்ப்பு குத்து - மயில்வீரா
பொருதவரு சூர ருக்கு மருவுபெரு வேல்வி டுத்து
புரிதவறை யேபு கட்டி - யருள்கோனே
புவனிதனி லேய ழுத்து வினைவழிய தேந டக்கும்
புலையனிவ னேனு முய்யு - வரந்தாராய்
திருவருள தாற்கொ ழித்து திருபெருக வேக ளித்து
திகழுபுக ழோடி ருக்க - அருளாயோ?
தினையதனின் மாவை யிட்டு நறையதுட னேகு ழைத்து
திரியொடுநெய் சேர விட்டு - விளக்கேற்ற

வருமடியர் வாழ்வு பெற்று வறுமையது ஏக வைத்து
வரையதென வேயு யர்த்தி - விடுவோனே!
வளமொடரு ளீய விச்சந் நிதியதனி லேய மர்ந்து
வரமதனை வாரு கந்தப் - பெருமானே.

04. கொடிநனிய தேற வள்ளிக் கொடிமுளைய தாகித் தள்ளி
குறியதனை ஈயு வெள்ளி - வடிவேலா!
குகனுனது வால யத்துள் கொடுமைபுரி வார்சி ரங்கள்
தசமதினந் தேடிக் கிள்ளி - யெறிசூரா
விடியுமுன மேயெ ழுந்து விரைவதுட னேய கன்று
விரிமலர தேக ளைந்து - உனைநாடி
விநயமுட னேவ ழங்கு வெகுபணிய தேயு கந்து
விரவருளை யேபு ரிந்து - அருள்கோனே!
மிடியதனி னாலு ழன்று மிளிருபத மேம றந்து
மிரளுவிழி யோட லைந்து - திரிவேன்மேல்
மிகுகருணை வாரி யிந்த நிலவுலகி லேயு யர்ந்த
மிகவரிய யோக முள்ள - பெருவாழ்வு
கடிதிலெனை யேய டைந்து கவலைகளெ லாம றைந்து
கனகமணி வேலை நின்று - வாழேனோ?
கருணையுரு வாகி யன்பர் கனவுநன வாக விச்சந்
நிதியதனில் வாழு தங்க - மயிலோனே!

05. நந்த மர்ம னம்நி னைந்த வன்று அந்தி சந்தி வந்து
திண்ணை யில்அ மர்ந்தி ருந்து - உரையாடி
நன்கு ளந்தி றந்து நின்று சொல்லு சங்க டம்ம றைந்து
நன்கி லங்க ருள்வ ழங்கு - வடிவேலா!
வந்தி ருந்து உள்ள முள்ள தந்து யர்பு கன்று வுந்தன்
சிந்தை நன்கி ரங்கி டென்று - அழுவேதான்
வெந்த நெஞ்சு கொண்ட வந்த அன்பர் தம்மி டர்அ கன்று
இன்பி னில்அ முந்தி ரென்று - அருள்வோனே
உந்த னின்பு கழ்வி ளம்பு செந்த மிழ்க்க டம்பு கொண்டு
வந்து உன்க ழல்அ ணிந்து - தொழநாடி
உன்னு மென்உ யிர்க வர்ந்து செல்ல வந்த கன்நெ ருங்க
உன்ம யில்அ மர்ந்து வந்த - காவாயோ?

பந்த வள்ளி தெய்வி யின்றி யிங்கெ ழுந்த மர்ந்தி ருந்து
சங்கை யுள்அ ருள்வ ழங்கு - வேலான
கந்த னுன்ப தம்ப ணிந்து கெஞ்சு தொண்டர் நெஞ்சி லின்பை
சந்த தம்வ ழங்கி டுஞ்சந் - நிதியானே !

06. சரண மாகி உனைவ ணங்கி சதிர தாடி யறிவ ழிந்து
உருவ தேறி நிலையி ழந்து - வெறியாட
சகல நோயு மழிய வென்று தருமுன் நீறு தனைவ ழங்கி
சகச மாக வரம லர்ந்து - அருள்வோனே!
கருணை கூரு விழிதி றந்து கதியி லாத நிலைய றிந்து
கவின தாக அருள்வ ழங்கு - வடிவேலா
கழல தேயென் துணைய தென்று கதறு நாயன் மனமி ருந்து
கவலை யோட வுளமி ரங்கி - அருளாயோ?
வருண னாக வருள்சு ரந்து மழைய தாக புவிபொ ழிந்து
வளம தாக அமைய வென்று - மருள்கோனே
வளரு மாயை வலைவி ழுந்து வகையி லாத துயரு ழன்று
வழியி லாது வுனைய டைந்து - அழவேநீ
தருண மீதில் மயில மர்ந்து அயிலி னோடு கடுகி வந்து
தமிய னேனுள் மகிழ வென்றுங் - காவாயோ?
தமர தாகு மடியர் நெஞ்சுள் நினையு யோக மருள விச்சந்
நிதியை நாடி யமரு கந்தப் - பெருமானே!

07. சிவகுரு வினாணை யோடு விரையுவ லிவீர வாகு
திகழுபெ ருமாறு பாயும் - கல்லோடை
சிரமப ரிகார மாக செழுமைமி குமூரை நாடி
திருபெரு குபாதஞ் சூடு - பதிமேவி
புவனமு ழுதாளு வோனின் புகலசு ரதூது கூறி
புரபதி யையேக மீள - வருங்காலை
புகழுவ டிவேலன் பூசை புரியவு ரைமாலை யாக
புதியபெ ருவேலை நாட்டித் - தொழவேதான்
தவமுனி வரோடு பாதந் தனிலுரு குயோகி மாரும்
சரணப யமாகி நாளுந் - தவஞ்செய்ய
செழுமையு ளதான பாத திருவரு ளைவாரி வாரி
சிவகதி யதேகு மாறு - அருள்வோனே

கவலைப லவாகி வேறு கதியது இலாத சேயுன்
கருணைபெ றுமாறு நீயும் - அருளாயோ?
கருவறை புகாத வாழ்வும் கனதன முமீய வேசந்
நிதியத னில்வேல தாகு - முருகோனே !

08. உந்தனில் வார மாகி வந்தெழு காலை தோறும்
நின்றழு வாரின் மீது - பரிவாகி
வந்தவர் கூறு சேயு மந்தரி நோயு மாறி
நன்கவள் வாழு மாறு - அருள்வேலா
நந்தம ராயு லாவு முன்கதிர் காம ரோடு
திண்ணையிற் கூடிப் பேசு - முருகோனே!
கந்தனுன் பாதம் நாடி சிந்துகள் பாடி சூடு
மென்துய ரோட நீயு - மருளாயோ?
குந்தக மீகு வோரும் பின்னிரு வாண்டி லேக
உன்வசம் யாவு மாகு - மெனுங்கோவை
புந்திவை யாத நாயன் பந்தம தாகி யேயுன்
சிந்தைய னாகி வாழு - நிலைதாராய்
சந்தத மாடு வோரும் தந்நிலை மீறு வாரும்
நன்னிலை யாக நீறை - யளிவேலா
சந்ததம் காவ லீய செந்திரு வேல தாக
சந்நிதி வாழு நீல - மயிலோனே !

09. அண்டர்கள்நி தம்ப ணிந்த தண்பதம்பு கன்று கெஞ்ச
அன்னையொடு பிள்ளை யென்று - வருவேலா!
அண்டியுன தன்பர் நல்ல தண்ணியுளி டம்வி ளம்பு
மென்னவொரி டம்பு கன்று - அருள்வேளே
திண்டிறல்மி குந்த தொண்டர் கொண்டபெரு மன்பில் வந்து
தெங்கிலைபு னைந்து தந்த - தெப்போலைத்
தண்டிகையி ருந்து வென்றும் தெண்டனிடு மன்பர் நெஞ்சுள்
தங்கவைய றிந்து ணர்ந்து - தருவோனே!
எண்டரும்ப தம்ம றந்து பண்டைவினை கொண்டு லைந்து
கண்டபடி யிங்க லைந்து - திரிவேனை
எண்ணரிய ருள்வ ழங்கு புண்டரிக பங்க யந்தன்
தொண்டுசெய வின்ன ருள்தந் - தாளாயோ?

தண்டையுஞ்சி லம்புங் கொஞ்சு முன்னடிவ ணங்க வின்பை
தண்நதிம ருங்கி ருந்து - பொழிவோனே
தண்டமிழ்ப்பு கழ்வி ளம்ப கொண்டுனத ருள்சு ரந்து
சந்நிதியி ருந்து சிந்து - முருகோனே.

10. ஆதியுன வாலயமி லாதுசெய வேவருமு
லாந்தர்முடி யாதுசெல - வைவேலா
ஆலமிலை தூவியளி சாதமவை போஷியடி
யார்களுறு நோயகல - தருசீலா
நீதிமுறை யேவழுவி நேயவுன வாசலடை
நீசரவ ரேயகல - விடுவோனே
நீலமயி லேறிகதிர் காமமது ஏறுகொடி
காணவென வேவிரையு - முருகோனே !
கோதிலருள் வாரநதி நீரதனி லாடுவடி
வேலழகை காணுமுள - மயர்வோடு
கோலபதி சேருகளை யேகவென ஈபயறின்
மாதுவைய லேயருந்தி - மகிழ்வோனே!
ஓதியுண ராதுலையு நாதியில னேனுமுன
நீடுபுகழ் சூடமன - மிரங்காயோ?
ஓலமென வேபணியு வாரினிடர் ஞாலமது
ஓடவென நீறளிசந் - நிதியானே !

11. பூசைகளெ லாமு டங்கத் தீதுசெயு வார டங்கி
ஊரிலிருந் தேய கன்று - செலுமாறும்
போதநின பாதந் தன்னை ஓதுகதிர் காமர்க் கந்த
போகமதை யேவ ழங்க - உளமாகி
ஓசைதரு வாரி சென்று மீளவரு வாரின் முன்பு
ஓரிடைய னாகி வந்து - கதிர்காமா!
ஒருணவு மீவ ரின்றி வாடுநிலை மாற வெந்தன்
பூசைதனை யேசெய் யென்று-உரைகோவே
ஆசைநிறை வேற கல்வி யாததுமி லானின் கண்ணை
மூடிக்கதிர் காமஞ் சென்று - அவைகாட்டி
ஆறுமுக னேவு வெள்ளி வேலதுவு மேவ ழங்கி
ஆரழல தேவ ணங்கு - முறையீந்தாய்

காசைநனி யேவிரும்பி காலதனை யேமறந்து
காசினியி லேயுழன்ற - நிலைமாறி
காதலது வாகி யுந்தன் நாமபுக ழோது மன்பர்
காவலன தாகி யென்று - முறைகோனே.

12. மடமதனில் வேலை நடுஅவர்க ளேக
மறுபடியுங் கோயி - லமைவாகு
மெனவருளு கோவி னுரைமுறைய தாக
முருகுனது பூசை - தரவேதான்
மடைமையதில் மூழு மவர்கதவை மூடி
மறுபடியு மேகக் - குலமோடு
மடியவடி வேலின் மகிமையுண ரூனன்
மருதர்கதிர் காமர் - தனைநாடி
உடைமையவை யோடு கதவதனின் சாவி
பிடியுமென வோதி - செலவேதான்
உரிமையொடு வேலன் புகலுமிடந் தேடி
உவமையில தாக - அமைகோவில்
இடமதனை நாடி இனியவமு தால
மிலையதனி லீய - உரைகோனே!
இகமதருள் வார வெனகழனி சூழ்சந்
நிதியதனில் வாழு - முருகோனே.

13. பொங்குமா றுக்கருகு சங்கையாகிப் பதியில்
தங்கியா ளக்கதிர - மலைநின்றே
இங்குகூ டத்தருநல் செங்கைவே லொத்தபெரு
வெள்ளிவே லைத்தினமும் - தொழவேதான்
கங்கையா கக்கருணை கண்ணில்வா ரிப்பொழியு
கந்தனா கிப்புவியில் - யருள்கோனே
கண்டுநே ருட்பொருளை வந்துகா துக்கருகு
கண்டனா ருக்குரைசெய் - குருநாதா!
தொங்குபா சப்பிடியில் நொந்துவா டித்திரியென்
சிந்தைமா றிப்பணிய - அருளாயோ?
துன்பவாழ் வுற்றுலையு கன்மமா றிப்பெரிய
வின்பவாழ் வுற்றயரப் - பெறுவேனோ?

தங்குமா றெத்திருவுந் தந்துவா ரித்திருவை
யங்கமா கக்கருதி - மறவாதே
தஞ்சமா கிக்கதறி கெஞ்சுவா ருக்கருளை
யள்ளிவா ரித்தருசந் - நிதியானே !

14. முத்தலை கடலதின் பக்கலில் முருகவன்
வைத்திரு அயிலதின் - வடிவாகி
வைத்தடி பணிபவர் நித்தமுஞ் சுகமுற
சித்தியை யருளிடு - முருகோனே
உத்தம மருதரி னிட்டமுள் புதல்வனை
யித்தரை பணிகொள - உளமாகி
உற்றொரு இடையனின் நற்றிரு வடிவினில்
பற்றுள அவர்முனம் - வருவோனே!
பக்தரு னடிதொழ அர்ச்சகர் வடிவினில்
உச்சியிற் பொடியது - இடுவோனே
பற்றவை யறுபத பற்றிலை யெனவடை
யற்பரைக் குலமொடு - யழிதீரா
முத்தியை யருளிடு முற்சவ நடுவினில்
பக்தரி னுருவினில் - வருவோனே
முற்பவ வினையற நற்றவ ருளமுள
முற்றுற அருளுசந் - நிதியானே !

15. ஆறு மாமு கத்து வள்ளல் வீர வேலெ டுத்து வந்து
கூறு மாறு வைத்து கந்த - வெனவோதி
ஆடு காவ டிக்கி சைந்து ஆகு மாறெ டுத்து உள்ள
ஆசை யேகொ டுத்து வந்த - வடிவேலா
நீற தேய ளித்து வந்த நோயெ லாம ழித்து வின்ப
வாழ்வ தேக திக்க அள்ளி - யருள்கோனே
நீச ராரி ழைத்த அந்த தீதெ லாமு டைத்து வுந்தன்
வீட தேய மைத்தி ருந்த - வேலோனே
கூறு மாவெ டுத்து சுத்த தேனி லேகு ழைத்து அன்பி
னோடு மாவி ளக்கு வைக்க - பரிவாகி
கூவி யேய ழைக்கு மன்பர் கூட வேயி ருந்து வென்றுங்
கோதி லாவ ருள்வ ழங்கு - மயிலோனே

தேறு மாறெ டுத்து சிந்து பாத மேதொ டுத்த இந்த
நாயி னேனெ னக்கி ரங்கி - யருளாயோ?
தேச மேது திக்க நின்று சீரை யேய ளிக்க விங்கு
தேசி னோடு கந்த மர்சந் - நிதியானே!

16. அக்கறைவி டுத்து அடை பித்தரைய கற்றியுன
பத்தரைய ழைக்கவென - உளமாகி
அத்தவர்ம திக்கவொரி டைச்சிறுவு ருற்றுக்கரம்
பற்றியவ ரைக்கதிர - மலைசேர்த்தே
தக்கவர ளிக்குமுறைக் கொத்திருவ ழிக்கமைய
வைத்துனைத்து திக்கவயி - லீவோனே!
தத்துமயி லைக்குறுகி விக்கினந்து டைத்துஉள
திக்கதும திக்குநிலை - தாராயோ?
சொக்கிடும லர்க்குவைகள் செக்கலிலெ டுத்துவரு
மக்குடியி னர்க்குதவி - புரிவேலா
தொக்கவைபு கழ்க்குருகி சுற்றிவையெ னக்கருள
தக்கதரு ணத்தெதிரில் - வாராயோ?
மிக்கலைம னத்தினொடு திக்கிலையெ னக்கழலைப்
பற்றிடுமெ னக்குளம - திரங்காயோ?
மெத்தப்புக ழுற்றசெல்வச் சந்நிதிது திப்பவரை
மிக்குயர ரட்சித்திடு - முருகோனே!

17. நதியி னருகினி லெழிலுறு பதியதில்
நவில வரியுன திருவரு ளதைநித
மயில துருவினி லருளிட வருதிரு - முருகோனே
நலம தளியுன மலரிணை தருமுப
சரணை யளிகத வினையடை கயவரும்
நலிய வுனதிடம் மறுபடி வரவருள் - புரிவேலா
நிதிய துனதடி பணிகுத லெனநித
முதய மதிலுனை தொழுதெழு மடியவர்
மகளி னுடலினை வதைசெயு பிணியற - அருள்கோனே!
நிலம தளிநறு மலரொடு ஒளிதரு
கலச மவையளி குடியினர் வளமுற
நினையு தொறுமுன பெருவரு ளதையளி - வடிவேலா

விதியின் வழியுழ லெனநிலை புவியினி
லுயர வுனதிரு வடியிணை சிரமதி
விரைவி லெழுதிடு வரமதைப் பரிவொடு - தாராயோ?
வினையின் வழியினி லியமனு முயிரினை
கவர வெனவர கடிதில னெதிரினில்
அபய மதுதர வெனதுன மயிலினில் - வாராயோ?
கதிய திலையுன கழலிணை துணையென
கதறு மடியவர் கருதவை நனியுற
கருணை யதுபுரி குருபர னெனவுரை - பெறுவேலா
கருது வதிசய மவைபல செயவென
கழனி யொடுபொழி லணிசெயு திருவிடங்
கலியி லருளிடு மிறையென வமருசந் - நிதியானே!

18. கர்ச்சித் தலை சப்தித் திடுமொலி
கொட்டும் முர சொத்துத் திசைதர
மெத்தப் புக ழுற்றுற் றொளிர்பதி - கல்லோடை
வைக்கப் பனி கொட்டக் கிரிதரு
சக்திச் சரம் நட்டுத் தொழுதெழச்
சித்தத் துள கிட்டத் திருவருள் - புரிவேலா
இச்சைப் படு மிச்சந் நிதியதில்
மக்கட் கிடர் தந்திட் டலைபவர்
பற்றிக் குறை யுற்றுத் திரிதரு - கதிர்காமர்
இட்டப் படி யற்பர் உலகவிட
பத்துத் தினம் விட்டிட் டவரது
துட்டத் தலை வெட்டித் தரையெறி - வடிவேலா
பட்சத் தொடு ரட்சித் திருமரு
தர்க்குக் கழ லர்ச்சித் திடவளி
சொத்தைப் பகு தற்குக் கொருமுறை - யுரைகோவே
பற்றுக் கொடி ழைத்துப் புகழதை
பித்துக் கொடு முத்துத் தமிழினில்
தித்தித் திடச் சுற்றித் தருமெனைக் - காவாயோ?
மெச்சத் தக வுற்றுற் றுலகினில்
மிக்கத் தன முற்றுற் றுனதருள்
சித்தித் தடி யுற்றுக் கிடவென - அருளாயோ?

மெட்டுப் பறை கொட்டத் திருவுரு
வைத்துத் தொழ சித்ரக் கதவடை
செட்டிக் குலம் விட்டிட் டகலருள் - முருகோனே !.

19. சேவடியி லேபொழியு பூவையதி காலைமுதல்
தேடியுன வாசலளி - குடியான
பூவெடடி யாரினுள தேவையதெ லாம்நிறைய
பேரருளை வாரிநிதம் - புரிவேலா
மாவினுரு சூரையழி மாரன்கதிர் காம வழி
மாமுனிய தாயுலவு - சிகண்டிமுனே
மாகுருவி யாழனளி சாபமொடு காடுதொறும்
மாமுகம தோடலைஜ - ராவசொர்நாள்
ஏவயில தாகவரு வேகமற வேவெளிலை
வேலனைய தாகுநனி - யதைவீச
ஏலவளி சாபமது தீரமுனி பாதமுற
ஏகுபதி யாகவுரை - யிதைநாடி
பூவரசு நீழலதில் மாதவம தேபுரிய
பூவடிய தேயடைய - அருள்கோனே !
காவடிக ளாடிவடி வேலபய மாகுமென
காலடிய தேதருசந் - நிதியானே.

# சந்நிதிவேலன் செந்தமிழ் மாலை

பல்லவி

01. வீற்றிருந்தே யருள்வாய் விநாயகனே - நெஞ்சுள் - இந்த
ஆற்றங்கரை யானின் அற்புதம் பாட நெஞ்சுள்

அநுபல்லவி

போற்றியே தொழுமடியர் புன்மையெலாம் போக்கி
ஏற்றமார் வாழ்வருளும் இணையடி புகழ்பாட

சரணம்

காற்றலை கரையேறிக் கழலிணை நீராட்ட
ஆற்றொணாத் துயர்கூறி அழுபவர் துயரோட்ட
சாற்றரி யருள்வாரும் சந்நிதி யான்கழற்கே
சாற்றியோர் தமிழ்மாலை சகமதில் நான்சூட்ட

ஆற்றலதேது மில்லேன் அடியிணை துணையென்றே
ஏற்றிநின் றேனையா ஏரம்பா துணைவருவாய்
நீற்றினால் நோய்தீர்க்கும் நிர்மலன் புகழ்பாட
ஊற்றெனத் தமிழ்வாரி உள்ளிருந்தே பாய .

பல்லவி

02. கதிதருவாய் ஐயா கதிர்வேலா - நல்ல - பாழும்
விதிவழி யலைந்துலையும் வினையனேன் தனக்கு நல்ல

அநுபல்லவி

சதிபதியாய் எழிலார் சந்நிதி தனில் அமர்ந்து
துதிபுரி யெனதிரு தொல்வினை கள்களைந்தே

சரணம்

நதிமதி யணிசிவனின் நற்குரு வானவனே
அதிபதி யெனநின்று அருளிடும் வேலவனே
பதியிதின் நிதியெனவே பகரநின் றருள்பவனே
நிதிபதி யிவனென நீணிலத் துயரநல்ல

அதிரசத் தமிழமுதை அள்ளியுண்ட முருகா
ஜதியலை துயில்மாயன் யௌவனமார் மருகா
ததியுறு மத்தெனவே தரணியி லுழலுமெனை
எதிரதி லருள்வாரி இப்புவி காவாயோ ?

பல்லவி

03. கடலென வருதுயர் கரையாதா ? முருகா !
கடம்ப மலரணியும் கானக்குறத்தி நாதா !

அநுபல்லவி

மடமயில் தனில்மீது மாதிருவர் சூழ
இடமெனச் சந்நிதிநின் றின்னருள் புரிவேலா !

சரணம்

விடையமர் சிவனாரின் வழிவழியே பிறந்தாய்
இடையனாய்க் கதிர்காமர் விழிதெரிய நடந்தாய்
புடமிடு கதிர்காமப் பூசைமுறை சொன்னாய்
திடமொடு தொழுமெனைத் துரத்தியே வாட்டிடும்

கடலலை தாலாட்டும் கவின்சந் நிதிவந்தே
தடமதில் மூழ்கியுந்தன் தண்மலரடி பணிந்தேன்
உடலது நிதமென்றே உலகுழல் நிலைமாற
அடலயில் வடிவுடை அருளடி தொழுதேன்.

பல்லவி

04. பன்னிரு கையனே பரிந்தருள்வாய் - கந்தா
உன்னிரு பதமலரை உறுதியுடன் பிடித்தேன்

அநுபல்லவி

சந்நிதி நின்றாளும் சண்முகா வடிவேலா !
முன்வினை யாலெழுந்த மும்மல இருள்போக

சரணம்

நன்தினை மாவெடுத்து நறுந்தே னொடுபிசைந்து
பன்னிரு கையழகா பன்னிரு திரிபோட்டு
சென்னிறப் பொட்டிட்டுப் செழுமலர்ப் பொரிபோட்டு
என்மனத் துயரோட ஏற்றினேன் மாவிளக்கு

நன்கரு வதுஉறவும் உறுகரு நலம்பெறவும்
உன்திரு நீறுதீர்த்தம் உவந்திடு மருந்தாகும்
அன்னம தாலமிலை அறுபத்தைந்திற் படைத்தே
சந்நிதி வருவோரின் சகலநோயும் தீர்க்கும்.

05. பல்லவி

நாமஇசை பாடும் நல்வரந்தா - முருகா - எழில்
மாமயில் வாகனாவுன் மகிமையெலாம் பகரும்

அநுபல்லவி

தேமலர்ப் பொழில்சூழும் செல்வச் சந்நிதிக் கந்தா!
பூமலர்ச் சேவடியைப் போற்றிநின்றே இனிக்கும்

சரணம்

காமனை எரித்தசிவன் கண்ணிருந் துதிசெல்வா
கோமளப் புன்னகையால் கொடுவினை களைமுதல்வா !
சாமளை யாளளித்த சக்தியுடை வடிவேலா !
தாமரை மலர்ப்பாதா ! சண்முக நாதா !

வாமனின் மருகா ! வரமருளும் முருகா !
மாமயிலேறி வலம் மாநிலம்வரு மழகா !
சேமமெலாம் அருளும் செல்வச் சந்நிதிக் கந்தா!
சோமசுந்தரன் மைந்தா ! சொக்கிடுந் தமிழாலுன்.

பல்லவி

06. விடிவேற அருளிடையா வேல்முருகா - வாழ்வில்
மிடிபாறி மெருகேறி மேன்மையெலாம் - அடையும்

அநுபல்லவி

வடிவேறு வேல்வடிவில் வளத்தொண்டை மானாற்றில்
குடியேறிக் கொலுவிருந்து கோலோச்சும் குமராஎம்

சரணம்

கொடியேறு தம்பமதின் குறியான இடம்வள்ளிக்
கொடியேறு முளைகாட்டிக் கொடியேறச் செய்பவனே

படியேறு வந்துபதம் பணிந்திடு மடியாரின்
குடியேற அருள்வாரிக் கொடுத்திடு குமரா எம்

பொடியேறு மேனியொடு பெம்மானுன் ஈர்புறமும்
துடியேறு இடைமாதர் சூழ்ந்திட வருபவனே
செடியேறு தீமைகள்நான் செகமதிற் புரிந்தாலும்
அடியேறு வாழ்வுவர அலகிலுன் அருள்வாரி.

(விடிவேறு)

07.

பல்லவி

சஞ்சலம் தீராயோ ? சண்முகனே - என்னை
வஞ்சனை யாலுலைக்க வருதீநீர் காற்றுவெந்நோய்ச்

அநுபல்லவி

தஞ்சமென் றெனக்காரோ? தமியினேன் ஏங்குகின்றேன்
செஞ்சவே யருளாயோ செல்வச் சந்நிதிக் கந்தா !

சரணம்

சஞ்சலித் திருகண்ணீர் சரீரமெங்கும் சோர
பஞ்சடிக் கமலமதை பாவியேன் நான்தொழுதேன்
நெஞ்சகம் குழையநின்றே நித்தமும் திருமுறையை
விஞ்சையி லோதிடுவார் விருப்பம் தருள்வேலா!

செஞ்சிலம் பலம்பும்தண்டைச் சேவடிதுணை யென்றே
அஞ்சலி செலுத்திநின்றேன் ஆறுமா முகத்தோனே !
வஞ்சக நெஞ்சினரும் வந்துசந்நிதி பணிந்தால்
எஞ்சலில் வாழ்வுதனை இகமருள் குமரா என்

(தஞ்சமென்)

பல்லவி

08. தெண்டனிட்டே பணிந்தேன் தேவ தேவா ! - வந்து
தொண்டமா னாறுறையும் தூமறை புகழ் பாதா !

அநுபல்லவி

கண்டநஞ் சணிசிவனார் கண்கன லுதிவேலா
அண்டகோ டிகட்கும்தாயா மணங்குமை கௌரிபாலா

சரணம்

தொண்டரோ டன்பரெல்லாம் தோத்தரித்தே பாடும்
விண்டிடற் கரியதான வியனடி தொழுதுநின்றேன்
கொண்டபே ரன்பினாரின் குலதெய்வ மானகந்தா !
எண்டரு நிதியம்தன்னை இருநிலத் தருளாயோ?

கொண்டலிற் கரியகூந்தல் குறவள்ளி தெய்வியொடு
தண்டையும் சிலம்பும்வெள்ளிச் சதங்கையும் சலசலக்க
முண்டகப் பீடமதில் மிடுக்கொடு சுமந்துவந்தே
திண்டிறல் அருள்வாரிச் சேயெனைக் காவாயோ ?

(தெண்டனி)

பல்லவி

09. சும்மாகவே யிருக்கும் சுகந்தனைத் தா ! முருகா !
எம்மானுன் பேரழகை என்னுளத் திருத்தியென்றும்

அநுபல்லவி

இம்மாநிலத் தெவரும் ஏற்றுசந் நிதியானே !
அம்மாயன் மருகோனே ! வெம்பாவம் அழிகோனே

சரணம்

தம்பாரம் தீரவுன தயவினை வேண்டமரர்
தம்பார மேகஅருள் தனிவடி வேலவனே !
கொம்பூறு தேனோடு தினைமாவும் படைத்தேனே
நம்பார மோடியென்னுள் நானுனையே கண்டு

அம்மாவும் பையனுமாய் அருங்காட்சி தீட்டியவா
அம்மானின் மகளுக்காய் கிழவுரு நாட்டியவா
பெம்மானுக் குரைசெய்து பேரின்ப மூட்டியவா
நம்மாநிலக் கிணற்றில் நன்னீரைக் காட்டியவா

(சும்மாகவே)

பல்லவி

10. குறையிரந் தழுமெந்தன் கொடுவினை களையாயோ?
துறைமுக மிருந்தருளைச் சொரிந்திடு முருகோனே !

அநுபல்லவி

நிறைதிரு நீற்றினிடை நின்றெரி கற்பூரச்
செறிபுகை நடுவிலொளிர் செல்வச் சந்நிதியானே !

சரணம்

இறையவன் புயமெட்டோ டிணைதிரு மாயன்தன்
நறைமல ரணிகரங்கள் நான்கும்பன் னிரண்டாகி
திறலுறு சூலமொடு பொறைகொ ளாளியும் தேவர்
சிறைவிடு வேல்வடிவில் செழியருள் புரிவேலா !

மறையொடு பேரிதாளம் பதலைகா ளம்பம்பை
அறையுதுந் துபிதடாரி முரசுசல் லாரிமேளம்
முறைமுறை தாரைகோடு மத்தளம் தம்பட்டம்
நிறைவுற நின்றார்ப்ப நின்றருள் வேலவனே !

(குறையிரந்)

பல்லவி

11. பவவினை போக்கிடுவாய் பாலமுருகா ! - நீயே
அவனியிற் கதியென அடியினை தொழுமெந்தன்

அநுபல்லவி

சிவனவனின் புதல்வா செல்வச் சந்நிதிக் கந்தா !
தவமுனி நிழலிருந் தருள்குரு பராஎன்

சரணம்

தவனமாய் நிவேதிக்க எதுவந்தா லுமதை
கவனமாய் நாலாக்கி அதில்மூன்று பங்கினையும்
அவித்ததைக் குவித்துவிட்டு அருங்கத வதைநீக்கி
உவந்திடு கற்பூர ஒளிதர அருள்கந்தா !

அவநெறி வாழ்மருதர் கதிர்காமற் கிடையனாய்
தவநெறி காட்டிவைத்த தண்டமிழ் வடிவேலா !
கவனமா யறுபத்தைந்து ஆலிலையமுது வைத்து
அவனியிற் படைத்திடவே ஆரருள் தருமெந்தாய்.

(பவவினை)

பல்லவி

12. கதியென்று வந்தஎன்னைக் காத்திடையா ! - தலை
விதிதன்னின் வரைவுதனை மாற்றிடையா தேற்றிடையா

அநுபல்லவி

நதிமதி யணிசிவனார் நற்குரு வானவனே !
அதிபதி யெனநின்றே அருளுசந் நிதியானே !

சரணம்

கதிர்கள் நின்றாடும் கவின்தொண்டை மானாற்றில்
புதிர்உள் அருள்வாரிப் பொழிந்திடும் வேலவனே !
எதிர்ஒரு வரில்லா ஏரம்பன் சோதரனே !
உதிர்உன் அருளாலே உனதிரு பாதமே

சதிர்ஆடு மயிலேறிச் சந்நிதி யிருந்து சென்றே
கதிர்காமக் கொடியேற்றம் கண்டிடச் செல்பவனே
கதிர்காமப் பயணத்தின் களைப்பது நீங்கவந்து
உதிர்பயற்றம் துவையல் உவந்துண்ணும் வேலவனே !
(கதியென்று)

பல்லவி

13. தஞ்சமெனத் தாளைச் சரண்புகுந்தேன் முருகா !
அஞ்சலென் றருளாயோ? அபயகரம் நீட்டி

அநுபல்லவி

வஞ்சியர்கள் சூழ வடிவேல் வருமழகை
நெஞ்சகம் நிறைவாக நிகழ்த்திடச் சொன்ன கந்தா

சரணம்

மஞ்சையில் மாதரொடு மகிழ்வுலா வரும்வேளை
வஞ்சகன் தலைகள் கிள்ளி வாரிடக்கண்டு அஞ்சி
கிஞ்சித்தும் கல்வியிலா மூடனென் செய்வனென்றே
கஞ்சமலர் பணிந்த கதிர்காமற் கருளியவா

கெஞ்சியோர் பிராமணனால் செய்யவுந் தரவுகேட்க
அஞ்சிடா தாற்றிடுநீ ஆட்களோ டாக்களாக
பஞ்சின்மெல் லடிநடந்து பத்தாம்நாள் முடிப்பனென்றே
செஞ்சொலி லருள்தந்த செல்வச்சந் நிதியானே ! (தஞ்ச)

பல்லவி

14. நீயாக நீக்கினல்லால் யார் நீக்குவார்? - முருகா ?
ஓயாத அலையாக உளமுறு துயரெல்லாம்

அநுபல்லவி

வாயாரவே வாழ்த்தி வழிபடு மடியார்கள்
தாயாகவே காக்கும் சந்நிதி வேலவனே !

சரணம்

தேயாத ஒளிகாலும் திருக்கரு வறைகாண
பாயாறு நீராடிப் பணியுமோர் சந்நியாசி
போய்மீழ கதிர்காமர் பொற்பதம் பணிமுறையை
சேயோனின் சந்நிதியில் செயஅருள் புரிவேலா !

போயாறு முகன்தாளைப் புகலென்று சரண்புகுந்தால்
ஏயாது அருள்வையென்றார் எழிலிணை கதியென்றேன்
தீயாக வாட்டுவினை தீய்ந்துநிம் மதிகாண
நீயேறு மயில்மீது நீணிலத் தோடிவந்தே (நீயாக)

பல்லவி

15. சரணடைந்தார்க் கருளும் சந்நிதிக் கந்தா !
அரவணை அம்பிகையால் அறுமுகத்தோ டெழுந்து

அநுபல்லவி

பரவடியார் வாழ்வு பாருயர உகந்தே
விரவருள் தருகந்தா வேண்டுதல் அறியாயோ?

சரணம்

பிரணவப் பொருள்கேட்கப் பெருங்குரு வாயமர்ந்து
அரனவன் செவிமீது அதற்குரை செய்தவனே !
சுரர்வீர வாகுக்கருள் சுந்தரக் கதிர்வேலா !
வரமது வாரிநல்ல வாழ்வினைத் தாராயோ?

மரமெலாம் முறித்தழித்து மாமதம் சிகண்டி முன்னே
வரஅதை வெற்றிலையால் வதைத்திட வெள்ளிப்பட்டே
நரவடி வாகவரு கந்தருவன் பூவரசு
மரநிழல் தவம்புரிய மாமுத்தி தந்தவனே ! (சரணை)

பல்லவி

16. சேயென்னைக் காத்திடையா ! செல்வவடிவேலா ! நோயால்
சாய்வுற்று விழும்போது சந்நிதியானே வந்துன்

அநுபல்லவி

காய்வுற்றுக் காலனுயிர் கவர்ந்திட வரும்போது
பாய்வெள்ளி வேலோடு பாவியென் முன்வந்தே

சரணம்

பாயுற்று நீர்பெருக பரனுன் புகழ்தன்னை
வாய்மிட்டுப் பாடஅருண கிரிதனுக் கருளியவா !
ஆய்வுக்கு அரியவுந்தன் அருட்திருப் புகழ்தந்தேன்
தோயுற்றுன் அருள்மழையில் துலங்கிட மனமிரங்கி

பாய்கட்டிக் கடலோடும் பரம்பரைக் கதிர்காமர்
வாய்கட்டிப் பூசைசெய வாஞ்சையோ டருளியவா
தாய்சக்தி வேல்வடிவில் தண்ணருள் தருபவனே !
நோய்விட்டுப் போகநூலும் நீறுந்தந் தாள்பவனே !

(சேயென்னை)

பல்லவி

17. ஞாலமா வாழ்வுவர நயந்தருள் தாருமையா !
சீலமா மறைதந்த சிவகுரு வானவனே !

அநுபல்லவி

கோலமா மயில்மீது குறவள்ளி தெய்வியொடு
சோலைமா வெழிலான சுழிமுகத் தமர்வேலா

சரணம்

வேலையே வெறித்துநோக்கி விரித்திரு தலையாட்டி
சாலவே சிரித்துப் பேசித் தம்கரம் தட்டிப்பாடி
தூலமே நடுநடுங்கத் துள்ளித் துள்ளி ஆடி
ஓலமா யரற்றன்பர் உளத்துறை வேலவனே !

ஆலமாசோலைநடு அழகொளிர் மருதமரம்
கோலமா மஞ்சையொடு குயில்கிளி யிசைபாட
மூலமாயிருந் தெவர்க்கும் முத்திதனை நல்கும்
பாலமா யருள்வாரிப் பரிந்தருள் புரிமுருகா ! (ஞாலமா)

பல்லவி

18. அள்ளியருள் எனக்குத் தாராயோ? - முருகா?
துள்ளியலை புரளும் தொண்டைமா னாற்றுவாசா !

அநுபல்லவி

வள்ளிகுஞ்சரி நாதா ! வடிவேல் முருகேசா !
தெள்ளுதமிழ் கேட்டுன் திருவுள மிரங்கியே

சரணம்

அள்ளுகாசு போட்டுக் குழந்தையை விற்றுவாங்கி
துள்ளிடு கிழவிக்குத் தூயவுன் பால்பருக்கி
பிள்ளைக்கு மொட்டைபோட்டு தென்னம் பிள்ளைகொடுத்து
உள்ளூறு அன்போடு உனைத்தொழ அருள்வேலா !

துள்ளியே வெறியாடி துடியொடு பறைமுழங்க
உள்ளிருந் துருவேறி உருவிற்சந் நதமாடி
தெள்ளிய உளத்தோடு தெய்வத்தன்மை நாடி
வள்ளல் விபூதிதன்னை வாயிலிட் டடக்குவேலா !

(அள்ளி)

பல்லவி

19. சித்தம திரங்காயோ? செல்வச்சந்நிதிக் கந்தா !
தத்துவக் கடல்நீந்தித் தகைமைசால் முத்திபெற

அநுபல்லவி

வித்தகர்க் குபதேசம் விளம்பிய சாமிநாதா !
முத்தனே கருணைவாரு மூவிருமுகத்து வேலா !

சரணம்

நத்திடு கதிர்காமம் நாடிவிழாக் கண்டே
சித்திதரும் தீர்த்தத் திருவிழா முடிந்தபின்னே
வித்தக வேல்வடிவை விருப்புடன் அனுப்பிவைக்க
பித்தொடு வங்திங்கு பேரருள் புரிவேலா !

நித்தமு மாறிறங்கி நேயமொடு மூழ்கி
பத்தியுட னழகார் பதமதனை வேண்ட
புத்திர பௌத்திரர்க்கும் புண்ணிய வாழ்வருளி
முத்தியும் தந்தருளும் மூலமே ஷண்முகனே ! (சித்தம)

பல்லவி

20. பொன்னனை வாழ்வுதனை பூதலத் தருள்வாய்
சென்னிமேற் கரங்குவித்துச் சேவிக்கும் எந்தனுக்கே

அநுபல்லவி

நன்னலந் தருந்தீர்த்த நதியினில் நீராடி
குன்றெறிந்த வேலா ! குமரா ! என்றழு மெனக்கு

சரணம்

உன்தனை நனியெள்ளி உரைத்திடு பிரமன்தன்
சென்னியைக் கிள்ளிடவே செந்தூர்த்தலம்சென்றே
அன்னசன் னிதிவாரி அநுதினமும் மூழ்கி
பொன்னொளிர் கோபுரமாய்ப் பொலிந்திட அருளியவர் !

தன்னுற வதுஓடி உன்னுற வதுநாடி
பன்மட முறைவோர்க்கும் சந்நிதி வருவோர்க்கும்
அன்னம தீந்துவக்கும் அன்னதானக் கந்தா !
இன்னமும் தாமதமேன் இரட்சித்துச் சண்முகனே !

(பொன்னனை)

பல்லவி

21. பக்குவ வழிதன்னைப் பாரினிற்தா - முருகா !
மிக்குயர் பேரின்பம் மிளிர்வாழ்வு நான்காணப்

அநுபல்லவி

எக்கணமும் மறவா தேற்றினேன் நின்பாதம்
அக்கறையோ டணைத்தென் ஆன்மா ஈடேறப்

சரணம்

பக்கலுள் ஆடவரும் பக்திகொள் பாவையரும்
செக்கலிலே எழுந்து செழுபுனல் நீராடி
திக்குள பூவெடுத்தும் தீபவகை கொடுத்தும்
சிக்கெனத் தொழவருளும் தெய்வமே திருக்குமரா !

திக்கெலாம் சிறக்கக் காக்கும் செல்வச்சந் நிதிக்கந்தா !
குக்குடக் கொடியேந்தும் கோலாகலா ! வேலா !
துக்கசாக ரத்தழுந்தும் துயரற அருள்வாரி
தக்கதோர் தருணமதிற் தமியனாம் எனைக்காத்தே.

(பக்குவ)

பல்லவி (காவடிச் சிந்து)

22. மூவடியா லுலகளந்த மாவடியான் மருகனவன்
பூவடியே பாடிநாங்கள் ஆடவே - வேண்டி
நோவடியா லாடிவந்தோம் காவடி

அநுபல்லவி

கூவடியார் துயரகற்று கோவடியா மிதுவெனவே
தாவடியால் சாவடிநின் றாடியே - நாமப்
பாவடியால் தேடிவந்தோம் சேவடி

சரணம்

வாவடிவேல் கொண்டுனது நாவடியா லுன்நாமம்
தூவடியார் நீர்வடியா வாழவே - வந்துன்
சேவடியே காவடியாய்த் தாழவே

நீவடிவே லெடுத்தவந்து நோவடியா ரிடரகன்று
போய்வடிமா ரேறடியே தாவையா - தலையில்
சீரடியே வைத்துனைக் காவையா
ஆர்வமொடு வார்கழற்கு அந்தரமார் காவடியும்
தேர்உருவக் காவடியும் சூடுவார் - தேகம்
தூக்குருவக் காவடியும் ஆடுவார்

பார்மகளிர் வார்தலையில் பால்நிறையு செம்புடனே
கார்மயிலின் வாகனனாம் உன்தனின் - வண்ணக்
காலடியே சரணமென்று கூடுவார். (மூவடி)

பல்லவி

23. இப்புவி காவாயோ எழில்முருகா ! - நாளும்
கைப்போது மலர்தூவிக் காலிணை தொழுமென்னை

அநுபல்லவி

துப்பிதழ் குறவள்ளி தெய்விமகிழ் நாதா !
இப்பெரும் புவியீன்ற இறைவிசக்தி வேலா !

சரணம்

செப்புலகம் படைத்தும் காத்துநின்றே அழித்தும்
இப்பிர பங்சவுரு எய்திய விஸ்வரூபா !
தப்பிலாப் பூவெடுத்துத் தயவுடன் பணிசெய்வார்
ஒப்பிலா வாழ்வுபெற அருள்தரு முருகோனே !

ஒப்பரும் கார்த்திகையில் ஒளிர்திங்கள் முழுவதுமே
மெய்ப்படு மாவிளக்கும் ஆவின்நெய் விளக்கும் வைத்து
செப்புதற் கரியசெல்வச் சந்நிதி தொழுது வந்தால்
முப்புவனம் ஆளஅருள் மூலமே சுப்பிரமண்யா !
(இப்புவி)

பல்லவி

24. நின்றழு மெனக்கிரங்கி நீடருள் நல்காயோ?
என்றனை யாளவுன இணையடி துணையென்றே

அநுபல்லவி

பன்மன இருளகற்றும் பானுவே கௌரிமைந்தா !
பன்னிரு விழிமலர்ந்தே பரிவுடன் பார்த்தி டென்று

சரணம்

பொன்பொருள் இச்சையினால் பூதலத்தே யுழன்று
கொன்றையும் கடம்புமணி குமரனுனை மறந்தேன்
கன்றிய பவம்நீங்கி கடையவன் நானுந்தன்
பொன்னடி பெறுமாறு பூங்கழலிணை வேண்டி

தன்னகக் கமலமுள சந்நிதி வீதிதோறும
சென்னியா றுடையஐயா ! சேவடி துணையென்றே
அன்பினாற் பிணிப்புண்டு ஆடியும் பாடியும்
தன்னிலை மறந்தழுவார்க் கருள்வேள் உன்முன்னே (நின்றழு)

பல்லவி

25. நேரில்வந் தருளவென்ன தாமதமோ? - முருகா ! - சித்ரத்
தேரினில் ஏறிவரும் செல்வச் சந்நிதிக் கந்தா !

அநுபல்லவி

வேரென விரிஞான வெள்ளிவடி வேலோடு
வாரணி மயில்மீது வள்ளிகுஞ் சரியருடன்

சரணம்

தேரினில் வடம்பிடித்து தேவனுன் இடம்பிடிக்க
வாரமாய் வருமடியார் வல்லினை மாய்ப்பவனே !
வீரியபல் வேல்வடிவில் வீற்றிருந் தருள்வேலா !
வாரியில் வடந்தோன்ற வாரியருள் புரிநாதா !

பாரினின் பன்மலரால் பதவிசா யலங்கரித்து
காரிகை வள்ளிமனை சென்றாரா தனைமுடித்து
பேரிகை முழங்கஅன்பர் பிரியமோ டார்ப்பரிக்க
கோரிய வரங்களெல்லாம் கொடுத்திட வருகந்தா !

(நேரில்)

பல்லவி

26. நீராட வந்தாயோ? நெடுவேலா ! - வண்ணத்
தேரேறி வந்தகளை தீர்ந்திடக் கங்கையிலே

அநுபல்லவி

சீராரும் தெப்போலைத் திருத்தண்டிகை யமர்ந்து
நீரோட நின்றழுவார் நிம்மதி புவிபெறவே

சரணம்

தீராத வினையெல்லாம் தீர்ந்திடவுன் தீர்த்த
நீராடு மடியருக்கு நீணிலத் தருள்பவனே !
ஆராத காதலொடு ஆறிரு பெண்கள்நின்றே
ஆராத்தி தரவந்தே அருளுசந் நிதியானே

கோவாரக் காவடிகள் பாற்குடம் கரகங்கள்
நாவாரப் புகழ்பாடி நர்த்தனம் ஆடிவர
தேவார இசைபாடும் திருவடி யாரோடு
மாவார மானவுன மாணிக்க கங்கையிலே. (நீராட)

பல்லவி

27. இவணுறு துயரம் அறியாயோ? - முருகா !
கவணெறி குறவள்ளி குஞ்சரியின் கணவா !

அநுபல்லவி

தவமுனி கனிவேண்டி தண்மயி லேறியிந்த
அவனியை வலம்வந்த ஆறுமுகா ! குகா !

சரணம்

அவநெறி வழியேகி அடியிணை துதியாது
அவமதி செட்டிகுலம் அழிவுறச் செய்தவனே !
பவமறுத் தடியாரைப் பதமலர்க் கீழ்வைத்து
நவமுறு மின்பமெலாம் நண்ணிடச் செய்குமரா !
உவமையில் கதிர்காமம் உவப்புடன் வரமறுத்து
கவலைகொள் கதிர்காமர் கண்ணைமூடி விழிக்க
கவினுறு மலைசேர்த்துக் கற்பகனாரை நோக்கி
குவிவடி வேலொன்றைக் கொடுத்திடக் கூறியவா !

(இவணுறு)

பல்லவி

28. பல்லோரும் துதிசெய்யும் பாதம்புயம் பணிந்தேன்
நல்வாழ்வு தருவாய் ஐயா ! முருகையா!

அநுபல்லவி

கல்லோடைப் பதிவாழும் கார்த்திகேயா ! குமரா !
சல்லாப லோலனே ! சண்முக நாதனே !

சரணம்

சொல்லாரும் முதற்பூசை காணன்பர் மகளான
நல்லாளின் நோயகல நல்லருள் புரிந்தவனே !
ஒல்லாந்தர்க் கருட்தீரம் உணர்த்திய கதிரேசா !
பொல்லாத வினைதீரப் பூங்கழல் துணையென்றே.

அல்லாடித் தள்ளாடி அடியிணை கதியென்பார்
உல்லாச வாழ்வுபெற உவந்தருள் சிவபாலா !
பொல்லாத சூரர்குலம் பொடிபட விடுவேலா!
அல்லாத பேர்க்குதவும் அன்னதானக் கந்தா !

(பல்லோரும்)

பல்லவி

29) அடியிணை உறங்கிடும் அருளினைத்தா - முருகா!
கடிகமழ் பூஞ்சோலை மருவுசந் நிதியானே !

அநுபல்லவி

கொடிவள்ளி முளைகாட்டிக் கொடியேற அருள்வேலா!
அடியருக் கினியானே ! அரிதிரு முருகோனே !

சரணம்

பிடியத னுருவுமை கொளவரு பிள்ளையை
கடிமண மதுபெறக் கரியுரு கொளவைத்தாய்
விடிவது வேண்டியே வியனடி தொழத்துயர்கள்
கடிதினி லகன்றிடக் கருணைசெய் கந்தா ! உன்

இடியெனப் பொருசூரர் வதைபட வேல்விடுத்தாய்
கொடியிடைக் குஞ்சரியைக் கொஞ்சிடு மணமுடித்தாய்
மிடியொடு வருவோரை மிளிரச்செய் யருள்கொடுத்தாய்
நெடியவேல் முருகாவுன் நிழலினில் இன்போடு

(அடியிணை)

பல்லவி

30) செந்தமிழிற் பாடிச் சேவிக்கும் வரந்தா - செல்வச்
சந்நிதிக் கந்தனே சண்முகனே ! குகனே !

அநுபல்லவி

சிந்தைவைத் துன்பாதம் சேவித்தேன் திருமுருகா!
வந்துளம் இருந்தென்னை வாழ்த்திடுவாய் முருகா !

சரணம்

சந்தத் திருப்புகழைத் தரருண கிரிபாதம்
சந்ததம் வாழஅருள் புரியுசண் முகநாதா !
சந்நிதி தனில் வாழும் சக்திவேல் தனைப்பாடி
கந்தமா தனம்சேரும் கதியினை நான்பெறவே .

தந்தையும் தாயுமாகித் தரணிநின் றருள்வேலா!
எந்தையே பல்லுயிர்க்கும் இறைவனே ! குருபரனே !
சுந்தர மறைபோற்றும் சுடர்வடி வேலவனே!
முந்தைசெய் வினையோடி முருகனுன் பதம்பெறவே .

(செந்தமிழ்)

பல்லவி

31) தாட்துணைக் கமலவீடு தாராயோ? - முருகா !
பாட்டுரைத் துனக்களித்த பாவியேன் நானுமுய்ய

அநுபல்லவி

வீட்டுறு வாழ்வருள வியன்செல்வச் சந்நிதியின்
மாட்டிருந் தனைத்துயிர்க்கும் மகிழ்வினைத் தருமுருகா !

சரணம்

ஆட்டுரு ஏறிச்சூரன் அகந்தையை அழித்திடவே
தோட்டிரு முண்டமெலாம் சிதறிடச் செய்தவனே !
ஈட்டிரு வினையேக இணையடியே பணிந்தேன்
மூட்டிடு வினைதீர்த்து முத்தியை நல்கியுந்தன்

வாட்பெரும் கண்மாதர் வலமிட மாய்வந்தே
கேட்டிடு வரம்நல்கிக் கிளையோடு வாழவைப்போய்!
ஆட்கொண்டு அருளாயோ? ஐயனே ! குமரேசா!
மீட்டொரு பிறவிவாரா மேனிலைதந் துனது

(தாட்துணை)

பல்லவி (காவடிச் சிந்து)

32) முந்துபுகழ் சந்நிதியில் நின்றுஅருள் கந்தனுன
சிந்துதனைப் புந்திவைத் தாடினோம் - ஐயா !
சிந்தைவைத் திரங்கிடென்று நாடினோம்.

அநுபல்லவி

எந்தமது சிந்தையதில் நின்றுஅறு துன்பமறுந்
தின்புறுநல் வாழ்வுவரச் செய்யையா! - துன்பம்
வெந்துவிழச் சிந்தையது வையையா!

சரணம்

தெள்ளுதமிழ் பாடியிணை முள்ளுமிதிக் காவடியும்
உள்ளுறவே யணிந்துநின் றாடினோம் - இறை
உள்ளுணர்வால் உருவேறி ஓடினோம்

புள்ளுருவக் காவடியும் புஷ்பஇனக் காவடியும்
பிள்ளையுருக் காவடியும் ஆடினோம் - அன்பாற்
பிரதட்டைக் காவடியும் நாடினோம்.

விதிர்விதிர்க்க மேனியெங்கும் ஜொலிஜொலிக்கும் வேல்வடிவை
சிலிர்சிலிர்க்கக் குத்திநின் றாடினோம் - அந்த
வேற்காவடி யேயெடுத் தாடினோம்.

கொதிகொதிக்கும் வெய்யிலிலும் பதைபதைக்கச் செடிலணிந்து
நடுநடுங்கச் சந்நிதிநின் றாடியே - அழகு
செடிற் காவடியும் எடுத் தாடினோம்.

(முந்துபுகழ் ) (91)

பல்லவி

33) சந்நதியில் நின்றாளும் வேலவா - எம்மைச்
சந்ததமும் காத்துநின்று ஆளவா

அநுபல்லவி

உந்தன்புகழ் பாடி வந்தோம் கேளையா - நாங்கள்
நிம்மதியாய் வாழ்வதெந்த நாளையா

சரணம்

வீதியெல்லாம் தூக்கி வந்தோம் காவடி - உந்தன் - நாளும்
வேண்டும்வரம் தந்துஎம்மை ஆதரி
நாதியற்று நாடுகிறோம் சேவடி - ஐயா
நம்தலையில் வைத்திடுந்தன் சீரடி.

செந்தமிழில் பாடிவந்தோம் சீரையா - உந்தன்
பன்னிரண்டு விழிதிறந்து பாரையா
நந்தமக்கு உம்மைவிட்டால் யாரையா? - நல்ல
வாழ்வுதனைப் பூமிதனிற் சேரையா.

(சந்நிதி)

பல்லவி

34) சந்நிதி வாழும் சக்திமகன் - பாதம்
சந்ததம் பாடிடுவோம் பக்தியுடன்

அநுபல்லவி

வந்தெமைக் காத்திடுவான் சக்தியுடன் - வாழ்வில்
தந்தெமக் கேற்றிடுவான் சித்தியுடன்

(செல்வச்)

சரணம்

ஆற்றங்கரை அமர்ந்து அருள்பொழிவான் - பிறவி
ஆற்றைக் கடக்கவழி நனியருள்வான்
நீற்றினால் நோய்யாவுந் தீர்த்து வைப்பான் - திரு - வாழ்வின்
ஈற்றிலும் உயர்பதவி எமக்களிப்பான்

(செல்வச்)

தந்தைக்கு மந்திரத்தைச் சாற்றி நின்றான் - அன்பர்
சிந்தையின் துயரமெலாம் மாற்றி வைத்தான்
விந்தைகள் பல அருளால் காட்டிநின்றான் - எமக்கு
சந்ததம் வாழ்விலின்பம் கூட்டிநின்றான்.

(செல்வச்)

பல்லவி

35) அமிழ்தான வாழ்வருள்வான் ஐயன்முருகன் ! - செந்
தமிழ்மாலை பாடியவன் சேவடியில் சூடெனக்கும்

அநுபல்லவி

உமிழ்வேலன் என்வாழ்வு (அருளை) உதவாமற் போகாமல்
தமியேனும் அவன்பாதத் தண்ணிழலில் நிதமிருக்கும்

சரணம்

தமிழிசைக் குருகிடுவான் தண்டமிழ்க் குமரனென்றே
தமிழ்முனிக் கருளிறைக்கு தீந்தமிழ் மாலை தந்தேன்
குமிழ்நிகர் வாழ்வுநிறை குவலயம் பிறவாதே
இமிழ்திரைக் கடல்வானம் இருந்திடு வரமருளி

நிமிர்குழல் மடவாரோ டிருந்தருள் தனைவாரும்
அமிழ்தெனும் சந்நிதிவாழ் ஐயனுன் சரிதம் சொல்
சிமிழ்அனை கீர்த்தனைகள் செவிபடப் படிப்போர்க்கு
உமிழும்கட் தீயதனால் உறுகுற்றம் மூன்றகற்றி.
(அமிழ்தான)

பல்லவி (மங்களம்)

36) சன்நிதி முருகனுக்கு ஜெயமங்களம் - வாழப்
பன்நிதி அருளினர்க்கு சுபமங்களம்

அநுபல்லவி

பொன்நிதி வழங்குனர்க்கு பொலிமங்களம் - அள்ளி
நந்நிதி கொடுத்தவர்க்கும் நனிமங்களம் (செல்வச்)

சரணம்

பன்னிரு தடந்தோட்கு சொன்முறை மங்களம்
என்நிதி யெனுமாறு முகவர்க்கும் மங்களம்
கொன்னுறு வடிவேற்கும் கோடிமுறை மங்களம்
சொன்நிதி வெல்கொடிகுக் குடத்திற்கும் மங்களம்

உன்நிதி மஞ்சைக்கும் தெய்விக்கும் மங்களம்
மன்நிதி யெனும்மாது வள்ளிக்கும் மங்களம்
சன்னிதி யாச்சிரம சுவாமிக்கும் மங்களம்
பன்னிரு மாலைபாடு பக்தருக்கும் மங்களம்
(செல்வச்) (93)

ஆக்கம்:
கவிஞர் இராசையா குகதாசன்
நாயன்மார்கட்டு

# தொண்டைமானாறு சந்நிதி வெண்பா

காப்பு

பணிபணி ஈழப் பதியெல்லாம் என்று
பணிக்கும் செகராசன் எங்கோன் - இணுவையான்
சொல்லைத் துதித்தேற்றேன்! தூர்ப்பான் கவிமாரி
வெல்செல்வச் சந்நிதியான் மீது!

நூல்

சந்நிதியான் எங்கள் சரவணனின் பூந்தாளை
உன்னுதியென் நெஞ்சே உறங்காமல்! உன்னுவையேல்
அன்றாடம் உன்னை அணுகும் இடரெல்லாம்
கொன்றழகன் காப்பான் குளிர்ந்து!

துள்ளுமீன் தொண்டைமான் ஆற்றங் கரைமீது
வெள்ளிதொறும் பக்தி விழாப்பொலிய - புள்ளிமயில்
மீதுலவும் சந்நிதியான் மெய்யடிகள் எண்ணுநெஞ்சே!
ஆதிமலம் யாவும் அறும்!

கூறாய்க் கிரௌஞ்சங் குலைத்தான் குளிர்தென்னை
நூறாய் நிரைத்து நுகர்வோன், நின் - மாறாப்
பிணிதீர்க்க வேண்டுமெனில் பேசா தவன்தாள்
கணந்தோறும் நெஞ்சே கருது!

ஆலிலை யான் மருகன் அன்னதானச் சந்நிதியான்
ஆலிலையில் வேண்டி அமுதுண்போன் - காலடிக்கே
நின்மைந்தர் நேராய்ச் சரணடைய வேண்டுமெனில்
என்நெஞ்சே நீ முதற்கண் ஏகு!

வாய்கட்டிப் பூசைசெய்ய வாஞ்சையுறுஞ் சந்நிதியான்
தாய்மனத்தன்! நெஞ்சே தனித்திருந்து - பேய், பிச்சு,
சத்துராதி தொல்லை தமைநீக் கெனவேண்டில்
நித்தமுனக் கின்பம் நினை!

மடங்கள் மலிசூழல் மைந்தன் மனமும்
உடம்பும் உருக்காக்கி மேலும் - அடங்காச்
செயலூக்கம் ஈவது திண்ணம் ! அவன்கால்
மயமாகு நெஞ்சே மகிழ்ந்து !

பின்னே அலைக்குளிர்ச்சி, பேணும் நிழற்குளிர்ச்சி
முன்னும்முப் பக்கலிலும் மொய்பதிவாழ் - சந்நிதியான்
தன்னடி எண்ணுநெஞ்சே சந்ததம் முன்வினையின்
இன்னலற வேண்டும் எனின் !

வல்லைவெளி ஓர்பால் வடலிபனை ஓரிருபால்
நெல்வயல்கள் ஓர்பால் நிறைந்தேத்தும் - இல்லையெனாச்
சந்நிதியான் , செல்வம் தழைப்பிக்க, என்நெஞ்சே
உன்னுகஅன் னான்தாள் உவந்து !

ஆலிலையிற் புற்கை அருமருந்தால் நோய்தீர்க்கும்
வேலனருட் சந்நிதியான் மெய்யருளே - தாலி
மணப்பே நடைவிக்க வல்லசெல்வம் - நெஞ்சே
உணர்ந்தன்னான் தாளே உறு !

சந்நிதியான் ஆச்சிரமச் சைவத் தமிழ்ப்பணியால்
இன்னருள்கூர் சந்நிதியான் எண்ணிடிலே - என்நெஞ்சே
இங்கே இடர்தீரும் எம்வாழ்வு சாந்தியுறும்
அங்குறுவோம் முத்தி !! அறி.

ஆக்கம் பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம்

உ
சிவமயம்

ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் பேரில்

# பரவசக் கண்ணிகள்

விநாயகர் காப்பு

ஐந்து கரத்தோனே ஆனை முகத்தோனே
தொந்தி வயிற்றோனே தூமணியே - சந்ததமும்
போற்றுமெங்கள் சந்நிதியான் பேரில்யான் பாடுகண்ணிக்
கேற்றம் அளிப்பாய் இனிது.

வரலாறு

முருகா நீ காட்சி கொடுத்துக்
கதிர்காமம் கூட்டிச் சென்று
மௌன பூசை முறை காட்டிப்
பூசைசெய்ய வேல் கொடுக்கக்
கதிர்காமர் மனம் கொண்டு
அமைத்த இக்கோவிலினை
அவர் வழிவந்தோர் இன்று வரை
பணி தொடர்வார் நன்று.

வேல் முருகா மால் மருகா சந்நிதி முருகா - எம்
வினை தீர்க்கும் வேலவனே சந்நிதி முருகா

தொண்டை மான் ஆற்றருகே சந்நிதி முருகா - எம்
தொண்டர் பிணி தீர்க்க வந்தாய் சந்நிதி - முருகா

ஓம் என்ற மணியோசை சந்நிதி முருகா - என்றும்
ஒலிக்கும் உந்தன் கோவிலிலே சந்நிதி முருகா

அரோகரா சத்த மெல்லாம் சந்நிதி முருகா - உன்
ஆலயத்தில் கேட்குதையா சந்நிதி முருகா

பூவரச மரத்தடியே சந்நிதி முருகா - உனக்குப்
பூசை செய்தார் தேவரெல்லாம் சந்நிதி முருகா

வியாழனின் சாபத்தால் சந்நிதி முருகா - அன்று
வேழமானான் கந்தருவன் சந்நிதி முருகா

கதிர் காமக் காட்டினிலே சந்நிதி முருகா - வேழம்
சிகண்டியைத் தாக்க வரச் சந்நிதி முருகா

வெற்றிலையை வீசிடவே சந்நிதி முருகா - அது
வேலாகித் தாக்கியதாம் சந்நிதி முருகா

வெள்ளிலை பட்டதினால் சந்நிதி முருகா - வேழம்
ஐராவசு ஆனதையா சந்நிதி முருகா

ஐராவசு முனிவராகிச் சந்நிதி முருகா - வல்லி
ஆற்றங்கரை சமாதியானார் சந்நிதி முருகா

அவர் அடைந்த சமாதியிலே சந்நிதி முருகா - நீ
அமர்ந்தாயே வேலுருவில் சந்நிதி முருகா

வேழம் முனியானதனால் சந்நிதி முருகா - வேலில்
வெற்றிலையை வைத்தனரே சந்நிதி முருகா

ஆறுபடை வீடு இருந்தும் சந்நிதி முருகா - நீ
ஆற்றங்கரை வந்ததேனோ சந்நிதி முருகா

ஆடு மேய்க்கும் பாலகனாய்ச் சந்நிதி முருகா - வந்து
ஆண்டு கொண்டாய் கதிர்காமரைச் சந்நிதி முருகா

காட்சி கொடுத்தும் அல்லோ சந்நிதி முருகா - அவரைக்
கதிர்காமம் கூட்டிச் சென்றாய் சந்நிதி முருகா

பூசைமுறை காட்டியல்லோ சந்நிதி முருகா - மௌன
பூசை செய்ய வேல் கொடுத்தாய் சந்நிதி முருகா

பூவரச மரத்தடியே சந்நிதி முருகா - அவரைப்
பூசை செய்யுமாறு சொன்னாய் சந்நிதி முருகா

ஆலய விருட்சமாகச் சந்நிதி முருகா - இன்றும்
அந்த மரம் உள்ளதையா சந்நிதி முருகா

கதிர்காமரும் நீயுமல்லோ சந்நிதி முருகா - அமர்ந்து
கதைத்த திண்ணை இன்றும் உண்டு சந்நிதி முருகா

இதைக்கடக்க வேண்டாம் என்று சந்நிதி முருகா - உனக்கு
இடப்பக்க வாசல் தந்தாய் சந்நிதி முருகா

கால் பட்ட இடமெல்லோ சந்நிதி முருகா - இன்றும்
கல்லோலோடையில் இருக்குதையா சந்நிதி முருகா

பாதம்பட்ட இடமெல்லோ சந்நிதி முருகா - இன்றும்
பாறையிலே தெரியுதையா சந்நிதி முருகா

பூசகரின் கால் தொழவே சந்நிதி முருகா - நீ
போட்டிடுவாய் திருநீறு சந்நிதி முருகா

ஆலம் இலைதனிலே சந்நிதி முருகா - நீ
அமுது படை என்றாயே சந்நிதி முருகா

அறுபத்து மூவருக்கும் சந்நிதி முருகா - நீ
அன்னம் படைக்க வைத்தாய் சந்நிதி முருகா

படைத்த அமுதையெல்லாம் சந்நிதி முருகா - நீ
பக்தருக்கு வழங்கு என்றாய் சந்நிதி முருகா

மாறாத நோய்கள் எல்லாம் சந்நிதி முருகா - இம்
மருந்துண்ண மாறிவிடும் சந்நிதி முருகா

தீராத வினைகளெல்லாம் சந்நிதி முருகா - உன்
திரு நீற்றால் மாறி விடும் சந்நிதி முருகா

கர்ம வினை போக்கச் சந்நிதி முருகா - இங்கு
வேற்கரணி தீர்த்தமுண்டு சந்நிதி முருகா

நாம் பட்ட துன்பமெல்லாம் சந்நிதி முருகா - உன்
நரல் கட்டப் போதுமையா சந்நிதி முருகா

சரவணனே சண்முகனே சந்நிதி முருகா - எம்
சங்கடங்கள் போக்கிடுவாய் சந்நிதி முருகா

கதிர்காமம் போவதன் முன் சந்நிதி முருகா - உனைக்
கண்டு செல்வார் பக்தரெல்லாம் சந்நிதி முருகா

கதிர மலை காணவெல்லோ சந்நிதி முருகா - பக்தர்
கால் நடையாய்ச் செல்வரய்யா சந்நிதி முருகா

காட்டுவழிப் பயணம்எல்லாம் சந்நிதி முருகா - நீ
காட்சிதந்து காத்து வந்தாய் சந்நிதி முருகா

திருமணங்கள் பலவற்றைச் சந்நிதி முருகா - உன்
திருத்தலத்தில் நடத்தி வைப்பாய் சந்நிதி முருகா

அர்ச்சகரைப் போல வெல்லோ சந்நிதி முருகா - வந்து
அட்சதையும் போட்டிடுவாய் சந்நிதி முருகா

பிள்ளைப்பே றற்றவர்க்குச் சந்நிதி முருகா - நீ
பிள்ளைவர மும்கொடுப்பாய் சந்நிதி முருகா

அன்னப்பால் உண்போர்க்குச் சந்நிதி முருகா - உன்
அமுதை வழங்கிடுவாய் சந்நிதி முருகா

உனக்கடிமை யாகவெல்லோ சந்நிதி முருகா - பிள்ளை
விற்போரிடம் வேண்டிடுவாய் சந்நிதி முருகா

கேட்பவர்க்குக் கேட்டவரம் சந்நிதி முருகா - நீ
கேட்டபடி தந்திடுவாய் சந்நிதி முருகா

நேர்த்தி எல்லாம் நிறைவு பெற்றோர் சந்நிதி முருகா - உனக்குப்
பூர்த்தி செய்வார் நேர்த்திக்கடன் சந்நிதி முருகா

அருள்பெற்ற அடியார்எல்லாம் சந்நிதி முருகா - உனக்கு
அன்னதானம் அளித்திடுவார் சந்நிதி முருகா

காவடிகள் ஆட்டத்திலே சந்நிதி முருகா - நீயும்
கலந்து நின்றே ஆடுகிறாய் சந்நிதி முருகா

ஆட்டக்கா வடிகள்எல்லாம் சந்நிதி முருகா - இங்கு
அலகு குத்தித் தான்எடுப்பார் சந்நிதி முருகா

தூக்குக்கா வடிகளோடு சந்நிதி முருகா - உனக்குத்
துலாக்கா வடிகளுமாம் சந்நிதி முருகா

கரகமுடன் பாற்செம்பும் சந்நிதி முருகா - உனக்குக்
கலையோடு தான்எடுப்பர் சந்நிதி முருகா

கற்பூரச் சட்டியிலே சந்நிதி முருகா - உந்தன்
கருணைஒளி தெரியுதையா சந்நிதி முருகா

தீ மிதிப்போர் காட்சியிலே சந்நிதி முருகா - உன்
திருக்கோலம் தெரியுதையா சந்நிதி முருகா

அடியழித்துப் புரண்டுருள் வோர் சந்நிதி முருகா - உன்
ஆலயத்தில் ஆயிரம் பேர் சந்நிதி முருகா

பூவரச மரத்தடியே சந்நிதி முருகா - உன்
புகழ் பாடும் அடியர் கூட்டம் சந்நிதி முருகா

பாடுவோர் மத்தியிலே சந்நிதி முருகா - தாளம்
போடுவார் ஆக நிற்பாய் சந்நிதி முருகா

வண்ண மயில் வாகனனே சந்நிதி முருகா - நீ
அன்ன தானக் கந்தனையா சந்நிதி முருகா

அன்ன தானம் அவிஎன்று சந்நிதி முருகா - நீ
சொப்பனத்தில் சொல்லிடுவாய் சந்நிதி முருகா

அன்னதான மடங்களிலே சந்நிதி முருகா - நீ
அன்ன முண்ண வந்திடுவாய் சந்நிதி முருகா

அள்ள அள்ளக்குறையாது சந்நிதி முருகா - இங்கு
அன்னம் பெருகும் ஐயா சந்நிதி முருகா

உண்டு பசியாறிய பின் சந்நிதி முருகா - கட்டிக்
கொண்டு மெல்லோ போகின்றார் சந்நிதி முருகா

கொண்டு போன இடங்களெல்லாம் சந்நிதி முருகா - செல்வம்
கொழிக்கு தையா உன் பேரால் சந்நிதி முருகா

ஆறுமுக வேலவனே சந்நிதி முருகா - எமக்கு
ஆறுதலைத் தந்திடுவாய் சந்நிதி முருகா

புள்ளிமான்கள் மயில்களுண்டு சந்நிதி முருகா - பூஞ்
சோலையுண்டு சுனையுமுண்டு சந்நிதி முருகா

ஆனிப் பொங்கல் விளக் கெரிக்கச் சந்நிதி முருகா - உனக்கு
ஆழ்கடலில் நீர் எடுப்பர் சந்நிதி முருகா

கதிர்காமப் பயணம் அன்று சந்நிதி முருகா - உனக்குக்
கட்டிடுவர் உழுத்தம் பிட்டு சந்நிதி முருகா

அபிடேகம் செய்துமல்லோ சந்நிதி முருகா - உன்னை
அனுப்பி வைப்பர் கதிர்காமம் சந்நிதி முருகா

கதிர்காமத் தீர்த்த நாளில் சந்நிதி முருகா - இங்கு
காத்திருப்பர் பக்தர் எல்லாம் சந்நிதி முருகா

பசித்து நீ வருவை என்று சந்நிதி முருகா - உனக்குப்
படைப்பர்பயற் றம்துவையல் சந்நிதி முருகா

இளைத்து நீ வருவை என்று சந்நிதி முருகா - உனக்கு
இளநீரும் வெட்டி வைப்பர் சந்நிதி முருகா

கதிர்காமக் காட்சி யெல்லாம் சந்நிதி முருகா - இங்கு
கண்டிடுவர் அடியரெல்லாம் சந்நிதி முருகா

காத்திருக்கும் பக்தருக்குச் சந்நிதி முருகா - நீ
காட்சி கொடுப்பாய் ஐயா சந்நிதி முருகா

ஆவணித் திங்களிலே சந்நிதி முருகா - உன்
ஆலயத்தில் விழா எடுப்பர் சந்நிதி முருகா

பதினாறு செல்வம் பெறச் சந்நிதி முருகா - இங்கு
பதினாறு திருவிழாவாம் சந்நிதி முருகா

கொடியேற்ற நன் னாளில் சந்நிதி முருகா - வள்ளிக்
கொடிதனையே முளைக்க வைப்பாய் சந்நிதி முருகா

வீதி வலம் வருமுன்னே சந்நிதி முருகா - வள்ளி
விடை கொடுக்க நீ வருவாய் சந்நிதி முருகா

பூங்காவனத் திருவிழாவில் சந்நிதி முருகா - உனக்குப்
பூவூஞ்சல் கட்டிடுவர் சந்நிதி முருகா

சிங்காரத் தேர் ஏறிச் சந்நிதி முருகா - நீ
திரு வீதி வலம் வருவாய் சந்நிதி முருகா

ஆவணி சேர் பூரணையில் சந்நிதி முருகா - நீ
ஆடிடுவாய் தீர்த்த மெல்லோ சந்நிதி முருகா

அடியவர்கள் திருக்கூட்டம் சந்நிதி முருகா - இங்கு
அலை மோதிப் பாயுதையா சந்நிதி முருகா

பூ எடுத்து மாலை கட்டச் சந்நிதி முருகா - இங்கு
பூக்காரர் தானும் உண்டு சந்நிதி முருகா

ஆறிரண்டு சிறுமியர்கள் சந்நிதி முருகா - உனக்கு
ஆலத்தி எடுப்பரய்யா சந்நிதி முருகா

வள்ளியம்மன் வாசலிலே சந்நிதி முருகா - உனக்கு
மாவிளக்கு எரித்திடுவர் சந்நிதி முருகா

சஷ்டி முடிவினிலே சந்நிதி முருகா - சூர
சங்காரம் செய்திடுவாய் சந்நிதி முருகா

கார்த்திகையின் தீபத்திலே சந்நிதி முருகா - உன்
கருணை முகம் காண்பமையா சந்நிதி முருகா

தைப் பூசத் திரு நாளில் சந்நிதி முருகா - உன்
சதங்கை ஒலி கேட்குமையா சந்நிதி முருகா

திருப்பரங் குன்றத்திலே சந்நிதி முருகா - நீ
தேவானை தனை மணந்தாய் சந்நிதி முருகா

திருச்செந்தூர் தன்னிலே சந்நிதி முருகா - நீ
சிவனுக்குப் பூசை செய்தாய் சந்நிதி முருகா

பழனி மலைதனிலே சந்நிதி முருகா நீ
பழனி ஆண்டி வடிவனாய் சந்நிதி முருகா

சாமி மலை தனிலே சந்நிதி முருகா - சிவ
சாமிக்குப தேசம் செய்தாய் சந்நிதி முருகா

திருத்தணிகை மலையினிலே சந்நிதி முருகா - குற
வள்ளியைநீ மணம் முடித்தாய் சந்நிதி முருகா

பழ முதிர் சோலையிலே சந்நிதி முருகா - சுட்ட
பழம் கொடுத்தாய் ஔவைக்குச் சந்நிதி முருகா

ஆறு படை வீட்டினிலே சந்நிதி மருகா - நீ
ஆறுவடிவாய் அமைந்தாய் சந்நிதி முருகா

இச்சா சக்தி கிரியா சக்தி சந்நிதி முருகா - ஞான
சக்தியையும் கொண்டவன் நீ சந்நிதி முருகா

ஆகம விதி முறைகள் சந்நிதி முருகா - உன்
ஆலயத்தில் இல்லை என்றாய் சந்நிதி முருகா

சந்நிதி கோவிலிலே சந்நிதி முருகா - நீ
சரி பிழைசொல் லாதே என்றாய் சந்நிதி முருகா

சாத்தாத தலை வாசல் சந்நிதி முருகா - செல்வச்
சந்நியில் தான் உண்டு சந்நிதி முருகா

சந்நிதியை நம்பினோர்க்குச் சந்நிதி முருகா - நீ
எந்நிதியும் கொடுத்திடுவாய் சந்நிதி முருகா

சந்நிதியான் சந்நிதியில் சந்நிதி முருகா - தேவர்
சந்தி கால பூசை செய்தார் சந்நிதி முருகா

சந்தி காலப் பூசையினால் சந்நிதி முருகா - நீ
சந்நிதியான் ஆனாயோ சந்நிதி முருகா

தேன் பாலும் சர்க்கரையும் சந்நிதி முருகா - நாம்
சுவைத்தால் தான் தித்திக்கும் சந்நிதி முருகா

சந்நிதியான் உன் பெயரைச் சந்நிதி முருகா - வாய்
சொன்னாலே தித்திக்கும் சந்நிதி முருகா

கதிர்காமர் மனம் கொண்டு சந்நிதி முருகா - அன்று
கட்டிய நற் கோவிலிது சந்நிதி முருகா

காத்து வரும் பெருமை எல்லாம் சந்நிதி முருகா - உன்
கரங்களிலே தான் உண்டு சந்நிதி முருகா

வேல் முருகா மால் மருகா சந்நிதி முருகா - எம்
வினை தீர்க்கும் வேலவனே சந்நிதி முருகா.

| | | |
|---|---|---|
| கதிர்காமக் | கந்தனுக்கு | அரோகரா |
| நல்லூர்க் | கந்தனுக்கு | அரோகரா |
| மாவைக் | கந்தனுக்கு | அரோகரா |
| வெருகல் | முருகனுக்கு | அரோகரா |
| கந்தவனக் | கந்தனுக்கு | அரோகரா |
| மண்டூர் | கந்தனுக்கு | அரோகரா |
| செல்வச் சந்நிதி | வேலவனுக்கு | அரோகரா |

**ஆக்கம்: பால. பிரதீபன்**
**பால. நிர்மலன்**
**வடமராட்சி.**

## துணைநூற்பட்டியல்


அகநானூறு, கழகப் பதிப்பு, திருநெல்வேலி, 1977

ஆறுமுகசாமி ஐயர், மா.க., சித்திரப் பெருந்தேர் வெள்ளோட்ட சிறப்பு மலர். 1984.

ஆறுமுகநாவலர். நான்காம் பாலபாடம், வித்தியாநுபாலனயந்திரசாலை, சென்னபட்டணம், 1949.

இந்துசாதனம்இ 13.6.1947

இராசநாயகம், முதலியார் செ., யாழ்ப்பாணச் சரித்திரம், சண்முகநாத அச்சகம், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம், 1933

ஐங்குறு நூறு, கழகப் பதிப்பு, திருநெல்வேலி 1972

கந்தையா, பண்டிதர் வீ.சி., மட்டக்களப்புத் தமிழகம் ஈழகேசரிப் பொன்னையா வெளியீட்டு மன்றம், சுன்னாகம், 1964

கலிங்கத்துப்பரணி, கழக வெளியீடு, திருநெல்வேலி, 1950

கலைக்களஞ்சியம், சென்னைப் பல்கலைக்கழகப் பதிப்பு, 1982.

காந்தி, க., தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1980.

காரைக்காலம்மையார், "அற்புதத் திருவந்தாதி", பதினொராந் திருமுறை, நாவலர் பதிப்பு, வித்தியாநுபாலான யந்திரசாலை, சென்னபட்டணம், 1951 (4ஆம் பதிப்பு)

குறுந்தொகை, கழக வெளியீடு, திருநெல்வேலி, 1968.

சண்முகசுந்தரம், த., ஈழத்திற் சைவக் கிராமியப் பண்பாடு", நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டு நிகழ்ச்சிகள், முதலாம் தொகுதி, யாழ்ப்பாணம், 1977, பக். 56, 67

மாவை முருகன் காவடிப் பாட்டு, அருள் வெளியீட்டகம், தெல்லைப்பழை, 1981

சண்முகதாஸ், அ., மனோன்மணி, ச., இத்திமரத்தாள், வராவொல்லை வெளியீடு - 1, பருத்தித்துறை, 1985

சிலப்பதிகாரம், கழக வெளியீடு, திருநெல்வேலி, 1977

சிவத்தம்பி, கா., சித்திரப்பெருந்தேர் வெள்ளோட்ட சிறப்பு மலர் 1984.
சிவலிங்கராசா, எஸ்., வடமராட்சியின் கல்விப் பாரம்பரியமும் இலக்கிய வளமும், வடமராட்சிக் கல்வி வட்டம், பருத்தித்துறை, 1984.
சைவநெறி, 10ஆம் வகுப்பு, பாடநூல் திணைக்களம், கொழும்பு.
திருமுருகாற்றுப்படை, கழக வெளியீடு, திருநெல்வேலி, 1955
தினகரன், 3.6.1949
தொல்காப்பியம், கழக வெளியீடு, திருநெல்வேலி, 1977
நற்றிணை (நற்) கழக வெளியீடு, திருநெல்வேலி, 1976
பரிபாடல், ஸ்ரீ தியாகராசா விலாச வெளியீடு. சென்னை. 1956 (நான்காம் பதிப்பு)
பிரயோக விவேகம், வித்தியானுபாலன யந்திரசாலை, சென்னை, 1957
புறநானூறு (புறம்) கழக வெளியீடு, திருநெல்வேலி 1973
பெரும்பாணாற்றுப்படை (பெரும்பாண்), கழக வெளியீடு, திருநெல்வேலி. 1974
பொருநராற்றுப்படை (பொருநர்) கழக வெளியீடு, திருநெல்வேலி. 1974
பொன்னுத்துரை, கலைப்பேரரசு ஏ,ரி., தாளக்காவடி, குரம்பசிட்டி சன்மார்க்கசபை வெளியீடு: 48, 1988
மணிமேகலை, மக்கள் பதிப்பு, பாரி நிலையம், சென்னை, 1961
மதுரைக்காஞ்சி, கழக வெளியீடு, திருநெல்வேலி, 1968.
மாணிக்கவாசகர், "திருச்சதகம்", "கோயின் மூத்த திருப்பதிகம்", திருவாசகம், (சு. அருளம்பலவனார் ஆராய்ச்சியுரை), ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம், 1966.
ருத்பெனடிக்ற், பண்பாட்டுக் கோலங்கள், தமிழாக்கம்: கி.பூ. சுப்பிரமணியம், தமிாவெளியீட்டுக் கழகம், தமிழ்நாடு அரசாங்கம், சென்னை. 1964.
லெட்சுமண ஸ்தபதி, சோம., சித்திரப் பெருந்தேர் வெள்ளோட்ட சிறப்பு மலர், 1984.
வானமாமலை, நா. தமிழர் பண்பாடும் தத்துவமும், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, 1973.
வித்தியானந்தன், சு., தமிழர் சால்பு, பாரி புத்தகப்பண்ணை, சென்னை, (இரண்டாம் பதிப்பு) 1971.
வீரகேசரி, 26.8.1965
வேலுப்பிள்ளை, ஆ., தமிழர் சமய வரலாறு, பாரி புத்தகப் பண்ணை, சென்னை, (இரண்டாம் பதிப்பு) 1985.

Eliade, Mircea, Patterns in Comparative Religion, New york: First Meridian Printing, 1963.

............., Shamanism, Princeton University Press, Bollingen Paperback Printing, 1972.

Nagalingam, C., "The Pallavas, Their orgin and their Title "Videlvidugu", Tamil Culture Vol. IV:3, July 1955.

Reghavan, M.D., Tamil Culture in Ceylon, Colombo, 1960.

Sanmugadas, A. "Mountain Worship among the Ancient Tamils and Japanese" Kailasapathy Commemoration Volume, Jaffna. 1988, pp. 62-82.

South Indian Inscriptions, Vol. I, No. 65, P. 63

## நிறைவுரை

### கந்தபுராணத்துக்குள் வராத முருகனுக்கு ஒரு பெரியபுராணம் உருவாகின்றது

செல்வச்சந்நிதி பற்றி எழுதப்பட்டுள்ள முதலாவது விரிவான நூலை இதுவரை வாசித்தீர்கள். இக்கோயில் பற்றியும், அதன் அசாதாரணமான அற்புதங்கள் பற்றியும் இதுவரை ஓரிடத்தே ஒழுங்குபடுத்தித் தரப்படாததிருந்த தகவல்கள் பலவும் இந்நூலில் இயன்ற அளவு தொகுத்துத் தரப்பட்டுள்ளன. தமிழரின் மதப் பாரம்பரியங்களுக்கு மதிப்புக் கொடுப்பவர் எனப் போற்றப்படும் தமிழறிஞர் பேராசிரியர் அருணாசலம் சண்முகதாஸ் அவர்களும் அவருடைய மனைவி மனோன்மணியும் இப்பணியை அவர்களுக்கே இயல்பான அளிக்கைக் கவர்ச்சியுடன் இங்கு தந்துள்ளனர்.

ஆய்வுக்குரிய பலவற்றை அடியானாக நின்றுகொண்டே ஆய்வுணர்வும் கெடாது விசுவாசமும் நலியாது சொல்லியும் ஒரு கண்ணோட்டத்தில் இந்நூலை ஆசிரியர்கள் நிறைவு செய்துள்ளமை அவர்களது திறனை நன்கு வெளிக்கொணர்கின்றது. ஆறாம் அத்தியாயத்தின் இறுதிப் பகுதி (பக். 99) இந்த அரிய சாதனைக்கான மனநிலையை நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

பேராசிரியர் சண்முகதாஸ் தம்பதியினரின் இந்தச் சாதனையை மெச்சிக்கொள்ளும் இவ்வேளையில், அந்த மிக முக்கியமான வினாவினை மீண்டும் ஒருமுறை அழுத்தம் திருத்தமாக முன்வைப்பது அவசியமாகின்றது.

கந்தபுராணக் கலாசாரமே யாழ்ப்பாணத்தின் சைவப் பண்பாட்டுத் தனித்துவம் என்று போற்றப்பட்டும், விதந்து கூறப்பட்டும் வரும் ஒரு மதப் பண்பாட்டுச் சூழலில், யாழ்ப்பாணத்தின் மிக முக்கியமான, சனரஞ்சகமான முருக தலங்களில் ஒன்றான

தொண்டைமானாற்றுச் செல்வச் சந்நிதி பற்றிய ஆய்வுகளும் விளக்கங்களும், இல்லையென்று சொல்லத்தக்க அளவுக்கு, ஏன் மிகக் குறைவாகவிருந்து வந்துள்ளன எனும் வினா சுவாரசியமான ஒன்றாகும்.

இதற்கு விடைகாணும் முயற்சி, இச்சூழலின் சைவமதம், மதநிறுவனங்கள் பற்றித் தோன்றியுள்ள "ஆய்வுகளி"ன் பண்பினை அறிவதற்கான ஒரு தேடலாகவும் அமைந்து விடுவதை அவதானிக் கலாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுக்கூறு முதல், தமிழைக் கிறித்தவத்தின் பால் இசைவுபடுத்தும் முயற்சிக்கு எதிராகக் கிழம்பிய சைவத் தமிழ்ப் பிரக்ஞையானது, யாழ்ப்பாணத்தின் மத (சைவ) பாரம்பரியம் பற்றி எழுதிய பொழுதும் எழுத முனைந்தபொழுதும், இரண்டு முக்கியமான விடயங்களுற்கு முக்கியத்துவமளித்தது.

1. சைவ நிறுவனங்களையும், சைவ ஒழுகலாறுகளையும் வரன்முறையான சைவ மரபுப் பின்னணியில், அந்த மரபின் சாஸ்திர மரபுகளுக்கேற்ப எடுத்துக்கூறும் தன்மை.

   அதாவது சைவ ஆகமங்கள், திருமுறை நெறி முறைகளுக்கேற்ப எடுத்துக் கூறும் பண்பு.

2. சைவ சித்தாந்தம் எனும் தத்துவ நோக்கில் மத விளக்கங்களையும், மத அனுபவங்களையும் விளக்கல்.

இவ்விளக்கத்தினைத் தரும்பொழுது இந்துமதத்தின் மற்றைய தத்துவ நோக்குகள் குறிப்பிடப்படாதும், குறைவுடையவனாகக் காட்டப்பெற்றும் வந்தன.

யாழ்ப்பாணத்தின் சைவம், கலப்பற்ற சைவசித்தாந்த மரபு என்ற ஒரு கருத்துநிலை மிகுந்து கவனத்துடன் வளர்த்தெடுக்கப்பட்டது.

இக்கண்ணோட்டத்தினை ஊறுசெய்யக்கூடியனவாகவும், இதற்கு மறுதலையாக அமைந்தனவுமாகிய பல்வேறு வணக்கமுறைமைகள் (கண்ணகை அம்மன் கோயில்கள் ஆதியன), தத்துவ - வழிபாட்டு நோக்குகள் (கீரிமலை- அளவெட்டிப் பிரதேசத்தில் நிலவிவந்த வீரசைவப் பாரம்பரியம் ஆகியன) பற்றிய ஓர் இலக்கிய மௌனம் வன்மையாக அநுட்டிக்கப்பட்டு வந்தது.

ஆறுமுக நாவலரின் மத எழுத்துக்களில் இக் கண் ணோட்டத்தையும், மத - எழுத்து முறையையும் வரன்முறையான ஒரு 'பண்பாக' நிலைநாட்டுதவற்கு அடித்தளமாக அமைந்தது, அவர் புரட்டஸ்தாந்திலிருந்து பெற்றுக்கொண்ட "பியூறிற்றன்" மனோபாவமாகும். "பியூறிற்றனிஸம்" என்பது கிறிஸ்தவத்தில் கடுந்தூய்மை வாதத்தைக் குறிக்கும். இவ் வாதிகள் ஒழுக்கத்துறைக் கடுங் கண்டிப்பாளராக விருந்தவர்கள். ஒழுக்கத்திலும் சமயத்திலும் கடுங் கண்டிப்பான ஒரு நிலைப்பாட்டினை மேற்கொண்டிருந்தனர்.

நாவலரின் "யாழ்ப்பாணச் சமயநிலை" எனும் கட்டுரையும், நான்காம் பாலபாடத்தில் வரும் "தேவாலயம்", "தேவாலயதரிசனம்" என்னும் பகுதிகளும் இம்மனோ நிலையை எடுத்துக் காட்டி நிற்கின்றன.

நாவலர் விதந்தோதிய சாஸ்தீரிய அங்கீகாரமுள்ள வழிபாட்டுத் தலங்கள் (பாடல்பெற்ற தலங்கள்) இலங்கையில் இரண்டே இருந்தன. மேலும் நாவலர் நடைமுறையிலிருந்த இந்துப் பாரம்பரியங்களை ஏற்றுக்கொள்ளவுமில்லை. இதனால் நாவலர் பாரம்பரியத்தின் சனரஞ்சக மத நடைமுறைகள் பற்றிப் பேசாது தவிர்க்கும் ஒரு மனோபாவமே காணப்பட்டது. யாழ்ப்பாணத்துச் சைவம் கிறிஸ்த்துவத் தாக்குதல்களுக்கு இடமளிக்காத கடுந்தூய்மைவாதச் சைவம் என்பது நாவலர் நிலைப்பாடு.

இந்தக் கண்ணோட்டம் தனித்த மதநிலைப்பட்ட ஒன்றாக மாத்திரம் இருந்துவிடவில்லை. ஒரு குறிப்பிட்ட சமூக மேலாண்மையைப் பேணிப் பாதுகாக்கும் புலமை வலுக்கொண்ட ஒரு கருத்து நிலையாகவே இது வளர்க்கப்பட்டது. தொழிற்பட்டது என்பது நாவலர் பற்றிய எனது ஆய்வுகளில் நிறுவப்பட்டுள்ளது. சனரஞ்சக நிலையில் இந்த நடைமுறைகளுக்கு மாறான வழக்காறுகள் இருப்பினும், மக்களிடையே அந்த நடைமுறைகள் போற்றப்பட்டனவெனினும், அவற்றைப்பற்றிப் பேசாது ஒதுக்கிவிடும் ஒரு கருத்துநிலை இங்கு நிலவி வந்துள்ளது.

உயர்மட்ட ஆய்வுப் பாரம்பரியம் படிப்படையாக எம்மிடையே வந்த பின்னருங்கூட இக்கருத்து நிலை வலுவிழக்கவில்லை. யாழ்ப்பாணத்துத் தமிழர்களான சமயத்துறை அறிஞர்கள் எவரும் மதத்தின் சமூகவியல் பற்றிய ஆய்வுகளை இதுவரை மேற்கொள்ள வில்லையெனலாம். இன்னும் தான் "ஒப்பியல் மதமும்", "மதச்

சமூகவியலும்" இந்துமத உயர் கல்வியின் இன்றியமையாத அங்கங் களாகக் கருதப்படவில்லை.

சைவம் பற்றிய இந்த அறிக்கை விளக்கப் பாரம்பரியம் இங்குள்ளகிறித்தவர்களையும் தொற்றிக் கொண்டுள்ளது போலத் தெரிகிறது. அவர்களிடையேயும் சனரஞ்சக நிலை மதவழக்காறுகள், சமயத்தின் சமூகவியல் தொழிற்பாடுகள் பற்றிய அதிகாரபீட அங்கீகாரமுள்ள ஆய்வுகள் இன்னும் வெளிவரவில்லை.

இச்சூழலில் வெளிவந்த மத அறிவு, மதநிறுவன அறிவு விளக்கம் பற்றிய எழுத்துக்களை வாசிக்கும்பொழுது, அவற்றின் நடையும், அந்த நடையின் மாறுபாடற்ற வாய்ப்பாட்டுத் தன்மையும், இந்தக் கடுந்தூய்மைவாதக் கண்ணோட்டத்தின் செல்வாக்கை இலக்கிய நிலைநின்று எடுத்துக்காட்டுவனவாக அமையும்.

இத்தகைய ஒரு புலமைச் சூழலில் செல்வச்சந்நிதி புறக்கணிக் கப்பட்ட வந்தமை ஆச்சரியம் தருவதன்று. உண்மையில், மேற்சொன்ன மதபோற்றுகைப் பாரம்பரியம், மதவிதந்துரைப் பாரம்பரியம் ஆதியனவற்றுக்கு நேர்முரணான ஒரு பாரம்பரியத்தின் சின்னமாகவே செல்வச்சந்நிதி அமைந்துள்ளது.

அக்கோயில் பற்றிய வரலாறும், அதன் பூசகர்களின் சமூகப் பின்னணியும், அங்கு நடைபெறும் பூசைமரபும், அந்தக் கோயிலை யொட்டிய ஒழுகலாறுகளும், நாவலர் வலியுறுத்திய வழிபாட்டு மரபுகளுக்கு முற்றலும் எதிர்மாறானவையாகும். நல்லூர்க் கோயில் மரபே நாவலரின் கண்டனத்துக் ஆளானது. அப்படியான ஒரு சமூகக் கண்ணோட்ட, புலமைப் பின்னணியில் செல்வச் சந்நிதி அவர் ஆய்வு வட்டத்துக்குள்ளேயே வந்திருக்க முடியாது. இது சம்பந்தமாக இந்நூலின் **19** ஆம் **92** ஆம் பக்கங்களிலே வரும் குறிப்புகள் முக்கியமானவை.

பக் - 19 " மந்திரவழிபாடு மேலான வழிபாடு எனப்பலர் கருதி, சந்நிதி வழிபாட்டு முறைகளைக் கேலி செய்தனர். சந்நிதிகோயில் குறிப்பாக ஆகம வழிபாட்டாளர்களால் வணங்கப்படாத தலமாகவே இருந்தது....."

பக். 92 "..... இத்தகைய அன்பர்கள் பலர் சாதி நிலையிலே குறைந்தவர் களாகக் கருதப்பட்டனர். சந்நிதியைக் கீழ்சாதியினரின்

வழிபாட்டுத்தலம் என்று வர்ணித்தனர். அன்னதானச் சோற்றுக்காக அலையும் எழைகளெனக் கூறினர்.."………

இந்துமனோபாவம் மேலோங்கிநின்றதால், நாவலர் பரம்பரை இக்கோயிலைக் புறக்கணித்தது. அதனாலே தான் உடுப்பிட்டிச் சிவசம்புப்புலவர் இக்கோயிலைப் பற்றிப்பாடாது விட்டார் எனலாம். உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவருக்கும் வல்வை வயித்தியலிங்கம் பிள்ளைக்கும் இறுதிக்காலத்தில் நிலவிய கருத்து வேறுபாடுகள் இலகியப் பிரசித்தமானவை.

சந்நிதி பற்றிய இந்தக் கருத்துநிலைப் புறக்கணிப்பைத் தொண்டைமானாற்றுக்கு மூன்று மைல் தூரத்தேயுள்ள கந்தவனக் கடவைக்கு வழங்கப்பட்ட கவனத்தினாலும் அறிந்து கொள்ளலாம். கந்தவனக்கடவை கந்தபுராணக் கலாசாரத்தினுட்பேசப்படும் ஐதீகங் களைக் கொண்டது. (வீரபாகுதேவரால் வழிபடப்பட்டது என்பது) அதன் பூசை நடைமுறைகள் ஆகம மரபுவழிநிற்பவை. கந்தவனக்கடவை சைவஅறிஞர் சிவபாதசுந்தரம் அவர்களின் வதிவிடமாக அமைந்தது.

இவ்வாறு நோக்கும் பொழுதுதான் சந்நிதி பற்றிய புறக்கணிப் புணர்வின் சமூக, கருத்துநிலைக் கூர்மை கவனத்திற்குரிய தாகின்றது. கந்தபுராணக் கலாசாரமே யாழ்ப்பாணத்தின் கலாசாரம் என்று விதந்து கூறப்படும் மதப்பண்பாட்டு வட்டத்தினுள், ஆற்றங்கரைக் கந்தன் புகழும் அங்கு அவனுக்கு நடக்கும் வழிபாட்டுகு முறைமையும் கண்டதுண்டு கேட்டதில்லையானவை ஆகின.

இந்த முரண்பாடு மிக முக்கியமான ஒன்றாகும். யாழ்ப்பாணத்தின் "பியூறிற்றனிசச்சைவம்" வளர்ந்து வந்த சைவநோக்கும், அடிநிலைச் சைவமக்களின் மதநோக்குக்குமுள்ள வேறுபாடுகளை துல்லியமாகக் காட்டும் முரண்அணி இதைவிட வேறுஎதுவும் இல்லை யென்றே கூறிவிடலாம்.

யாழ்ப்பாணத்துச் சமூகவியலினதும், யாழ்ப்பாணத்துச் சைவத்தின் சமூகவியலினதும் முக்கிய அமிசங்கள் பலவற்றை வெளிக் கொணருவதாக அமைகின்ற இக்கோயிலும், அதன் வழிபாட்டு முறைமைகளும், யாழ்ப்பாணத்தின் மதக்கருத்துநிலைச் சூழலிற்பயிலப் படாத, ஆனால் மத ஆய்வுத்துறையில் (Study of Religion as phenomenon and as Institution) மிக மிக முக்கியமான பல விடயங்களை எடுத்துக்காட்டுவனவாகவுள்ளது.

இந்நூலில் மேற்கோள் காட்டப் பெற்றுள்ள இக் கோயில் பற்றிய எனது கட்டுரையில் நான் குறிப்பிட்டுள்ள ஒரு விடயத்தை இங்கு மீண்டும் அழுத்திக் கூறவிரும்புகின்றேன். (பக். 31)

"சந்நிதியில் பெறப்படும் மத அநுபவம் யாது?

அது மற்றைய வழிபாட்டிடங்களிற் காணப்படுவதிலிருந்து எவ்வகையில் வேறுபடுகின்றது..."

இந்தவினா மதத்தினைத் தமது வரன்முறையான பயில்துறையாகக் கொள்பவர்களுக்கும் மதத்தினை ஒரு முக்கிய சமூக நிறுவனமாகக் கொள்ளும் சமூக விஞ்ஞானிகளுக்கும் மிக முக்கியமானதாகும்.*

* இலங்கைத் தமிழர்களிடையேயுள்ள சமூக விஞ்ஞானிகள் மதத்தின் சமூகப்பரிமாணங்களை ஆராயாது விட்டுள்ளமை மிகப்பெரிய ஒரு குறைபாடாகும். நம்மிடையேயுள்ள மார்க்ஸீய ஆய்வாளர்களிடையேயும் மதம் பற்றிய ஆய்வு சமூகப் பிற்போக்குத் தனமானது என்ற முட்டாள்த்தனமான அறியாமை காணப்படுகின்றது. மதம் என்னும் கருத்து நிலையின் எடுகோள்கள் யாவை. மதம் எவ்வாறு முக்கியமான ஒரு சமூக நிறுவனமாக இயங்குகின்றது. வலுப் பெறுகின்றது. சமூகத்தின் அரச, பொருளாதார சமூக அதிகாரங்களுக்கு மத நடைமுறைகள் எவ்வாறு நியாயப்பாட்டினை வழங்குகின்றன. மதத்துக்கும் பண்பாட்டுக்குமுள்ள உறவு யாது, என்பன பற்றி ஆராய்வது உண்மையான மார்க்ஸீய ஆய்வாளனின் கடமையாகும். மார்க்ஸ், ஏங்கல்ஸ் காலம் முதல் இத்தகைய ஆய்வுப் பாரம்பரியத்துக்கு மார்க்ஸிஸத்தில் ஒரு மதிப்பான இடம் உண்டு. மூல நூற்பரிச்சயமில்லாத மார்க்ஸீய அறிவும் அறிவின்மையும் கட்சியின் நடப்பு நிலைபாடுகளே மார்க்ஸீய சித்தாந்தத்தெளிவு என்ற போலிப் போதனைகளும் நம்மிடையே வரன்முறையான மார்க்ஸீய ஆய்வு வளர்ச்சிக்கு குந்தகம் விளைத்துவந்துள்ளன. இதுவும் ஒரு வகையில் ஒரு 'சைவவினாவிடை' மனோபாவம் தான்.

இத்தகைய ஒரு சூழலில், "நவமார்க்ஸீயத்தின்" புதுமோஸ்தர்க் கருத்துக்களை எழுத்தளவில் தெரிந்து கொண்டு உச்சாடான முறையில் எழுதிவந்த புலமைப்போலிகள் தம்மையே விளக்கத் தெளிவுள்ள மார்க்ஸிஸ்டுகள் என வாதிடத்தொடங்கின.

இந்த அடிச்சுட்டிக் காரணங்களினுடே பாதிக்கப்பட்ட உண்மையான மார்க்ஸீய அணுகை முறைமையை புலமைவாத மத

அணுகுமுறைகள் தராத, தரமுடியாத ஓர் உளவியல் அநுபவத் திருப்தியினைச் சந்நிதி வழிபாடு, தருகின்றதென்பது வெள்ளிடைமலை. இந் "நிகழ்வு" எவ்வாறு ஏற்படுகின்றதென்பதனைப் பல்வேறு பயில்துறைகளின் ஆய்வு நோக்குகள் வழிநின்று தெளிவுபடுத்திக் கொள்வது அவசியமாகின்றது.

சந்நிதி வழங்கும் மத அனுபவத்தின் இரண்டு முக்கிய அமிசங்களை இங்கு வலியுறுத்திக் கூறலாமெனக் கருதுகிறேன்.

முதலாவது அமிசம் சந்நிதியோடு சார்த்திப் பேசப்படுபவையான "அற்புதங்கள்", "ஐதீகங்கள்" எவையும் பௌராணிக மரபு நிலைப் பட்டவையல்ல. முன்னொரு காலத்தில், முன்னொரு யுகத்தில் நிகழ்ந்தவையென, இன்ன புராணத்தில் இன்ன வகையில் இவ்வாறாக நிகழ்ந்தனவெனக் கூறப்படும் ஐதிகங்கள் எதுவும் சந்நிதிக்கு இல்லை. சுருக்கமாகச் சொன்னால், கந்தபுராணத் தொடர்புகள் எதுவும் சந்நிதிக்குக் கிடையாது. அத்தகைய ஒரு கதையினை இப்பொழுது தொடக்கிச் சந்நிதிக்கு வரன்முறையான சாஸ்திர அங்கீகாரம் வழங்க முனையும் ஒரு எத்தனிப்பு துளிர்விடுகின்றதை அவதானிக்க முடிகின்றதெனினும் (கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் "சைவநெறி" - பத்தாம் வகுப்பு 1988 97ஆம் பதிப்பு பக். 29) சந்நிதி பற்றிய "கர்ணபரம்பரைக் கதைகள் காட்சிகள்" யாவும் அண்மைக் காலத்தனவாக, குறிப்பாக சாதாரண அடிநிலை மக்களின் மத விசுவாசத்தனத்திலிருந்து முகிழ்த்தனவாக, முகிழ்ப்பனவாக அமைந் துள்ளமையை அவதானிக்கலாம். நோய்கள் மாறியிமை முருகன் தன்னைக் கோயிலுக்கு அழைத்தமை. தாங்கள் செய்ய விரும்பிச் செய்யப் பின்போட்டவற்றைச் செய்யவைத்தமை என்ற நிலைப்பட்டனவான, அதாவது பக்தர்களின் தனிநிலைப்பட்ட சொந்த நிலைப்பட்ட "மதத்தொடர்புநிலை அனுபவங்களே" (Expricences in Personal rliglous communication) சந்நிதியானின் அற்புதங்களின் தளமாகவும் களமாகவும் அமைவதை அவதானித்தல் வேண்டும். இந்நூலின் மூன்றாவது அத்தியாயத்தில் விவரிக்கப்படும் அற்புதங்கள் யாவும் எளிமை நிலையினரான சாதாரண மக்களின் வாழ்க்கை நிலைப்பாடு களிலிருந்து கிளம்புவன என்பது தெரியவரும். நூறு ரூபாப் பேரத்திலும், 1983 க்கலவரத்திலும் முருகன் தங்கள் வாழ்க்கையில் நடத்திய "அற்புதங்களை" த்தான் இந்த பக்த உள்ளங்கள் போற்றுகின்றன. குறிப்பாகச் சந்நிதி "மருந்தின்" மகத்துவம் பற்றிய விசுவசிப்புகளை நான் நேரடியாகவே அறிவேன். ஆலமிலையில் வழங்கப்படும் புக்கையும் கோயில் வாசலில் எரியும் பெரும் குத்துவிளக்கின் எண்ணெயும் எவ்வாறு மருந்தாகப் போற்றப்படுகின்றன என்பதை நான் நேரிற் கண்டுள்ளேன்.

அதாவது இங்குள்ள மத அநுபவமானது, பௌராணிக ஐதீகக் கதைகளில் நம்பிக்கை வைக்காததால், அவற்றைப் பற்றியே சிந்தியாததால், பத்தனுக்கும் அத்தெய்வத்துக்கும்மிடையிலான ஒரு தனிப்பட்ட பாசஇறுக்க மனநிலையினடியாகத் தோன்றுவனவான நிகழ்வுகளைத் தளமாகக் கொண்டதாக அமைகின்றது. அந்நிகழ்வுகள் சமகால வாழ்வினடியாக முகிழ்பவையாக அமைகின்றன. தனித்தனி மனிதர்களின் அன்றாடத் தேவைகள், இலட்சியங்கள் நடத்தையுந் தல்களினூடாக ஏற்படும் மத அநுபவமாகவே இவ்வநுபவம் காணப்படுகின்றது. இந் நிலையில் பக்தனை அவ ன்வழிபட்டு நிற்கும் முருகனிடத்து அவன் ஈடுபடுத்தும் சாதனமார்க்கம் (that one which mediates the worshipper to the deity he worships ) தேவாரம், திருவாசகம் போன்ற பாரம்பரிய தொடர்பு முறைமைகள் அன்று. தானாகவே நின்று, இன்னொரு அநுபவச் சாதனத்தின் உதவியின்றி நேரடியாக எட்டிப்பிடிக்க முயல்கிறான். நமது பாரம்பரிய வழிபாட்டு முறைமையில் இத்தொடர்பினை (communication) ஏற்படுத்திக் கொள்வதற்கு நாம் தேவார திருவாசகங்களை, அன்றேல் பெருங்கிரியை களைப் பயன்படுத்திக் கொள்கிறோம். சந்நிதியில் அருச்சனை கூட தனிப்பட்ட வேண்டுதலாக (அதாவது நட்சத்திரம் பெயர் சொல்லப் படுகிற ஒன்றாக) எடுத்துச் செய்யப்படுவதில்லை. தனிப்பட்ட உறவைக் கும்பிடுபவன் தானே ஏற்படுத்திக் கொள்கிறான். பாரம்பரியச் சின்னங்களின் தொழிற்பாடு மிகக் குறைவு.

அதாவது இந்த உணர்வுநிலை அவனது இருப்பு நிலையோடு (existential) சம்பந்தப்பட்டது. வாழ்க்கையின் ஒருமிப்பு நிலையில் அவன் காணும் பிரச்சினைகளின் உணர்வு நிலையில் அவன் காணும் பிரச்சினைகளின் உணர்வு நிலை வெளிப்பாடுகளை அவன் தனது நம்பிக்கை / விசுவசிப்பு என்ற நிலைநின்று நோக்கி, தனது நிலையில் உண்மையில் இருப்பதாக அவன் கண்டு கொண்டதாக நினைக்கும் அந்தச் சக்தியுடன், அந்தச் சக்தியைத் தனக்குப் புரிந்துகொள்ளக் கூடியதான சமூக மனித உறவு வார்ப்பில் விளங்கிக் கொண்டு, அதனுடன் தொடர்பு கொள்கின்றான். இந்த மதம் (Religion) வாழுகின்ற அநுபவம் (living experience) ஆகின்றது. இறுக்கமான பாரம்பரியங்கள், விதிமுறையான சடங்குகள் ஆதியன இல்லாதிருந்கின்றமை இந்த மதத்தொடர்பின் நேரடித் தன்மைக்கு (directness of the communication) உதவுகின்றது.

இந்தப் பண்பாட்டினுள் முருகன் பற்றி நிலவும் பௌராணிக மரபு

சாராத நம்பிக்கைகள் முருகன் பற்றி இம்மக்கட் கூட்டத்தினரிடையே நிலவும் இன நினைவுகள் (racial memories - குறிஞ்சித் தெய்வம், வேலன், குறமகள், கணவன் என்பவை) இந்த ஈடுபாட்டைச் சுலபப்படுத்து கின்றன. இந்த மக்கட் கூட்டத்தினரிடையே நிலவும் அடிப்படையான வாழ்க்கைப் பண்பாட்டுச் சமத்துவத்துக்கும், இன்று இம் மக்களிடையே மேற்கிளம்பும் ஒருமையுணர்வுக்கும் முருகன் (தமிழ்த் தெய்வம் முருகன், குழந்தை முருகன் என்ற கோட்பாடுகள்) ஒரு சின்னமாகின்றான். "முருகன்" முருகையா" ஆகின்றான்; "முருகையா" "முருகன்" ஆகின்றான். தனிமனித அபிலாசைகள் குழும நிலைத் தேவைகள் யாவும் இணைகின்றன.

ஐதிகக் கட்டுகளற்ற முருகனின் "நேரடித் தொடர்புணர்வு" இங்கு கோலோச்சுகின்றது.

இதனை எடுத்துக் கூறும்பொழுது, சந்நிதியிலும் இப்பொழுது படிப்படியாக வளர்ந்து வரும் சமஸ்கிருத நெறிப்பாடு (Sanskritization) பற்றிக் குறிப்பிடுவது அவசியமாகும். உருத்திராபிஷேகம், புராணப் படிப்பு, எனப் பல கிரியைகள் இப்பொழுது புகுதுள்ளன. சந்நிதிக்கான சமூக அங்கீகாரம் வளர வளர. சந்நிதிக்குழுமம் சமூக அதிகாரச் சின்னங்களைப் பகிர்ந்து கொள்ளும் நிலை ஏற்பட ஏற்பட சமஸ்கிருத நெறிப்பாடு வளர்வது தவிர்க்க முடியாத ஒன்றாகும். மந்திரமில்லாமலே சமஸ்கிருத நெறிப்படுகை வளர்வது தவிர்க்க முடியாத ஒன்றாகும். மந்திரமில்லாமலே சமஸ்கிருத நெறிப்படுகை நடக்கும் அசாதாரண மத நடைமுறையினைச் சந்நிதியிலே காணலாம்.

ஆனால் இந்தச் சமஸ்கிருத நெறிப்படுகைகளினூடே, இவற்றைக் கைவிட்டு, முன்னர் நிலவிய, அல்லது இன்னும் மேலாண்மை யுடையதாக விருக்கும் நேரடித் தொடர்பநுபவத்துக்குத் தொடர்ந்து முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்ற ஒரு நம்பிக்கை நிலைப்பாடும் சந்நிதியின் வழிபாட்டாளர்களிடையேயுண்டு. அண்மையில் நடந்த "புதுத்தேர் எரிப்பு" (இது இலங்கைப் படையினராற் செய்யப்பட்டது) பற்றிய சில நம்பிக்கைகளை இங்க மனங்கொள்வது அவசியம். "சந்நிதியானுக்கு இந்தப் பெரிய ஆடம்பரமான தேர்களில் நம்பிக்கை இல்லை; பழைய கட்டுத்தேர், புதுத்தேருக்கு அருகிலே நிறுத்தப் பட்டிருந்தும், புதுத்தேரை எரித்த சுவாலையில் ஒரு பொறிகூடப் பழந்தேரை ஒன்றும் செய்யவில்லையே" என்ற கூற்றினை நான் பலர் வாயிலாகக் கேட்டுள்ளேன்.

சமஸ்கிருத நெறிப்படுகை வேகம் அதிகரிக்க, அதிகரிக்க சந்நிதியின், அதற்கேயுரித்தானதாக இருந்து வந்த மத அநுபவத்தளம் மறையத் தொடங்கும்.

சாதாரண மக்களின் நேரடி (மத அநுபவத்) தொடர்பு முறைமையின் தொழிற்பாட்டைச் சந்நிதியில் காணுகின்ற அதே வேளையில், இந்த அநுபவ வட்டத்துக்கும் விளக்கத்துக்கும், முற்றிலும் அப்பாலானதும் "சொல்", "பதம்" கடந்ததுமான மறைஞான (mystic) அநுபவத்தினைப் பெறுவோர் பலரின் களமாகவும் சந்நிதி அமைந் துள்ளமையை குறித்துக் கொள்ளல் வேண்டும். சந்நிதியில் வன்மையான ஒரு சித்தர் பாரம்பரியமும் உண்டு.

ஜேர்மன் சாமியாரும், ஆனைக்குட்டிச் சாமியாரும் இத்தலத்திற் பெறும் "நிம்மதி" யாது? அந்த மறைஞானத் திருப்தியை. நாம் சற்றுமுன்னர் விவரித்த சாதாரண மக்களின் நேரடித் தொடர்புணர்வுத் திருப்தியோடு எவ்வாறு இணைத்து நோக்குவது என்பது பற்றி ஆராய்வது இத்துறை வல்லுநர்களின் கடனாகும். இவர்கள் மத அறிவு பற்றிய வாய்ப்பாட்டு மீட்டல்களை ஆராய்ச்சி யெனக்கருதாது, வளக் கொழிப்புடனுள்ள இவ்வாய்வுக் களங்களைத் தமது படிப்பின் பட்டறைகளாக்கிக் கொள்ள முன்வர வேண்டும்.

எவ்வாறாயினும் சந்நிதியின் மத அநுபவத் தனித்துவம் மிகநுண்ணிதாக எடுத்து ஆராயப்படுதல் அவசியமாகும்.

அவ்வாறு ஆராயும்பொழுது, முக்கியமான இடத்தைப் பெறவேண்டுவது வழிபடுபவர்களின் மனநிலையாகும். அதாவது நாம் முன்னர் குறிப்பிட்ட 'வாழுகின்ற அநுபவ' (living experience) த்தன்மை, 'மதத்தொடர்பின் நேரடித் தன்மை' (directness of the communication) ஆகியனவற்றை எவ்வாறு விளங்கிக் கொள்வது என்பது முக்கியமான வினாவாகின்றது.

சந்நிதியிற் காணப்படும் மத அநுபவம் மற்றைய சைவத் தலங்களிற் காணப்படுவதிலிருந்து வேறுபட்டதென்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்கின்றனர். வேறுபட்டதான இந்த வழிபாட்டு நிலையாது? இதனை எவ்வாறு குறிப்பிடலாம்?

சண்முகதாஸ் தம்பதியினர் இந்நூலில் அதனை "அன்புநிலை" (அத்தியாயம் 6) என்று குறிப்பிடுகின்றார்கள். "அன்புநிலை" என்னும்

தொடரினை அவர்கள் "பக்திநிலை"யின் கருத்திலேயே பயன்படுத்து கின்றனர் என்பது துல்லியமாகத் தெரிகின்றது.

சந்நிதியிலே தொழிற்படுகின்ற மத அநுபவநிலையினை எவ்வாறு குறிப்பிடலாம் என்பதே இங்குள்ள வினா

அங்கு வழிபட வருகின்ற ஒவ்வொருவனும் தன்னிடத்துச் சந்நிதியானுக்கு ஒரு தனிப்பட்ட, சொந்த (personal) 'உறவு' உண்டென்ற அடிப்படையிலேயே வருகிறான். அவ்வாறு அவன் வருகின்றபொழுது, அங்கு வருகின்ற மற்றைய பல்லாயிரக்கணக்கானவர்கள் ஒவ்வொருவரும் எவ்வெம் மனநிலையோடு வருகின்றார்கள் என்பதைப் பற்றி அதிகம் சிரத்தை கொள்ளாமல், அவர்கள் வருகையை நடக்கும் ஒரு நிகழ்ச்சியாக ஏற்றுக் கொண்டு, தனது தொடர்பினைப் பிரதானப்படுத்தியே வருகிறான். இவன் ஏற்படுத்துகின்ற இந்த உறவிலே பூசகருக்குக் கூட (கிரியைகள் செய்பவர் என்ற முறையில்) முக்கியத்துவம் இல்லை. இத்தலத்தில், அச்சுழலில் ஏற்படும் தொடர்பு அநுபவம் (Communicational experience)தான் முக்கியமானது.

மேலும் இந்த அநுபவம் முற்றிலும் மனித நிலைப்படுத்தப்பட்ட (humanized) ஒன்றாகும். அதாவது முருகனை மனிதநிலைப்படுத்தப்பட்ட ஒன்றாக்கி, அந்த "மனித" நிலையில் தனக்கும் அவனுக்கும் உறவு நிகழ்வதாக அவன் எண்ணிக்கொள்கிறான். நேர்த்திக்கடன் வைப்பதாக இருந்தாலென்ன தீர்ப்பதாகவிருந்தாலென்ன இந்த உறவுநிலையே காணப்படுகின்றது.

தமிழ்ப் பாரம்பரியத்தில் இந்த உறவினை ஏற்படுத்தும் மத அநுபவநிலையினை நாம் "பக்தி" என்று கூறுவதுண்டு. அதாவது தெய்வத்துக்கும் கும்பிடுபவனுக்குமிடையே ஒரு தனிப்பட்ட, சொந்த உறவுமுறையொன்று கற்பிக்கப்படுவதான ஒரு தொடர்புமுறைமை அது.

இந்திய மத வரலாற்றில் இந்த மத உணர்வு வேத காலம் முதல் பகவத்கீதை காலம்வரை பேசப்பட்டு வந்துள்ளதெனினும், பகவத்கீதையில் "பக்திமார்க்கம் என மத அநுட்டான வழியொன்று பேசப்பட்டுள்ள தெனினும், உண்மையில் தமிழ்நாட்டில், கி.பி. 7ஆம் நூற்றாண்டு முதல் மேற்கிளம்பிய சைவ, வைணவ மத எழுச்சியே இந்த மத அநுபவத்திற்கு இலக்கியமும் இலக்கணமும் வகுத்தது. தமிழ்நாட்டில் தோன்றிய இந்த மத அநுபவ முறைமையும் இலக்கிய

வெளிப்பாடும் பின்னர் பதினோராம் நூற்றாண்டு முதல் படிப்படியாக வடக்கு நோக்கிச் சென்று முழுமையான இந்திய அநுபவமாக மாறிற்று.

**தமிழ் நாடு இந்தியப் பண்பாட்டுக்கு அளித்த பெரும் செல்வம் பக்திப் பண்பாடு ஆகும்.**

இந்தப் பக்திப் பண்பாட்டின் தொல்சீர் உதாரணங்கள், செந்நெறி எடுத்துக்காட்டுக்கள், தேவாரம், திருவாசகம், திருப்பாசுரம் ஆதியனவாகும்.

இந்திய இலக்கியப் பின்புலத்திலும், உலக இலக்கியப் பின்னணியிலும் தமிழிலக்கியத்தின் செழுமைக்கு இவை காரணம் என்பது தெரியவரும்.

இந்த இலக்கியச் செல்வத்தின் தோற்றத்துக்குக் காலாகவிருந்தது இவற்றைப் பாடியோர் தமது வழிபடு தெய்வத்துடன் கொண்டிருந்த தனியுறவு நிலைப்பட்ட, "சொந்த"மான உறவுணர்வேயாகும்.

அந்த உணர்வு தமிழிலக்கியத்தின் செழுமையைச் சித்திரிக்கும் இலக்கியங்களைத் தந்துள்ள அதே வேளையில், அந்தக் குழுமத்தின் தொடர்ச்சியான பண்பாகவும் அமைந்து வந்துள்ளது. தமிழரிடையே பரவிய இஸ்லாம், கிறிஸ்த்தவம் ஆதியனவும் இப் பக்தி நிலையை ஏற்றுக் கொண்டன என்பது வரலாற்றுண்மையாகும்.

இப்பக்தி நிலை - அதாவது வழிபடு தெய்வத்துடன் மனித உறவு நிலைப்பட்ட சொந்தக் கொடுக்கல் வாங்கலுணர்வு கொண்ட அத்தியந்த உறவு ஒன்றினை வைத்துக் கொள்ளல், இக்குழுமத்தினரிடையே காணப்படும் ஒரு முக்கிய பண்பாகும்.

இந்த உறவு காரணமாக மதத்துக்கும் மனிதனுக்குமுள்ள உறவில், அந்த உறவின் சமூக இறுக்கத்திற் சில அசாதாரணமான பரிமாணங்கள் உள்ளன. அவை பற்றிப் பேசுவதற்கு இது இடமன்று.

ஆனால் இங்கு வற்புறுத்தப்பட வேண்டுவது, சந்நிதியில் தொழிற்படுவது, இந்தக் குழுமத்தின் பாரம்பரிய மத அநுபவ முறையான பக்தி அநுபவமே என்ற உண்மையே, அதற்கு முறையான பக்தி அநுபவமே என்ற உண்மையே. அதற்கு இதுவரை, நமக்கு

ஏற்கனவேயுள்ள தொல்சீர் செந்நெறி இலக்கிய உதாரணங்கள் இல்லையெனினும், அடிப்படையில் தொழிற்படுவது அந்த மனோ நிலைதான். அதாவது வழிபடு தெய்வத்துடன் மனித நிலைப்பட்ட, மனித உறவுச் சின்னங்களைக் கொண்ட உறவினை வைத்திருந்தன.

இந்த மனநிலை தனித்தனி மனிதர்களிடையே காணப்படுகின்ற ஒன்றாகவே அமைவதெனினும், அது அந்தமனிதர்களின் தொகுதியான சமூகத்தினது (தமிழ்ச் சமூகத்தினது) சமூக உளவியல் அமிசமாகவும் (an aspect of their social psychology) அமைந்து விடுகின்றது.


இங்கு தெய்வம் என்பது சித்தப் பொருளாகவல்லாது உணர்வுப் பொருளாக, உணர்வுறவு ஊடகமாக அமைவதைக் காணலாம். மாணிக்கவாசகரிடத்துக் காணப்பட்ட அதே பக்தியுணர்வு, நாவுக் கரசரிடத்துக் காணப்பட்ட அதே பக்தியுணர்வு, சுந்தரிடத்துக் காணப்பட்ட அதே பக்தியுணர்வு சந்நிதியிற் கும்பிடும் சாதாரண விவசாயியிடத்தும், மீன்பிடிகாரனிடத்தும், விவசாயத் தொழிலாளி யிடத்தும் காணப்படுகின்றது என்று சொல்ல மரபின் 'தடிப்பு'த் தடுக்கலாம். ஆனால் இத்தகைய சாதாரண மனிதர்கள்தான் - சலவைத்தொழிலாளி, பறையர் குலத்தவர், மீன்பிடிகாரன், சாதாரண விவசாயி, மட்பாண்டம் வனைந்தவன் முதலியோரே -பக்தி இயக்கத்தின் தூண்களாக அமைந்தனர் என்பதை மறந்துவிடக்கூடாது. அவர்களை நாயனாராக்கி, அறுபத்து மூவர்களாக வழிபடத் தொடக்கிவிட்டு, அந்த உணர்வையே அந்தச் சமூக மட்டங்களிலிருந்து அந்நியப்படுத்திக் கொள்வது (alienating), கருத்தைப் பொருளுருப்படுத்திப் பின்னர் அப்பொருளை உச்சாணி விடயமாகப் போற்றும் மனோபாவத்தின் (reification) வெளிப் பாடேயாகும்.

சந்நிதியில் அரசோச்சும் உணர்வு, பக்தியுணர்வுதான், ஆனால் இதுவரை சமூக, இலக்கிய அங்கீகாரம் பெறாத பக்தி உணர்வு இது. கந்தபுராணத்தினுள் வராத இந்த ஐதீகப் பாரம்பரியத்துக்குச் சாதாரண மக்களிடையே ஒரு 'பெரிய' புராண' மரபுண்டு.

பேராசிரியர் சண்முகதாஸ், மனோன்மணி ஆகியோரின் இந்த நூல் சந்நிதி அநுபூதியாளர்களின் பெரியபுராணம் ஒன்றுக்கான ஒரு தொடக்க முயற்சியாகும்.

இறுதியில், 'சொந்த நிலைப்' பட்ட ஒரு குறிப்பு. பேராசிரியர் சண்முகதாஸ் தம்பதியினர் இந்நூலின் பின்னிணைப்பாகத் தொகுத்துள்ள "சந்நிதி இலக்கியங்கள்" என்ற பகுதியில், எனது தகப்பனார் காலஞ்சென்ற, பண்டிதர், சைவப்புலவர் த.பொ.கார்த்திகேசு அவர்கள் 1962ஆம் ஆண்டு வெளியிட்ட செல்வச் சந்நிதி வேற்பெருமான் தோத்திரப் பாமாலை என்னும் நூலிலிருந்து சில பகுதிகளை இங்கு பிரசுரித்துள்ளனர். மகன் என்ற பெருமித உணர்வு குத்திட்டுக் கிளம்புகின்றது. நான் செய்யாத ஒன்றை நண்பர்கள் சண்முகதாசும் அவர் மனைவியும் செய்துள்ளனர். எனது பணிவான வணக்கங்கள்.

வேண்டுவார் வேண்டுவதை வேண்டியவாறே கொடுக்கும்
ஆண்டிநீ ஐயா அருள்வாய் வேலாயுதனே.



27-734
184
216
218

இடையராய் வந்து கதிர்காமரை இரட்சித்த முகமொன்று
கதிர்காமம் தன்னில் பூசை முறை காண அழைத்த முகமொன்று
கதிரமலைக் கொடியேற்றச் சென்றமுகமொன்று
களைத்துத் துவையல் உண்ண ஓடி வந்த முகமொன்று
அடியார்க்கு அன்னதான மளிக்குமுக மொன்று
புண்ணியனார் சமாதி கண்ட பூவரச மரத்தருகே
கோவில் கொண்டு வீற்றிருந்த முகமொன்று
ஆறுமுகமாகி மயிலேறி வள்ளி தெய்வமங்கையுடன்
வேலாகி நிற்க அடியவர்களும் தேவர்களும்
அகமகிழ்ந்து வாழும் செல்வச்சந்நிதி வேலவா சரணம்.

ISBN 955044200-4
9789550442003
Harikanan, Jaffna.